தென்றல்

ஜனவரி
14 முதல்
பொங்கல்
வெளியீடு...

சம்பர் 31 முதல்
சித்ரா
கிரௌன் * சயானி
மற்ற நகரங்களிலும்
ஒளிப்பதிவு. வின்செண்ட்
கலை..... கங்கா
சங்கீதம்.. A.M.ராஜா
பாடல்கள் கண்ணதாசன் மருதகாசி
எடிட்டிங் N.N.சங்கர்
ஸ்டில்ஸ் அருணாசலம்
ஸ்டுடியோ வாஹினி விஜயா
சிவாஜி கணேசன்
பெருமையுடன் அளிக்கும்
பிரபுராம் பிக்சர்ஸ்
விடிவெள்ளி
கதை, வசனம், டைரக்‌ஷன் : ஸ்ரீதர்
MOHANARTS

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

சிந்தித்துப் பதில் சொல்வீர்!

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" —**திருக்குறள்.**

முயற்சியின் மாண்பினுக்குச் சிகரம் வைத்தாற்போல, உயிரினங்களே நடமாட நடுங்கிடும் பாலைவனத்தில் உலகத்து ஏழு அதிசயங்களுள் ஒன்றும் பிரமிடுகளை எழில்மிகு எகிப்து நாட்டினர் கலைநாட்டினர்.

அக்குன்றனைய பிரமிடுகள் நிலையாக நின்று முயற்சியின் அருமை பெருமைகளை—வள்ளுவரின் வாய்மொழியை, இம்மாநிலத்து மக்களுக்குப் பறைசாற்றிக் கொண்டே இருக்கின்றன என்று சொல்லலா மல்லவா?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் கற்கலாம்

சேர கடைசி தேதி: 25—1—61 | **பயிற்சிகள் ஆரம்பம்: 27—1—61**

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சியளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம், பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 தபால் தலை அனுப்பிப் பெறுக.

வெளிவந்து விட்டது:

கண்ணதாசன்
கட்டுரைகள், கதைகள், நாடகங்கள்.



பைந்தமிழ்ப் பதிப்பகத்தின் முதல் வெளியீடு.

- ★ சித்தத்தில் ஒளிவீசும் தத்துவக் கட்டுரைகள்.
- ★ வித்தகர்கள் பாராட்டும் இலக்கியக் கட்டுரைகள்.
- ★ தித்திக்கும் தீஞ்சுவைசேர் தேன்பாங்குச் சிறுகதைகள்.
- ★ சித்திரத்துத் தமிழ்வடிக்கும் சிறப்புமிகு நாடகங்கள்.

இதுவரை நூல்வடிவமாக வெளிவராத எழுத்தோவியங்கள் அனைத்தும்
இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

படிப்பகங்கள், நூலகங்கள், பைந்தமிழர் இல்லங்கள்,
கருத்தறியும் துடிப்புடையோர் கையில் எல்லாம்
இருக்க வேண்டிய கருத்துக் கருவூலம்.

விலை ரூபாய் 2-50

பதிவுத் தபாலில் பெற விரும்புவோர் 75 காசுகள் சேர்த்து அனுப்ப வேண்டும்.

விற்பனையாளர்களுக்கு 25 சதவீதம் கழிவு உண்டு.

விவரங்கட்கு:

பைந்தமிழ்ப் பதிப்பகம்,

2/127. மவுண்ட்ரோடு, : : சென்னை-6.

WHEN YOU WANT BLOCKS

Consult

Rayan & Co.,

SPECIALISTS IN

LINE & HALFTONE MULTI-COLOUR BLOCKS

696. TRIPLICANE HIGH ROAD

MADRAS-5

தமிழன்பர்களனைவருக்கும்

எமது பொங்கல் வாழ்த்துக்கள் !

முதுமொழி பலவில் தனிப்பெரும் மொழியாம் தமிழ் மொழி வளம் பெற நாங்கள் இதுவரை வெளியிட்டுள்ள 'காவேரி' 'பவானி' 'கண்ணகி' 'மணிமேகலை' 'வள்ளி' முதலிய தமிழ் எழுத்துக்களுக்கு ஆதரவு தந்துள்ள நேயர்கள் அனைவருக்கும் எமது நன்றி.



சுமாகோ கட்டிங் மெஷின்

நார்ட்டன் அன்டு கம்பெனி

சூளை :: சென்னை-7.



சுமாகோ டிரெடில் பிரின்டிங் மெஷின்

மேலும்: அச்சகங்களுக்குத் தேவையான டிரெடில் பிரிண்டிங் மெஷின், கட்டிங் மெஷின், மற்றும் பலவித சாமான்களும் எப்போதும் எம் கைவசமுள்ளன.

விவரங்களுக்கு இன்றே எழுதுங்கள்.



TOWER BRAND

Screwed wire products
Welded wire products

Manufacturers

THE SOUTHERN INDUSTRIAL CORPORATION LTD.

6, Armenian Street, Madras

கோட்டகுடி பெரியநாயக்கர்
கோவிந்தசாமி அவர்களின்

ஆதரவாளர்கள் அனைவருக்கும், எமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

Phone : 62400

அழகுக்கு அழகு தரும்

நாகரிக ஆடைகளுக்கு

சிறந்த இடம்

லிபர்ட்டி ஸ்டோர்ஸ்

360/2, பூந்தமல்லி ஹைரோடு

அமைந்தகரை

சென்னை-29.

நெஞ்சிருக்கும்வரை
நினைவிருக்கும்

சரஸ்வதி பிக்சர்ஸ்

ராணி சம்யுக்தா

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

கலையரசி பத்மினி

மற்றும் பலர் நடிப்பது

திரைக்கதை, வசனம், பாடல்

கண்ணதாசன்

இசை :
கே. வி. மகாதேவன்

கேமரா :
பி. எல். ராய்

தயாரிப்பு
ஏ. சி. பிள்ளை

டைரக்‌ஷன்
யோகானந்த்

ஸ்டுடியோ : விஜயா - வாகினி

சுலபத் தவணைகளில்....

சென்னை நகரத்திற்கு மட்டும் பிலிப்ஸ் ரேடியோ, பிலிப்ஸ் அண்டு ஹெர்குலிஸ் சைகிள், ஜெனித் தையல் மிஷின், எல்லாவித எலக்டிரிக் சாமான்களுக்கும்

தகுந்த இடம்:

ரேடியோ சென்டர் (பிரைவேட்) லிட்.,

193, மவுண்ட்ரோடு, சென்னை-2.

பிராஞ்சு:

1/5 பிருந்தாவனம், ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-4.

போன்: 72952.

எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

வாடிக்கை காரர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த வணக்கமும் வாழ்த்தும் உரித்தாகுக!

ஆர். எம். கனகசபாபதி

டீலர்ஸ் இன் **பர்மாஷெல்**

ஒயிட்ஸ்டவ், கிருஷிணுயில் ஒல்சேல், ரிடெயல், சிமண்ட் அண்டு ஜெனரல் மெர்சண்ட்

ஆபீஸ்:-
23, முத்து முதலிதெரு,
இராயப்பேட்டை
மதருஸ்-14

சேல்ஸ் டிப்போ:-
2/46, தௌசண்ட்லைட் மார்க்கட்,
மவுண்ட்ரோட்
மதருஸ்-6

போன் நெம்பர்: 85294

பொங்கல்
வெளியீடு
அன்னபூர்ணாவின்
தாய உள்ளம்
டைரக்ஷன் · A. சுப்பாராவ்
வசனம் · ஸ்ரீதர்
BAKTHA
ELEGANT

தென்றல்

1961

பொங்கல் மலர்

ஆசிரியர் : கண்ணதாசன்

விருந்து தருவோர்

அறிஞர் அண்ணு
சிந்தனைச் செல்வன்
இசையரசு எம். எம். தண்டபாணிதேசிகர்
சொல்லின் செல்வர் ஈ. வே. கி. சம்பத்
கண்ணதாசன்
கே. ஏ. மதியழகன்
பேராசிரியர் க. அன்பழகன்
செல்வி அ. மல்லிகை
பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்
தமிழ்ப் பித்தன், தமிழ் முடி, வாணிதாசன்
தமிழண்ணல், டாக்டர் அ. சிதம்பரநாதனுர்
பேராசிரியர் அ. மு பரமசிவானந்தம்
பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர்
எஸ். எஸ் தென்னரசு
பேராசிரியர் மா. கி. தசரதன்
வழக்கறிஞர் தில்லைவில்லாளன்
டாக்டர் மு வரதராசனுர்
பேராசிரியர் ஆ. ஜெபரத்தினம்
இரா இளஞ்சேரன், மா. தங்கவேலர், சோமலெ
தே அறிவுடை நம்பி
நா. ஜகந்நாதன்
பி. சி. கணேசன்
பேராசிரியர் க. அறிவழகன்
ப. சி. அ. வணங்காமுடி
தமிழ்வாணன்
பஞ்சு அருணுசலம்
ருக்மணி இராமநாதன்
டாக்டர் மா. இராசமாணிக்கனுர்
மு கணபதி
கம்பதாசன்
அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி
ந. தாமோதரன்
ஜீவபந்து ஸ்ரீபால்
துறையூர் அலி
வை. சுப்பிரமணியன்
அ. திருமலை முத்துசுவாமி
மலர் தொகுப்பு :—நாரா நாச்சியப்பன்

எண்ணம்

பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக என்று அறிவும் தகைமையும் அன்பும் தயையும் சான்ற பெரியோர்கள் மங்கல வாழ்த்து உரைக்க, எல்லோரும் இன்பமும் குதூகலமுமாய்க் கொண்டாடும் இந்தத் திருநாளிலே "தென்றல்" தன் ஏழாவது பொங்கல் மலரினைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் முன் படைக்கிறது.

தென்றல் பொங்கல் மலர் சிறப்புற வெளிவர வேண்டுமென்ற ஆர்வமும் அன்பும் உள்ளத்தே கொண்ட அறிஞர் பெருமக்களும், மறுமலர்ச்சி எழுத்தாளர்களும், புதுமைக் கவிஞர்களும், தங்கள் சிறந்த படைப்புக்களை வழங்கி, மலரைப் பொலிவும் வனப்பும் பெறச் செய்திருக்கிறார்கள்.

முகப்பு ஓவியத்தைச் செவ்விய முறையில் தமது தூரிகையால் திறம்பட வண்ணப்படமாக்கித் தந்துள்ளார் ஓவியர் இளைஞர் ஜெயராஜ். மலர் முழுவதும் தமது சித்திரங்களால் புத்தழகு சேர்த்திருக்கிறார் ஓவியர் முகில். புகைப்படக் கலைஞர் சாமுவேலும், வேடிக்கைச் சித்திர ஓவியர்கள் அன்பும், லிங்கமும் தங்கள் பங்குகளைச் சிறப்புறச் செய்திருக்கிறார்கள்.

தென்றல் அலுவலகத் தோழர்கள், அல்லும் பகலும் விழித்திருந்து மலர் அழகுற வெளிவரப் பெரிதும் பாடுபட்டிருக்கிறார்கள்.

அனைவருக்கும், தென்றல் சார்பாக நன்றி கூறுகிறேன்.

எல்லோருக்கும் என் பொங்கல் வாழ்த்துக்கள் !

அன்பன்,

கண்ணதாசன்

அந்த நாடகம்



“இப்போது கேட்டதே சத்தம்.”

“பேசிக்கொண் டிருந்தோம்.”

“இல்லை, படித்துக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. உண்மையை ஒளிக்காதே. அதைத்தானே படித்துக்கொண்டிருந்தீர்கள். பேசாமல் மரியாதையாகக் கொடுத்து விடு. இல்லையானால் உங்கள் அத்தனை பேர் தலைகளுக்கும் தீம்பு வரும் ஜாக்கிரதை!”

“கோபிக்கிறீர்களே; இங்கே யாரும் படிக்கவில்லையே. சும்மா பேசிக்கொண் டிருந்தோம். வேடிக்கையாக...”

★

“வேடிக்கையாம் வேடிக்கை! என்னடா மகா வேடிக்கை, அதிலே கண்டு விட்டாய்? அந்தப் போக்கிரி நமது நடைநொடி பாவனைகளைப் பற்றிக் கேலிசெய்கிறான். பஞ்சைப் பயல்கள் பரிகாசம் செய்யும்படி நம்மைச் சந்தியில் இழுத்து விடுகிறான். மானமில்லாமல், ரோஷமில்லாமல் அந்தப் புத்தகத்தை—நம்மைக் கேவலப்படுத்தும் புத்தகத்தைப் படிக்கிறாயே?”

“தமாஷாக இருந்தது. மேலும் பல விஷயங்கள் உண்மை; பிரபுக்களின் குடும்ப வாழ்க்கையிலே காணப்படும் நிலைமையை, நன்றாக வர்ணித்திருக்கிறான்.”

“போதும். வாயை மூடடா! புத்தி கெட்டவனே! நம்மை இழிவு செய்வது மட்டுமல்ல அந்த ஏடு. அது சாதாரண ஜனங்களிடம் பரவினால், நாம் கேவலப்படுத்தப்படுவோம். அது மட்டுமல்ல, ஆபத்து உண்டாகும் நமது பிரபுத்வத்துக்கு.”

“மக்கள் ஏற்கனவே படித்து விட்டிருப்பார்களே!”

அறிஞர் சி.என். அண்ணாத்துரை

"இல்லே, அச்சுப் பிரதி இருந்தால்தானே மக்கள் படிக்க! எங்கோ சிலருக்குத் திருட்டுத்தனமாகக் கையெழுத்துப் பிரதி கிடைத்திருக்கும். கருத்துஅதன் மூலமாக வேகமாகப் பரவ முடியாது."

★

"சரிதான் தள்ளுடா. மகாப் பிரமாதமாகப் புகழ்கிறே. இந்தப் பிரபுக்களின் வண்டவாளம் எல்லாம் எனக்குத் தெரியும். வேண்டிய மட்டும்."

"எப்படி ?"

"எப்படியா ? போய்ப் படிடா. இவனுங்க யோக்கியதையை வெளிப்படுத்தும் அந்த ஏட்டை."

"எந்த ஏடு ? எங்கே இருக்கிறது ?"

"டே, உரக்கக் கூவாதே. போலீஸ் காதிலே விழப்போகுது. நாளை இரவு 12-மணிக்கு வா. அந்த ஏடு படிக்கிற இடத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறேன். இரகசியமாக இருக்க வேணும்."

★

"புளுகாமல் சொல். அந்த ஏட்டைப் படித்தாயா ?"

"இல்லிங்க."

"வேறே யாராவது படிக்கும் போது பக்கத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்தாயா ?"

"இல்லிங்களே !"

"பொய் பேசாதே."

"இல்லிங்க, அப்படி ஒரு ஏடு இருக்குதுண்ணு கூட எனக்குத் தெரியாதுங்க."

"தெரியாதா ? தெரியாமல் தான். நான் பட்டு மேலங்கி போட்டுக் கொண்டபோது பரிகாசப் பார்வையுடன் நீ பார்த்தாயோ ? அந்தப் பாவி எங்களைக் கேலி செய் தெழுதியதை நீங்களெல்லாம் படித்துவிட்டுத் தான், தலைகால் தெரியாமல் ஆடுகிறீர்கள் ?"

★

ஓர் ஏடு ! நாடு முழுவதும் அதுபற்றி இவ்விதம் பலவேறு வகையான பேச்சு.அச்சத்தோடு பேசினர் சிலர் ; ஆனந்தக் கூத்தாடினர் அநேகர்; பிரபுக்களின் வீட்டிலே, பாட்டாளியின் குடிசையிலே, மார்க்கெட்டிலே, மலர்த் தோட்டத்திலே, எங்கும் அந்த ஏட்டைப்பற்றியே பேச்சு! 'குசுகுசு' என்ற பேச்சு. ஓர் ஆண்டு இரண்டாண்டுகளாக, பலபல ஆண்டுகளாகப் பேச்சு. இவ்வளவுக்கும் அது ஒரு சாதாரண நாடகம். அச்சிலும் வெளிவரவில்லை ! அந்த நிலைமையிலே நாடு முழுவதும் அந்த ஏடு பற்றிப் பேசவேண்டி நேரிட்டது. உள்ளத்தைக் குலுக்கி விட்டது அந்த ஏடு.

எதிரியின் படைகள், உள் நாட்டிலேயே கிளம்பும் சதிகாரர்கள், புரட்சிக்காரரின் வெடி குண்டுகள், இவைகளைக் கண்டு அஞ்சாது கடுமையான நடவடிக்கை எடுத்து அடக்கும் ஆற்றலைப் பெற்றிருந்த ஜார் ஆட்சியிலே ஓர் ஏடு இவ்வளவு பாடுபடுத்திவிட்டது.

"இந்த ஏட்டை நாட்டிலே படித்தாலும், நாடகமாக நடித்தாலும் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவர்" ஜார் ஆட்சியிலே தடை யுத்தரவு பிறப்பித்து விட்டனர்.

★

அலெக்சாண்டர் கிரிபாயிடாவ் அந்த ஏடு எழுதினவன் ; ரஷ்ய நாட்டின் பார்வையைத் தன் பக்கம் இழுத்துவிட்டான். அந்த ஓர் ஏட்டின்மூலம். அந்த ஏட்டிலே, இன்னின்ன விஷயங்கள் உள்ளன என்பது தெரிந்த உடனே, ஜார் ஆட்சி சீறிற்று. பிரபுக்கள் பதைத்தனர். அதிகாரிகள் மும்முரமாயினர். "அச்சிடாதே !" என்று உத்தரவு கிளம்பிவிட்டது.

அந்த ஏடு நாடக நூல் ! எனவே அந்த நாடகத்தை நடிக்காதே என்ற துணை யுத்தரவு பிறந்தது.

அச்சடிக்காதே ! நடிக்காதே ! படிக்காதே !

வல்லமை பொருந்திய ஜார் ஆட்சியிலே. ஒரு பேனுமுனை, இவ்வளவு கிலியைக் கிளப்பிவிட்டது.

இந்த உத்தரவு, 33 வருஷங்கள் அமுலிலிருந்தது. ஏடு எழுதியவர் நாடகமாகத் தமது நூல் காட்டப்படுவதைக் காணவேயில்லை அவர் இறந்து 33 வருஷம் கழித்தே அவர் தீட்டிய நாடகம் நடிக்கப்பட்டது.

'நடிக்காதே !' என்று ஜார் ஆட்சிகூறிற்று. நடிக்கவில்லை. நாட்டில்.'அச்சடிக்காதே'என்று உத்தரவு ஜார் ஆட்சியில். எனவே யாரும் அச்சிடவில்லை.

ஆனால், படிக்காதே என்ற உத்தரவு பஞ்சாய்ப் பறந்தது. எங்கும் மக்கள் இரகசியமாகக் கூடிக் கூடிப் படித்தனர். புத்தகமாக அச்சாகுமுன்பே, மக்களுக்கு அது மனப்பாடமாகிவிட்டது. அந்த மகத்தான நூலின் பெயர் "கேலி செய்யும் கேடு" உண்மையிலேயே கேடுசெய்யக் கூடிய கேலிதான் ! அந்த ஏட்டிலே நாட்டுக்கு நாயகர்கள் என்று புகழப்பட்டு, ஏழை எளியவரை வாட்டி வதைத்துப் பிழைத்து வந்த பிரபுக்களின் போக்கு படம் பிடிக்கப்பட்டிருந்தது. மாளிகைகளிலே உலவுபவர்களின் மனப்போக்கு,செயல்கள், நடைநொடி பாவனைகள், அவ்வளவும் கேலி செய்யப்பட்டிருந்தன. ரஷ்ய நாடு முன்னேற்ற மடையாதிருப்பதற்குக் காரணம் சமுகத்திலே உள்ள கோளாறுகளே என்பதை அந்த ஏட்டிலே நன்ருக விளக்கினுர். அந்த நூல் பிரபுக்களிடையே அச்சத்தை மூட்டி விட்டது. எனவேதான் ரஷ்ய மன்னன் தடை யுத்தரவு பிறப்பித்தான். அந் நூலை நாடகமாக நடிக்கக் கூடாது என்று.

★

அலெக்சாண்டர் கிரிபாயிடாவ், அவ்வளவு பொருத்தமாகப் பிரபுக்களின் கோலாகல மான வாழ்க்கையைப் படம் பிடிக்க முடிந்ததற்குக் காரணம்

அவர் பிரபு பரம்பரையில் வந்த குடும்பத்தில் பிறந்ததால், அந்த வர்க்கத்தவரின் வாழ்க்கை முறையை நன்றாகத் தெரிந்து கொள்ள முடிந்ததால் தான், 1795-ல் மாஸ்கோ நகரில் ஒரு செல்வக்குடியில் பிறந்தார், கிரிபாயிடாவ். கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும்போதே 1812-ல் நெப்போலியன் ரஷ்யா மீது படையெடுத்ததால் உண்டான போரிலே கலந்துகொண்டு விட்டார். பிறகு, அவர் ரஷ்ய ராஜதந்திரிகள் இலாக்காவிலே அலுவல் பார்த்தார். இந்த அலுவலிலே இருக்கும்போதே கூடக் கிரிபாயிடாவ் இலக்கியத் துறையிலே ஆர்வம் கொண்டு, பல நூல்களை எழுதிக்கொண்டிருந்தார். ரஷ்ய நாட்டை உலுக்கிய 'கேலியால் வரும் கேடு' என்ற நூலை, 1823-ல் எழுதி முடித்தார். நூல் அச்சாகவில்லை; ஆனால், அதிலே உள்ள கருத்துக்கள் நாட்டிலே பரவிவிட்டன.

1826-ல் புரட்சிக்காரர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கிரிபாயிடாவ் கைது செய்யப்பட்டார். ஆனால், விசாரணைக்குப் பிறகு, விடுதலை கிடைத்துப் பழையபடி ராஜதந்திர இலாகாவிலே வேலை பார்த்து வந்த அவர், விடுதலை செய்யப்பட்டாரே ஒழிய, அவருடைய நூலின் மீதிருந்த தடை நீக்கப்படவில்லை.

1829-ல் கிரிபாயிடாவ், டெஹ்ரானில் ரஷிய விரோதிகளால் கொல்லப்பட்டார். அதற்குப் பிறகும்கூட நூலின்மீது இருந்த தடை நீக்கப்படவில்லை. அவர் இறந்து 33 வருஷங்களான பிறகு 1862-ல், தடை நீக்கப்பட்டது; புத்தகம் அச்சடிக்கப்பட்டது; மக்கள் பகிரங்கமாகப் படிக்கத் தொடங்கினர்; நாடகமும் நடத்தப்பட்டது. பிரபல நடிகர்கள் எல்லாம் அந்த நாடகத்திலே எந்தப் பாத்திரமாக வேனும் நடிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் போதும் என்று துடிதுடித்தனர். இன்றும் அந்த நாடகத்திலே நடித்தவனென்றால், அந்த நடிகனுக்குத் தனிப் புகழ், தனி மரியாதை! ஓர் அரசின் கோபத்தைக் கிளப்பிய அந்த ஏடு, ஒரு நாட்டுமக்களின் மனத்தைக் கொள்ளை கொண்டது. உலக இலக்கியத்திலேயும் இடம் பெற்றது. அந்த நூலின் பல வாசகங்கள் பழமொழிகளாகி விட்டன. இப்படிப்பட்ட அருமையான ஏடு, ஜாரின் அமுலால் 33 ஆண்டுகள் மக்கள் மனத்திற்குச் செல்லக் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தது. அந்த எழுத்துக்கு அவ்வளவு சக்தியிருக்கிறது என்பதை ஜன சக்தியையும் திரணமாக மதித்த ஜார் ஆட்சியே உலகுக்கு உணர்த்தி வைத்தது. ★

வண்டமிழ் நாட்டின் வளம் பெருக்கி-என்றும்
வள்ளுவன் வாய்நலம் அதிற் பரப்பி
சிந்தையின் சிக்கல் பல நறுக்கிக்-காண்போம்
சிங்காரச் சோலை தனைஎழுப்பி

உண்டால் அல்லவோ இவ் வுலகம்-வயல்
கொண்டான் உழவன் அலுவலகம்
பெண்டுகள் பிள்ளைகள் பேருடன்- உழைத்துக்
கண்டான் பொன்னெல் பொங்கி யின்பம்.

துன்பத்தில் பங்கெவர் பெற்றனரோ- இல்லை
இன்பமே இன்ப மெனில் தவறு
அன்பையும் பண்பையும் வாழ்த்துதலே- கைமா(று)
என்பதைத் தோழரே நீர் மறவீர்.





நற்றமிழ் பாடுவோம்

பண் கல்யாணி | பாணி ஆதி

(பண்ணியல்)

குற்றமிலாமலே பாடுவோம்—இசைக்
குணங்களெல்லாம் திகழக் குரலில்இனிமை பெற்றுக்

(குற்ற)

(துணைப்பண்ணியல்)

சொற்றவ றுமலும் சோர்வுஇல் லாமலும்
நற்றமிழ்ப் பாக்களை நாத்தமும் பேறவே

(குற்ற)

(பண்ணியல் முடிவு)

அழுமுகங் காட்டாமல் ஐயங்கொள் ளாமலும்
அவையில் உள்ளோரைக்கண்டு அச்சங் கொள்ளாமலும்
வழிவழியாய் வந்த வண்ணஇசைத் தேனை
வாரி இனிதருந்தி வண்மையுடன் வாழக்

(குற்ற)

இசையரசு, எம்.எம்.தண்டபாணி தேசிகர்

இந்திய ஒற்றுமை

சொல்லின் செல்வர் ஈ.வே.கி.சம்பத்

கடந்த இரண்டாண்டுகளாகவே இந்தியாவின் ஒற்றுமை குறித்து ஓலமிடும் பிரமுகர்களின் தொகை பெருகி வருகிறது. இந்திய ஒற்றுமையினைத் தத்துவ ரீதியாக ஆய்ந்து கண்ட முடிவினை உள்ளுணர்வோடு கூறுபவர்களாக அவர்களில் பெரும்பாலோர் இல்லை. எவ்வகையாலோ, இமயம் முதல் குமரி வரை கோலோச்சக் கிட்டிய அதிகாரம் முடிந்து விடலாகாதே என்று பதைப்பவரின் ஓலமே காதைத் துளைத்து நிற்கின்றது.

எது, எப்படியாயினும் இப்பிரச்னையில் அதிக நாட்டம் செலுத்தி, எழும் கேள்விகளுக்கனைத்தும் பதிலிறுக்க வேண்டிய பெரும் பொறுப்பு நமக்குண்டு.

★

"இந்திய ஒற்றுமையை விரும்புகிறீர்களா, இல்லையா?"

"பெரிதும் விரும்புகிறோம்."

"பின், நீங்கள் மறுப்பது எது?"

"இந்தியா ஒரு நாடாகவே தொன்றுதொட்டு இருந்து வருகிறது; அது அவ்வாறே இனியும் நீடிக்க வேண்டும்; உள்ள ஒற்றுமை குலைதல் கூடாது; என்பன போன்ற கூற்றுக்களையே மறுக்கிறோம்."

★

காந்தியார் முதற் கொண்டு நேரு அவர்கள் வரை, வெள்ளையன் ஆட்சிக் காலத்தில்தான் இந்தியா ஒரு அரசியல் அமைப்பில், ஒரு ஆளுகை முறைக்கீழ், வந்தது என்பதனை பல்வேறு சமயங்களில் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும் ஒரு படி சென்று, வெள்ளையனால் நமக்கு விளைந்த ஒரே நன்மையும் அதுதான் என்றும் கூறியுள்ளனர். ஆக இந்த அரசியல் 'ஒற்றுமை'யின் வரலாறு கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகத்தான் என்பதும், அவ்வொற்றுமைபடையெடுத்து வந்த அந்நியன் ஒருவனது வாளுக்கஞ்சி என்பதும், எவரும் மறுக்க முடியாதவை.

அந்நியன் அகன்றான். சுயராச்சியம் கனிந்தது எனப்பறை முழங்கியது.பதிமூன்று ஆண்டுகளும் உருண்டோடி விட்டன.

அவன் ஏற்படுத்திய—அவனது வாள் உண்டாக்கிய - 'ஒற்றுமைக்குக் கடுஞ் சோதனைகள் ஏற்பட்டன. சோதனைகள் ஒவ்வொன்றின்போதும், வெளிப்படும் உண்மைகள் பலருக்குக் கசப்பாக உள்ளது.

பளபளக்கப் பித்தளையைத் தேய்த்து, பொன்போல-பொன்னினும் மேலாக-பொன்னே இது, என்று சந்திப்போர் நுட்பத்தரத்திற்கு ஏற்பப் புளுகும் எத்தனுக்கு, அது, பொன்தானா எனக் கண்டறியத் திராவகச் சோதனைக் காட்படுத்தப்படும்போது ஏற்படும் வேதனையும், பதைப்பும் இந்திய ஒற்றுமை என்று எதையோ கூறி, எதையோ காட்டி, எத்திப் பிழைக்கும் சரித்திரப் புரட்டர்களுக்கும், அஸ்ஸாமும், பஞ்சாபும், வங்கமும், மராட்டியமும், தமிழகமும் கிளர்ந்தெழுந்து கர்ஜிக்கும் போது ஏற்படுகின்றது!

பிரிந்துசென்ற பாகிஸ்தானும், பர்மாவும், இலங்கையும், புதிதாக மலேயாவும் இவை தவிர்த்து நாம் வாழும் எஞ்சிய இந்தியாவும், கூடி வாழமுடியும், ஒரு சட்டத்துக்குட்பட்டு ஒரு அரசியல் அமைப்பினை வகுத்து உட்பட்டு வாழலாம் எனில், அனைவரும் எண்ணி எண்ணி மகிழத்தக்க வரலாற்றுப் பெரும் மாறுதலாகவே அது முடியும். இம்மாறுதல் கண்டு, வெட்கித் தலை

குனிந்து ஐரோப்பா ஒரு நாடாகலாம்; சீனாவும் ருஷ்யாவும் இணைந்து ஒரு நாடாகலாம்; கானடாவும், அமெரிக்க ஐக்ய நாடுகளும் மட்டும் இணைவதா, அல்லது தென்னமெரிக்க நாடுகளனைத்தையும் சேர்த்து இணைத்து, உலகே கண்டு அதிசயிக்கத்தக்க வகையில் அமெரிக்கக் கண்டமே ஒரு நாடாவதா என்ற நிலையும் உருவாகலாம்.

அரசியல் வாதிகள் ஓரளவு கனவு காண்பவர்களாகவும், கற்பனைத் திறம் படைத்தவர்களாகவும் இருக்க வேண்டியதுதான். ஆனால் ஒரே யடியாகக் கனவு காண்பவர்களாகி, நடைமுறை உண்மைகளையும், தேவைகளையும் உணராதவர்களாக மாறின், அவர்களை நம்பிக் கிடக்கும் நாடும் மக்களும் நீங்காத் துயருக்குள்ளாகவே நேரிடும்.

ஒற்றுமை வேண்டுமா, வேண்டாமா என்பதும், ஒற்றுமைக்கு வழி என்ன என்பதும் ஒருவகையான கேள்விகள்; இன்று நிலவுவது ஒற்றுமையாஎன்பது வேறு கேள்வி.

சிறிதளவு கூட்டத்தால் பெருத்துள்ள இந்திமொழி பேசுவோரால், சாதாரண மொழிப் பிரச்னையில் பிறரது உள்ளத் துணர்வுகளை மதித்துச் செயலாற்ற முடியவில்லை; கப்பம் கட்டும் சிற்றரசர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கும் மாமன்னன் தொனியில் மாநிலங்களிடம் டில்லியில் கோலோச்சும் உத்தரப் பகுதியினர் பேசுகின்ற நிலையில், ஒற்றுமை என்பது கானல் நீர் வேட்டையாவதன்றி வேறெதில் முடியும்?

பிறன்உரிமையை, தேவையை, இன்ப துன்பத்தை காட்டுமனிதன் மதிக்கத் தெரிந்தபோதுதான், சமூக வாழ்வு அவனுக்குச் சித்தியாயிற்று. தான், தன்னுடையது, தனது தேவை, தனது விருப்பம் இவைகளுக்கே முதலிடம், இவைகளுக்கே முழு இடமும் என்ற நினைவு தனி மனிதனுக்கு ஏற்பட்டாலும் சரி, ஒரு மொழி அல்லது ஒரு பண்பாட்டு வரலாற்றால் ஒன்றுபட்ட ஒரு கூட்டத்திற்கு ஏற்படினும், அவர்கள் தனித்து வாழ வேண்டியவர்களேயன்றி, பிறர் அவர்களுடன் இணைந்து வாழ்வது— மாந்தர்தம் நல்லுணர்வுச்சிதைவு ஏதும் நேரிடாமல் வாழ்வது— என்பது கூடாத ஒன்று; இயலாத ஒன்று.

இந்திய ஒற்றுமை குறித்து, ஆதிக்க வெறியும், தன்னல நோக்கும் அற்ற அறிஞர் பெருமக்கள் சிந்திப்பதையும், நல்ல முடிவுகள் காணுவதையும் நான் வரவேற்கிறேன். ஆனால், விபத்தில் விளைந்த அரசியல் சட்டம் வாரிக் கொடுத்த அதிகார மோகத்தில், உண்மை நிலை மறைத்து உபதேசிகளாக மாறி, உரிமை பறிக்க முயலுவோர், ஒற்றுமை குறித்துப் பேசப் பேச அது நம்மைவிட்டுஅகன்று போய்க்கொண்டே இருக்கிறது என்பதே என் எண்ணம்.

ஒருவனது கொடுமைக்காட்பட்டவர்கள் அவனால் விளையும் கொடுமையினின்றும் விடுபட ஒன்று சேருவதும், ஒருமனப்பட்டுச் செயலில் ஈடுபடுவதும் எளிது. அனைவரையும் வாட்டும் கொடுமை ஒன்றே, ஒன்று சேர்த்துவிடும். கொடுமை புரிவோர் அகன்றபின், அவனை விரட்டிய அனைவரும் ஒன்று சேர்ந்து நீடித்த நிலைபெற்ற தேசீயத் திருவாழ்வு வாழ ஒருவரையொருவர் நம்பி உறவாடிக் கலந்திருக்க, ஒரு புதிய நல்லியல்புகள் அனைவரிடமும் வெளிப்பட்டாக வேண்டும். கொடுமை யகன்று, ஏற்பட்ட புதிய நிலையில் அனைவரும் சம பங்காளிகள், சம அந்தஸ்து உடையவர்கள் என்ற அழுத்தமான எண்ணம் அனைவருக்கும், இந்தியாவில் ஏற்பட்டுள்ளதா? ஏற்படும் அறிகுறி தென்படுகிறதா, ஏற்படப் பெருந் தலைவர்கள் என்ன சூத்திரம் வைத்திருக்கின்றனர்? பொறுப்புடன் சிந்தித்து விடை கண்டால், பின் எவரும் நம்மை உவப்பர்.

★

விகடராமன் கவிதைகள் :

திருமணம் பேசு தற்குத்
தேடியே வந்தோர் பெண்ணின்
உருவினைப் பற்றி ஏதோ
உள்ளுக்குள் குசுகு சுத்தார்
பெரியரே அவனுக் குங்கள்
பேச்செலாம் காது கேளா(து)
உரிமையாய்ப் பேச லாமென்
றுளறினன் விகடராமன்.



பசி

முகில்...

இரவு மணி எட்டிருக்கும். சென்னையிலிருந்து ஒரு வாடகைக் கார் சென்னைக்கு அண்மையிலுள்ள ஒரு கிராமத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. வாடகைக் காரில் டிரைவரைத் தவிர, பின் சீட்டில் ஒரு வாலிபனும் முன்சீட்டில் ஒரு தரகனும் அமர்ந்திருந்தார்கள். வாடிக்கையான வியாபாரம் ஒன்றுக்காக தரகன் அந்த வாலிபனை அழைத்துப் போய்க் கொண்டிருந்தான்.

"என்ன வயசிருக்கும்", என்று மெதுவாக அந்த வாலிபன் கேட்டான்.

"சுமாரா இருபத்திரெண்டு இருக்கும்! பொண்ணு பாக்கிறதுக்கு நல்லா இருக்கும்! 'டிரஸ்'ஸுதான் சுமாரா இருக்கும்! பாவம் ஏழை! டிரஸ்ஸைப் பாத்துட்டு நீங்க ஒண்ணும் அருவருப்பா நெனக்கக்கூடாது. ரொம்ப நல்லா நடந்துக்கும்! மனசுக்குத் திருப்தியா இருந்தா, கையிலே நெறையக் கொடுத்துட்டு வாங்க!" என்ருன் தரகன்,

வாலிபன் மனம், அந்த ஓர் இரவுக்காதலியைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டே இருந்தது. கார் நெடுஞ்சாலையின் அருகில் இருந்த ஒரு வீட்டினருகே நின்றது. சின்னஞ்சிறிய வீடு அது. இரண்டே அறைகள். ஒன்று சமையல் செய்து சாப்பிடும் இடம்; இன்னொன்று பொருள்களை அடுக்கி வைத்து அதன் மேலேயே தூங்கும் இடம்.

தரகன் முதலில் உள்ளே போய்த் திரும்பினுன். சிறிதுநேரத்தில் மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று எரிய ஆரம்பித்தது. அவசர அவசரமாக முகத்தில் 'பவுடரை' எடுத்து அப்பிக் கொண்டாள் அந்தப் பெண். ஓரளவு சுத்தமாக இருந்த சேலையை எடுத்துச் சுற்றிக்கொண்டாள். கிழிந்திருந்த ரவிக்கையை எடுத்துவிட்டு, புதிய ரவிக்கையைத் தேடினுள். எல்லாமே அதே மாதிரி இருந்தன. எதைப் போடுவது என்று திகைத்துக்கொண்டிருக்கும் போதே வாலிபன் உள்ளே நுழைந்து விட்டான்.

அவன் வந்ததைத் பார்த்துவிட்ட அந்தப் பெண், சேலைத் தலைப்பாலேயே மார்பகத்தை மூடிக்கொண்டாள்.

"வாங்க" என்ருள்.

வாலிபன் தொண்டை வரண்டிருந்தது. ஆசை பாதி, பயம் பாதி; அவன் பேசாமல் நின்ருன்.

"உட்காருங்க" என்று பழம் பாயைக் காட்டினுள். அவன் உட்கார்ந்தான். வெளியில் ஏதோ காலடி ஓசை கேட்டது. அவன் நெஞ்சு துணுக்குற்றது. எச்சிலை விழுங்கியபடி, "இங்கே போலீஸ்காரங்க யாரும் வரமாட்டாங்களே" என்ருன்.

"வரமாட்டாங்க! ஒண்ணும் பயமில்லே!" என்ருள் அவள்.

பக்கத்திலே வந்து உட்காரும்படி அவன் கை காட்டினுன். உட்காரப் போன அவள் திரும்ப நின்றபடி, "கார் இருக்கட்டுமா, அனுப்பிடலாமா" என்று கேட்டாள்.

"இருக்கட்டும் நான் சீக்கிரம்போயிடப் போறேன்" என்ருன் அவன்.

கண்ணதாசன்

அவள் கதவைத் தாளிட்டுவிட்டு அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

வெளியிலே கார் டிரைவரும் தரக

ரும் உலக விவகாரங்களைப்பற்றிப் பேச முற்பட்டார்கள்.

அருகில் வந்து உட்கார்ந்த அவளைப் பார்த்து, "உன் பெயரென்ன ?" என்று கேட்டான் அவன் !

"மங்களம்" என்றாள்.

"என்ன வயசாகுது ?"

"இருபத்தி ரெண்டு நடக்குது !"

"சொந்தக்காரங்க யாரும் இல்லையா ?"

"புருஷன் கோலார் தங்க வயலிலே வேலை பாக்குறாரு ! அப்பா, அம்மா யாரும் இல்லே !"

"உனக்குக் கல்யாணம் கூட ஆச்சா !"

"உம் !"

"ஏன் ! உன் புருஷன் ஒனக்கு ஒண்ணும் அனுப்புறதில்லையா ?"

"மாசம் முப்பது ரூபா அனுப்புறாரு ! அதிலே வீட்டு வாடகையே பதினஞ்சு ரூபா போயிடுது !"

"இப்படி நீ செய்யிறது அவனுக்குத் தெரியுமா ?"

"தெரியாது ! தெரிஞ்சாக் கொன்னு போட்டுருவாரு !"

"பாவம்! இந்தத் தொழில் உனக்குப் பிடித்தமாவா இருக்கு ?"

"என்ன பண்றது; நானும் புதுசு ! வேறெ வழியும் இல்லே.

அவன் அவளை அருகில் பிடித்து இழுத்து வைத்துக்கொண்டான். அவள் நகர்ந்து உட்காரும்போது பாய்க்கு அடியில் ஒரு கிலுகிலுப்பை நொறுங்கும் சத்தம் கேட்டது.

"என்னது ?" என்று கேட்டான்.

"கிலுகிலுப்பை" என்றாள்.

"உனக்குக் குழந்தையிருக்கா ?"

அவள் கண்களில் நீர் துளிர்த்தது. அவளது மேலாடை தாய்ப்பால் பட்டு கறை பட்டிருப்பதை அவன் கண்டான்.

"ஏன் ! என்ன ! எதுக்காக அழுறே !"

"ஒண்ணுமில்லே...என் விதியை நெனச்சு அழுறேன்..."

"சும்மா சொல்லு..."

"வேண்டாங்க ! சந்தோஷமா இருக்குற நேரத்திலே ஒங்களுக்கு எதுக்கு அதெல்லாம்..."

"பரவாயில்லே; சொல்லு ! மத்தவங்களைப் பத்தி விசாரிச்சுத் தெரிஞ்சுக்கிடுறதுன்னா எனக்கு ரொம்ப ஆசை."

தயக்கத்தோடு அவள் ஆரம்பித்தாள்.

"என் புருஷன்கிட்டே எனக்கு ரொம்ப உயிருங்க ! ஏழையாயிருந்தாக் கூட, கல்யாணம் பண்ணுனதிலே யிருந்து கையிலே கெடக்குற காசை எங்கிட்டயே கொண்டுவந்து கொடுத்துருவாரு ! அவரு சாப்பிடாமெக்கூட என்னை சாப்பிடச் சொல்லிடுவாரு. நான் கவலைப்படக் கூடாதுங்கிறதுக்காக நல்லா சிரிச்சு சிரிச்சுப் பேசிக்கிட்டிருப்பாரு. ராத்திரியிலே தூங்குறப்போ பன்னிரண்டு மணிக்கு, ஒருமணிக்கெல்லாம் முழுச்சிக்கிட்டு. கன்னத்திலே கன்னம் வைச்சிக்கிட்டு அழுவாரு. நல்லா இருந்தோம் ! வயத்திலே ஒரு பிள்ளை உண்டாச்சு ! அப்பத்தான் தங்கவயலுக்கு மனுப் போட்டாரு ! பிள்ளை உண்டான நேரம் நல்ல நேரங்க ! அவரை, வரச்சொல்லி பதிலு வந்துது. ரெண்டு நாள் பூரா தூங்காமே என் கூடவே இருந்தாரு ! 'உடம்பைப் பத்திரமா பாத்துக்க பாத்துக்க'ன்னு பத்துத் தடவை சொல்லிட்டு ரயிலுக்குப் போனாரு. ரயிலடியிலே நான் தான் கொண்டு போயி ஏத்திட்டு வந்தேன்,

"அவரு போனதிலேயிருந்து கஷ்டம் என்னைப் பிடுங்கித் தின்னுது ! கொஞ்ச தூரத்திலே ஒரு என்சீனியர் அய்யா இருக்காரு ! அவரு வீட்டுலே போயி வேலை பாத்தேன். சாப்பாடு மட்டும் சாப்பிட்டேன். அப்பப்ப, அந்த அம்மா புண்ணியவதி அரைரூபா முக்கா ரூபா கொடுப்பாங்க !"



அவன் இடைமறித்து, "ஏன் ஒன் புருஷன் ஒண்ணும் பணம் அனுப்பல்லியா" என்று கேட்டான்.

"ஒரு மாசம் ஆனுத்தானே சம்பளம் கொடுப்பாங்க ! ஒரு மாசம் கழிச்சு முப்பது ரூபா வந்துது. பணம் வந்த அன்னிக் கெல்லாம் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்துது. அதிலேதான் இந்த சேலை கூட எடுத்தேன். அதுனலே பத்து பதினஞ்சு நாளிலே பணம் பத்தாமெ போயிடுச்சு. நல்ல வேளையா என்சீனியர் அய்யா வீட்டு வேலையை நிறுத்தாமெ இருந்தேன். சாப்பாடு கெடச்சிக்கிட்டு இருந்தது. அப்படியும் இப்படியுமா அவரு அனுப்புற பணத்திலேயும் ஐயா வீட்டு சாப்பாட்டிலேயும் நிம்மதியா இருந்தேன்.

"ஒரு பொம்பளைப் புள்ளை பொறந்துது. உடம்பிலே சத்து இல்லாததுனலே புள்ளை பொறக்கிறது ரொம்ப கஷ்டமாயிடுச்சு. ஏழைபாழைகளுக்கு யாருங்க வைத்தியம் பாக்க வருவா ? நல்ல வேளையா எஜமானியம்மா, புண்ணியவதி, அவங்க வீட்டுக்கு வழக்கமா வர்ற நர்சம்மாவை அனுப்பிச்சி வச்சாங்க. கஷ்டப்பட்டு புள்ளை பொறந்துதுங்க. ஆயுதம் போட்டுத்தான் எடுக்கணுங்கிற வரைக்கு வந்துட்டுது. சாமி புண்ணியத்துலே, அப்படி ஒண்ணும் இல்லாமெ புள்ளே பொறந்துது. ரெண்டு ரூபா கொடுத்தேன்; அந்த அம்மா வாங்க மாட்டேனுட்டாங்க. சமைச்சுப் போடுறதுக்குக் கூட ஒரு சொந்தக் காரங்க கெடையாது. அதோட அதுவா நானேதான் எந்திருச்சு எஜமானியம்மா வீட்டுலே போயி சாப்பாடு வாங்கிக்கிட்டு வருவேன். ஒரு வேளைக்கு வாங்குறதை இரண்டு வேளைக்கு வச்சுக்குவேன். எப்படியோ ஒரு நாலஞ்சு மாசம் ஓட்டிட்டேனுங்க"

"உன் புருஷன் வந்து கொழந்தையைப் பார்க்கலியா"

"வர்றேன்னு எழுதியிருந்தாரு ! வந்துட்டுப் போறதுக்கு அது வேறே முப்பது ரூபா செலவாகும்-அதையும்

சேத்து அனுப்பிச்சு வைச்சா. கஞ்சித் தண்ணிக்காவது கஷ்டமில்லாமேஇருக்குமேன்னு, நான்தான் வரவேண்டாம்னு எழுதிப் போட்டேன். அரை குறையா புரிஞ்சும் புரியாமலும் எழுதியிருந்தேன். அதைப் பாத்திட்டு, என்ன நெனச்சுக் கிட்டாரோ, தெரியலே, வருத்தமா கடிதாசி எழுதியிருந்தாரு! 'என்னைவிட ஒனக்கு பணம்தான் வேணுமான்'னு எழுதியிருந்தாரு. விவரம் தெரிஞ்ச வங்களே இப்படி எழுதினு மனசுக்கு எப்படிங்க இருக்கும்!

''அழாத குறையா நான் ஒரு கடிதாசி எழுதிப்போட்டேன், உடனே புறப்பட்டு வாங்கன்னு! மறு கடுதாசியிலே அவரே, 'இல்லே மங்களம்! நான் வந்துட்டு வர்றது வீண் செலவுதான். அந்தப் பணத்தை அனுப்பிச்சு வைச்சிடுறேன்!' என்று, மனசு மாறி எழுதியிருந்தாரு. அந்த மாசம் மட்டும் அறுபது ருபா வந்துதுங்க! பணம் வர்ற அன்னிக்கு ஏழைகளுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கும்! அன்னக்கித்தாங்க இந்த கிலுகிலுப்பை எல்லாம் வாங்கினேன். பணம் கையிலே இருக்குற வரைக்கி மத்தவங்களைவிட நாம நல்லா இருக்குருேமின்னே தோணுச்சு!

''அந்த நிம்மதி வந்த நேரமோ என்னமோ என்சினியர் அய்யாவை ஹைதராபாத்துக்கு மாத்திட்டாங்க! பணம் செலவாகச் செலவாக, மெது மெதுவா பழையபடியும் கஷ்டம் வத்துட்டுது. தங்கவயலிலே அவருக்கு அம்மை போட்டு ரெண்டு மாசம் சர்க்காரு ஆஸ்பத்திரியிலேயே படுத்துட்டாரு. அழுதழுது அதைப் பத்தி கடுதாசி எழுதியிருந்தாரு. 'எனக்கு பயமா இருக்கு மங்களம்! நான் படுத்துட்டதுனலே இங்கே யாரு கிட்டயும் கைமாத்துக்கூட வாங்க முடியலே! நீ கைக்குழந்தையோட என்ன கஷ்டப்படுவையோங்கிறதை நெனச்சு நெனச்சு, எனக்கு அழுகையா வருது. ரெண்டு மாசத்துக்கு கூலி வேலை பாத்தாவது கொழந்தையையும் உன்னையும் காப்பாத்திக்க! அப்புறம் அட்வான்ஸ்வாங்கியாவது பணம் அனுப்பிடுறேன்' அப்படின்னு எழுதியிருந்தாரு. இந்தப் பச்சை உடம்போடு என்னங்க வேலை பாக்கமுடியும்! அங்கே அங்கே சில் லறை வேலை பாத்து நாலணு எட்டணு வாங்குவேன்.

''ஒரு நாள் நல்ல மழை! ஒரு கட்டு விறகைத் தூக்கிக்கிட்டு மொதலியாரு

அய்யா தோப்பிலே இருந்து வந்துக் கிட்டிருந்தேன். ஏரிக்கரை மேலேயே வரணுங்க! கரை பூரா ஒரே சகதி! களி மண்ணு! சின்னக் கரை! நடந்து வந்துக்கிட்டிருக்கும்போது வழுக்கி விட்டிருச்சு; உருண்டு போயி கொளத்துக்குள்ளே விழுந்தேன். விறகுக் கட்டு எம்மேலேயே விழுந்தது! 'அம்மா, அப்பா'ன்னு கத்திட்டேன். எந்திரிக்கக் கூட முடியலே ஒடம்பெல்லாம் ஒரே வலி. அதோட விறகைப் போட்டுட்டு நடந்து வீட்டுக்கு வந்தேன். இந்த முணுவது வீடு இல்லே, அங்கே, ருக்குன்னு ஒருத்தி இருக்குரு. அவ கிட்டேச் சொல்லி அந்த விறகைக் கொண்டு போயி தூக்கிப் போடச் சொன்னேன். அன்னைய கூலி அவளுக்குப் போயிடுச்சு!

''மறுநாளெல்லாம் எழுந்திரிக்கவே முடியலே! அழுதுக்கிட்டே கெடந்தேன்! அந்த ருக்கு ஒரு மாதிரியிங்க! இங்கே இருந்து ரெண்டு மைல் தூரம் நடந்து போயி, மொகம் தெரியாத எடத்துலே பிச்சையெடுப்பா! எப்படியும் சாயங்காலம் ஏழு, எட்டு மணிக்கு. ஒரு ருபா ஒண்ணே கால் ருபா கொண்டாருவா! எனக்குக்கூட வெகு நாள் வரைக்கு அவ பிச்சையெடுக்கிருங்கிறது தெரியாது. நான் ஒடம்பு வலிச்சு படுத்திருந்தேன் பாருங்க, அன்னிக்கி அவ வந்தா. நாலணுக் காசும் கஞ்சியும் கொண்டு வந்து கொடுத்தா! மெதுவா கதவைச் சாத்திட்டு வந்து உக்காந்தா. 'என்னடி'ன்னு கேட்டேன். 'நான் சொல்றதை யாருகிட்டயும் சொல்லக்கூடாது'ன்னு சத்தியம் வாங்கிக்கிட்டு, தான் பிச்சை எடுக்குற விஷயத்தைச் சொன்னு; என் கஷ்டத்தோட அவளைப் பாக்கவும், எனக்கு அழுகையா வந்துதுங்க! அவமாதிரி ஒரு நாலஞ்சு பேரு, வீட்டுக்குத் தெரியாமெ, தங்கசாலையிலே பஸ் நிக்குது பாருங்க, அங்கே வந்து பிச்சை யெடுக்குறதா சொன்னு. எவ்வளவு கிடைக்கும்னு கேட்டேன். 'எனக்கு ஒரு ருபா ஒண்ணே கால் ருபா கிடைக்கும்! அவளுகளுக்கெல்லாம் ரெண்டு முணு ருபா கெடைக்குது'ன்னு சொன்னு. ஏன், அவங்க அழகா இருப்பாங்களான்னு கேட்டேன்.

''அழகா இருந்தாத் தானே சாமி பிச்சை கூட போடுருங்க! அதுக்கு அவ, ''இல்லே அவங்கல்லாம் கையிலே கொழந்தை வச்சிருந்தாங்க! கொழந்தை இருக்கிறதுனலே பஸ்லி

லே போற பொம்பளங்க எல்லாம் காசு கொடுக்குருங்க. என்னைப் பாத்தா 'ஏண்டி வேலே செஞ்சு பொழைக்கக் கூடாதாங்கிருங்க' அப்படீன்னு...! எனக்கு ஒடனே எப்படியோ இருந்து துங்க. நம்ம கிட்டயும் கொழந்தை இருக்குதேன்னு ஒரு நெனப்பு வந்துது. 'ஓ'ன்னு அழுதுட்டேன்.'

இதைச் சொல்லும்போது அவள் உண்மையிலேயே அழுதுவிட்டாள். அந்த வாலிபனின் மனித இதயமும் கண்ணீர் வடித்தது. அவள் மேலும் தொடர்ந்தாள் :

''அப்புறம் ருக்குவே கேட்டா! 'ஒன் கிட்டத்தான் குழந்தை இருக்கே! நீயும் வாயேன், போகலாம்'னு,! என் ஒடம்பே நடுங்கிப் போச்சு. என்ன சொல்லி பிச்சை கேக்குறதுன்னுகூட எனக்குத் தெரியாது. அதோட எங்க மனுசாளுக எல்லாம் பட்டணத்திலே ரொம்பப் பேரு இருக்காங்க. அவங்கள் லாம் பாத்தாங்கன்னு என்ன கதியா கும்னு நெனச்சேன். ஐயய்யோ நான் வரமாட்டேன்னு அவகிட்டே சொல்லிட் டேன். 'அப்படீன்னு ஒன் கொழந்தை யையாவது கொடு! அதுக்கு வாடகை கொடுத்துடுறேன்'னு கேட்டா. பசியோ கொல்லுது. நம்மளெத்தானே மத்த வங்களுக்குத் தெரியும். கொழந்தை யை யாருக்குத் தெரியப் போகுதுன்னு நெனச்சுக்கிட்டு, எவ்வளவு கொடுப் பேன்னு கேட்டேன். 'ஒரு நாளக்கி ஒரு ரூபாய் தர்றேன்'னு. வேறே வழி யில்லாமே சரின்னு சொல்லிட்டேன்.

''மறுநாள் காலையிலே வந்து கொழந்தையைக் கேட்டா. நல்ல பட் டினியிலே எனக்கு ஒடம்பெல்லாம் வரண்டு போயிருந்துது. அதோட கொழந்தைக்கு கொஞ்சம் பால் கொடுத்து அவ கையிலே கொழந்தை யைக் கொடுத்தேன். அப்பவே ஒரு எட்டணாவைக் கொடுத்தா. கொழந் தையைத் தூக்கிக் கிட்டுப் போயிட்டா. அன்னிக் கெல்லாம் எனக்கு மனசா இல்லே! அழுதுக் கிட்டே நாலு இட்டிலி வாங்கிச் சாப்பிட்டேன். உக்கார முடி யலே, நிக்க முடியலே, கொழந்தை ஞாபகமாவே இருந்துது. ராத்திரி எட்டு மணியைப் போல அவ வந்தா. ரெம்ப சந்தோஷமா 'இன்னக்கி முணே முக் கால் ரூபா கெடைச்சுது' அப்படின்னு. எட்டணு கொடுத்தா என்கிட்டே. 'ஒரு ரூபாயில்லே வாடகை'ன்னு கேட்டேன். 'காலையிலே எட்டணு கொடுத்ததைக் கழிச்சுக் கிட்டேன்'னு.

கொழந்தையைப் பாத்தேன். கொழந்தை கருகி, சுருண்டு போயிக் கெடந்தது. வெகுநேரம் வெய்யிலிலே வச்சிருந்திருக்கா. அப்பறம் கொஞ்சம் பாலுவாங்கியாந்து ஊத்தி கொழந்தை யைப் பொழைக்க வச்சேன்.

''இப்படி ஒரு பத்து நாளு நடந்து துங்க ... பிச்சையெடுக்கிற ரொம்பப் பிச்சைக் காரிங்க இப்படித்தான் கொழந்தையை வாடகைக்கு வாங்கி யாந்திடுருங்கன்னு சொன்னு. என் மாதிரி வீட்டை விட்டுப் போக பயப்படு றவங்க பட்டணத்திலே ரொம்பப் பேரு இருக்காங்க போலிருக்கு. மத்த கொழந்தைங்க எப்படிப் பொழைச்சு தோ எனக்குத் தெரியலே. ஆனு என் கொழந்தை... என் கொழந்தை... என்று சொன்னவள், 'என் கண்ணு' என்று விழுந்து அலற ஆரம்பித்தாள். வாலிபன் அவளைத் தேற்றி, கதை யைத் தொடர வைத்தான்.

''எப்பவும் ராத்திரி எட்டு மணிக்கு வர்றவ ஒரு நாள் அஞ்சு மணிக்கே கொழந்தையைத் தூக்கிக்கிட்டு ஓடி யாந்தா. 'அக்கா அக்கா'ன்னு! என்ன டீன்னேன். 'பிள்ளை செத்துப் போச் சுக்கா'ன்னு! 'அடி பாவி! என் பிள்ளையெ வெய்யில்லே போட்டுக் கொன்னுட்டியே! கொன்னுட்டியேன்'னு கதறுனேன். முட்டி மோதிக்கினேன். நான் என்னத்தெங்க சொல்லுவேன். என் தங்கம்...என் கஷ்டத்தைப் பாக்க சகிக்காமெ போயிடுச்சு. அதை அடக்கம் பண்ணக்கூட பணமில்லே. ராத்திரிக்கெல்லாம் செத்த பிள்ளையைக் கையிலே வச்சுக்கிட்டு உக்காந்திருந் தேன்.

விகடராமன் கவிதைகள் :



முதல்வர் : என்ன மிஸ்டர் எட்டும் இரண்டும் கூட்டத் தெரியாதவ னெல்லாம் மந்திரியா வந்திருக்கான். நாடு எப்படி உருப்படும்?

இரண்டாமவர் : நீங்க என்னங்க...! இதுகூடவா தெரியாம இருப்பாங்க பச்சைக்குழந்தை சொல்லுமே எட்டும் இரண்டும் பதினென் னுண்ணு !

முதல்வர் : சரிதான் நீங்க வருங்கால மந்திரி போலிருக்கு.

"விடியக்காலம் நாலு மணியைப் போல ருக்கு ஓடியாந்தா. 'அக்கா! அக்கா! அந்தக் கொழந்தையைக் குடுன்னு. அடிபாவி குழந்தையை கொன்னுட்டு, செத்த கொழந்தையை வேறே ஏண்டி கேக்குறே ன்னேன். இல்லக்க இன்னக்கி சுதந்திர தினம்! கூட்டம் நெறைய இருக்கும். இதைக் காட்டி அடக்கம் பண்றதுக்கு பணம் இல்லேன்னு கேக்குறேன்' அப்படின்னு சொல்லிட்டு, நான் பதில் சொல்ற துக்கு முன்னுலேயே கொழந்தையைப் பறிச்சுக்கிட்டுப் போயிட்டா. அதைக் கொண்டு போயி, ரோட்டு ஓரத்துலே துணியை விரிச்சுப் போட்டாளாம். தன் குழந்தை செத்துப் போயிடுச் சுன்னு சொல்லி அழுதாளாம். அப்ப, யாரோ டில்லியிலேயிருந்து ஒரு மந்திரி அந்தப் பக்கம் வர்ருருன்னு போலீஸ் காரங்க! பிச்சைக்காரங்களை எல்லாம் விரட்டினுங்களாம். துப்பாக்கிப் போலீசு வந்து என் புள்ளையைத் துணியிலே சுத்தி தூக்கிக்கிட்டுப் போயிடுச்சாம். அவளையும் நல்லா ஒதைச்சு அனுப்பிச் சுட்டாங்க. அவ ஓடியாந்து கத்துனு...' நான் அழுகுறதா. சிரிக்கிறதா...! சிரிச்சேனுங்க...சர்க்காரு காப்பாத் தாட்டியும், தன் செலவிலே பொணங் களை அடக்கமாவது பண்ணுது !

அதுக்கப்புறம்......அதுக் கப்புறம் ஏதுங்க எனக்கு வாழ்வு! பழையபடியும் பசி, பட்டினி ..

"இப்போ உங்களைக் கூட்டியாந் தாரே அவரு, ஒரு வகையிலே எனக்குச் சொந்தம். அவரு கிட்டே எல்லாம் சொன்னேன். ரெண்டு மூணு தடவை, ரெண்டு மூணு பேரைக் கூட்டியாந்தாரு. அவங்கள்லாம் இது நாட்டுச் சரக்கு நல்லா இல்லேன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க. மொத மொதல்லே நீங்கதான் இவ்வளவு நேரம் உக்காந்திருக்கீங்க. நான் அவ்வளவு அழகு இல்லே...ரொம்பக் கஷ்டம் சாமி! வேண்டான்னு போயிடா திங்க...!ஓங்களுக்கு சந்தோஷமா நடந் துக்குவேன்...சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு..." என்று அவள் சொன் ஞளோ இல்லையோ 'பளிச்'சென்று அவன் எழுந்தான்.

"ஏன் சாமி போகப் போறீங்களா? போகப் போறீங்களா!" என்ருள் அவள்.

கண்களில் கண்ணீர் வழிய, ஒரு ஐந்து, நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து அவள் கால்களின் கீழ் வைத் தான்; அந்தக் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான். 'விடு விடு, வென்று நடந்து, வெளியில் வந்து காரில் ஏறி உட்கார்ந்தான்.

"சீக்கிரம் காரை விடு !" என்ருன். உள்ளே இருந்து விம்மல் சப்தம் கேட் டது. தரகனும் காரில் ஏறி உட்கார்ந் தான். கார் புறப்பட்டது.

"பொண்ணு நல்லா நடந்துக் கிட்டு துங்களா" என்று கேட்டான் தரகன்.

"ஆமா! நானும் நல்லா நடந்துக் கிட்டேன்" என்று சொன்ன வாலிபன், தரகன் கையில் ஒரு ஐம்பது ரூபாய் கொடுத்தான்.

ஐம்பது ருபாயைப் பார்த்த தரகன் பணத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, "சாமி நீங்க நல்லா இருக் கணும். ஒரு மாசத்துக்கு என் பசி தீர்ந்துது" என்ருன்.

கார் போய்க் கொண்டிருந்தது. ஒரு டீக்கடையில் பாடிக் கொண்டிருந்த கிராமபோன்,

"ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே-நாம்
ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோம்
என்று
ஆடுவோமே................"

என்று பாடிக் கொண்டிருந்தது. ✯

கணவன் : இந்தா பாரு! ஒரு முக்கியமான விஷயம். நமக்கு இருக்கிற குழந்தைகள் போது மின்னு 6 மாசத்திற்கு முன்னுலே கருத்தடை ஆப்பரேஷன் செய்துக் கிட்டேன்.

மனைவி : (அதிர்ச்சியுடன்) ஐயையோ! இதை ஏன் நீங்க எனக்கு முந்தியே சொல்லலே...!

கணவன் : (அசட்டையாக) இப்ப அதனுல் என்ன.

மனைவி : ஹாங்...! இப்ப நான் மூணு மாசமா கர்ப்பயா இல்லே இருக் கேன்......!

சர்வாதிகாரி மாளிகை !

கே. ஏ. மதியழகன்.

ஜனநாயகம் நடைமுறைக்குச் சிரம மாயினும் மனித குலத்தின் வாழ்வும் வளமும் அந்த முறை வளருவதைப் பொறுத்துத்தான் உள்ளது.

தனிமனித ஆதிக்க முறைகள் நாட்டிற்கும் மக்களுக்கும்நன்மையைச்சேர்ப்பது போல் தோற்றமளித்தாலும் நாசத்தைத்தான் சேர்க்கும்.

தனி மனித சுதந்திரத்தின் கல்லறை மீதுதான் சர்வாதிகாரி தனது மாளிகையை அமைக்கிருன். பார்வைக்கு கம்பீரமும் கவர்ச்சியும் கலந்து விளங்கும் சர்வாதிகார மாளிகையில் அழகின் நர்த்தனம் இருக்காது. இயற்கை இசையின் நாதம் கேட்காது. மயான அமைதிதான் நிலவும்.

எத்தனை, எத்தனையோ மாவீரர்கள் எண்ண உரிமைக்காக, பேச்சு உரிமைக்காக, கூட்டம் கூடும் உரிமைக்காக போராடி உள்ளனர் இந்தப் போராட்டம் ஓர் நீண்ட தொடர் கதை.

கண்கள் குருடாக்கப்பட்டோர் உண்டு. கை, கால்கள் ஒடிக்கப்பட்டோர் ஏராளம். காலமெல்லாம் காராக்கிருகத்தில் வாடியோர் உண்டு.

பெண்டு பிள்ளைகளைத் தாயகத்தில் விட்டு, நாடுகடத்தப்பட்டு கண்காணுத் தீவுகளில் அநாதைகளாக மடிந்தோர் கணக்கிலடங்கார்.

இத்தனைக்கும் அஞ்சாமல், அயராமல் ஈடு கொடுத்ததனுலேயே மனித குலம் ஜனநாயகக் கொடியைப் பறக்க விட முடிந்தது.

சர்வாதிகாரத்தின் தக தகப்பும், மினு மினுப்பும் என்றும் நிரந்தரமாக வெற்றி பெற்றதில்லை. சாயம் வெளுத்துத்தான் இருக்கிறது.

இந்தியாவில் ஜனநாயகம் வளரவில்லை. அருகிக்கொண்டு வருகிறது. ஜனநாயகம் செத்து மடிந்து கொண்டிருக்கிறது. அது தவிர்க்கப்படுவதற்கு, பரவலாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் டில்லியில் ஒரேயடியாக அதிகாரங்கள் முடங்கிக் கிடக்கின்றன.

இந்தக் குற்றச்சாட்டைக் கூறுபவர்கள் ஆளுங் கட்சிக்கு எதிரானவர்கள் மட்டுமல்ல; நடு நிலையாளரும் பல நேரங்களில் கூறுகின்றனர். எதிரிகள் கூறுகிருர்கள்; அவர்களிடம் எண்ணிக்கை பலமேது என்று எண்ணும் சர்வாதிகார ஆணவம் அரசியலில் என்றும் பேராபத்தாகும்.

நியாயத்தை என்றும் எண்ணிக்கையால் மட்டும் அடக்கிவிட முடியாது. நியாய உணர்விற்கு தனி உயிர் ஆற்றல் உண்டு. எண்ணிக்கை என்பது நிலையானதல்ல. அதுவும் அரசியலில் எண்ணிக்கை வளருவதும் குறைவதும் மிகச் சர்வ சாதாரணம். அதனைப் புரிந்துகொள்ளாமல் எதிர்க் கட்சிகளின் நல்ல யோசனைகளை ஏற்க மறுத்தால் எதிர்காலம் அவர்களின் ஏமாளித்தனத்திற்காக நிச்சயம் கை கொட்டி நகைக்கும்.

மாற்று முகாமிலிருப்பவர்கள் கூறுகிருர்கள் என்பதற்காக உண்மைகள் பொய்மை வடிவம் பெற்றுவிடாது.

துவக்கத்தில் ஆணவ முகட்டில் இருந்த எத்தனையோ சர்வாதிகாரிகளை, காலம் கீழே தள்ளத் தவறியதில்லை.

இந்திய ஒற்றுமை, ஐக்கியம் என்ற ஓங்காரக் கூச்சலிட்டு பல்வேறு மண்டலங்களின் உரிமைகளை, இன்று ஆளும் பாக்கியம் பெற்றவர்கள் டில்லி அரசிடம் முறிச்சீட்டு எழுதினர்.

அரசியல் சட்டம் என்ற ஆபத்தான ஆயுதம் உருவாக்கப் பட்டது. மாநிலங்களை கேவலமான பஞ்சாயத்துப் போர்டு நிலைக்குத் தள்ளினர்.

மாநில அதிகார அட்டவணை, மத்திய அதிகார அட்டவணை, இரண்டும் ஒத்துப்போக வேண்டிய அட்டவணை என்ற மூப்பெரும் பிரிவில் மாநில சர்க்காரின் அதிகாரங்களைக் குப்பைக் கூடையிலே போடும் அளவிற்கு மத்திய சர்க்காரின் சட்டம்தான் செல்லும் என்று இந்திய அரசியல் சட்டம் 254-வது விதிமுறை கூறுகிறது.

உதாரணத்திற்கு, கிரிமினல் சட்டங்கள், விவாக ரத்து, பொது அமைதி பாதுகாப்பு தொழிலாளர் நலன், 'தேசிய முக்யத்துவம் பொருந்தியது' எனக் கருதப்படும் தொழிற்சாலைகள், வழக்கு மன்றங்களின் அதிகாரங்கள், அறநிலையங்களின் சொத்துக்கள், செய்திப் பத்திரிகைகள் போன்ற நாற்பத்தேழு இனங்களில் மாநில சர்க்காரும் சட்டமியற்றி, மத்திய சர்க்காரும் சட்டமியற்றி, இரண்டிற்கும் முரண்பாடு இருந்தால் மத்திய சர்க்காரின் சட்டம்தான் செல்லுபடியாகும்.

மாநில சர்க்காரின் அதிகார அட்டவணையில் உள்ள எந்த இனத்தைப் பொறுத்த வரையிலும், சட்டமியற்ற மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மூன்று அட்டவணையில் இல்லாத எந்த இனம் குறித்தும் மாநிலங்களின்மீது சட்ட விலங்குகளைப் பூட்ட இன்றைய அரசியல் சட்டம் மத்திய சர்க்காருக்கு இடம் தருகிறது.

இந்த விலங்குகளை உடைத்தெறிவதற்கு உறுதி கொள்ள வேண்டுவது தான் இன்று நம் முன்னுள்ள வேலை.

ஒன்று மட்டும் நிச்சயம் கூறலாம். பத்து லட்சம் சதுர மைல் பரப்புள்ள இந்திய உபகண்டத்தை—

முப்பத்தைந்து கோடி மக்களைக் கொண்ட இந்திய உப கண்டத்தை—

பல்வேறு மொழிகளைக் கொண்ட இந்திய உபகண்டத்தை—

பல்வேறு மதங்களைக் கொண்ட இந்திய உப கண்டத்தை—

வெவ்வேருன பூபாகங்களைக் கொண்ட இந்திய உபகண்டத்தை—

இனி ஒரே இடத்திலிருந்து நெடு நாளைக்கு ஆளலாம் என்பது முடியாத காரியம். அதிக நாள் நீடிக்காது. அதிகாரங்கள் குவிக்கப்படுவதால் ஏற்படும் பயங்கரத்தை டொக்யூவில் எனும் அரசியல் மேதை நல்ல முறையில் படம் பிடித்துக் காண்பித்துள்ளார். அதனை உங்கள் சிந்தனைக்குப் பொங்கல் விருந்தாக்குகிறேன்.

"அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கும் மத்திய அரசு சில நாட்களுக்கு உற்சாகமாய்க் காணலாம். ஆனல் அங்கு பொதுமக்கள் உணர்வு மக்கி மடிகிறது,

சில குறிப்பிட்ட நெருக்கடியான தருணங்களில் அது நல்லது போல காட்சியளிக்கலாம்.

போர்க்குழப்பக் காலங்களில் வெற்றிகரமாய்த் தோன்றலாம்.

மின்னல் போல் தோன்றி மறைகிற ஒரு பெருந்தலைவனின் ஜொலிப்புக்குப் பயன் படலாம்.

ஆனால் ஓர் பூபாகத்தின் எல்லாக் கால வளர்ச்சிக்கும் அது உகந்ததல்ல! நலம் பயக்காது''

இறுக்கப் பட்டிருக்கும் அதிகாரக் கடிவாளம் நொறுங்கியே தீரும். இந்த முடிவில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

முகப்பு விளக்கம்

சிந்தையும் செயலும்

அவன்

இவ்விடம் தனியே என்னடி சிந்தனை !

அவள்

செவ்வான் பரப்பும் தென்றலும் மலரும்
கொவ்வைக் கனிவாய் குளிரும் ஆசையும்
ஒவ்வா தாக உடலெலாம் கனலாய்
உயிர்போங் காலம் வருமெனக் கூற்றினை
நாடியுள் ளேன்என் நலிவையார் அறிவார் ?

அவன்

செப்பிளங் கொங்கை கொப்புளங் கொண்டதோ !
செவ்வாய் இதழைத் தென்றல் தின்றதோ !
ஒப்பிலா மதியே கற்பனைக் கடலே
உன்னுயிர் வாடிட யாருயிர் காரணம் ?

அவள்

நின்றஆங் கேஇதை நீஅறி யாயோ !
நின்விழி என்விழி நிறங்கெடக் காரணம் !
நின்இதழ் என்இதழ் நிலைகெடக் காரணம் !
நின்மொழி என்மொழி குளறிடக் காரணம் !
நின்உயிர் என்உயிர் வாடிடக் காரணம் !

அவன்

தன்னந் தனியிடம் தண்மதி உலவிடம்
அன்னக் குடிபடை ஆடிடும் ஓரிடம்
சின்னஞ் சிறியவர் சேர்ந்துயிர் கூடிடும்
அவ்விடம் சென்றுயாம் ஆடிட லாமடி !
ஒன்றிடை ஒன்ருய் ஒதுங்கிட லாமடி !
உன்னத சுகத்தவம் செய்திட லாமடி
கண்மயக் கம்கொளக் கலந்திட லாமடி
மங்கைநின் பெண்மையை பிழிந்திட லாமடி !
பேச்சுமூச் சின்றியாம் துயில்கொள லாமடி
எழு
...வெனப் பணித்தான் எழுந்தனள் ஆயிழை
இலையிடை மறைந்தனர் கலையிடைக் கலந்தனர்

—: கண்ணதாசன் :—



கூறுய் தோழா

தேன்பாங்குச் சொல்லுதிர்க்கும் இதழ்கள் தம்மால்
தீஞ்சுவையைச் சேர்த்தென்றன் மனத்தை ஆளும்
மான்பாங்குக் கண்ணழகி மயக்கம் ஈயும்
மங்கையவள் இன்னும்வரக் காணேன் தோழா!
வான்பாங்கில் மிதக்கின்ற புட்கள் கூட
வகையாகப் பெடையழைத்துச் செல்லும் போக்கை
கான்பாங்குக் கருங்குழலாள் என்றன் அன்பின்
கனியாவாள் முன்சென்று கூறுய் தோழா!

"அந்தியெனும் பெண்ணவாள் கொடுமைக் காரி
அவள்நெஞ்சம் முழுதுந்தான் முள்ளின் சேர்க்கை!
முந்தியவள் செல்லட்டும்; பின்னர் நான்தான்
முழுமதியாய்த் தோன்றிடுவேன்" என்றே சொல்லி,
சிந்தையதில் காதலெனும் அமுதைப் பெய்த
சேயிழையாள் இன்னும்வரக் காணேன் தோழா!
சந்திதனில் நின்றேநான் எய்தும் துன்பை
தளிர்க்கொடியாள் முன்சென்று கூறுய் தோழா!

தென்கடலின் அலைவாழ்த்த நலமாய் வீசும்
தென்றலெனும் பெண்ணும் அன்பாய் வாழ்த்த
இன்பமெனும் ஓடத்தில் இதமாய் நாங்கள்
இருந்ததெலாம் இன்றிங்கே இல்லை தோழா!
வெண்ணிலவு வரும்இரவில் என்றன் நெஞ்சம்
வேல்விழியை எண்ணிவிடும்; நோவுங் கொள்ளும்
கண்ணிலவு நீர்உதிர்த்தே வாடும் போக்கை,
காதலியாள் முன்சென்று கூறுய் தோழா!

மாதுளை தின்ற மக்குத் துரை

காட்டுச்சாலைப் பாதையிலே
கடும்பசியால் வாடி,
கோட்டுப்போட்ட துரையொருவன்
கோயில்போனான் தேடி.

வழியினிலே மாதுளையை
வைத்துவிற்றான் கூவி
வழிநடந்து சென்றதுரை
வாங்கிக்கொண்டான் தாவி !

அதற்குவிலை என்னவென்று
ஆங்கிலத்தில் கேட்டான்.
அதற்குப்பதில் விற்பவனே
அருந்தமிழில் சொன்னான்.

அத்துரைக்குச் செந்தமிழோ
அணுவும்தெரி யாது,
இத்துரைக்கு ஆங்கிலமோ
ஏதும்புரி யாது.

ஆதலாலே விலையதற்கு
ஐந்தணக்கள் என்றான்
ஏதும்புரி யாததுரை
எட்டணவைத் தந்தான்.

மீதிவாங்க அறிந்திடாமல்
வேகமாகச் சென்றான்
ஊதியம்தான் என்றுவிற்றோன்
உற்சாகமாய் நின்றான்.

இதற்குமுன்னே மாதுளையை
எங்கும்பார்த்த தில்லை
அதனலதைத் தின்னுவிதம்
அறிந்துகொள்ள வில்லை !

மாம்பழத்தைத் தின்பதுபோல்
மாதுளையின் தோலை,
தாம்கடித்துத் துவர்க்குதென்று
சலித்தானந்தத் துரையும்.

முகில்

இனிக்குமென்று மாதுளையை
ஏமாந்திட்டேன் வாங்கி,
மனமகுமட்டித் துவர்க்குதென்று
மடையன்வீசி விட்டான் !

பாறைமீது பட்டுடைந்து
பளபளக்கம் முத்து,
தாறுமாறாய் ஓடியதைத்
தான்வியந்து பார்த்தான் !

ஆகா என்ன அதிசயங்கள்
அழகுமுத்துக் குவியல் !
ஓகோ ஏனே இதனுள்வந்தே
ஒளிந்ததென்று பார்த்தான் !

சிறுவர்பலர் அதனைக்கண்டு
திமுதிமென ஓடி
பொறுக்கியதைத் தின்றுகொண்டு
போட்டாராட்டம் பாடி !

அதனைக்கண்ட துரையுமுடன்
ஆவலாக ஓடி
அதனைத்தானும் பொறுக்கித்தின்று
ஆடினனே பாடி !

தேனைப்போல இனித்திடவே
தேடித்தேடித் தின்றான்
தானத்தானப் பாடினார்கள்
தமிழ்ச்சிறுவர் எல்லாம் !

தோலைத்தின்று துவர்க்குதென்று
துப்பில்லாமல் சொன்னேன்
பாலைவிட இனிக்குதிந்தப்
பழம்அடடா என்றான் !

உண்மையைத்தான் பொய்ம்மைமூடி
உலகில்நம்மை ஏய்க்கும்
திண்மையாக அதனைத்தேடித்
தெரிந்தால்நன்மை வாய்க்கும் !

தமிழ் முடி



காட்டுப் பொங்கல்



ஊரெல்லாம் ஒரே பொங்கல் தொண்டாட்டம். எங்கு பார்த்தாலும் சங்கு முழக்கம். பால் பொங்கிற்று, பால் பொங்கிற்று என்று மகிழ்ச்சி வெள்ளம் பொங்க, மக்கள் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் ஆட்டமும் பாட்டுமாக ஆரவாரம் செய்துகொண்டிருந்தார்கள்.

பொன்னழகி என்ற ஒரு சிறுமி இருந்தாள். அவளுக்கு மெய்யழகன் என்று தம்பி இருந்தான். அவர்கள் இருவரும் பொங்கல் விழா வேடிக்கைகளை ஊர் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள்.

"அக்கா, அக்கா, இந்த ஊரிலேதான் பொங்கலை இவ்வளவு ஆனந்தமாகக் கொண்டாடுகிறார்கள். காட்டிலேயுள்ள மிருகங்கள் பொங்கலை எப்படிக் கொண்டாடும்?" என்று கேட்டான்.

"மெய்யழகா, மெய்யழகா, அதுதான் எனக்கும் தெரியவில்லை. காட்டுக்கே போய்ப் பார்த்துவிடுவோம். வருகிறாயா?" என்றாள் பொன்னழகி.

உடனே மெய்யழகன் ஒப்புக் கொண்டான். அக்காளும் தம்பியும் ஓட்டமும் நடையுமாகக் காட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். காட்டுப்பாதையிலே நெடுந்தூரம் வரை ஒன்றுமே தட்டுப்படவில்லை. ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்போல் காடு ஒரே அமைதியாக இருந்தது.

திரும்பிவிடுவோமா என்று அவர்கள் நினைத்தபோது மேலே ஒரு கிளி பறந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள், அந்தக் கிளி தன் அலகில் இரண்டு பழங்களைக் கௌவிக் கொண்டு சென்றது. அடுத்தாற்போல் ஓர் அணிலும் பழமொன்றைக் கௌவிக்சொண்டு சென்றதைக் கண்டார்கள் அணிலும் கிளியும் சென்றதிசையில் அவர்களும்சென்றனர்.

கள். சிறிதுதூரம் சென்றதும் திடீரென்று கமகமவென்று நெய்மணம் எழும்பியது. அந்த இடத்தில் அவர்கள் நின்றார்கள். அங்கே மிருகங்களெல்லாம் ஒன்று கூடியிருந்தன. மெய்யழகனும் பொன்னழகியும் ஒரு மரத்தின்மேல் ஏறிக் கிளை ஒன்றில் சாய்ந்துகொண்டு கீழே நடப்பதைக் கவனித்தார்கள்.

மரத்தின் அடியில ஒரு தங்கக் குத்துவிளக்கு ஏற்றி வைக்கப் பட்டிருந்தது. வெள்ளித்தாம்பாளம் ஒன்றில் பழந்தேங்காய் இருந்தன. அருகில் ஓர் அடுப்பும் அதன்மேல் பானையும் இருந்தன.

வானவீதி வழியாகப் கிளிகள உணவுப்பொருள்களைக்கொண்டு வந்தன யானைகள் கட்டுக்கட்டாகக் கரும்புகளைத் கொண்டு வந்தன. சிங்கம், சிறுத்தை, முயல், கரடி, குரங்கு போன்ற பல மிருகங்கள் கூடியிருந்தன. திருமதி மந்தியம்மாள்தான் பொங்கல் வைத்துக் கொண்டிருந்தாள். மெய்யழகனும் பொன்னழகியும் போன சிறிது நேரத்தில் பால் பொங்கியது. உடனே சங்கு ஊதுவதற்குப் பதிலாக யானை பிளிறியது: சிங்கம் கர்ஜித்தது. ஒட்டைச் சிவிங்கியோ தன் நெட்டைக் கழுத்தை நீட்டியது போதாதென்று நாக்கையும் நீட்டிக் கொண்டு பொங்கல் பானையை நெருங்கியது.

"பொங்கப் பொறுத்தீர் படைக்கப் பொறும்" என்று திருமதி. குரங்கம்மையார் கூறியதும் ஒட்டைச்சிவிங்கி அப்பால் சென்றுவிட்டது.

எல்லா மிருகங்களும் பொங்கல் உண்ண இருக்கும்போது புதிதாக ஒரு மிருகம் வந்து சேர்ந்தது. அதுதான் ஆத்திரேலியா நாட்டுக் கங்காரு.

அப்போது சில வௌவால்களும் வந்தன,

அந்த வௌவால்களை காட்டு மிருகங்கள் அத்தனையும் வரவேற்காமல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன.

வனவேந்தன் சிங்கம் எல்லா மிருகங்களையும் விலக்கிக் கொண்டு வௌவால்களிடம் வந்து :-

"ஏ வௌவால்களே! நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் ?" என்று கேட்டது சிங்கம்.

"நாங்களும் பொங்கல்விழாக் கொண்டாட வந்திருக்கிறோம்!" என்று வௌவால்கள் கூறின.

"நீங்கள் மிருக இனமல்ல ஆதலால் மிருகங்களின் பொங்கலில் கலந்துகொள்ள முடியாது" என்றது சிங்கம்.

நாங்களும் உங்களைப் போலவே குட்டி போடுகிறோம் உங்களைப் போலவே குட்டிகளுக்குப் பால்கொடுத்து வளர்க்கிறோம். உங்களுக்கு இருப்பது போலவே எங்களுக்கும் பற்கள் இருக்கின்றன. இத்தனையும் இருக்கும்போது எங்களை எப்படி மிருகங்களின் இனமில்லை என்று சொல்லலாம்? அப்படிச் சொல்வது அநியாயம்!" என்று வௌவால்கள் கத்தின

"நீங்கள் பறந்து திரிகிறீர்கள். அத்துடன் தரையில் உங்களால் அடியெடுத்து வைத்து நடக்கவே முடியாது. மிருகங்களுக்கு இருப்பதுபோல் நான்கு கால்கள் இல்லை. ஏதோ இரண்டு கால்கள் இருந்தாலும் நடக்க இயலாத கால்களாக இருக்கின்றன. குரங்குகளைப்போல கைகளாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஆகையால் உங்களை மிருக இனத்தில் சேர்க்க முடியாது. என்றது சிங்கம்.

"அப்படியானால் நாங்கள் எந்த இனம்" என்று கேட்டன வௌவால்கள்.

"நீங்கள் ஒருவேளை பறவை இனத்தில் சேர்க்கப்படலாம்" என்று சிங்கம் சொன்னது."

"ஒருகாலும் எங்களைப் பறவை இனத்தில் சேர்க்கமாட்டார்கள். சென்ற ஆண்டு பறவைகளின் பொங்கலில் கலந்துகொள்ளப் போனோம். பறவைகள் எங்களை மிருக இனம் என்று சொல்லி சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். மேலும், இங்கே உங்கள் பொங்கல் விழாவில் கிளிகள் கலந்துகொள்ளும் போது எங்களை மட்டும் இன வேற்றுமை காட்டி விலக்குவது என்ன நியாயம் ?" என்று வௌவால்கள் கேட்டன.

"கிளிகள் இங்கே நடைபெறும் நாட்டியக் கச்சேரியில் வாய்ப்பாட்டுப் பாடுவதற்காகத் தனி அழைப்பின்பேரில் கலந்துகொள்கின்றன. நீங்கள் இந்தப் பொங்கலில் ஒட்டிக்கொண்டால் இந்தியாவில் திபேத்தியர் ஒட்டிக் கொண்டிருப்பதுபோல் தீராத தலைவேதனையாகிவிடும் எனவே நீங்கள் கலந்துகொள்ள இயலாது" என்றது சிங்கம்.

"நீங்கள் தனி ஒருவராக இத்தகையத் தீர்ப்புச் சொல்வது சரியில்லை. இது பண்டித நேருவின் கொள்கையாகஇருக்கிறது. எங்களுக்கு ஜனநாயக முறைப்படி பெரும்பான்மையோர் தீர்ப்பு வேண்டும்" என்றன வௌவால்கள்.

உடனே, சிங்கம் மிருகங்களின் பாராளு மன்றத்தைக் கூட்டி வௌவால்களின் பிரச்னையை ஆலோசனைக்கு வைத்தது. நீண்ட விவாதத்திற்குப் பிறகு, "வௌவால்கள் மிருக இனமோ பறவையினமோ அல்லாத தனி ஒரு இனம் என்றும், அவைகளை மிருக இனத்தில் சேர்த்துக்கொள்ள முடியாதென்றும்; தற்காலிகமாக இந்தப் பொங்கலில் கலந்துகொள்ள அனுமதிப்பதில் தவறில்லை அது "யாதும் ஊரே யாவரும் கேளிர்," என்ற தமிழகப் பண்பாடு என்றும்; பொங்கல் முடிந்ததும் வௌவால்கள் தனியாகச் சென்றுவிட வேண்டும் என்றும்; தீர்மானம் நிறைவேறியது.

பிறகு, வௌவால்கள் பாராளுமன்ற முடிவை ஏற்றுக் கொண்டு பொங்கல் விழாவில் கலந்துகொண்டன.

பொங்கல் விருந்துக்குப்பின திருமதி குரங்கம்மையார் நடனம், குமாரி கிளியம்மையார் வாய்ப்பாட்டுடன் விழா இனிது நடந்தேறியது. பொன்னழகியும் தம்பியும் வீடு திரும்பினார்கள்.

சிரித்தது செவ்வானம்

வாணிதாசன்

மாடு கன்றெடு வயல்வெளி
    பூம்புனல் செழுமலர் நீள்குன்றம்
ஊடு செஞ்சுடர் பொன்னிற
    மழைபொழி ஒளிகுறை கீழ்வானக்

காடு மேவிடும் கதிரவன்
    கண்டனம்! கவின்மிகு கதிர்அந்தி
ஓடு போழ்தினில் கீழ்த்திசை
    ஒளிவிளக் கேனும் விண்மீன்கள்!

பந்தி பந்தியாய் நாரைகள்
    இணையுடன் படுகையைப் போய்ச்சேர
அந்தி பூத்திடப் பூத்திடும்
    வேலியில் அழகொளிர் பொன்பீர்க்கு
வெந்து பூத்திடும் வானிடை
    முல்லைபோல் விரிந்தன விண்மீன்கள்!
செந்தீ பூத்திடச் செவ்வொளி
    பூத்திடச் சிரித்தது செவ்வானம்!!

நீயும் நானும்

வளர்ச்சிபெறத் துடித்தெழுந்து
    வருபயிர்நான், வான்மழைநீ!
தளர்ச்சிநிலை அகற்றவரும்
    தண்ணொளிநான், விண்ணகம்நீ!

பைந்தமிழே! கருத்துயர்ந்த
    பாடல்கள்நான், பண்ணிசைநீ!
ஐம்பெரிய காப்பியஞ்சேர்
    இலக்கியம்நான், எண்சுவைநீ!

கண்ணொளியே! கண்கள்நான்
    கணமணிநான் காண்பதுநீ!
தண்ணொளியே! இன்னிசைநான்
    இன்னியம்நான் இசைப்பதுநீ!

தேன்சுவையே! எழிலமுதே!
    திகழ்மலர்நான், மலர்மணம்நீ!
மான்விழியே! பால்மொழியே!
    மனக்கடல்நான் கடல்அலைநீ!

துள்ளிவரும் அன்புருவே!
    தொடர்வதுநான், அடைவதுநீ!
அள்ளிவரும் பேரரசே!
    அடிமையும்நான், ஆள்வதுநீ!

தமிழண்ணல்

தன்னேர் இல்லாத தனிப்பெருந் தலைவராய் விளங்கி மக்கட்குப் பெரிய அறிவுப் பணியாற்றிய மதிப்பிற்குரிய செம்மல் மறைமலை அடிகளார் தம் வாழ்நாளில் தமிழர்களுக்குச் சிறந்த நல்லறிவு கொளுத்தி வாழ்ந்தவர் என்பது தமிழ்நாடு அறிந்த உண்மை. அவர் 1950 செப்டம்பர் 15-ம் தேதி மறைந்தார். 15-7-1876-ல் தோன்றிய அவர் ஏறத்தாழ 74 ஆண்டு உயிருடன் இருந்த காலத்தில் தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும் பண்டைத் தமிழ் மக்களின் உயர்வினையும் எடுத்துக் காட்டி, இக்காலத் தமிழ் மக்கள் சீர்திருந்த வேண்டிய முறைகளை விளக்கி வந்தார். சென்னைக் கிருத்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சில ஆண்டுகள் அவர் துலங்கியபொழுது (நாவலர்) சோமசுந்தரபாரதியார், (டாக்டர்) பி. சுப்பராயன், டி. கே. சிதம்பரநாத முதலியார் போன்றவர்கள் அடிகளாரின் சிறந்த மாணவர்களாய் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. "பரிதிமாற் கலைஞர்" என்று தம்முடைய பெயரைத் தனித் தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டு தமிழ் மொழியிடத்து மட்டிலாப் பற்றுக்கொண்டு வாழ்ந்த திரு. வி. கோ. சூரியநாராயண சாத்திரியாரோடு கிருத்தவக் கல்லூரியில் உடனிருந்து தமிழ்ப் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றார் மறைமலை அடிகள்.

"கீழ்நாட்டு மக்கள் வசியம்" (The oriental Mystick Myna) என்ற தலைப்பிலும் "அறிவுக் கடல்" (The Ocean of Wisdom) என்ற தலைப்பிலும் இரண்டு ஆங்கில இதழ்களை வெளியிடும் பொறுப்பேற்று, அவ்விதழ்கள் வாயிலாகத் தமிழ் அறியா மக்களுக்குத் தமிழ்மொழியின் மேன்மை பற்றியும் தமிழ் மக்களின் உயர்வு பற்றியும் எடுத்துக் கூறி வந்த பெருமை மறைமலை அடிகளைச் சாரும்.

மறைமலை அடிகள் வேதாசலம் என்ற இயற்பெயர் உடையவர். அவர்தம் பெயரைத் தனித்தமிழ்ப் பெயர் ஆக்குதற்காக மறைமலை அடிகள் என மாற்றி வைத்துக் கொண்டார் என்பது பலர் அறிந்த செய்தி. அவ்வாறு மக்கள் பலரும் தத்தம் பெயரை மாற்றி வைத்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதை அவர் எதிர்பார்த்தார்.



தமிழ்நாட்டில் ஆரியக் கலப்பினால் தமிழர்தம் பண்டைய பெருமிதம் குலைந்துவிட்டதென்றும், அதனை மீட்டும் நிலையில் நிறுத்துதற்குத்தக்கவழிகள்காண வேண்டுமென்றும் அவர்விரும்பினார். தமிழ் மக்கள் பிற மொழிகளுடைய ஆளுகைக்கு அடிமையாகித் தன்மானம் அற்றவராகி விட்டது குறித்துக் கலங்கினார். பழைய தமிழகத்தில் அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில், எல்லாம் தமிழ், எங்கும் தமிழ் என்ற நிலை இருந்துவந்ததால் தமிழ்நாடு மாண்புற்று இருந்ததென்று அவருடைய நூல்களிலும் சொற்பொழிவுகளிலும் எடுத்துக்காட்டினார். ஆட்சிமொழி தமிழாக அக்காலத்தில் இருந்ததால் பெருமை குன்றாத நிலையில் தமிழ்நாடு செழித்திருந்ததென்பதை எடுத்துக்காட்டிக்கொண்டிருந்தார். அரசியல் வினைமொழி தமிழாகவும், அரசர் மொழி தமிழாகவும், மக்கள்மொழி தமிழாகவும் இருந்தமையால் நாடு பீடுற்றிருந்த நிலையைப்புலப்படுத்தி வந்தார். ஏட்டிலும் பேச்சிலும், நாட்டிலும் வீட்டிலும், இசையிலும் கூத்திலும், மணவினையிலும் பிணவினையிலும் முழுதும் தமிழாக இருந்த காரணத்தால் நிலையாக இருந்த தமிழர்தம் சிறப்பினை எடுத்து எடுத்துக் காட்டிவந்தார். இடைக்காலத் தமிழகத்திற் புகுந்த பிற நாகரீகக் கலப்பினால், புகுத்தப்பட்ட பிற மொழிக்கலப்பினால் தமிழ்நாடும் தமிழ்மொழியும் எவ்வளவு சீர்குலைந்தன என்பதைச் செப்பிவந்தார். பழங்காலத் தமிழகத்தின் மாண்பினை மக்கள் அறிந்து

கொள்வதாலும் இக்காலத்தில் அவருக்கு வாய்த்துள்ள அவல நிலையினை ஓர்ந்துகொள்வதாலும்' வருங்காலத்தில் தமிழ் மக்கள் பண்டைய பீடுபெற்று எவ்வாறு உய்தல் கூடும் என்பதை எடுத்து விளக்குவனவாக அவருடைய நூல்களும் பேச்சுகளும் அமைந்திருந்தன. இக்காரணங்களால் அவரை "நிலைகுலையா மலை" எனத்தமிழறிஞர்கள் போற்றிவந்தனர்.

பிற மொழிகளைப் படிக்கக் கூடாது என்பது மறைமலை அடிகளாரின் நோக்கமன்று. தமிழ் மொழி அளவே நில்லாமல், பயனுள்ள பிற மொழிகளைக் கற்றுக் கொள்ளுதல் நல்லதென்று கருதியவர் அவர். ஆங்கிலத்தையும் வடமொழியையும் நன்கு கற்றுத் தேர்ந்து நூல் பல இயற்றும் தகுதி வாய்ந்தவராய் அவர் திகழ்ந்தார் என்பது யாவரும் அறிந்த செய்தி. ஆனால், பிற மொழிகளுக்கு அடிமையாகி விடக்கூடாது என்பது அவரது உயரிய குறிக்கோள். ஒப்பிட்டுப்பார்த்து உவத்தற்கும், பிற மொழிச் செல்வங்களைத் தமிழில்கொணர்தற்கும் உரிய அளவில்தான் பிறமொழி அறிவு அவரால் வேண்டப்பட்டது. பிறமொழி கற்கத் தொடங்கிய உடனேயே சிலர் அம்மொழிக்கு அடிமையாகி விடுகின்றனர் என்பது இன்றும் கண்கூடு. பிற மொழிகளில் நல்ல புலமை வாய்ந்த மறைமலை அடிகளார் அம்மொழிகக்கு ஆளாகி விடாமல், அவற்றை ஆளும் தகுதி உடையவராய் இருந்தார் என்பதுதான் அவருக்குரிய சிறப்பு. வடமொழியில் காளிதாசரால் எழுதப்பட்ட சாகுந்தல நாடகத்தை அவர் அருமையாகத் தமிழில் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். அன்றியும், சாகுந்தல நாடகம்பற்றிய ஆராய்ச்சியை வடமொழியாளரும் வியக்கும் வண்ணம் தமிழில் தந்துள்ள பெருமைக் குரியவராக அவர் உள்ளார். இந்நூல்களும், மறைமலை அடிகளாருடைய பிற நூல்களும் சென்னைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் அழகாக வெளியிடப்பட்டுள்ளன. வடமொழி நாடகத்தை மொழிபெயர்த்து இருப்பினும், தமிழ்க்காப்பிய நலனை ஒப்பிட்டுப் பாராட்டும் பெற்றியராக அவர் இருந்தார் என்பதை நாம் நினைவுகூர்தல் வேண்டும். வடமொழியாளர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோர்களுடைய கருத்துக்களை உணர்ந்து கொண்டு அவற்றின் மிக்க சிறப்பு வாய்ந்தனவாக எவ்வாறு தமிழர்தம் கருத்துக்கள் அமைந்து இருந்தன என்பதை எடுத்துக்காட்டித் தமிழர்களை வீறு பெறச் செய்தார் அம்மறைத் திருவாளர்.

தமிழ்மொழியில் பிற மொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதால் விளையும் தீமைகளை நன்கு கண்டவர் மறைமலை அடிகளார். 100-க்கு 50 அல்லது 60 விழுக்காடு வடமொழிச் சொற்களைத் தமிழில் சிலர் கலந்து எழுதி விட்டமையால், அவற்றைப் படித்த பிற மொழியாளர்கள் தமிழின் தனித்தன்மையை உணராராய், தமிழ் தனித்து இயங்க மாட்டாத மொழி என்று கருதலாயினர். தலை என்றும், கண் என்றும், காது என்றும், பல் என்றும் நல்ல தமிழ்ச்சொற்கள் இருப்பவும், சிரஸ், நேத்திரம், கர்ணம், தந்தம் என்னும் வடமொழிச் சொற்களைத் தமிழர்கள் தம் பேச்சிலும் எழுத்திலும் வழங்குவதால் தம் இனிய தமிழ் மொழிக்குச் செய்யும் தீமையை உணர்ந்தார் அல்லரே என வருந்தினார். அருந்தமிழ்த்தாயின் அழகான உடலத்திற் காணப்படும் அம்மைத் தழும்புகள்போல் அல்லவோ இவை உள எனக்கவன்றார். தமிழ் பிற மொழிக் கூட்டுறவின்றித் தனித்து இயங்க முடியும் என்பதையும், தமிழ் வடமொழிக் குடும்பத்தின் வேறான மொழிக்குடும்பத்துத் தாய் என்பதையும் டாக்டர் கால்டுவெல் போன்ற பேரறிஞர்கள் ஐயமற ஆங்கிலத்தில் எழுதி நூல்கள் வெளிப்படுத்திஇருந்தும், தமிழ்பிறமொழிச் சார்பின்றி வாழ முடியாது என்றும். தமிழ்தானும் ஏனைய இந்திய மொழிகளைப்போல் சமக்கிருதத் தாயின் வழிவந்த மொழி என்றும் வீணாகப் பலர் இக்காலத்திலும் மொழிந்து வருகிறார்கள். அவர்களுக்கு அறைகூவுவது போல், பிறமொழிக் கலப்பின்றி எழுதித் தமிழ் தனித்தியங்கி ஒளியோடு திகழும் என்பதை நிறுவிய மாப்பெருமை மறைமலை அடிகளாருக்குரியது. அதற்காக அப்பெரியாருக்குத் தமிழ்நாட்டவர் என்றென்றும் கடமையுடையர்.

தமிழ்மொழியின் வரலாற்றினை மறித்து நோக்கினால் 19-வது நூற்றாண்டில் இருந்ததைவிட 15-16வது நூற்றாண்டுகளில் எவ்வாறு பிற மொழிக்கலப்பு குறைவு என்பதையும், 15-16 வது நூற்றாண்டில் இருந்ததைக் காட்டிலும் 8-9வது நூற்றாண்டுகளில் எவ்வளவு குறைவாகப் பிறமொழிச் சொற்கள் கலக்கப்பட்டன என்பதையும், 2 அல்லது 3-ஆம் நூற்றாண்டுகளில் அவ்வளவைக் காட்டிலும் எவ்வளவு குறைந்த வகையில் பிற மொழிக் கலப்பு இருந்தது என்பதையும், கி. மு. 4-5ஆம் நூற்றாண்டுகளில் பிறமொழிக் கலப்பு 100-க்கு 2 அல்லது 3 விழுக்காட்டிற்கு மேல் இருந்ததில்லை

என்பதையும் அறிதல் இயலும். அவ்வாறே வரலாற்றுக் காலத்தில் பின்தள்ளிப் போகப்போக ஒரு விழுக்காடுகூட பிறமொழிச் சொற்கள் கலவாமல் இருந்தகாலம் தமிழகத்தில் உண்டென்பதை நேர்மை அறிவுள்ள எவனும் ஒத்துக்கொள்வான் என்று திருமணம் செல்வ கேசவராய முதலியார் கூறிய ஆய்வுரையை இன்று நாம் நினைவுக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

தொல்காப்பியத்தில் வடமொழிச் சொற்கள் வழங்குவதற்கு இடம் தரப்பட்டுள்ளது. ஆதலால், நாமும் நிறையக் கலந்துவிடலாம் என்று சிலர் இக்காலத்தில் பேசுகிறபேச்சு பொருந்தாது. தொல்காப்பியா இயற்சொல். திரிசொல், திசைச் சொல், வடசொல் என நான்கு கூறுபாடுகளை ஒப்புக்கொண்டமையினுல், அவர் காலத்தில் வடமொழிச்சொற்கள் ஓரளவு தமிழில் வந்து வழங்குவதுணடு என்பது தெரிய வரும். எனினும், வடசொல்லுக்கு 4-வது அல்லது கடைசி இடந்தான் கொடுக்கப்பட்டிருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இயற்சொல். திரிசொல் எனக்கூறுபவை முழுதும் தமிழ் என்றும், அச்சொற்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டது என்றும் நாம் அறிந்துக்கொள்ள வேண்டாமா? அறிந்து கொள்வோமானுல், கணக்கின்றி, தேவையின்றி வடமொழிச் சொற்களை நம் எழுத்துக்களிற் கலக்க மாட்டோம். பிறமொழிக் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற இடங்களில், பிற மொழியாளர் பொருள்களை நாம் எடுத்துக்கொண்டு வழங்கும் இடங்களில் அம்மொழிச் சொற்களைக் கடன் வாங்கி ஆளுதலால் பெருந்தவை ஏற்படாது ஆயினும், தொட்டதற்கு எல்லாம் பிறமொழிச் சொற்களைக்கட்டாயமின்றிக் கடன் வாங்கிப் பெருக்குவது பொருந்தாது. பிறமொழிச் சொற்களை அடுக்கடுக்காக அப்படியே கடன் வாங்கி விட்டவர் பெரும்பாலும் சோம்பரினுல்தான் அவ்வாறு செய்துள்ளார். இந்நிலை மாறவேண்டுமென்று கருதியவர் மறைமலை அடிகளார். அன்றியும், பிறமொழிச் சொற்களை கடன் வாங்கும் பொழுது தமிழ் மொழியின் ஒலி இயல்புக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டுமென்றும் மன்றுடினுர். வடமொழிச் சொற்களை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால், வடமொழி எழுத்துக்களை நீக்கித்தமிழ் எழுத்துக்களால் எழுதிக்கொள்ள வேண்டுமென்று தொல்காப்பியர் செய்த வரையறையை எடுத்துக்காட்டி, அந்நெறியில் ஒழுக வேண்டுமென்று பணித்தார் இப் பெருந்தகையார்.

1937-லும், 1948-லும் தமிழ் நாட்டில் இந்தி கட்டாயமாக புகுத்தப்படும் நிலையிலிருந்த பொழுது, அவ்வாறு செய்தலாகாது எனத் துணிவுடன் எடுத்து அறைந்தார் மறைமலை அடிகளார். தமிழ் மக்கள் வெள்ளம் போல் திரண்டிருந்த மாபெரும் கடற்கரைக் கூட்டத்திலே தலைமை தாங்கி அரசாங்கத்துக்கு அறைகூவியவர் மறைமலை அடிகளார். தம்முடைய அரும் புதல்வர் மறை. திருநாவுகரசரையும், மருமகளாரையும் இது காரணமாகச் சிறை செல்ல வாழ்த்திவழி அனுப்பிய வீரத்தந்தையார் மறைமலை அடிகளார்.

தமிழர்கள் தத்தம் வீட்டில் நடைபெறும் வினைகள் எல்லாவற்றிலும் தமிழ்மொழியையே கைக்கொள்ள வேண்டுமென்றும், தமிழ்க்கலையையும், தமிழ்ப்பண்பாட்டினையும் பாதுகாக்க வேண்டுமென்றும், தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழ்மொழி வாயிலாக வழிபாடு இயற்றப்பட வேண்டுமென்றும் அடிக்கடி வற்புறுத்திஞர் அப்பெரியவர். அவர் இயற்றிய "தமிழ் மதம்" போன்ற நூல்களினுல் அவரது கருத்து தெளிவாகப் புலப்படும். தமிழர்கள் இறைவழிபாட்டு உணர்ச்சி உடையவர்களாய் இருக்கவேண்டுமென்பதையும், இக்காலத்தில் கோயில்கள் ஒழுங்குற நடத்தப்படவில்லை என்ற காரணத்தால் கடவுள் வழிபாட்டினையே விட்டுவிடக்கூடாது என்பதையும் அவ அஞ்சாது எடுத்துப் பெருமேடைகளிற் கூறிவந்தார். இந்நிலையா மலை மறைந்து விட்டது. எனினும் மறைமலையுணர்ச்சி மாயாது.

★

தாழ்வு மனப்பான்மை தமிழருக்குண்டோ?

அ. மு. பரமசிவானந்தம்

'மடங்கலின் சினைஇ,
மடங்கா உள்ளத்து
அடங்காத் தானை வேந்தர்
உடங்கு இயைந்து
என்னொடு பொருதும்
என்ப - அவரை
ஆரமர் அலறத்
தாக்கித் தேரொடு
அவர்ப் புறங்
காணேனாயின்-சிறந்த
பேரமர் உண்கண்
இவளினும் பிரிக'

என்று வஞ்சினங் கூறினான் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்.

'சிறுசொல் சொல்லிய
சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத்
தாக்கி, முரசொடு
ஒருங்ககப் படேஎனாயின்......
குடிபழி தூற்றும்
கோலேனாகுக'

என்று வீரம் பேசி வெற்றி முரசார்த்தான் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

'என் உள்ளம் எள்ளிய
மடவோன், தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய
சிதடன் போல
உய்ந்தனன் பெயர்த்தலோ
அரிது'

என்று தன் திண்ணிய உள்ள உரத்தையும் செயல் திறத்தையும் உணர்த்தினான் சோழன் நலங்கிள்ளி. ஆம்! இவையெல்லாம் இன்று புறநானூற்றுப் பாடல்களாக ஏட்டளவில் வாழ்கின்றனவேயன்றி நாட்டில்-தமிழ் நாட்டில்-இந்த உணர்ச்சி வாழ்கின்றதா என்ற ஐயம் பலருக்கு உண்டாகியிருக்கின்றது. பண்பில் தலைப்பிரியாப் பழங்குடி வழிவந்த தமிழினத்தார் இந்த நூற்றாண்டில் வாழும் வாழ்வை எண்ணிப் பார்ப்பின் அவர்களுடைய ஐயம் ஓரளவு உண்மை என்றுகூடத் தோன்றும். இன்றைய தமிழனின் இழிநிலையை எண்ணித்தானோ, அன்றி ஏனோ பாரதி 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என, நைந்து பாடுகிறான்.

'நெஞ்சு பொறுக்குதில்லையே
—இந்த
நிலைகெட்ட மனிதரை
நினைத்து விட்டால்
அஞ்சி அஞ்சிச் சாவார்
— அவர்
அஞ்சாத பொருளில்லை
அவனியிலே'

என்ற பாரதி பாட்டு உண்டே! அவன் மட்டுமல்லாது உண்மையில் தமிழர் பெருமையும் வீரமும் எண்ணுகின்ற ஒவ்வொருவரும் நெஞ்சு பொறுக்காது வாடவேண்டிய நிலையில்தானே நாடு இன்று இருக்கின்றது. ஏன் இந்தக் கொடுமை? தலைநிமிர்ந்து வாழ்ந்த - தாழ்வு மனப்பான்மையற்றுச் சிறந்திருந்த சமுதாயத்தில் தாழ்வு மனப்பான்மை (Inferiority complex) எப்படி எப்படிக் குடிபுகுந்து நாட்டையும் மக்களையும் நலிவுறுத்துகின்றது?

சங்ககாலச் சமுதாயம் பலவகைகளில் சிறந்திருக்கக் காண்கின்றோம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அடிப்படையில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பாட்டில், உள்ளத்தில் வீரமும் ஈரமும் கொண்டு மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என வரலாறு காட்டுகின்றது. அதிலும் சிறப்பாக மக்கள் வாழ்வுக்கு வழிவகுத்த அறிஞரும் புலவரும் 'நாவலந்தீவகத்தினுக்குக் காவலராயினும்' அஞ்சா நிலையில் தலைநிமிர்ந்து வாழ்ந்தார்கள் எனக் காண்கின்றோம். இன்றோ அதற்கு நேர்மாறான நிலைதானே நாட்டில் உள்ளது! சிறப்பாக ஊருக்கு உபதேசம் செய்யும் பலர் அவ்வுபதேசத்தைத் தாம் கைக்கொள்ள மறந்து, தம் வாழ்வுக்கு மற்றவர் வாழ்வைப் பலியிடும் 'பண்பாட்டை'த்தானே காண முடிகின்றது. இந்த நிலையில் வீர உணர்வு அரும்புவதெங்கே; எவ்வுயிரையும் ஒத்து நோக்கும் பண்புளம்தான் அரும்புமா? இந்த நிலைக்கு அடிப்படைக் காரணம் என்ன? தான் வாழவேண்டும் என்ற சுயநல மனப்பான்மை மட்டுமின்றி தாழ்வு மனப்பான்மையும் காரணமாகின்றது. 'ஐயோ! நாம் தாழ்ந்திருக்கின்றோமே! உயர்ந்தவர்களை எப்படியாவது-நம் கொள்கைகளையும் பண்பாட்டையும் விட்டாவது-போற்றிப் புகழ்ந்து முன்னேறினாலன்றி நம் தாழ்வு நீங்காதே என்று எண்ணுகிறது உள்ளம். அதனால் தனக்குக் கீழ் உள்ளவரைச் சாடவும் நினைக்கிறது. இந்தத் தாழ்வு மனப்பான்மை தமிழன் உள்ளத்தில் எப்படி உண்டாயிற்று?

பண்பட்ட தமிழர் உள்ளம் அஞ்சாமை பூண்டது - அறவழி உணர்த்துவது—

உயிர்களை ஒத்து நோக்குவது-நல் உணர்வுவழி செயலாற்றுவது. அத்தகைய உள்ளம் கடைச் சங்ககாலத்தில் தமிழ் நாட்டில் இருந்தது அதனாலேயே தமிழக வரலாற்றில் அதைப் பொற்காலம் என்கின்றோம். ஆனால் அந்த நிலை-செம்மைநெறி இடையில் கழிந்த இருபது நூற்றாண்டுகளில் எத்தனை எத்தனை மாறுபாடுகளைப் பெற்றது என்பதை நினைக்கும் போது நம்மை அறியாது தடுமாற்றம் தான் உண்டாகின்றது அதிலும் சிறப்பாகக் கடைச் சங்க காலத்தை அடுத்த வரலாற்றில் காணும் இருண்ட காலத்தில் நாட்டில் உண்டாக்கிய பெரு மாறுதல்களே இப்படி வாழ்வை - பண்பாட்டை - அறநெறியை அனைத்துயிரையும் ஓர்பும் உணர்வை மாற்றியிருக்க வேண்டும். எப்படி ?

கடைச்சங்க காலத்தை ஒட்டிய காலத்திலேயே இந்த மாறுபாடுகளை நம்மால் காணமுடிகின்றது. மறந்தும் பிறன் கேடு சூழற்க' என்றும், அவ்வாறு சூழின் அதற்குக் கழுவாய் கிடையாது என்றும், ஆகவே தீமை செய்ய அஞ்சுக என்றும் காட்டி, நாட்டில் உள்ள எல்லா உயிர்களும் நல் வாழ்க்கை வாழ வழிவகுத்த சமுதாயத்துக்கு இடையிலே செய்யும் தவறுக்கு எளிய கழுவாய்கள் தோன்றிய காலம் காப்பிய காலமல்லவா ! 'என் வாய்க் கேட்டோர் இறந்தோர் உண்மையின், நன்னீர்க்கங்கை யாடப் போந்தேன்' என்ற மாடலன் வாய்மொழியால் இளங்கோவடிகள், கொலைக்குற்றத்தை கங்கையில் கழுவிப்போக்கலாம் என்ற நிலை நாட்டில் உண்டாகிவிட்டதை எடுத்துக் காட்டுகின்றார். எனவே தவறு செய்யவும் அதற்கென அமைந்த எளிய கழுவாய் ஆற்றவும் அமைந்த ஒரு நிலை நாட்டில் உண்டாகிவிட்டது. இன்றும் இந்த அடிப்படையில் தானே பல வியாபாரிகள் ஒன்றுக்குப் பத்தாக லாபம் வைத்து விற்று, அந்தப் பாவம் தீரத் திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்குக் கருடசேவை செய்து மகிழ்கின்றார்கள். இந்தத் 'தவறு செய்யா அடிப்படை' தளர்ந்ததே பண்பாடு கெடுவதற்கு முதற் காரணமாயிற்று.

தமிழ்நாட்டு வரலாற்றில் இருண்ட காலம் பல கொடுமைகளைச் செய்து சென்றிருக்கின்றது. சுமார் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகள் நம்மை நாம் அறியாமலே வாழ்ந்து வந்திருக்கிறோம். அக்காலத்தில் எத்தனையோ வெளிநாட்டவர் நம் தமிழகத்தில் வந்து வாழ்ந்ததோடு, நாட்டை ஆளவும் தொடங்கினர். அதுவரை இமயத்தையும் அடக்கியாண்ட தமிழ் மறவர் முதல் முதல் அக்காலத்தில் தான் அந்நியருக்குத் தலைவணங்கி வாழ நேர்ந்தது. ஆம்! அவ்வாழ்வு இன்னும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றது அந்தக் காலத்தில் எத்தனையோ பழக்க வழக்கங்கள் குடி புகுந்தன. தலைநிமிர்ந்து வாழ்ந்த தமிழ் இனம் தலைகுனியத் தொடங்கியது. தாழ்வு மனப்பான்மை தமிழ்நாட்டில் இடம்பெறத் தொடங்கிய முதற்காலமே அதுவாகும்.

அந்த இடைக்காலத்தில் எத்தனையோ புராண பரபுகள் தமிழ்நாட்டில் பேசத் தொடங்கப்பெற்றன. பல பிறமொழிக் கதைகள் நாட்டில் பரவலாயின. அவற்றுள் பல வீரர்களும், சோரர்களும், கோழைகளும் பிறரும் காட்டப்பெற்றனர். அவருள் வென்றவர் சிலர்: தோற்றவர் சிலர். அதுவரையில் சிறக்க வாழ்ந்து. மற்றவருக்கு அடிமைப்பட்ட தமிழ்இனம் அத்தாழ்வு மனப்பான்மையில் தோற்றவர்களையெல்லாம் தம்மவர் எனக் கற்பித்துக் கொள்ள நினைத்தது. அதனால் நாட்டில் எத்தனை எத்தனை விதமான மாறுபாடுகளும் வேறுபாடுகளும் தோன்றி நாட்டை நலியுறுத்துகின்றன என எண்ணும்போது வாட்டம் பிறக்கின்றது.

அந்த இருண்ட இடைக்காலத்தில் முதல் முதல் தமிழ்நாட்டை அடிமைப் படுத்தி ஆண்டவர்களுள் பலர் இந்த எண்ணத்தை நம் முன்னோர் மனத்தில் ஊன்றச் செய்துவிட்டார்கள் என நினைக்கவேண்டியுள்ளது. அதனாலேயே தங்கள் ஆட்சியை இங்கே அவர்களால் வலியுறுத்த முடிந்தது. அந்த இடைப்பட்ட மூன்று நான்கு நூற்றாண்டுகளில் செய்வதறியாது திகைத்த தமிழ் உள்ளங்கள் - சென்ற காலத்தின் பெருமையையும் அக்காலத்தில் தமிழர் பெற்ற சிறுமையையும் எண்ணிஎண்ணி ஏங்கி வாடிய உள்ளங்கள் 'நம்மால் என்ன செய்யலாகும்? எல்லாம் விதியே!' என எண்ணி வாடின. இவ்வாறு தமிழ்நாட்டில் தாழ்வு மனப்பான்மை உருவாயிற்று. தொடர்ந்து மூன்று நூற்றாண்டுகள் இப்படி அடிமை வாழ்வில் தலையைப் பறிகொடுத்த தமிழ் நாட்டில் இவ்வுணர்வை வலியுறுத்து வண்ணம் 'விதி'யை வற்புறுத்தும் பௌத்தம், சமணம், வைதிகம் போன்ற சமயங்கள் ஒன்றை ஒன்று போட்டியிட்டு வளரத்தொடங்கின, எனவே பிற நாட்டு அரசியலும் சமய இயலும், தலை தாழ்த்தி அறியாத அருமைத் தமிழ் நாட்டை தலைகுனிய வைத்ததோடு, தன் மானத்தையும் தலைவப்பிக்கையை

யும் இழக்கச் செய்து, தாழ்வு மனப்பான்மையினையும் நன்கு கற்பித்து விட்டது.

இந்த நிலையில் நீறுபூத்த நெருப்பென இருந்த தமிழ்நாடு, தன்உண்மை உணர்வுபெற்று இடைக்காலத்தில் தலை நிமிரத் தொடங்கியபோதிலும், அதைப் பற்றிய பிற அமைப்புக்களும் செயல் முறைகளும் அதை முழுதும் நிமிர ஒட்டாது தடுத்தன; தடுத்துக்கொண்டே இருக்கின்றன. இடைக்காலத்தில், செய்யும் பாவங்களுக்குக் கழுவாயாகப் பலப்பல புது வழிகளைக் கண்டுபிடித்தனர். கண்ணில் காணும் பலவற்றுடன் காணாதன சிலவற்றைப் பிணைத்து, அஞ்சாததற்கெல்லாம் அம்மக்களை அஞ்ச வைத்தார்கள். ஆம்! அந்த அச்சத்துக்கிடையிலே அமைதி வேண்டுமாயின் சில 'கழுவாய்'கள் செய்ய வழி உண்டு எனவும் கற்பித்தனர். யாகத்தின் வழியே பலவற்றைக் கைகூடப் பெறலாம் என்ற ஒரு கொள்கையை நாட்டில் பரப்ப வந்தவர்கள் நினைத்திருக்கலாம். ஆயினும் 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று' என்ற அடிப்படையில் வாழ்ந்த தமிழ்மக்கள் தங்களை முழுதும் பறிகொடுக்காத நிலையில் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லைபோலும். அதற்குப் பதிலாக 'தான'க் கொள்கை இடம்பெறலாயிற்று. 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' தமிழ்ப் பண்பாடு அந்த உணர்வை ஓரளவு ஏற்றுக்கொண்டது. அதனால்தான் 'இரணியகருப்பம்' 'துலாபாரம்' போன்ற தானங்கள் பிற்காலச் சோழர் காலத்தில் இடம்பெற்றன, மனித இனத்துக்குள்ளேயே தம்மினும் வேறுபட்ட சிலரை உயர்ந்தவராகக் கருதி, தம்மைத் தாழ்ந்தவராக்கிக்கொண்டு, தாம் செய்த தவறுகளும் கொடுமைகளும் - ஏன்? பாபங்களும் அவர்களுக்குத் தானம் கொடுப்பதால் நீங்கும் என நினைத்து அறம் புரியும் நிலையில் தாழ்வு மனப்பான்மை வளராது போகுமா?

பிறப்பில் வேறுபாடு இல்லாத மக்கட் சமுதாயத்தே பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டு ஒருசிலர் உயர்ந்தும் ஒருசிலர் தாழ்ந்தும் வாழ வேண்டிய வழியை இடைக்கால நிலை உண்டாக்கிவிட்டது. அதிலும் அறிவெறிந்த மறத்தமிழினத்தில் பலர் தாழ்ந்தவராகவே கருதப்பட்டனர். 'பாணன் பறையன் கடம்பன் துடியன் அந்நான் கல்லது குடியுமில்லை' என்ற பண்டைய தமிழ்நாட்டுப் பழங்குடிகளே இடைக்காலத்தில் மிக மிகத் தாழ்ந்தவர்களாக எண்ணப்பட்டார்கள். இந்த அவலநிலை விசய நகர வேந்தர் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாட்டில் உச்ச நிலை அடைந்தது. இன்றும் வாழ்ந்து கொண்டுதானே இருக்கின்றது.

இன்று சாதி, சமய வேறுபாடற்ற சமுதாயம் உருவாகியுள்ளது என மேடை மேல்பேசுகின்றோரும் பலர் அதை ஏற்றுக் கொள்வதில்லை. 'அது நம் விதி' என்று கூட வாதாடுகின்றனர். இந்த நிலையில் தமிழ்நாட்டில் நீறுபூத்த நெருப்பு மறுபடியும் வீறுகொண்டு சினைக்கின்றது. மேல் இருந்த சாம்பல் அறிவுக் காற்றால் பரந்து விட்டது. நெருப்புப் பற்றத் தக்க வகையில் பக்கத் துணைகள் பயன்படுகின்றன. மக்களுள் ஒரு சிலர் முன்வந்து தாழ்வு மனப்பான்மையை முறியடிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திவருகின்றார்கள். உலகமெங்கணும் இன்று இவ்வுணர்ச்சி தலை நிமிர்ந்து விட்டது. தாழ்ந்து அடிபணிந்து நின்ற ஆசியா ஆப்பிரிக்கா நாடுகள் நிமிர்ந்து தம் நிலை உணர்ந்து ஓங்குகின்றன. இந்த நிலையில் தமிழ் நாடுமட்டும் அந்தத் தாழ்வு மனப்பான்மையில் மங்குவானேன்? இமயத்தில் கொடி பொறித்த இனம் தம் இன்பத் தமிழ் நாட்டிலேயே அக்கொடி தூக்கக் கூசுவானேன்? சிங்களம் புட்பகம் சாவகம் வென்று கோலேச்சிய இனம் தம்மண்ணை ஆளவே மற்றவர் தயவை நோக்கித் தயங்குவானேன்? எம்மொழியும் கலவாது எக்கலையும் ஆக்கித்தந்த தமிழ் மொழி, எல்லாவற்றிற்கும் பிறவற்றில் கடன் வாங்க வேண்டும் என்று தமிழ் நாட்டில் உள்ளவனே கூற அமைந்து நிற்பானேன்? தமிழ் நாட்டிலேயே தமிழ் மொழியை-தமிழ்ப்பண்பை- தமிழ்க்கலையை- தமிழ் நாகரிகத்தை வளர்க்க மற்றவர்உத்தரவையோ-உதவியையோ எதிர்பார்ப்பானேன்? ஆம்? அதற்கெல்லாம் தாழ்வுமனப்பான்மையே காரணம். நம்மை பலநூறு சுக்கலாகப் பிரித்த அந்த ஒன்றே அடிப்படை. போனது போகட்டும். இனியாவது ஒன்றிய தமிழ்ச் சமுதாயம் உண்மை உணர்ந்து- பூதப்பாண்டியன், நெடுஞ்செழியன், நலங்கிள்ளி ஆகியோரின் வழிவந்தவர் நாம்என உணர்ந்து-தாழ்வு மனப்பான்மையை உதறித் தள்ளி உற்ற மொழியும் கலையும் வாழ்வும் பண்பும் வளமுற்று ஓங்க ஒன்றிப் பாடுபடுவோமாக! அந்த உணர்வு அரும்பும் நல் நாளாக இப்பொங்கல் நாள் அமைவதாக! தமிழர் விழாவாகிய இப்பொங்கல் நாள் மக்கள் உள்ளங்களில் மகிழ்ச்சிபொங்க அடிகோலி, அதன்வழி தமிழ்ச் சமுதாயம் சிறக்க வழிகாட்டுமாக! ★

உடுத்தல்

பேராசிரியர் ஞா. தேவநேயப்பாவாணர்

ஆடவர் அரையில் ஆடை யணியும் முறை,

(1) சுற்றிக் கட்டுதல்,

(2) தாறு பாய்ச்சிக் கட்டு தல்,

என இருவகை. இவ் விரண்டும் தமிழருடையனவே. சிலர் தாறு பாய்ச்சிக் கட்டுதல் ஆரிய வழக்கம் எனக் கருதுகின்றனர். அது தவறு.

தாறு பாய்ச்சிக் கட்டுதலுக்கு முந்நிலைப்பாடு வேண்டும்அவை,

(1) மெல்லாடை,

(2) பல்வேறு மெய்யியக்கம்,

(3) வினைவிரைவு,

என்பன. பஞ்சினாலும் பட்டினாலும் நெய்யப்பட்ட மெல்லாடை, வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தமிழர் அணிந்து வந்தனர். உழவு, கூத்து, போர் முதலிய தொழில்கள் பல்வகை உடம்பசைவையும் விரைந்த செலவையும் கடுவுழைப்பையும் வேண்டுவன. ஆதலால், அவற்றைச் செவ்வையாய்ச் செய்தற்குத் தாறுபாய்ச்சிக் கட்டுதல் இன்றியமையாதது. இருந்த விடத்திலிருந்து கொண்டு நெசவாளி தன் வேட்டியைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருக்கலாம். ஆயின், விரைந் தியங்கும் வேட்டைக்காரனும், போர் செய்யும் மறவனும், நடஞ் செய்யுங் கூத்தனும், தாறுபாய்ச்சிக் கட்டாமல் தம் தொழிலைச் செய்ய முடியாது. கால் சட்டையும் சல்லடமும் (Drawers அரைக் காற் சட்டை) பண்டைக் காலத்திலில்லை.

தாறுபாய்ச்சிக் கட்டுதல்,

(1) மொட்டைத்தாறு,

(2) வட்டத்தாறு,

(3) வால்தாறு,

என மூவகை. மொட்டைத் தாறுவது, சுற்றிலும் வேட்டியைத் திரைத்து, முழங்காற்குக் கீழ் மிகுதியாய் அல்லது ஒரு சிறிதும் வேட்டி தொங்காதபடி முன்புற முந்தியை அல்லது அடிப் பாகத்தை இருகாற்குமிடையே பாய்ச்சிப் பின்னால் இறுகச் செருகுதல். வட்டத்தாறுவது;-ஒருபுற முந்தியைக் கணுக்கால் வரை இருகாலும் மறையத் தொங்க விட்டு. மற்றொரு புறமுந்தியை இருகாற்குமிடையே பாய்ச்சிப் பின்னால் இறுகச் செருகுதல். வால்தாறுவது; - வட்டத்தாற்றொடு பின்னால் வால் விட்டுக் கட்டுதலாம். இது ஒற்றை வால் தாறு ;இரட்டை வால்தாறு என இருவகைப்படும். முன்பக்கத்திலிருந்து ஒரு கீழ் முந்தியை மட்டும் பின்னாற் கொண்டுபோய் இடக்காற்பக்கமேனும்வலக்காற் பக்கமேனும் நடுவிலேனும் வால் விட்டுச்செருகுவது ஒற்றை வால் தாறு என்பதாம். இரு கீழ் முந்தியையும் முன்போற் கொண்டு போய் வலக்காற்பக்கம் ஒன்றும் இடக்காற் பக்கமொன்றுமாக இருவால் விட்டுச் செருகுவது இரட்டை வால்தாறு என்பதாம். மொட்டைத் தாற்றுக்கு நான்கு முழமும், வட்டத்தாற்றுக்கு ஐந்து முழமும், வால் தாற்றுக்கு ஆறு முழமும் ஆடை வேண்டும். இவை, முறையே, ஒன்றினொன்று மதிப்பானவை. ஆதலால், கல்லாப் பொதுமக்களும் கல்லாப் பெருமக்களும் கற்ற பெருமக்களும் இவற்றை, முறையே, கையாள்வர். இது தொன்றுதொட்ட வழக்கம்.

கல்லாப் பொதுமக்கள் பெரும்பாலும் உழைப்பாளிகளாதலின், மதிப்பு வேண்டாமையொடு உழைப்பு வசதியும் மொட்டைத் தாற்றையே அவர்க்குரியதாக்கும். ஊக்கமாய் வினைசெய்யும் உழைப்பாளிகள், சிறப்பாக உழவர், மொட்டைத்தாற் றுடையும் மிகையெனக் கருதி நீர்ச்சீலை (கோவணம்)யொன்றே யணிந்து வினைசெய்வர்.

எவ்வுழைப்பு வினையையும் ஊக்கமாய்ச் செய்ய முனையின், அரையாடையை இறுகக் கட்டிக்கொள்வது மாந்தர் இயல்பு. அதனால்,

"குடிசெய்வல் என்னும்
ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

என்று, தெய்வத்தின் மேலும் தற்றுடுத்தலை ஏற்றிக் கூறினார் திருவள்ளுவர். ஒரு வினையை முனைந்து செய்வதற்கு அரையில் ஆடையை இறுக்கிக் கட்டினால் மட்டும் போதாது; கீழ்ப் பாய்ச்சியுங் கட்டவேண்டும்.

தற்றுடுத்தலெனினும் தாறு பாய்ச்சிக் கட்டுதலெனினும் ஒன்றே. தறுதல்-இறுகக் கட்டுதல் அல்லது உடுத்துதல். தற்றுடுப்பது தாறு. (முதனிலை நீண்ட தொழிலாகுபெயர்). தறு-தாறு. ஒப்பு நோக்க : இறு-ஈறு, உறு-ஊறு.

தறுக்கணித்தல் :

1. உணவுப்பொருள் இறுகுதல்.
2. சதை அல்லது புண் காய்த்துப் போதல்.
3. பழங் கன்றிப் போதல்.

வழி நடைக்குக்கூட, சுற்றிக் கட்டுவதினும் தாறுபாய்ச்சிக் கட்டுதலே வசதியானது; அல்லாக்கால், கால்தட்டும், வெட்டும்; துணி பிதிரும், கிழியும்.

கி.மு. 3000 ஆண்டுகட்குமுன் மேனாடுகளில் துணி நெய்யப்படவில்லை யென்றும், இந்தியாவினின்றே ஏற்றுமதி யாயிற்றென்றும், சர் சான் மார்ஷல் (Sir John Marshall) கூறுகின்றார். இதற்குச் சான்றாக, பருத்தியும் பஞ்சும் துணியும் பற்றிய தமிழ்ப் பெயர்கள் இன்றும் மேனாடுகளில் வழங்குகின்றன.

பன்னல் - பருத்தி.

L. Punnus-Cotton.

It. Panno-Cloth.

கொட்டை,
கொட்டான். } — பஞ்சு.

Ar. Qutun, It. Cotone.

Fr. Coton, E. Cotton.

பருத்திப் பஞ்சைக் கொட்டையென்றும் கொட்டானென்றும் கூறுவது நெல்லை நாட்டு வழக்கு.

E. Calico-Cotton Cloth.



மலையாள (பழஞ்சேர) நாட்டுத் துறைமுகங்களுள் ஒன்றான கோழிக்கோட்டிலிருந்து ஏற்றுமதியான துணி ஆங்கிலத்தில் 'காலிக்கோ' எனப்பட்டது. 'கோழிக்கோடு' இன்று கள்ளிக்கோட்டை என மருவி வழங்குகின்றது. இம்மரூஉ (Calicut என்னும்) ஆங்கிலப் பெயர் வடிவைத் தழுவியது :

பண்டை மேனாட்டார் ஆடையைச் சுற்றிக் கட்டினரேயன்றித் தற்றுடுத்தினதில்லை. கி.மு. மூவாயிரம் ஆண்டுகட்குப் பின் இந்தியாவிற் புகுந்த வேத ஆரியர், ஆடுமாடு மேய்க்கும் முல்லை நாகரிகத்தையே அடைந்திருந்ததனால், அவரும் மெல்லாடையைத் தற்றுடுத்தியதுமில்லை; தமிழர்போற் கடுமையாய்ப் பல துறையில் உழைத்ததுமில்லை.

ஆகவே, தாறுபாய்ச்சிக் கட்டுதல் தொன்றுதொட்ட தமிழர் வழக்கேயென்றும், அதனைக் குறிக்குஞ் சொல்லும் தூய தமிழ்ச் சொல்லேயென்றும், பிராமணர் கட்டும் பஞ்சகச்சமும் தமிழர் தற்றுடுத்தலின் வேறுபாடேயென்றும், தெற்றெனத் தெரிந்துகொள்க. ★

சுராங்கனி



[இது கதை அல்ல-இலங்கையில் நடந்தது. இதில் வரும் அதிகாரி கனகவேல் இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிருர். அவர் இந்தச் சம்பவத்தை அவரது நண்பரிடம் கூறினுர். அந்த நண்பர் என்னிடம் சொன்னுர். நான் என்றும் போல் உங்களுக்கு எழுதிக் காட்டுகிறேன்.]

எஸ். எஸ். தென்னரசு.



தலைமன்னுர் ரயில் நிலையத்தில் வழக்கம் போல் கூட்டம் நிரம்பியிருந்தது. அதிகாரி கனகவேல்-இலங்கை அரசாங்கத்தில் பொறுப்பான பதவியிலிருப்பவர், மேடையில் இங்கு மங்குமாக உலாத்திக் கொண்டிருந்தார். பொழுது போக்குக்காகவும் உல்லாசத்திற்காகவும் அவர் கொழும்பிலிருந்து தலைமன்னுருக்கு வந்திருந்தார்.

பகல் இரண்டு மணியிருக்கும். ஒரு ரயில், தலைமன்னுர் நிலையத்தில் வந்துநின்றது. ஏராளமான பிரயாணிகள் அதிலிருந்து இறங்கினுர்கள். கூட்டம் அதிகாரியைக் கிழித்துக் கொண்டே சென்று கொண்டிருந்தது. கனகவேல் கையிலிருந்த பிரம்பைச் சுற்றிக்கொண்டே நிலையத்திற்கு வெளியே வந்தார். அவருடைய கார், நுழைவு வாசலில் நின்றுகொண்டிருந்தது. காருக்குப் போகத்தான் அவர் வந்தார். ஆனுல் திடீரென்று மயக்கம் போட்டு கீழே, விழுந்துவிட்டார். கல்லில் அடிபட்டு, அவரது மண்டை உடைந்து, ரத்தம் பீறிட்டு விட்டது. ஒரு பெரிய அதிகாரி-அதுவும் கார் வைத்திருக்கக் கூடிய பெரிய அதிகாரி விழுந்து விட்டால் பரபரப்பைப் பற்றிக் கூறவேண்டுமா?

தேனீர்க் கடைக்காரன் கூட வியாபாரத்தை நிறுத்திவிட்டு ரயில் நிலையத்திற்கு ஓடி வந்து விட்டான். போலீஸ் சூழ்ந்தது; பொது மக்கள் திரண்டுவிட்டார்கள். கனகவேல் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். டாக்டர் அவரைப் பரிசோதித்து இரண்டு மணி நேர ஓய்வுக்குப் பின்னர் பேச வைத்தார். மறுநாள் காலை செய்தித் தாள்களில், 'அதிகாரி கனகவேலுக்கு அதிசய மயக்கம்' என்று தலைப்பிட்டு பெரிய அளவில் செய்தி வெளியாகி இருந்தது. எல்லோருமே அதை விரும்பிப் படித்தார்கள். கனகவேல் டாக்டரிடம் கூறிய விபரத்தை, பத்திரிகைகள் அப்படியே வெளியிட்டிருந்தன.

★

கனகவேல் குமாஸ்தாவாகப் பணியாற்றிய காலம்! அவரோடு அற்புதம் என்று இன்னொரு இளைஞரும் வேலை செய்து வந்தார். இருவரும் நண்பர்கள்; ஒன்றாகவே உலாவப் போவார்கள், படம் பார்க்கப் போவார்கள். அலுவலகத்திலும் அடுத்தடுத்த இருப்பிடங்கள்! கனகவேலுக்கு மணமாகி இரண்டு குழந்தைகள் பிறக்கும் வரை அற்புதத்திற்கு மணமாகவில்லை. அற்புதம் பெற்றோர் இல்லாத வாலிபன். தன்னுடைய சுக துக்கங்களைத் தானே தேடிக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானவன். பெரிய வீதி ஒன்றிலுள்ள மாடி வீட்டில், மேல் அறையை அவன் வாடகைக்குப் பிடித்திருந்தான். எதிர் வீடு சிங்களவர் வீடு! அதில் ஒரு கூனல் விழுந்த நரை முது கிழவியும், ஒரு கன்னிப் பெண்ணும் இருந்தார்கள். ஆளில்லாத நேரங்களில் அற்புதம் எதிர் வீட்டு இளம் பெண்ணுடன் பேசுவான்; சிரிப்பான். ஆனால் தொட்டுப் பழகும் நிலை இல்லை. சுராங்கனி என்பது அவள் பெயர். சிங்களச் சீமையில் இதுதான் அதிகமாக வைக்கப்படும் பெயர்.

மனத்தில் தோன்றும் இன்பத்தையும் துன்பத்தையும் நண்பர்களிடம் கூறி, சாந்தி பெறுவது மனித சுபாவம். கனகவேல் காதுக்கு இது எட்டியது; அற்புதம் மூலமாகவே இது எட்டியது. சுராங்கனியைத் தனக்கு மணம் முடித்து வைக்கும்படி அற்புதம், கனகவேலை வேண்டினான்.

கனகவேல் ஒருநாள் மாலை அந்த யுவதியின் வீட்டுக்குப் போனார். சுராங்கனி உள்ளே இருந்தாள். கிழவி முற்றத்தில் உட்கார்ந்திருந்தாள். கனகவேல், தானே, தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, வந்த காரியத்தைக் கூறினார். கிழவிக்குக் கோபம் கிளம்பிவிட்டது. வேங்கையைப் போல் வெறித்துப் பார்த்தாள். "தமிழனுக்குப் பெண் தரமாட்டேன்" என்று சிங்கள மொழியில் கூவினாள்.

கனகவேல் சிரித்தார். அவருடைய சிரிப்பில் அமைதியும் நாணயமும் தோன்றின.

"நான் தமிழன்தான்! நான் கூட ஒரு சிங்களப் பெண்ணைத் தான் மணமுடித்திருக்கிறேன். இரண்டு குழந்தைகள் இருக்கின்றன" என்றார்.

கிழவி நம்பவில்லை. திரும்பத் திரும்பக் கதறினாள். கனகவேல் புத்திசாலி! அன்று போய் மறுநாள் வந்தார். கிழவி அன்றும் ஏசினாள். ஆனால் பழைய வேகம் இல்லை. கனகவேலுக்கு வெற்றியின் அறிகுறி தெரிந்தது. மாப்பிள்ளையின் உத்தியோகம், ஊதியம், உயர்படிப்பு, உத்தமக் குணம் எல்லாவற்றையும் அவிழ்த்துவிடத் தொடங்கி விட்டார். கிழவி சோர்ந்துபோனாள். கிறுகிறுத்துச் சாயும் வரை கனகவேல் நிறுத்தவில்லை. கிழவி சிங்களத்தில் பேசினாள்.

"தம்பி!"

"பாட்டி!"

"மாப்பிள்ளை நல்ல சிவப்புத் தானே!"

"தங்க நிறம்!"

"குணம்!"

விகடராமன் கவிதைகள் :



"அவன் பெயரே அற்புதமாயிற்றே! குணமும் அப்படித்தான்!"

வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது.

"என்ன? மாப்பிள்ளை பெயர் அற்புதமா? அப்படியென்றால் கிருஸ்துவனாயிற்றே! நாங்கள் புத்தமதம்! உஹூம்! நடக்காது! நடக்காது! போய்விடு! போய்விடு!" என்று கிழவி கனகவேலை அடித்துத் துரத்திவிட்டாள்.

கனகவேல் நேராக எதிர் வீட்டிலிருந்த அற்புதத்தின் அறைக்கு வந்துவிட்டார். அற்புதம் ஆவலோடு கனகவேலின் வாயைப் பார்த்தான். ஆனால் கனகவேல், சுராங்கனியை மறந்து விடும்படி சூசகமாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

விகடராமன் கவிதைகள் :



அன்று இரவு!

கனகவேல் தலைமன்னாரில் நடைபெற்ற ஒரு விருந்துக்கு வந்துவிட்டு, திரும்பி கொழும்புக்குப் போவதற்காக தலைமன்னார் ரயில் நிலையத்தில் காத்துக்கொண்டு நின்றார். வரவேண்டிய வண்டி வந்து சேரவில்லை. பிறகு அது மூன்று மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது. வண்டியின் கண்காணிப்பாளரின் அவசர அறிவிப்புக் கேட்டுச் சிப்பந்திகளெல்லாம் அந்த ரயிலுக்கு ஓடி வந்தார்கள். முதல் வகுப்புப் பெட்டி ஒன்றில் வாலிபன் ஒருவன் தலை பிளந்து மரணமுற்றுக் கிடந்தான். அவனது தலையைப் போலவே அவனுக்குப் பக்கத்தில் இரண்டு பிராந்திப்புட்டிகளும் நொறுங்கிக் கிடந்தன. கூட்டம் பெட்டியைச் சூழ்ந்தது. செத்துப்போன வாலிபனின் சட்டைப் பையில் ஒரு துண்டுச் சீட்டு இருந்தது. ரயில்வே அதிகாரி அதைப் படிக்கும்போது கனகவேல் அங்கு போய்ச் சேர்ந்தான். அதில், "நான் ஒரு சிங்களப் பெண்ணைக் காதலித்தேன். அந்தக் காதல் கைகூடவில்லை. எனக்காக எனது ஆருயிர் நண்பனும் முயன்றான். ஆகவே அவனிடமும் சொல்லாமல் இறக்கக்கூடாது என்பதற்காக, அவன் தலைமன்னார் போயிருக்கிறான் என்பதை அறிந்து, அவன் இருக்கும் இடம் தேடி என் பிணம் போகிறது" என்று எழுதியிருந்தது.

கனகவேலுக்குத் தலை சுற்றியது. ரயில்பெட்டிக்குள் ஏறி பிணத்தைப் புரட்டினான். அற்புதத்தின் மண்டை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் சிதறுண்டு கிடந்தது.

கனகவேல் மயங்கிக் கீழே விழுந்துவிட்டான். "இவனும் செத்துவிடுவானோ" என்று பயந்த ரயில்வே அதிகாரி உடனே கனகவேலுவை சிகிச்சைக்கு அனுப்பிவைத்தார்.

கனகவேலுக்கு மூளை கலங்கிவிட்டதாக பெரிய டாக்டர் கூறிவிட்டார். அதிர்ச்சியைத் தாங்க முடியாதபோது அவனுக்கு மயக்கம் கண்டுவிடும் என்பது அதன் பொருள்.

★

கனகவேல் குமாஸ்தாவாக இருந்தபோது ஏற்பட்ட அந்த அதிர்ச்சி, இப்போது பெரிய அதிகாரியாக வந்த பிறகும் கூட நிற்கவில்லை.

அதிகாரியாக வந்தவுடன் அதே தலைமன்னார் ரயில் நிலையத்தில் ஒரு வாலிபனைப் பார்த்தார். அவன் அற்புதத்தைப் போல் இருந்தான்! அந்த அதிர்ச்சி கனகவேலை மயக்கமுற வைத்துவிட்டது.

இப்படி எத்தனையோ முறை கனகவேலுக்கு மயக்கம் போட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காயம் ஏற்படும்- பிறகு சரியாகிவிடும்! அதிகாரி கனகவேல், டாக்டரிடம் உண்மையைக் கூறியதால் இந்தச் சுவையான கதை கிடைத்தது. ★



இரண்டாவது மணியும் அடித்தது. பிரியா விடைபெற்றுப் புறப்படுவதுபோல் இரயில் பெருமூச்சுடன் நகர்ந்தது. சன்னல் ஓரமாக இருந்த மாலதி கையை மெல்ல ஆட்டிப் போய் வருகின்றேன் என்று சொன்னாள், தன்னை வழியனுப்ப வந்திருந்த பெற்றோரிடம் கோவிந்தன் மாலதியைப் போல மெல்லக் கையை ஆட்டி வாய்க்குள்ளேயே போய் வருகின்றேன் என்று முணுமுணுத்துக்கொள்ளவில்லை. "வருகிறேன் மாமா," என்று நிலையத்தில் இருந்த எல்லாருக்கும் கேட்கும்படி உரத்துக் கூவினான்.

தனிக்குடி நடத்தப் போகின்றோம் என்று எக்களிப்பு அவனுக்கு. அதுவும் யாரோடு? தான் அல்லும்பகலும் எவளை நினைத்து ஏங்கினானோ, எவளுக்காகத் தெருக்கோடி மளிகைக் கடைக்குக் காரணமில்லாமலே போவதும் வருவதுமாக இருந்தானோ அவளோடு அல்லவா தனிக் குடித்தனம் நடத்தப் போகின்றான்! அந்த மகிழ்ச்சியில்தான் அவன் மிதந்துகொண்டிருந்தான்.

'போய் வருகிறேன்' என்று கூவிவிட்டு மாலதியின் பக்கம் திரும்பியவன் பொலபொலவென அவள் கண்களினின்றும் வழிந்த நீரைக் கண்டு திகைத்துவிட்டான். ஒரு கணத்துக்குள் ஓராயிரம் எண்ணங்கள் எண்ணிவிட்டான். அவளை எப்படித் தேற்றுவது என்று அறியாமல் குழம்பினான். தானும் அவளும் மட்டும் தனியாக இருந்தால், இந்நேரம் அவளை உலுக்கிஎடுத்துத் தேற்றியிருப்பான். ஆனால் இரயிலில் எப்படி அவளைத் தேற்றுவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

"என்ன மாலதி ?" என்று கேட்டான்.

"......" அவள் பதிலே பேசவில்லை.

"உனக்குப் பிடிக்கவில்லையானால் சொல்; அடுத்து இரயில் நிற்கும்போது இறக்கி விடுகிறேன்" என்றான்.

"சின்னப்பொண்ணு பாவம், அம்மாவை அப்பாவைப் பிரிஞ்சி போற துக்கத்திலே இரண்டு பொட்டுக் கண்ணீர் விட்டா, அதுக்கு இத்தனை கூச்சல்போடுகிறாயே, நல்ல ஆள் அய்யா நீ. இதோ இவகூட முதலில் அப்படித்தான் இருந்தா இப்போ பார்" என்று பக்கத்தில் இருந்த தன் மனைவியைச் சுட்டிக் காட்டினார்.

இதற்குள் அந்த அம்மாள் ஒரு நொடி நொடித்தார்கள். கிழவர், அந்த நொடிப்பிலே மயித்தார்.

இந்த அரிய காட்சியைக் கண்ட மாலதி 'களுக்'கென்று சிரித்தாள்.

★

சின்ன ஊர்தான் அது, அவர்கள் ஏற்பாடு செய்துகொண்ட வீடும் சின்னதுதான். ஆனாலும் ஊரிலும் சரி, வீட்டிலும் சரி வேண்டிய வசதிகள் எல்லாம் கிடைத்தன.

கோவிந்தன் இரண்டு நாட்களில் ஏழெட்டு நண்பர்களை உண்டாக்கிக் கொண்டான். ஆனால், மாலதிக்குத்தான் துணை யாரும் கிடைக்கவில்லை. யாருடனும் இலேசில் பழகிவிட மாட்டாள் அவள். பட்டணத்தில் வாழ்ந்த அவளோடு பழகவும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்களுக்குத் துணிவு வரவில்லை.

கோவிந்தன் அலுவலகத்திற்குப் போனபிறகு, வீட்டில் மாலதி 'கொட்டு கொட்டு' என்று தனித்து இருந்தாள்.

ஒரு வாரம் கழிந்தது. ஒரு நாள் இரவு பத்து மணிக்கு வீடு திரும்பிய கோவிந்தன் இலை முன் உட்கார்ந்தான். மாலதி பரிமாறினாள். ஏதோ ஒன்றை எடுத்து வாயில் வைத்தவன் "சீ சீ" என்று உமிழ்ந்தான்.

"என்ன ?" என்று பதறினாள் மாலதி.

"ஒன்றுமில்லை" என்று மழுப்பினான் அவன். அதற்குப் பிறகு ஒன்றுமே பேசாமல் சாப்பிட்டுவிட்டு எழுந்தான்.

இன்னொரு நாள் ஆபீசுக்குப் புறப்பட்டவன் நடையில் விட்

டிருந்த ‘நடையனை’க் காணுது தேடினுன்.

“எங்கே மாலதி இது?” என்று கேட்டான். அவள் பதில் சொல்வதற்குள் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

“இங்கே தானே இருந்தது. இதைப் பார்த்துக் கொள்ள துப்பு இல்லையே உனக்கு” என்று கத்திவிட்டுத் தெருக்கதவைப் ‘படார்’ என்று சாத்திக் கொண்டு போய் விட்டான்.

பாவம்; மாலதிக்கு என்னசெய்வது என்று தெரியவில்லை. வாழைக் குருத்துபோல் வளர்ந்தவள் அவள். வாழ்க்கை தெரியவில்லை; புரியவில்லை. கோவிந்தனின் முன்கோபம் என்ற முள் அந்தக் குருத்தின்மீது படும் போதெல்லாம் ஒரு கீறல்விழுந்து கொண்டிருந்தது.

அன்று இரவு திரும்பி வரும் போது கோவிந்தன் மல்லிகைப்பூ பொட்டலம் ஒன்று கொண்டுவந்தான். ‘மாலதி, மாலதி’ என்று தேனொழுக அழைத்தான்.

காலையில் குத்திய முள்ளின் வலி இன்னும் இருந்தது அவளுக்கு. நெஞ்சு வலித்தது.

அவன் மார்பிலேயே சாய்ந்து தேம்பித் தேம்பி அழுதாள்.

“என்ன மாலதி இது? ஏன் அழுகிருய்? என்ன நடந்துவிட்டது?” என்று பதறினுன் அவன்.

அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அன்று இரவு நெடுநேரம் பன்னிப் பன்னிக் கேட்டான், கோவிந்தன் ‘ஏன் மாலதி அழுதாய் சொல்லேன்’ என்று.

“ஒன்றுமில்லை அத்தான். என்னைத் திட்டினுல் அழுகை வருகிறது. யார் இருக்கிருர்கள் எனக்கு இங்கே. உங்களை நம்பித் தானே வந்திருக்கிறேன். நீங்களே...” என்று முடிப்பதற்குள் அவள் நெஞ்சம் விம்மியது.

அது வெடித்து விடாதபடி கோவிந்தன் இறுக அணைத்துக் கொண்டு, “அழாதே மாலதி அழாதே. நான் இருக்கிறேன் உனக்கு நீ அழாதே-இப்போது தான் எனக்கு உன் நிலை புரிகிறது, வெளியில் அலையும் எனக்கு எத்தனையோ பேர் நண்பர்கள்—அவர்களிடத்திலே பழகி என் கோபத்தைத் தாபத்தைத் தணித்துக்கொள்ளலாம். ஆனுல் உனக்கு நான்-நானேதான் எல்லாம் – மாலதி அழாதே” என்று அவன் அழத் தொடங்கி விட்டான்.

“ஐய்யய்யஇது என்ன அசட்டு அழுகை!” என்று மாலதி தன் பஞ்சு விரல்களால் கோவிந்தன் கண்களினின்றும் வழிந்த நீரைத் துடைத்தெறிந்தாள். ★

“ஏம்மா இந்தப் பக்கம் யாரும் போலீஸ்காரர்கள் வரப் பார்த்தீங்களா?”

“இல்லையே!”

“அப்படியா? கழட்டு நகையை உம்.....,சீக்கிரம்!”

விகடராமன் கவிதைகள் :



மறதி

வழக்கறிஞர் தில்லை வில்லாளன்

இரவு ஏழு மணி இருக்கும். வழக்கம்போல் நான் சாய்வு நாற்காலியில் படுத்தபடி, மறுநாள் வழக்கு மன்றத்திற்கு தேவையான கட்டுகளை, புரட்டிக்கொண்டிருந்தேன்.

என் நண்பர் நல்லநாயகம் உள்ளே நுழைந்தார். ''நேற்றுக் காலையில் வருவதாகச் சொல்லிச் சென்றதை நான் மறந்தே போனேன். இப்பொழுதுதான் நினைவிற்கு வந்தது. ஓடி வந்தேன்'' என்றார், வாசற்படியிலேயே.

''நாயகம், நீர் மறந்துவிட்டீர். ஆனால் என்னைப்போல் வழக்குரைக்கும் தொழிலில் உள்ளவர்களுக்கு மறதி பெரிய விரோதி-தெரியுமா?'' என்றேன்.

''மறதி, மனித இயற்கை'' என்றார் நாயகம்.

''மறதியினால், நான் ஒரு இக்கட்டில் மாட்டிக்கொண்டேன். ஆனால் வேறொருவரின் மறதியின்மையால் நான் தப்பித்துக் கொண்டேன். அவனை வாழ்நாளில் என்றும் மறக்கவேமாட்டேன்' என்றேன்.

''அந்த இக்கட்டான சம்பவத்தை எனக்குச் சொல்லக் கூடாதா'' என்றார் நாயகம்.

அவருக்குச் சொன்னேன். உங்களுக்கும் சொல்கிறேன்.

★

குருசாமி வாண்டையார் எங்கள் பக்கத்தில் குறிப்பிடத்தக்க பெரிய புள்ளி. பணத்தில் மட்டுமல்ல, எல்லா வகையிலும் அவர் அந்த வட்டாரத்தில் பெயர் பெற்றவர். அவர் ஒரு நாள் என்னிடம் வந்தார்.

வந்தவர் ஒரு தாளை நீட்டினார். அது, பரமானந்தப் படையாச்சி அவர் பெயருக்கு ரூ 5000-க்கு எழுதிக் கொடுத்த 'புராமிசரி நோட்டு'

''இதுக்கு உடனடியாக நோட்டீசு கொடுக்கணுங்க காலாவதி ஆக நாலு நாட்கள்தான் இருக்கின்றன. தாவாவும் போட்டுடணுங்க'' என்றார்.

'ஆகட்டும்' என்றேன்.

பரமானந்தப் படையாச்சி ஒன்றும் வாண்டையாருக்கு இளைத்தவரல்ல. ஆனாலும் இருவருக்கும் பெரும் பகை படையாச்சி எனக்கும் தெரிந்தவர். எப்படி இவர்களுக்குள் இந்தப் பெருந் தொகை சம்பந்தமாக நோட்டு ஏற்பட்டிருக்க முடியும் என்று ஒரு கணம் யோசித்தேன்.

வந்தவர் ரூ 25ஐ எடுத்து மேசையில் வைத்துவிட்டு, 'நோட்டீசு கொடுங்கள். மற்றவற்றிற்கு இரண்டு நாள் கழித்து வருகிறேன்' என்று கூறிவிட்டு, போய்விட்டார்.

மறுநாள் குருசாமியார் கூறியபடி 'நோட்டீசு' கொடுத்துவிட்டேன்.

இரண்டு நாட்கள் கழித்து, சொன்னபடி குருசாமி 'தாவா போட என்ன செலவுங்க' என்றார்.

நான் கட்டுகளைத் தேடினேன். அவர் கொடுத்துச் சென்ற 'புரோ நோட்டு' காணக் கிடைக்கவில்லை. முதலில் அலட்சியமாகத் தேடினேன். வர, வர, காணாமற் போய்விட்டதோ என்ற சந்தேகம் வலுக்க வலுக்க பயம் வந்துவிட்டது. கை நடுங்க ஆரம்பித்துவிட்டது. மனம் தடுமாறிடலாயிற்று.

'என்னங்க, குமாஸ்தா எங்காவது வைத்திருப்பார். பொறுமையாகப் பாருங்க' என்றார் அவர்.

குமாஸ்தா குமாரசாமிக்கு இந்த 'நோட்டு' விவரம் தெரியாது. அவனைக் கேட்டு என்ன செய்ய?

'நீங்க நாளைக் காலையில் வந்துவிடுங்க. நான் தேடி எடுத்துவிடுகிறேன். காலையில் பிராது எழுதி நாளைக்கு கச்சேரியில் தந்துவிடலாம்' என்றேன். என் நிலையில் நான் இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது.

'சரி, நாளையோட காலாவதி இல்லிங்களா?' என்றார் அவர்.

'ஆமாம், காலையில் கொடுத்துவிடலாம்' என்றேன், தடுமாற்றத்தோடு.

அவர் போன பிறகு எனக்கு எதிலும் நாட்டமில்லை. ரூபாய் ஐயாயிரம் போய்விட்டால் நானல்லவா பொறுப்பாளியாக நேரிடும் என்று எண்ணி எண்ணி வருந்தினேன்.

மறதி, எவ்வளவு பெரிய விபத்தைக் கொண்டு வந்துவிட்டது என்று என்னை நானே நொந்துகொண்டேன்.

ஒரு வேளை, அந்த 'நோட்டை' யாரேனும், பரமானந்தருக்கு வேண்டியவர்கள் அருகிலிருந்து திருடிக் கொண்டு போயிருப்பார்களோ என்று சந்தேகப்பட்டேன். ஏனெனில், பரமானந்தர், அப்படிப்பட்ட 'ஜனக் கட்டு' உள்ளவர்.

மருத்துவர்களைப்போல், வழக்கறிஞர்களும், தனித் தனியாக கட்சிக்காரர்களிடம் 'இன்ஸ்ட்ரக்ஷன்' பெறுவதுதான் நல்லது என்று பட்டது. நோயாளிகளைப் பரிசீலிக்கிற மருத்துவர், நோயாளிகளைத் தனித் தனியே பரிசோதிக்கிறார் அல்லவா? அதுபோல், தனி இடத்திலிருந்து, தனித் தனியே 'கட்சிக்காரர்களிடம்' உரையாடுவது மிகவும் நன்மை பயக்கும் என்று புது விதமான யோசனைகள் வேறு ஏற்பட்டு, வேதனையோடு போட்டியிட்டது.

மாலையில் குருசாமி வந்து போனார். அதிலிருந்து இரவு பதினொரு மணி வரை என் அறை முழுவதும் 'இண்டு இடுக்கு' ஒன்றையும் விடாமல் தேடி விட்டேன்.

குமாஸ்தா குமாரசாமி, காத்திருந்து பார்த்துவிட்டு கிளம்பிவிட்டான். வேறு வழக்குகளுக்காக வந்திருந்த மற்ற இரண்டொரு 'கட்சிக்காரர்களும்' காலையில் வருவதாகக் கூறி கிளம்பிவிட்டார்கள். நான் மட்டும், தனித்து தேடிக் கொண்டே இருந்தேன்.

உண்ணவும் மனமில்லை. என் மனைவியிடம் 'வயிறு சரியில்லை, சாப்

பாடு வேண்டாம்' என்று கூறிவிட்டு, தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டேன்.

பெரிய கோயில் மணி டண் டண்.. என பன்னிரண்டு அடித்தது. சுவர்க் கடிகாரமும் அதற்கு எதிரொலி காட்டுவதுபோல் மணியடித்தது.

தெருவில் மக்கள் நடமாட்டமே இல்லை. சுவர்க் கோழியின் ஙொய் ஙொய் சப்தம்தான் கேட்டது. வீட்டிற்குப் பக்கத்திலுள்ள பிள்ளையார் கோயிலில் எப்போதும் இருக்கும் நாய் மட்டும் தனித்து அழுதபடி ஒலி எழுப்பிக்கொண்டிருந்தது.

காலையில் என்ன செய்வதென்றே புரியாது தேடுவதை நிறுத்திவிட்டு, நாற்காலியில் சாய்ந்தேன்.

வாசற்படியில் யாரோ ஏறிவரும் சத்தம் கேட்டது. உற்றுப் பார்த்தேன்.

என்ன ஆச்சரியம்! அந்நேரத்தில் பரமானந்தம் வந்தார். என் அருகில் கிடந்த பலகையில் அமர்ந்தார்.

என் மனம் திக்திக்கென்று அடித்துக்கொண்டது.

அவராகவே பேசினார். நான் குறுக்கிடவில்லை.

"ஐயா, எனக்கும் குருசாமிக்கும் எவ்வளவு பகையென்பது உங்களுக்குத் தெரியும். எட்டு வருடத்துக்கு முன்னாலே நடந்த கீழத் தெரு கொலை வழக்கில் நீங்க எனக்காக ஆஜராகி என்னை விடுதலை செய்ய எவ்வளவு பாடுபட்டீங்க என்பது என் நினைவிலிருக்கு. நன்றி மறப்பது நல்லதில்லே—என்னைக் கொலை வழக்கிலே, வேண்டுமென்றே இதே குருசாமி சிக்க வைச்சு, சிரச் சேத உத்தரவு வாங்கிட எவ்வளவோ முயற்சிபண்ணினான். நீங்க என்னைக் காப்பாத்தினீங்க நான் மறக்கல்லே. எதை மறந்தாலும் மறக்கலாம். நன்றி மறக்கக் கூடாது. நன்றி மறப்பது நன்றல்ல, நன்றல்ல அன்றே மறப்பது நன்று என்பது வள்ளுவர் வாக்கு இல்லீங்களா?

நேற்று உங்க நோட்டீசு வந்துதுங்க, குருசாமிக்கு ஐயாயிரம் நான் தரணுமின்னு! இந்த அக்கிரமத்தை உங்க கிட்டே நேரில் சொல்லிப் போகத்தான் வந்தேன். அந்த கொலை வழக்கு முடிந்த பிறகு, இனி நாம் சிநேகிதமா இருப்போமின்னு அவன் கிராமத்துக்கு கூட்டிப் போய், அவன் கிராமந்தான் ஒரு தீவு மாதிரியின்னு உங்களுக்குத் தெரியுங்களே—துப்பாக்கியைக் காட்டி, இந்த நோட்டை எழுதி வாங்கிக்கிட்டான். என் வம்புக்கு வந்தியோ, இதை கச்சேரியில் போட்டு, காந்துடுவேன்னான். நானும் உயிருக்கு பயந்து கையெழுத்துப் போட்டேன். இப்போ, அவனோடே நேரடியா மோதறமாதிரி சந்தர்ப்பம் வந்திடுத்து. பஞ்சாயத்து போர்டு தேர்தலிலே, இவன் தலைவராகப் பார்க்கிறான்—இம்மாதிரி கொலைபாதகனை அந்த மாதிரி பதவிக்கு விடக்கூடாதுன்னு வேலை செய்தேன். அதுக்கு காரணமும் இருக்குங்க. இத்தனை நாள் காலாவதியாகியிருக்கும்னு நினைச்சேனுங்க உம், அவன் காலத்துக்கு நானே ஒரு நாள் இருக்கு!

ஐயா, நீங்க ஞாபக மறதியிலே, நோட்டீசோட நோட்டையும் வைத்து எனக்கு அனுப்பிட்டீங்க. அதை நான் கிழித்தெறிந்திடுவேன். இல்லை வரத்து வைத்து கையிலே வைத்துக்கொள்வேன். ஆனால் நீங்க சங்கடத்திலே மாட்டிக்குவிங்க. அதனால், நன்றி மறக்காமல், நோட்டை உங்க கிட்டே கொடுத்திடுவது—ஐயாயிரம் கொடுக்க வேண்டி ஏற்பட்டாலும் பாதகமில்லை என்று வந்துவிட்டேன் இந்தாங்க ஐயா நோட்டு", என்று பரமானந்தம் 'நோட்டை' என்னிடம் நீட்டினார்.

என் கண்களில் நீர் துளித்தது. அவர் கரங்களைப் பிடித்துக்கொண்டு தழதழத்த குரலில் நன்றி தெரிவித்தேன்.

அவர், 'நீங்க என்ன வேணுமானாலும் செய்யுங்க. நான் வரேனுங்க' என்று எழுந்து போய்விட்டார்

இரவு முழுவதும் நான் தூங்கவில்லை. பரமானந்தம், ஒரு விந்தைப் பொருளாகவே எனக்குப் பட்டார்.

காலையில் குருசாமி வந்தார்.

நான். எதுவும் பேசாமல் 'நோட்டை' எடுத்துக் கொடுத்து 'நான் வழக்கு போடத் தயாராக இல்லை. வேறு யாரையாவது வைத்து நீர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்' என்று கூறினேன்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தார் எனக்கு ஆத்திரம் தாங்கவில்லை

"சட்டம், நீதியை நிலைநாட்டத்தான் ஏற்பட்டது. நீதிமன்றம் நீதி பரிபாலனம் புரியத்தான். வழக்கறிஞர்கள் வழக்கின் இரு கூறுகளை எடுத்துக் கூறினாலும் மனமறிந்து அக்கிரமத்திற்கு துணை போகமாட்டார்கள்" என்றேன், கடுமையாக.

"ஏன், என்ன நடந்தது, எனக்கு எதுவும் புரியவில்லை" என்றார் அவர்.

நான், நடந்த நிகழ்ச்சியை அப்படியே அவரிடம் கூறினேன். "அத்தகைய பெருங்குணம் படைத்தவரிடம், நீர் ஏன் இத்தகைய சிறுமைக் காரியத்தைச் செய்கிறீர்! இது சரியா?" என்றேன்.



அவர் மலைத்துவிட்டார். அவர் ஏதும் பேசவில்லை.

அந்த 'நோட்டை' எடுத்தார். என் எதிரிலேயே கிழித்தெறிந்துவிட்டுப் போய்விட்டார்.

"இந்த சம்பவத்திற்குப்பிறகு மறதி, மறந்தும் என்னை அண்டியதில்லை" என்றேன்.

"ஆமாம், உங்கள் தொழிலில் மறதிக்கு இடமே இல்லை.

ஆனுல், முடிந்துபோன வழக்குகளின் வெற்றி தோல்விகளை நினைத்தபடியிருந்தால், அறிவு மயங்கிவிடும். ஆகவே அவைகளை மறந்து விட வேண்டும். ஆனுல், இப்பொழுது சொன்னது போன்ற வழக்கு நிகழ்ச்சிகளை மட்டும் மறக்காமல் நினைவில் வைத்திட வேண்டும்'' என்ருர்.

''அதுசரி, நீ வந்த வேலையை மறந்துவிட்டாயே ! கொண்டு வந்தாயா அந்த பத்திரத்தை''என்றேன். ''மறக்காமல் கொண்டு வந்து விட்டேன்.'' என்ருர் நாயகம்.

அவரது வழக்குக்கு வேண்டிய குறிப்புகளில் மூழ்கி, அவர் எதிரில் உட்கார்ந்திருப்பதையே மறந்து நெடுநேரம் சழித்து நினைவிற்கு வந்து அவரை அனுப்பி வைத்தேன். ★

இந்த வசனம் யார் எழுதியது ?

சினிமா வசனங்களைக் கேட்டுக் கேட்டுக் காது புளித்து விட்டது என்று வருத்தப் படுவோருக்கு நாம் இங்கே சில நல்ல தமிழ் வசனங்களைப் பொறுக்கிக் கொடுத்திருக்கிறோம். தமிழ் இலக்கியப் பயிற்சி உள்ள காதுகளுக்கு இவற்றை எங்கோ கேட்ட மாதிரி தோன்றும். சிறிது ஆழ்ந்து சிந்தித்தால் எங்கே, யாரால் எழுதப் பட்டது என்பது தெரியும். தெரிகிறதா, பாருங்கள் !

1

பொற்றொடீஇ, நீ கண்ட கனாக்கண்டு வருந்த வேண்டா ; நீ அவனால் வெறுக்கப்பட்டாயுமில்லை; நின் கணவன் காரணமாக ஒரு நோன்பு முற்பிறப்பில் தப்பினாய் ; அதனால் உள்ள தீங்குமிக்கன ; அத்தீங்கும் கெடுவனவாக ; காவிரி தன்நீரைக் கொண்டு சென்று கடலோடெதிர்த்து அலைக்கும் சங்கமுகத் தயலதாகிய பூவினிதழ் அவிழும் நெய்தற் கானலிடத்து இரண்டு தடாக முள்ளன ; அவை யாவையெனிற் சோம குண்டம், சூரியகுண்டமென்னும் பெயரை யுடையன. அவற்றின் துறைகளில் முழ்கிக் காமவேள் கோட்டத்திற் புக்கு அவனைத் தொழுதாராயின், அவர் இப்பிறப்பில் உள்ள நாளெல்லாம் தம் கணவரோடும் பிரிவின்றி இருந்து இவ்வுலகத்து இன்ப முறுவர் ; மறுமைக்கும் போக பூமியிலேயும் போய்ப் பிறந்து கணவரோடும் பிரிவின்றி முன்று பல்லங்காலம் இன்பம் நுகர்வராதலான் அவற்றை ஒருஞான்று ஆடக் கடவாய்.

2

கண்டார் காதல் கோடற்குக் காரணமாகிய மான் போலும் நோக்கத்தினையும் மடப்பத்தினையுமுடைய நல்லாளே ! சூட்டு மயிரினையுடைய அன்னமென்ன, அழகினையுடைத்தாகிய பெடையினையுடைய மயிலென்ன, கல்லையுண்கின்ற அழகிய புறவென்ன, நடையும் சாயலும் மடப்பமுமாகிய நலம் நெருங்கின நின்னுடைய இவ்வெழில் நின்னைக் கண்டவர்களை மயக்கமுறுத்து மென்னும் நிலைமையை நீ தான் அறிவையோ ? அறியாயோ ?

3

கண்ணே, கண்ணே, நான் என் மனப்பூர்வமாகக் காதல் கொண்டபின். நீ யாராயிருந்தாலுமென்ன ? நீ யிதனினும் இழிதொழில் புரியும் பாங்கியாயிருந்தால் அது குறையப் போகிறதா ? அல்லது நீ யித்தேசத்து அரசியாயிருந்தால் அதிகமாகப் போகின்றதா ? ஒன்றுமில்லை. ஆண்மக்களாகிய எங்களுக்கு அப்பேதமே கிடையாது.

4

நினைந்த துணையானே களிப் பெய்தலும், கண்ட துணையானே மகிழ் வெய்தலும், கள்ளுண்டார்க்கு இல்லை, காமம் உடையார்க்கு உண்டு. மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிக உண்டாமாயின், அவரால் தம்காதலரோடு தினையளவும் ஊடுதல் செய்யாமை வேண்டப்படும். நம்மை அவமதித்துத் தான் வேண்டியனவே செய்யினும் கொண்கனை என்கண்கள் காணாது அமைகின்றன இல்லை.

5

தேவரீருடைய திருவருள் கூட்ட அடியேன் திருவொற்றியூரிலே சங்கிலியை விவாகஞ் செய்த சமாசார முழுவதும் பரவையானவள் கேள்வியுற்று அறிந்து, தன்னிடத்திலே நான் வரில், தான் பிராணத் தியாகம் பண்ணுதல் தவருது என்று சொல்லிக் கொண்டிருக்கிருள். சிறியேன்தேவரீருக்கு அடியானும், தேவரீர் சிறியேனுக்குத் தோழரும் ஆண்டவருமாயிருத்தல் மெய்யாதலால், சிறியேன் படுந்துன்பத்தைப் பார்த்துத் தேவரீரே இவ்விரவில்பரவை வீட்டுக்குச் சென்று அவளுடைய ஊடலைத் தீர்த்தருளல் வேண்டும்.

6

அசைகின்ற இலையிலே உயிர்நிற்கிறதா ? ஆம் ! இரைகின்ற கடல் நீர் உயிரால் அசைகின்றதா ? ஆம் ! கூரையிலிருந்து போடும் கல் தரையிலே விழுகின்றது. அதன் சலனம் எதனால் நிகழ்வது ? உயிருடைமையால்! ஓடுகின்ற வாய்க்கால் எந்த நிலையில் உளது ? உயிர் நிலையில்! ஊமையாக இருந்த காற்று ஊதத் தொடங்கி விட்டதே ! அதற்கு என்ன நேரிட்டிருக்கிறது ? உயிர் நேரிட்டிருக்கிறது!

இந்த வசனங்கள் யார் எழுதியவை ?

விடை.

1. சிலப்பதிகாரத்தில் வருகிறது. தேவந்தி என்னும் பார்ப்பனப் பெண் கண்ணகியிடம் கூறிய வசனம் இது. மூலக்கதை ; இளங்கோவடிகள். வசனம் :- அடியார்க்கு நல்லார்.
2. கலித்தொகை-குறிஞ்சிக்கலி. காதலன் ஒருவன் தன் காதலியிடத்துக் கூறிய வசனம் இது. மூலம்; கபிலர். வசனம் :- நச்சினார்க்கினியர்
3. காதலர் கண்கள் என்ற நாடக நூலில் தன் காதலி தாராபாயிடம் ஜெயசிங் கூறும் வசனம். நாடகத் தந்தை ப சம்பந்தம் எழுதியது.
4: திருக்குறள், காமத்துப் பால், கற்பியல், புணர்ச்சி விதும்பல். தலைவியொருத்திதன் தோழியிடம் கூறியது, மூலம் : திருவள்ளுவர். வசனம் :- பரிமேலழகர்.
5. பெரிய புராணத்தில் சுந்தரர் சிவபெருமானிடம் கூறியது. மூலம்; சேக்கிழார். வசனம் :- ஆறுமுகநாவலர்.
6. பாரதியார். வசனகவிதை. காற்று.

பொல்லாத உலகம்



உலக வாழ்க்கையில் இன்ப நிகழ்ச்சிகளையும் காண்கிறோம்; துன்ப நிகழ்ச்சிகளையும் காண்கிறோம். பிறருடைய கேளிக்கை விருந்து முதலாய வற்றில் மகிழ்கிறோம்: துயரம் நோய் முதலியவற்றில் வருந்துகிறோம். நமக்காக இன்பமோ துன்பமோ வரும்போது வேறு வழியே இல்லை; இன்பமும் துன்பமும் பட்டே ஆகவேண்டும். ஆனால், பிறருடைய இன்பமும் துன்பமும் காணும்போது. என்ன செய்கிறோம்? பொறுமைக்கு இடந்தரும் நெஞ்சம், பிறருடைய இனபத்தைக் கண்டு வருந்துவது உண்டு; பிறருடைய துனபத்தைக் கண்டு மகிழ்வதும் உண்டு. அந்த நிலை வேறு. ஒரு தொடர்பும் இல்லாத இடத்தில் இன்ப நிகழ்ச்சியைக் காணின், பொதுவாக மனம் மகிழ்தல் இயற்கை; துன்ப நிகழ்ச்சியைக் காணின் மனம் வருந்துதலும் இயற்கை.

அவ்வாறு. பிறர் இன்பத்தைக் கண்டு மகிழ்ந்து, உடனே அதை மறந்து, பிறர் துன்பத்தைக் கணடு வாடுவதும் பிறகு அதையும் மறந்து விடுவதும் மக்களின் இயல்பு. ஆனால், கவிஞர்களால் சொல்லோவியத்தில் வல்ல கலைஞர்களால்-அவ்வாறு மகிழ்ந்தும் வாடியும் மறந்துவிடல் இயலாது. மகிழ்ச்சியும் அந்தக் கலைஞர்களின் உள்ளத்தில் ஆழ வேரூன்றும்; வாட்டமும் ஆழ வேரூன்றும் இரண்டையும் அவர்களின் மனம் எளிதில் மறத்தல் இல்லை. கலைஞர்கள்தம் இன்ப அனுபவத்தை மறந்தாலும் மறக்கலாம்; தாம் உற்ற துன்பத்தை-வாட்டத்தை-மறத்தல் இல்லை.

அதனால், முன்பெற்ற துன்ப அனுபவத்தை மறவாமல் இருக்கும் நெஞ்சில், புதியதாக இன்ப நிகழ்ச்சி ஒன்று காணின், அதுவும் இடம்பெற்று நிற்கிறது. அங்கே துன்பம், இங்கே இன்பம், அன்று மகிழ்ச்சி, இன்று வாட்டம்; ஏன் இந்த இருவகை நிலைகள் என்று கலைஞர்களின் நெஞ்சம் இரண்டையும் எண்ணிக் கலங்குவது உண்டு.

டாக்டர். மு. வரதராசனார்



விகடராமன் கவிதைகள் :



பிறர்படும் துன்பத்தைக்காணும்போது அவர்கள் இழைத்த தீவினையின் பயன் அது என்றும். பிறர் நுகரும் இன்பத்தைக் காணும்போது அவர்கள் செய்த நல்வினையின் பயன் அது என்றும் எண்ணி ஆறுதல் பெறும் கலைஞர்களும் உண்டு. அவர்களின் நெஞ்சம் சமயச் சார்பான ஊழ்வினைபற்றிய நம்பிக்கையால் அவ்வாறு ஆறுதல் பெறுகின்றது. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளின் நெஞ்சம் அத்தகையது.

ஆயின் ஊழ்வினைபற்றிய கருத்து ஒருபுறம் இருப்பினும், அதையும் கடந்து எண்ணி உணரும் நெஞ்சம் கலைஞர்க்கு உண்டு. எல்லாரும் இன்பமாக வாழும் வகையில் உலகம் அமையக்கூடாதா என்று அவர்கள் ஏங்குவர். அந்த ஏக்கத்தின் விளைவாக, உலக அமைப்பைப்பற்றி வெறுப்பும் தோன்றுதல் உண்டு. எல்லோரும் நன்றாக வாழ்ந்து மகிழ வேண்டும் என்று பரந்த உள்ளத்தோடு உணரும் நெஞ்சில் இத்தகைய ஏக்கமும் வெறுப்பும் தோன்றுவது இயல்பு.

புலவர் ஒருவர் ஓர் ஊரில் நடந்து சென்றார். ஒரு வீட்டில் யாரோ இறந்து போக. அங்கே அழுகையின் ஒலியும் சாப்பறையின் ஒலியும் கேட்டன. என்ன துன்பம் இது என்று நெக்குருகி நின்றார் பிறகு அப்பால் சென்றார். அடுத்த தெருவில் ஒரு வீட்டில் திருமணம் நடைபெற்றது. அந்த மண வீட்டில் திருமண முழவின் ஒலி கேட்டது, அப்பால் நகர்ந்தார். கணவனும் மனைவியுமாக வரும் மக்களைக் கண்டார். மகளிர் பூவும் அணிகலன்களும் அணிந்து பொலிவாக விளங்கியதைக் கண்டார். சிறிது அப்பால் சென்றபின், நேர்மாறான காட்சியைக் கண்டார். அங்கே கணவரைப் பிரிந்த மகளிர் துயரத்தால் கண் கலங்கி வாடி நிற்றலைக் கண்டார். அவருடைய உள்ளம் கலங்கியது; பெருமூச்சுவிட்டார். ''இது என்ன உலகம்! இப்படியும் இந்த உலகத்தைப் படைக்க வேண்டுமா ? படைத்தவன் இரக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நல்ல பண்பு இல்லாதவன். அதனால் தான் இப்படிப் படைத்திருக்கின்றான். இந்த உலகம் துன்பமானதாக உள்ளது. இதன் இயல்பு உணர்ந்தவர்கள், இதனிடத்தில் என்ன என்ன இன்பங்களைக் காண்கிறார்களோ, காணட்டும்'' என்றார். ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டில் வாழ்ந்த பக்குடுக்கை நன்கணியார் என்ற புலவர் இவ்வாறு உணர்ந்து பாடியுள்ளார்.

ஓரில் நெய்தல்
கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின்
பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி
அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண்
பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றஅப்
பண்பி லாளன்
இன்னாது அம்மவிவ் வுலகம்
இனிய காண்கிதன்
இயல்புணர்ந் தோரே.

(புறநானூறு, 194)

[கொடிது இவ்வுலகினது இயற்கை; ஆதலான். இவ்வுலகினது தன்மையறிந்தோர் வீட்டின்பத்தைத் தரும் நல்ல செய்கைகளை அறிந்து செய்து கொள்க என்பது பழைய புலவர் ஒருவரின் உரை, 'இதன் இயல்பு உணர்ந்தோர் இவ்வின்னாமையை இனியவாகக் காண்க என்று உரைப்பினும் அமையும், என்று மற்றொரு கருத்தையும் குறிப்பிட்டுள்ளார். இவ்விரண்டும் அவ்வளவாகப் பொருந்துமாறில்லை. துன்பத்தையே இன்பமாகக் காணுமாறு அவர் அறிவுறுத்தவல்லவராயின், உலகத் துன்பத்தைக் கண்டு இவ்வாறு நெகிழ்ந்து பாடியிருக்கத் தேவையில்லை. உலகத்தில் பெரும்பாலும் துன்பமே உள்ளது; ஆதலின், அத்துன்பத்திற்கு இடையே, இனியவை சில-இன்பப் பகுதிகள் சில இருப்பின், அவற்றைத் தேடிக் காண்க; அந்தச் சிலவற்றையும் பாழாக்கிட வேண்டா என்று அறிவுறுத்துவதாகக் கொள்ளலாம். மேற்கு நாட்டுத் தத்துவ ஞானிகளில் ஒரு வகையார் அவ்வாறு துன்பத்திற்கு இடையே இன்பத்தை நாடும் இயல்பினர் என்பர்.] ★

வஞ்சி மாநகர் எது?

சேர மன்னர்க்குச் சிறந்த தலைநகராய் விளங்கியது வஞ்சிமா நகர். கருவூர் என்றும் இது அழைக்கப் பட்டது. இவ்விரு பெயர்களுள் வஞ்சி என்பது இலக்கிய வழக்குப் பெயர் என்றும், கருவூர் என்பது உலக வழக்குப் பெயர் என்றும் கொள்ளத் தகும். சங்கநூற்களுள் அகநானூற்றில் நக்கீரர் வாக்காக வரும்,

'கடும்பகட் டியானை
நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர்'

என்ற ஒரே இடத்திலன்றிப் பிறவிடங்களிலெல்லாம வஞ்சி என்னும் வழக்கே வந்துளது.

1. தண் பொருநைப்
புனல் பாயும்
விண் பொரு புகழ்
விறல் வஞ்சி'
'வரு புனல் வாயில் வஞ்சி'
'பூவா வஞ்சிப் பொன் நகர்'
'வாடா வஞ்சி மாநகர்'
'கலி கெழு வஞ்சி'

1. புறம். 11; சிறுபாண் 50.

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் வஞ்சி என்னும் வழக்கே வந்துளது, பிற்காலத்துத் தோன்றிய உரையாசிரியர்கள் யாவரும் வஞ்சியைக் கருவூர் என்றே குறித்துள்ளனர். கருவூர் இலக்கிய வழக்குப் பெருமையின் அது பிற்காலப் பெயர் என்று கூறமுடியாது.

ஏனெனில், நக்கீரர் அதனைக் கருவூர் எனக் குறித்துள்ளார். இரண்டாம் நூற்றுண்டினராகிய தாலமி என்னும் பூகோள நூல் ஆசிரியர் கேரள பதிகளுடைய தலைநகர் கருவூர் என அதனைச் சுட்டியுள்ளார். இதனல் கருவூர் என்பதும் வஞ்சியைப் போலவே பழைமை வாய்ந்த பெயர் என்பது பெறபடும்.

1. கருவூர், வஞ்சிக் களம், அஞ்சைக்களம், கொடுங்கோளூர் என்பனவெல்லாம் வஞ்சி நகரையே குறிப்பன என்பாரும், கொடுங்கோளூர் அஞ்சைக்களம் வேறு, வஞ்சிமா நகர் வேறு என்பாருமாக

1. சிலப். உ. வே. சா. அரும்பத அகராதி.

2. Comparative grammar of Dravidian Languages-Madras University pub. P. 94

பேராசிரியர் ஆ. ஜெபரத்தினம்



ஆராய்ச்சியாளர் இருவகையினர். இவருள் முன்னவர், வஞ்சி மேலைக் கடற்கரையின் கண் அமைந்திருந்தது என்றும், பின்னவர் அது கொங்கு நாட்டில் காவிரியின் கிளை நதியாகிய ஆமிராவதி (ஆன்பொருநை) யின் கரையிலிருந்தது என்றும் இரு வேறு கருத்துடையோர். மொழி நூலறிஞர் டாக்டர் கால்டுவெல், கொங்கு நாட்டுக் கருரே பழைய வஞ்சியாகிய கரூர் எனக் கூறினர். 2 'சேர ருடைய பழைய தலைநகர் எனத் தமிழ் மரபு சுட்டும் நகர்,,முன்னர்ச் சேரநாட்டிலும் இப்போது கோவை மாவட்டத்திலுமிருப்பதாகிய கரூர் என்றே பொதுவாகக் கருதப்படு கிறது.'

அன்று தொட்டுச் சேரர் தலை நகராகிய வஞ்சி அல்லது கருவூர் எது? அது எவ்விடத்திலிருந்தது என்னும் ஆராய்ச்சி எழுவதாயிற்று. பேராசிரியர் மு. இராகவய்யங் கார், வஞ்சி கொங்கு நாட்டில் ஆமி ராவதிக் கரையிலிருந்தது என்பர்.

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரைத் தழுவி, டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் அது மேலைக் கடற்கரையில் இருந் ததுஎன்பர். வரலாற்றுசிரியர்களாகிய 1. வின்செண்ட் சிமித்தும், 2 சத்தியநாதையரும் அது கடற் கரை நகர் என்றே கூறியுள்ளனர். 'கொச்சினுக்கு ஏறத்தாழ இருபத் தெட்டுக்கல் வடக்கில் பெரியாற்றின் கரையில் இப்போது குடிபோன நிலை யில் திருக்கரூர் என வழங்கி வரும் சிற்றூரே சேர மன்னர்களின் மிகப் பழைய தலைநகராகிய வஞ்சி அல்லது கரூர் ஆகும். சிலர் கோவை மாவட்டத்திலுள்ள கருரே சேரர் தலை நகர் எனத் தவருகக் கருதுவர். அவர்கள் கருத்துத் தவறு என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. திருச்சி ராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கருரே சேரரது பழையதலைநகர் என எண்ணித் தவறு செய்வார் சிலர். ஆனல், கொடுங்கோளூரையடுத்த வஞ்சி அல்லது திருவஞ்சைக் களமே அவர்கள் தலைநகராகும். வஞ்சி, கருவூர் எனவும் அழைக்கப் பட்டது உண்மையே. டாலமி (கி. பி. 150) கேரளத்தின்தலைநகர் கரோரா எனக் குறிப்பிட்டுள்ளான். முதல் நூற்ருண்டினராகிய பிளினியும், பெரிப்ளூஸ் என்னும் நூலின் ஆசிரியரும் முசிறி அல்லதுகொடுங் கோளூரேசேரரின் ஆட்சிபீடமிருந்த நகர் எனச் சுட்டுகின்றனர். கொச் சின் மாநிலத்தில் இரிஞல குடா வுக்கும் கொடுங்கோளூருக்கும் (Cranganore) இடையிலுள்ள கருவப்பட்டினமே டாலமி சுட்டும் கரோரா வாதல் வேண்டும். திருச்சி ராப்பள்ளி மாவட்டத்திலிருக்கும் கரூர் மூவேந்தர்க்குமிடையே இகல் வளர்வதற்குக் காரணமாக இருந்து வந்துளது. அது சிலகாலம் சேர மன்னர் ஆதிக்கத்திலும் இருந்திருக் கலாம். ஆனல் அது அவர்களு டைய தலை நகராக என்றும் இருந்த தில்லை.

இளங்கோவடிகள் கூறும் சிலப் பதிகாரத்தைக் கொண்டு நோக்கு மிடத்து, வஞ்சி ஒரு மலைநாட்டு நகர் என்றே நாம் கொள்ளத் தகும். கண்ணகி மதுரையை விட்டு வெளி யேறி, வையையின் ஒரு கரையைப் பிடித்தே நடந்து

மேற்றிசை நோக்கிச் சென்று மலை நாடு அடைந்து, அதிலுள்ள திருச் செங் குன்று என்னும் மலைமேல் ஏறினள். இரவு பகல் வேறு பாடு அறியாது அவள் பதினன்கு நாட்கள் மேடு பள்ளங்களைக் கடந்து சென்ருள்.

'இரவும் பகலும்
மயங்கினள் கையற்று
உரவுநீர் வையை
ஒருகரைக் கொண்டாங்கு
அவல வென்னுள்
அவலித் திழிதலின்
மிசைய வென்னுள்
மிசைவைத் தேறலின்'

என்னும் அடிகள் மலையின் மேடு பள்ளங்களைக் குறிப்பன காண்க.

கண்ணகி விண்புக்க செய்தி மதுரைக் காண்டத்தில் சொல்லப் படுகிறது. அவள் தெய்வ மாகும் செய்தி வஞ்சிக்காண்டத்தில் சொல் லப்படுகிறது. சிலம்பில், மூன்ருவ தாகிய வஞ்சிக்காண்டம் குறிஞ்சி நாட்டரசராகிய சேரர்க்குரியது. அவ்வஞ்சிக் காண்டத்தின் முதற் காதை குன்றக் குரவை. அக்காதை யின் முதல் இரண்டு அடிகளில்,

'குருவி யோப்பியும்
கிளிகடிந்தும் குன்றத்துச்
சென்று வைகி
அருவியா டியும்
சுனை குடைந்தும்
அலவுற்று வரும்'

மலைவாழ் மக்களைக் காண்கின்ருேம். மதுரையை விட்டுச் சென்ற கண்ணகி பதினன்காம்நாள் குறிஞ்சி நிலத்துத் தெய்வமாகிய செவ்வேளின் குன்றில் ஒரு வேங்கை மரத்து நிழலில் நின்று விண்புக்கனள். குன்றக் குரவையில் 'தெய்வம் பரா அயது; 'அறத்தொடு நிலை; 'பாட்டு மடை' ஆகிய துறைகளில் பாடும் குறவர்கள் சூர்மா தடிந்த சுடர் வேலனையும், வெறியாடல் விரும்பும் வேலனையும், குறவர் மகளாகிய வள்ளியை மணந்த அறுமுகவனையும் ஏத்துகின்றதைக் காணகின்ருேம். சேயோன் மேய மைவரை உலகமும் என்னும் தொல்காப்பியத்தால் முருகன் குறிச்சி என்னும் மலைநாட் டுக் கடவுள் என்பது போதரும். மலை வாழ் மக்களே குறவராவர்.

வஞ்சிக் காண்டத்தின் இரண்டா வது காதையாகிய காட்சிக் காதை யில், மலைகளின் நடுவே பேரியாற் றங்கரையில் வஞ்சி மன்னன் தன் பரிவாரத்தோடு சென்று தங்கியிருப் பதைக் காண்கின்ருேம், அங்கு,

'குன்றக் குரவையொடு
கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள்
வேலன் பாணியும்
தினைக்குறு வள்ளையும்
புனத்தெழு விளியும்
நறவுக் கண் உடைத்த
குறவ ரோதையும்
பறையிசை யருவிப்
பயங்கெழு மோதையும்
புலியொடு பொருஉம்
புகர்முக வோதையும்
கலிகெழு மீமிசைச்
சேனேன் ஓதையும்
பயம்பில்வீழ் யானைப்
பாக ரோதையும்
இயங்குபடை யரவமொடு
யாங்கணும்'

ஒலித்துக் கொண்டிருந்தன. அப் போது 'மலை மிசை மாக்கள்'

'யானைவெண் கோடும்
அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும்
மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும்
சிந்துரக் கட்டியும்

1. Early History of India-V.A Smith P 477

2. History of India - Sathiana tha Iyer P 190.

அஞ்சனத் திரளும்
அணியரி தாரமும்
ஏலவல்லியும் இருங்கறி
வல்லியும்.
ஆளியின் அணங்கும்
அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும்
மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியும்''

முதலிய மலைபடு பொருட்களைச் சுமந்து கொண்டு வந்து தம் அரசனை வாழ்த்தி, அவற்றை அவனுக்குக் காணிக்கையாகப் படைத்தனர்.

இவ்வாறு வஞ்சிக் காண்டத்தில் குறிஞ்சி நிலமும், குறிஞ்சிக் கருப் பொருள்களுமே கமழ்ந்து, சிலப் பதிகாரக் கதை மதுரையிலிருந்து அதற்கு நேர் மேற்கிலிருக்கும் மலை நாட்டுக்கு இடம் மாறுவது தெற்றெனத் தெரிகிறது. திருச்சிராப் பள்ளிக்கு ஐம்பது கல் லுக்கு வடமேற்கிலிருக் கும் கரூரே வஞ்சி நகரா யின், கண்ணகி வையை நதியின் தென் கரையி லிருந்து அதனைத்தாண்டி வடக்குக் கரைக்குப் போய், மீண்டும் சோழ நாட்டின் எல்லைக்குள் நடந்து சென்றிருக்க வேண்டும். அவள் அப் படிச் செல்லவில்லை என் பது சிலப்பதிகாரத்தில் தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. மேலும், திருச்சிராப்பள்ளிக்குஐம் பது கல் தொலைவிலிருக் கும் கரூரில் குன்றக் குரவையில் கூறப்படும் குறிஞ்சி நிலச் சூழ் நிலையின் சாயல் சிறிதும் இல்லை.

கண்ணகிக்குக் கல் எடுத்து வருமாறு எழுந்த சேரனது சேனை,

.........'வஞ்சி நீங்கித்
தண்டத் தலைவரும்
தலைத்தார்ச் சேனையும்
வெண்டலைப் புணரியின்
விளிம்புசூழ் போத
மலைமுதுகு நெளிய
நிலைநாடு அதர்பட''

ஏகியது என்பர் இளங்கோ. கடலுக் கும் மலைக்குமிடையே சம நிலையுள்ள நாட்டில் புது வழி உண்டாகும்படி அச்சேனை மலைகளைத் தாண்டிச் சென்று நீலகிரியை அடைந்து அங்குத் தங்கியது என்பது இவ்வடி களின் பொருள். ஒருபக்கம் கடலும், மற்றொரு பக்கம் மலையும், அவை இரண்டுக்கும் இடையே சமநிலையு முள்ள நாடுமாக இருப்பது மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்புற மிருக்கும் இடம் தான். திருச்சிராப் பள்ளியை யடுத்த கரூரே வஞ்சியா யின், அதற்கு எண்பது தொண்ணூறு கல்லுக்குக் மேற்கே பாலக்காட்டு மலைத்தொடரும், அதற்குக் கிழக்கே நூற்றைம்பது கல்லுக்குக் கிழக்கே காரைக்கால் கடற்கரையும் இருக் கின்றன. ஆகவே, சேரனது சேனை பாலக்காட்டுக்கும் காரைக்காலுக்கு மிடையேயுள்ள சோழ நாடு முழு வதும் பரவி வடக்குநோக்கிச் சென்ற தாதல் வேண்டும், மேலும் அச்சேனை அவ்வாறு வடக்கு நோக்கிச் சென்று,



பின் மேற்கு நோக்கித் திரும்பி நீல கிரியைஅடைந்ததாதலும் வேண்டும். திருச்சிராப்பள்ளிக் கரூரிலிருந்து வட நாடு நோக்கிச் செல்வோன் சமநிலை யான நிலம் தன் முன் இருக்க அதனை விட்டுவிட்டு விரிகோணமாக மேற்கு நோக்கி வந்து மக்களுக்கிடையில் வலியச் சிக்கிக் கொள்ள விரும்ப மாட்டான். தனி மனிதன் காரியம் இவ்வாறாக, ஒரு பெருஞ்சேனை மலை களுக்கிடையில் வந்து அதனைக் கடந்து சென்றது என்பது முற்றிலும் பொருந்தாது. ஆதலின், மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே கடற் கரையில் இருந்த வஞ்சி நகரிலிருந்து சேரனது சேனை புறப்பட்டு அக் கடலுக்கும் மலைத் தொடர்க்கும் நடுவிலிருந்த சமநிலையான நிலத்தின் வழியாகப் போய், பின் மலை முதுகு நெளியும்படி அதன் மீது ஏறி நடந்து, நேர் வடகாகப் போய் எதிர்ப்பட்ட நீலகிரியில் தங்கியிருந்த தென்பதே பொருத்தமாகும். படம் காண்க. இங்ஙனம், சிலப் பதிகாரக் கதைப் போக்கைக் கொண்டு பார்த்தால் செங்குட்டுவனது தலை நகராகிய வஞ்சி, மலைநாட்டில் கடற்கரையை யடுத்திருந்த தென்பது தெளிவாகும்.

இனி, வஞ்சி நகரின் இடத்தைத் தீர்மானிப்பதற்கு ஆன்பொருநை யாற்றை எடுத்துக் கொள்ளலாம். அதன் கரையிலே வஞ்சிமா நகர் இருந்ததென்று நூல்கள் கூறு கின்றன. கொங்கு நாட்டுக் கரூரே வஞ்சி என்பார் காவிரியின் கிளைநதி யாகிய ஆமிராவதியே ஆன்பொருநை என் பதற்குச் சான்றுகள் காட்டுவர். கடற்கரை நகர் வஞ்சிஎன்பார் பேரி யாறே ஆன்பொருநை என்பர். ஆகவே, ஆமி ராவதியா, பேரியாறு எது ஆன்பொருநை என பதனை நாம் தீர்மானித்து விட்டால் வஞ்சியின் இடம் தானகவே தீர் மானமாகி விடும்.

சேரன் செங்குட்டு வன் மலைவளங்காணும் படி சென்று பேரியாற் றங்கரையிலுள்ள மணல் திட்டுக்களில் தங்கி யிருந்து. அன்றே வஞ்சி நகர்க்குத் திரும்பி வந்து விட்டான் என்பர் அடி யார்க்கு நல்லார். டாக் டர் சாமிநாதையரும் அக்கருத்தை ஆதரிக்கின்றார். இதனுல் பேரியாற் றங்கரையின் அண்மையிலேயே வஞ்சிநகர் இருந்ததாக அவ்விரு வரும் கொள்வது புலப்படும். கிரேக்க நில நூலாசிரியர் டாலமி தமிழகத்தின் மேற்குக் கடற்கரையி லுள்ள துறைமுகங்களைத் தரும் பட்டியலில் கேரளமன்னரின் தலை நகராகிய கருவூர், (Karoura the Royal seat of Kerala bothras) சுடாஸ்டமஸ் (Pseudostomos) என்ற ஆற்றண்டை இருந்ததாகக் கூறுகிறார். சுடாஸ்டமஸ் என்ற கிரேக்கச் சொல், பெருவெள்ளம் வரும்போது இடம் மாறிக் கடலிற்

கலக்கும் நதிமுகத்தைக் குறிப்பதாகும், பேரியாறு, ஆமிராவதியாகிய இரண்டனுள் நேரே கடலிற் கலப்பது பேரியாறே யன்றி ஆமிராவதியன்று; அது காவிரியில் சென்று கூடுவது. மேலும், தாலமி கூறுகின்ற கடற்கரை நகரம் பேரியாற்றங்கரையில் இருக்கக் கூடுமேயன்றி ஆமிராவதியின் கரையில் இருக்க முடியாது. ஆகவே, பேரியாறே ஆன்பொருநை என்பர் கனகசபைப் பிள்ளையை உள்ளிட்ட அறிஞர்.

கண்ணகி மலைநாடு அடைந்ததைப் பற்றிக் கூறும் அதே கட்டுரை காதையில், மலைநாட்டிலுள்ள வஞ்சிக்குச் சென்ற மற்றொருவரைப் பற்றியும் இளங்கோ கூறுகின்றார். சோழ நாட்டிலுள்ள பராசரன் என்பான், **பல்யானைச்** செல்கெழு குட்டுவனைக் காணும்படியாக,

> ‘காடும் நாடும்
> ஊரும் போகி
>
> நீருநிலை மலயம்
> பிற்படச் சென்று’

வஞ்சியை அடைந்தான் என்பர். பல்யானைச் செல் கெழு குட்டுவன், சேரன் செங்குட்டுவனது சிறிய தந்தை. அவனைக் காணும்படி பராசரன் காடு நாடுகளைக் கடந்து, மலையையும் தாண்டி வஞ்சியை அடைந்தான் என்னுமிடத்து, திரு. மு. இராகவையங்கார் மேற்குக் கடற்கரையிலும் வஞ்சி என்னும் ஒரு கருவூர் சேரர் கிளையினர்க்கு ஆட்சி நகரமாக நிலவியிருக்க வேண்டும் என்று ஏற்றுக் கொள்கிறார்.

வஞ்சி மேலைக் கடற்கரையில் இருந்தது எனக்கூறும் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார், கொங்கு நாடு பிற்காலத்தில் படிப்படியாகச் சேரர்க்குச் சொந்தமாகி வந்ததென்றும், அப்போது அவர்கள் கொங்கு நாட்டுக் கரூரைத் தமக்கு ஒரு புதிய தலைநகராகக் கொண்டிருக்க வேண்டும் என்றும் சொல்கிறார். புறநானூற்றிலே உறையூரை அடுத்துச் சேரர் தலைநகரமாக இருந்த இக்கருவூரைப் பற்றிக் கேள்விப் படுகிறோம். சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியினது யானை மதம் கொண்டு அவனையும் சுமந்து கொண்டு கருவூரை நோக்கிஓடியது. கருவூரில் வேண்மாடத்தின் மீது ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவரோடு இருந்த சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை, சோழன் யானை மீதிவர்ந்து தன் நகர் நோக்கி வருதலைக் கண்டு வெகுண்டான். அதனை அறிந்த புலவர், யானை மதங் கொண்டு ஓடிவரும் செய்தியைச் சேரனுக்குச் சொல்லி, அவன் சீற்றத்தைத் தணித்தார். ஆகவே, உறையூரையடுத்திருந்த கருவூர் சேரர்க்குச் சில காலங்களில் ஓர் உள் நாட்டுத் தலைநகராக இருந்து வந்தது பெறப்படும். இந்தக் கரூர் சோழர்க்கும் சேரர்க்குமிடையே அடிக்கடி கைம்மாறிவந்த தென்று ஆசிரியர் வின்செண்ட் சிமித் கூறுவதும் பொருத்தமேயாகும்.

கடைச் சங்ககாலமும் அதற்கு முற்பட்டகாலமும் தமிழ் மக்கள் கடல் வழியாக வாணிபத்தின் பொருட்டு வெளி நாட்டாருடன் தொடர்பு கொண்டிருந்த காலங்கள். கொற்கையின் முத்து, சங்குகளைப் போல வெளி நாட்டாரால் விரும்பப் பட்டவை சேரநாட்டுக் கடற்கரையிலிருந்த தொண்டி, முசிறி முதலிய துறைமுகங்கள் சிறந்த வணிக நிலையங்களாக விளங்கின. இக்கடல் வாணிபத்துக்கு இடர் விளைத்த கடற் கொள்ளைக் கூட்டத்தாராகிய பகைவரையே கடலில் துரத்திச் சென்று வென்றொழித்தான் சேரன் செங்குட்டுவன். வாணிபத்தால் வளம் பெருக்கிய காலத்திலே சேரமன்னரின் முதன்மைத் தலைநகர் கடற்கரையை யடுத்தே இருந்திருத்தல் வேண்டும். வாணிபத்தின் விளைவாகத் தன் காலத்திலே காவிரிப் பூம்பட்டினம் பெருகியதையும், உறையூர் சுருங்கியதையும் கண்ட கரிகால் சோழன் உறையூரிலே புதிய குடிகளைக் கொண்டு வந்து குடியேற்றி அதனைப் பெரிதாக்கினான் என்று பட்டினப் பாலை கூறுகிறது. சோழ பாண்டியர்கள் முறையே **புகாரையும் கொற்கையையும்** வைத்துக் கொண்டு வெளிநாட்டாருடன் வாணிபம் செய்து தம் வளத்தைப் பெருக்கும் காலத்தில், மேல் நாடுகளுடன் நேர் தொடர்புடைய சேரநாட்டு மன்னர் உறையூரை யடுத்த உள்நாட்டுக் கருவூரைத் தம் முதன்மையுடைய தலைநகராகக் கொண்டு, அங்கு ஒதுங்கி வாழ்ந்தனர் எனல் பொருந்தாது. தென் நாட்டின் வெளிநாட்டு வாணிபத்துக்குச் சிறந்து விளங்கியது மேலைக் கடற்கரையன்றோ?

சேரநாடு தமிழ்நாடு சோழ நாட்டாரும் பாண்டி நாட்டாருமாகிய தமிழ் மக்கள் இன்றைக்கும் தமிழ் மக்களாகவே இருக்கிறார்கள். இனியும் வரும் வரும் காலமெல்லாம் தமிழே அவர்கள் தாய் மொழியாக இருக்கும். ஆனால், சேர நாட்டுத் தமிழர் பன்னூறு ஆண்டுகளின் முன்னரே மலையாளிகளாகி விட்டனர். தமிழ் திரிந்து ஆரியத்தோடு கலந்து அத்தமிழ் மக்களை இப்படி மலையாளிகளாக்கி விட்டது. இதற்கு மேற்குத் தொடர்ச்சி மலை காரணம என்பது வெளிப்படை. சேர நாட்டு மக்கள் மலைக்கு மேற்கே வாழ்ந்தார்கள். அவர்களுடைய ஊர்களும் நகர்களும் கடலையடுத்தே எழுந்தன. அவர்களுடைய ஆட்சித் தலைநகர்களும் மலைக்கு மேற்கேயே ஒதுங்கியிருந்தன. நாளடைவிலே பல்லவர் முதலிய வேற்றோர் சோழ பாண்டிய நாடுகளைத் தமவாக்கிக் கொண்ட பின், அவ்விரு நாடுகளின் தமிழர்க்கும் சேரநாட்டார்க்கும் தொடர்பு அற்றுப் போயிற்று. ஆதலின், சேரர் மலையாளிகளாக வந்து விட்டனர். தமிழ் மொழி மலையாளமாகத் திரிந்ததற்கு ஒரு காரணம் சேரநாட்டார் மேற்குத் தொடர்ச்சி மலையால் ஏனைத் தமிழ்நாட்டு மக்களின்றும் பிரித்து வைக்கப் பட்டமையே,

சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சிக்குச் சென்ற கண்ணகி. பராசரன் ஆகிய இருவரது வழிகளும், வஞ்சிக் காண்டத்தின் கதைப் போக்கும் சேரமன்னரது தலைநகர் மேற்கு மலைத் தொடர்ச்சிக்கு மேற்கே கடற்கரையில் இருந்தது என்பதையே காட்டுகின்றன. உறையூரையடுத்து ஆமிராவதி நதிக்கரையிலிருந்த கரூரே சேரரது பழைய தலைநகர் என்பது பொருந்தாக் கூற்றாகும். ★

1. புறம். 13.

கட்டுரை ஆசிரியர் அனுமதியின்றி இதனை யாரும் பிரசுரித்து வெளியிடல் கூடாது.

நீங்கள் எந்தக் கட்சியில்?

நமது தாய்மொழியான தமிழ்மொழி பற்றி நம் நாட்டில் பலவிதமான கருத்துக்கள் வழங்குகின்றன. அந்தக் கருத்துக்கள் சிலவற்றைக் கீழே வகுத்துக் காட்டியிருக்கிறோம். இதில் நீங்கள் எவ்விதமான கருத்துடையவர்கள் என்று குறித்துக் கொள்ளுங்கள். கடைசியில் நீங்கள் எந்தக் கஞ்சியென்று தீர்மானிக்கலாம்.

அ	ஆ	இ
1, தமிழ்மொழி அகத்திய முனிவரால் உண்டாக்கப்பட்டது. அதற்கு முன் வடமொழியே உலக வழக்கில் இருந்து வந்தது.	1. தமிழ்மொழி மற்ற மொழிகளைப் போலவே தானாகத் தோன்றியது,	1. தமிழ்மொழி தான் உலகத்தின் முதன் மொழி, அதிலிருந்துதான் மற்ற எல்லா மொழிகளுமே பிறந்தன.
2. தமிழில் பிறமொழிச் சொற்கள் கலப்பதால், தமிழ் வளர்ச்சியுற வழியிருக்கிறது. இல்லாவிட்டால் தமிழ்மொழி அழிந்து போய் விடும்.	2. தேவையான இடங்களில் மட்டும் பிறமொழிச் சொற்களைக் கையாளுவது தவறில்லை. தனித்தமிழில் எழுத முடியும் போது பிறமொழிச்சொல் காப்பது வேண்டத்தகாதது,	2. எக்காரணத்தைக் கொண்டும் பிறமொழிச் சொற்களைத் தமிழில் கலக்கக் கூடாது. தமிழ் தனித்தியங்க வல்ல மொழி பிறமொழிக் கலப்பால் தமிழ் அழிந்து போய்விடும்
3. பேச்சு வழக்கில் உள்ளபடியே எழுத்து வழக்கும் இருக்க வேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும்புரியும். பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் வெவ்வேறாக இருந்தால் அவை இரண்டும் வெவ்வேறு மொழிகளாகவே ஆகிவிடும்.	3. பேச்சு வழக்கில் நாம் எவ்வாறு பேசினாலும், எழுத்து வழக்கில், செம்மையாக மொழியைக் கையாள வேண்டும். பேச்சுவழக்கு ஊருக்கு ஊர் வேறுபடும். எழுத்து வழக்குத் தான் நாடெங்கும் ஒரு தன்மையுடையதாக இருக்கும்.	3- எப்போதும் செம்மையான தமிழில் எழுத வேண்டும். எழுதுவது போலவே பேச்சுவழக்கிலும் தூய்மையான மொழியையே கையாள வேண்டும் எழுத்தும் பேச்சும் செந்தமிழாகவே இருக்க வேண்டும்.
4. ஆங்கிலம் ஓர் அந்நிய மொழி. அதை ஒழித்துவிட்டு நமக்கு அண்டை மொழியாக இருக்கும் இந்தியைஏற்றுக் கொள்வதில் தவறில்லை. இந்தியா முழுவதற்கும் ஒரு பொது மொழியிருந்தால் ஒற்றுமை வளரும்.	4. அந்நிய மொழி என்பதற்காக ஆங்கிலத்தைப் புறக்கணிக்க வேண்டியதில்லை. ஆங்கிலத்தில் உலகக் கலைகள் அனைத்தும் இருக்கின்றன. இந்தி புதுமொழி. அதில் வளமில்லை. வளமில்லாத புதியமொழியை ஏற்றுக் கொள்வதைவிட, எல்லா வகையிலும் மேம்பட்ட ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வதே நல்லது.	4. ஆங்கிலமோ இந்தியோ எதுவும் நமக்குத் தேவையில்லை, தமிழனுக்குத் தமிழ் ஒன்றே போதும். தமிழர்கள் மனம் வைத்தால் தமிழில் எல்லாக் கலைகளையும் கொண்டு வந்து விட முடியும்.
5. ஒவ்வொருவனும் மூன்றுஅல்லது நான்கு மொழிகளைக் கட்டாயமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அதனால், அவன் அறிவு விரிவடைய மார்க்கமிருக்கிறது.	5. தமிழ் மொழியோடு ஆங்கிலத்தையும் கட்டாயமாகக் கற்றுக் கொண்டால் போதும். பிறமொழிகளை விருப்பம் போல் கற்றுக் கொள்ளலாம்.	5. தமிழ்மொழி மட்டுமே கட்டாய பாடமாக இருக்கவேண்டும். பிறமொழி எதனையும் மக்கள் எல்லோரும் கற்கவேண்டும் என்பது தவறு. மொழி பெயர்ப்புத் துறையினர் மட்டும் தாம் விரும்பும் ஒரு மொழியினைக் கற்றுக் கொண்டால் போதும்.
6. கோயில்களில் புராதன காலந் தொட்டு இருந்துவரும் வழிபாட்டு முறையை மாற்றுவது கூடாது. வடமொழியில் அர்ச்சனை செய்வதை மாற்றுவது, மத உணர்ச்சியைப் புண்படுத்துவதாகும்.	6 ஒவ்வொருவனும் தனக்குத் தெரிந்த, தன்னால் புரிந்து கொள்ளக் கூடிய தாய் மொழியிலேயே இறை வழிபாடு செய்வது தவறாகாது.	6. செந்தமிழ் வழங்காத கோயில், இறைவனில்லாத ஆலயமாகும். செத்த வடமொழியில் அத்தனை வணங்குவோர் பித்தரும் உன்மத்தருமே என்பதில் ஐயமில்லை.

நீங்கள் அ கட்சியாக இருந்தால் தவறான கருத்துடையவர்கள் என்றே கூறுவோம். ஆ கட்சியாக இருந்தால், நடுநிலை மனப்பான்மையும் நியாயமான போக்கும் உடையவர்கள் என்போம். இ கட்சியாக இருந்தால் அளவுக்கு மீறிய மொழிப்பற்றும் உணர்ச்சி வேகமும் உடையவர்கள் என்று சொல்வோம். அதிலொன்றும் இதிலொன்றுமாக உங்கள் கருத்து இருந்தால் மொழிபற்றிய ஒரு திட்டமான கொள்கை உங்களுக்கு இன்னும் ஏற்படவில்லை என்று பொருள்.

பவானிதங்கம்

இரா. இளஞ்சேரன்

பொன்னிறத்து அன்ன விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்தது.

செம்மை திளைக்கும் முகத்தோடு பாலராம வர்மன் மஞ்சத்திலே சாய்ந்திருந்தான் அவன் படுக்கையிலே விழுந்த எட்டாவது இரவு அது. இன்னும் எத்தனை இரவுகளோ ?... வெள்ளைக்கார மருத்துவனின் நீலம் பாரித்த கண்களில் எதையோ எதிர்பார்க்கும் உணர்ச்சி பளிச்சிட்டது.

பவானி தங்கம் கட்டிலருகே அமர்ந்திருந்தாள். கோதிய கூந்தலை மேலே வட்டமாக முடித்திருந்த அவளது அஞ்சனம்தோய்ந்த பெரிய விழிகள் அங்குள்ள அமைதியிலே மிரட்சி பெற்றிருந்தன. அருகே தளவாயும், காரியக்காரர்களும் பணிவோடு நின்றார்கள். கோயிற் போற்றி ஒருவர் இருந்தாற் போல முணுமுணுத்தார்:

“பத்மனாபா! பத்மனாபா!”

கோட்டையின் மணி பத்து முறை ஒலித்தது.

மன்னன் ராமவர்மன் புரண்டு படுத்தான்.

வதைபடும் அந்த நிலையிலும் வாழ்விலே வந்துபோன சந்தத்தை எண்ணும் போது நெஞ்சம் சிலிர்க்கத்தான் செய்தது!

இருள் ஒளிந்த பட்டுக் குடையின் நிழலில் மன்னவனின் திருமேனி தங்கமாக தளதளத்தது. குடை பிடித்திருந்த மாத்தூர் பணிக்கனின் கண்கள் ராமவர்மனின் முகத்திலே படர, மன்னன் பணிக்கனை குறிப்போடு பார்க்க, நடுங்கும் குரலோடு பணிக்கன் சொன்னான்.

“பவானி தங்கம்!”

கலை நிறைமேனி எழில் காண்போரைக் கவர்ந்திழுக்க சிலைமாரன் வெல்ல விடுத்த சேனையென

வந்து சென்ருள். அப்போதுதான் மலர்ந்த பூப்போன்ற அழகி ஒருத்தி! 'பொன்னேடு பிறந்தவளோ? புது நிலவின் வார்ப்படமோ? என்று தென்னுடன் வியந்து நிற்க, அலைநுரை ஆடையுடுத்தி, புன் சிரிப்புப்போன்ற சரிகைவிளிம்பு அதிலே பளிச்சிட அவள்வந்து சென்ருள்.

வாத்தியங்களின் இன்னிசை மெல் லக்குறுகி, வற்றித் தேய்ந்தது.

''பவானி தங்கம்!'' ராமவர்மன் உதடுகள் அசைந்தன. குடைபிடித் திருந்த மாத்தூர் பணிக்கனின் நெற் றியில் கோடுகள் அலையோடி நெகிழ்ந் தன.

கோயிலின் சந்நிதானத்திலே, பெரிய மண்டபத்தில் சிற்பங்கள் பொலிவேறி உருப்பெற்றன- தஞ்சாவூர் சரவணப் பெருமாளோடு வந்த அறுபது சிற்பி களின் செதுக்கு உளிகள் ஒத்த ஒலி யோடு, தாளம் தவருத இசைபோல கற்களில் உருவத்தெளிவைக் குழைத் துச் சுழித்தன.

இருளின் கரியதிட்டுகள் அடர்ந்து படிந்தன. மரங்களிலும்,குறுகிச்சிறுத்த இடைவெளிகளிலும், கோபுரத்தின் சிற்ப இடுக்குகளிலும் இருள்வழிந்தது. பரவிய இருள் மேனியின் ரத்தவடுக்கு கள்போல் வளைந்துசென்ற கோயில் பிரகாரங்களில் தீபங்கள் ஒளிவிட்டன.

இருளோடு இருளாய் கலந்திருந்த வெண்மை வரவர ஒளியேறிப்பிரிந்து வந்தது. கொத்துச்சாவி இடையிலே சத்தமிட மாத்தூர் பணிக்கன் மெல்ல நடந்து வந்தான்.

நிலவறையின் வாசலில் அந்தநேரத் தில் வெளிச்சம் வழிந்தது. அசையும் ஒளியில் இருநிழல்கள் ஆடின. கவிந்த இருளில் பணிக்கன் தன்னை மறைத்துக் கொண்டான்.

எங்கோ சிறகடித்த ஒற்றை வௌவால் கத்தி ஓய்ந்தது.

''ஒன்று சேந்தன் நம்பூதிரி: இன் னென்று...'' பணிக்கன் குழம்பினுன். இருந்தாற்போல, தண்டையும் வளை யல்களும் ஒலித்தன. வாசலில்வந்த இரண்டு உருவங்களில் ஒன்றுபிரிந்து சென்றது. அவன்தான்; அவளேதான், பவானி தங்கம்!

அச்சமும் பதட்டமும் ஆட்டுவிக்க பணிக்கன் இருளோடு இருளாஞன், அழகே வடிவாய், சீதளமேனி பூரிக்க அவள் நடந்து சென்ருள். வியப்பும் திகைப்பும் அவனை ஒடுக்கின-

தூங்கிவழிந்த கோட்டை மாளிகை யின் காவலன், பணிக்கன் உள்ளே சென்றபோது விழித்துக்கொண்டான்.

இமை விளிம்பில் ஏதோஅசைய ராம வர்மன் திரும்பிப்பார்த்தான். அங்கே பணிக்கன் அடக்கத்தோடு நின்ருன்.

''என்ன ஆயிற்று பணிக்கரே'.

''எதிர் பாராதது நடந்து விட்டது, திருமேனி. எல்லாவற்றையும் சேந்தன் கெடுத்து விட்டான்!''

''என்ன!'' ஆவேசமும், ஆத்திர மும் மன்னனின் கேள்வியில் கனத்தன. பணிக்கனே நடுங்கிச்செத்தான்.

''பிரபு, எப்படிச் சொல்வதென்றே புரியவில்லை. தங்கம் நம்பூதிரியின் ஆசைநாயகி. நானே பார்த்தேன், நில வறையில்!''

ராமவர்மனின் அடர்ந்த புருவங்கள் நெரிந்தன. அது நல்லதற்கு அல்ல என்பதைப்பணிக்கனும் புரிந்துகொண் டான்! அன்று திருமேனி தன்னந்தனி யாக படுத்தபோது சப்ரமஞ்சத்திலே நிலவும் இல்லை; மலரும் இல்லை. நெருப் புத்தான் தகித்தது!

விடிவின் பொலிவில் கோபுரத்தின் பொற்கலசங்கள் பளபளத்தன.

நான்கு பிரகாரங்களிலும் பிராமணர் கூட்டம் நிரம்பி வழிந்தது. எதை எதையோ சல சலத்துக்கொண்டிருந்த அவர்கள் இலை போட்டபிறகு அமைதி யாகக்காத்திருந்தார்கள். புகை கவிந்த மடப்பள்ளியில் சிவந்தஉடலில் நெருப் பின் செம்மைபடர, நம்பூதிரி அடுப் பருகே நின்ருர்.

அந்த வேளையில் எதிர்பாராத கூக் குரல் எங்கும் எதிரொலித்தது. பெரிய உருளிகள் சரிந்துவிழும் பேரோசை; எரியும் நெருப்பில் நீர் வார்த்ததால் பிறந்த புகைப்படலம் மடப்பள்ளியை மறைத்தது.

கொப்பளித்தபுகை கலைந்த பிறகு தான் அந்தக்கோபுரம் எல்லோருக்கும் தெரிந்தது.

திளைக்கத்திளைக்கக்குமிழ்விட்டவெண் பொங்கல்வழிய சரிந்த பெரிய வார்ப் பில் சேந்தன் நம்பூதிரி கருகியமேனி யோடு பிணமாகக் கிடந்தார். விறகுத் தடிகள் அங்கே இறைந்துகிடந்தன.

கர்ப்பகிருகத்தின் பின்னுல், செதுக் கிய சிற்ப யாளியிலே விழிகளில் நீர் மல்க, பவானி தங்கம் சாய்ந்திருந்தாள். பணிக்கனின் இருண்ட நிழல் அவளைக் கவிந்தது.

அன்று இரவு ராமவர்மனின் அந்தப் புரத்திருவிளக்கை அவள் தூண்டி ஒளி யேற்றியபோது, எங்கோ தொலைவில் சேந்தன் நம்பூதிரியின் பிணம் சிதை யிலே எரிந்துகொண்டிருந்தது!

விளக்கொளியில் குவித்துப்போட் டிருந்த வெள்ளிப்பணங்களின் பள பளப்பு மாத்தூர் பணிக்கனின் முகத் திலே களிப்பாகத்திளைத்தது!

போற்றிகளும், நம்பூதிரிகளும் வழி பாட்டு நீர் தெளித்துக்கோயிலைபுனிதப் படுத்திஞர்கள் மடப்பள்ளியிலேநடந்து விட்ட சாவுக்கு பிராயச்சித்தமாக தம்பி ரான் ராமவர்மன் இரண்டு தங்கச்சிமிழ் களைக் காணிக்கையாக்கினுன்.

எல்லாம் பவானி தங்கத்திற்காக... பொன் வண்ணமும், புதுப்பார்வையும் கொண்ட ஒரு பெண்ணிற்காக!

நினைவுகள் நெகிழ்ந்து நெகிழ்ந்து தொய்ந்தன.

அன்னவிளக்கு சுடர்விட்டு பிரகாசித்தது. செம்மை திளைக் கும் முகத்தோடு பாலராமவர்மன் மஞ்சத்திலே சாய்ந்திருந்தான். அவன் படுக்கையிலே விழுந்த எட்டாவதுஇரவு அது. இன்னும் எத்தனை இரவுகளோ?

எண்ணங்கள் வண்டுகளாக ரீங்கார மிட்டன.

தாமரையின் நீண்ட இதழ்போன்ற விழிபடைத்த வேலுத்தம்பி ராமவர்ம னின் நினைவிலே வந்தான். வெள்ளையர் படை எங்கும்சூழ்ந்து அவனைவேட்டை யாடியபோது, இறுதியாகத்தம்பி திரு மேனியைச்சந்திக்க வந்தான்.

''தம்பிரானே!''அப்போதுகூடப்புலி யின் சீற்றம் அந்தக்குரலில் நிழலிடத் தான் செய்தது.

''தம்பி, நீயா? இந்தநேரத்திலா?'' எதிர் பாராத சந்திப்பில் ராமவர்மன் திகைத்துத்தான் போய்விட்டான்!

'கொச்சியின் பாலியத்தச்சன் கும் பினியாரிடம் பணிந்து விட்டான். ஆரல் வாய்மொழி ஆயுதக்கிடங்கை வெள்ளை

யர்கள் வளைத்துக் கொண்டார்கள்! பிரெஞ்சுகாரர்களையும் இப்போது நம்புவதில் பயனில்லை. இந்த நிலையில்...'' தம்பியின் நிதானமான பேச்சு மன்னனை நிலை தடுமாறச்செய்தது!

''சரணடைந்து விடு தம்பீ. அது நல்லது. இல்லை, என்னையும் கொன்றுவிடுவார்கள்!''

பிரபு பேடிபோலப்பணிந்துவாழ்வதைவிட பிறந்த நாட்டிற்காகச் செத்தான் என்ற புகழ் பெரிது. ஜெயந்தன் நம்பூதிரியின் சர்வாதிகாரம் தலைக்குளத்திலிருந்து என்னை இங்கே அழைத்து வந்தது. வெள்ளையரின் ஆதிக்கம் இப்போது என்னை விரட்டுகிறது. எனக்கு விடை கொடுங்கள், இறுதியாகத்தென்படும் ஒரேவழியில் நான் போகிறேன்.''

இடையிலே உடைவாள் அசைந்தாட நீண்ட படிக்கட்டுகளைத் தாண்டி அந்த நெடிய உருவம் நடந்து செல்வதைப்பார்த்துக்கொண்டிருந்தபோதே கண்ணீர் திரையிட்டது.

அப்போது ராமவர்மன் குழந்தை போல விம்மியழுதான்.

நங்கம்மா கோப்ப தம்பிரானின் நினைவில் வந்தாள். வலிய சர்வாதிகாரி சங்கரன் செண்பகராமனுக்கு அழகான தங்கைஒருத்தி இருப்பதாக மாத்தூர் பணிக்கன்கூடச்சொல்லவில்லை.

தம்பியின் பயங்கரமான தோல்வியை அவள் எப்டித்தாங்குவாள்? அரசியல் சுழலில் சிக்கித் தவித்த தம்பியின் இருண்ட உள்ளத்தில் ஆசையின் அகல் விளக்கு ஏந்திய ஒருத்தி வருவதென்றல்...சிவப்பேறிய அந்த விழிகளில் நங்கம்மாவின் உருவம் மட்டும் எப்படிப் பிரதிபலித்தது? தஞ்சைப் பெரிய கோயில் தாசி அபிராமியின் வெறியேற்றும் அழகுகூட வேலுத்தம்பியின் வைராக்கிய உள்ளத்தைக் கனிய வைக்காதபோது, சிட்டுப் போன்ற நங்கம்மா அவனை வீழ்த்தியது வேடிக்கைதான்!

ரெசிடெண்ட் மெக்காளேயை சந்தித்துவிட்டு வரும் வழியில் பறவூர் பகவதி கோயிலின் கற்கள் பாவப்பட்ட வெளிமுற்றத்திலே பரிவாரங்களோடு ராமவர்மன் இளைப்பாற அமர்ந்தான்.

கோயில் வழிபாட்டை முடித்துக்கொண்டு அந்த வழி சில பெண்கள் வந்தார்கள். கோதி முடித்த கூந்தலில் முல்லைச்சரம் அணிந்திருந்த ஒருத்தியை நீலன் பத்மனுபன் தம்பிரானிடம் காட்டியபோதுதான் ராமவர்மன் அவளைப் பார்த்தான்.

கார்நிறக் கூந்தலும், காட்டாறு பாய்தல்போன்ற பருவ வாளிப்பும், கன்னங்கரிய இமைகள் தழுவிய நீண்ட கண்களும்...திகட்டாத அழகில் தம்பி மயங்கியதில் வியப்பே இல்லை!

நங்கம்மாவிற்கு பவானி தங்கத்தைப் போல பொன்னிற மேனியல்ல. சிறிதே இருண்ட உடலிலும் அழகு தவமிருந்தது.

நெடுஞ்சாலையின் கோடியில் வேலுத்தம்பி நங்கம்மாவிற்குப்பரிசாக வழங்கிய பசுங்கொடிகள் படர்ந்த வீட்டை ராமவர்மன் இனந்தெரியாத உணர்ச்சியோடு பார்த்தான்.

இருந்தாற்போல, ரத்தினங்கள் பதித்த தம்பியின்உடைவாள்,விழிகளைக் கூசச் செய்யும் அதன் பளபளப்பான விளிம்போடு தம்பிரானின் உள்ளத்தில் ஒளிபெற்றது. சாவதற்கு முன்னுலே அதனைக் கோயிற் தம்பிரானிடம் கொடுத்துவிட்டு தம்பி மண்ணடி சென்ருன். வீரன் விட்டுச் சென்ற ஒரே ஒரு நினைவுச் சின்னம்...! விசாரித்தபோது கோயில்தம்பிரான் இல்லை என்று மறுத்துவிட்டாரே! சேதி தெரிந்தால் வெள்ளையர் பகை சூழும் ஏன்ற அச்சம் அவருக்கு. தம்பி ஒருவனைத் தவிர இந்த நாட்டில் எல்லோரும் கோழைகளாகிவிட்டார்கள்!

ராமவர்மன் நினைத்தான்.

இதயத்தின் துடிப்புக் குறையும்போது, கண்களில் ஒளிவற்றி இமை இடுக்குகளில் இருள் விழும்போது, உணர்ச்சிகள் பல கிளைகளாகத் திரியும்போது, ராஜா கேசவதாசன் மட்டும் அருகே இருந்தால் எத்தனை இதமாயிருக்கும்.

வாளால் பகைப்புலத்தாரை வகுந்து', வஞ்சியின் புகழ் வளர்த்த அந்த பெருவீரனை, முதிர்ந்த அரசியல் ஞானியை ஜெயந்தன் நப்பூதிரி எத்தனை எளிதாக விஷமிட்டுக்கொன்றுவிட்டான்! பிள்ளை விளையாட்டுகளில் நாட்டைச் சீரழித்துவிட வேண்டாம்' என்று கண்ணீர் மல்கச்சொல்லிவிட்டுப் போன கேசவதாசனை மறுநாளைய விடிவு பிணமாகத்தானே தரிசித்தது?

வாழ்க்கையை அற்ப ஆசைகளுக்காக ஆடி முடித்தாகிவிட்டது. சாகும்போது தெரியும் அந்த உண்மையும் கசப்பும்...சரங்களாகப்பின்னி நின்ற நினைவுகள் ஒரே கோட்டில் ஒன்ருக ஒடுங்கின.

அஞ்சனம் படிந்த பவானி தங்கத்தின் அகன்ற விழிகள் மங்கிய ஒளியில் தெரிந்தன. அதுமட்டுமா?

கறுப்பில் அழகியான ஆட்டக்காரி அபிராமியின் பாதச் சிலம்புகள் கிண்கிணி நாதமாக இழைந்தன.

முடிந்த கூந்தலில் முல்லைச் சரம் சூடிய நங்கம்மாவின் மோகன வடிவம் விட்டுவிட்டு ஒளி வீசும் மின்னலாகப் பளிச்சிட்டது.

மன்னன் நினைவுகளோடு போராடிக் கொண்டிருக்க, சூழ நின்ற எல்லோரும் காத்திருந்தார்கள். எதற்காக?

போர்த்துக்கீசியர் தந்த பழைய பட்டாடையை மடித்து, மங்கிய கடல் முத்துக்களை விளிம்பிலே கோர்த்து, வெண்ணிற இறகுகள் செருகப்பட்ட அழுக்குப் படிந்த அரச மகுடத்திற்காக வருங்கால மன்னன் காத்திருந்தான்.

வெள்ளைக்கார ரெசிடெண்ட் 'அதட்டிலுல் அடங்கிப் போகும் தம்பிரான் அடுத்து வர வேண்டுமே!' என்ற நினைப்பில் காத்திருந்தான்.

தேவன் பத்மனுபன். நஞ்சப்பையன் சங்கரநாராயண பிள்ளை ஆகிய காரியக்காரர்கள் 'இப்போதாவது தொல்லைவிட்டதே!' என்று ஆறுதல் பெறக்காத்திருந்தார்கள்.

திடீரென்று பவானி தங்கம் விம்மியழுவது கேட்டது. அயர்ந்து சாய்ந்திருந்த வெள்ளைக்கார மருத்துவன் பரபரப்போடு தம்பிரானைத் தொட்டுப் பார்த்தான். சடலம் குளிர்ந்துவிட்டது.

அன்னவிளக்கு சுடர்விட்டு பிரகாசித்தது. பசுமை பாய்ந்த முகத்தோடு மன்னனின் உடல் மஞ்சத்திலே துவண்டு கிடந்தது.

பளிங்குக்கற்கள் பாவப்பட்ட அந்தத் தாழ்ந்த அறையிலே புழுக்கம் அரித்தது. வெள்ளைக்கார மருத்துவன் எரிச்சலோடு உதட்டைப் பிதுக்கியபடி வெளியே சென்ருன்.

அந்த நள்ளிரவிலும் கன்னங்கருத்த காற்றுடி மரங்கள் கூந்தல் அவிழ்ந்த பெண்களைப்போல சாய்ந்தாடி ஓலமிட்டன. ★

பங்களாவிற்குப் பக்கத்திலிருந்த மணிக் கூண்டிலே பனிரெண்டு மணி அடித்து ஓய்ந்தது. தனது அறையிலே சாய்ந்து படித்துக்கொண்டிருந்த டாக்டர் திருமூர்த்தி பெருமூச்சோடு, பத்திரிகையின் படித்து முடித்த பக்கத்தைப் புரட்டினர். அவரது கவனம் வேறு வேறு செய்தித் தலைப்புகளிலே பதியவில்லை. படித்து முடித்திருந்த திடுக்கிடும் செய்தியைச் சுற்றியே அவரது நினைவு வட்டமிட்டுக்கொண் டிருந்தது.

'நேற்றுக் கைது செய்யப்பட்டு 'வார்டு'க்கு வந்து சேர்ந்த கோபிநாதன் இவ்வளவு பரபரப்புக்கு ஆளானவனா? அவன் செய்து முடித்ததோ ஒரே ஒரு கொலை! அதைச் செய்வதற்காக... அவன் அலைந்து திரிந்ததோ முப்பது ஆண்டுகள். முப்பது ஆண்டுகளாக அவன் வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்திருக்கிறன். அவனது நினைவைவிட்டு அகற்ற முடியாத படுபாதகத்தைச் செய்தவரோ, முன்பு ஊரிலே செல்வாக்குப் பெற்ற டாக்டராக விருந்து இப்போது முழுக்க முழுக்க ஓய்வு பெற்றுக் கொண்டவர். நினைவு தடுமாறிப்போய்த் தள்ளாடிக்கொண்டிருந்த இந்த நேரம் பார்த்துத் தான் கோபிநாதன் வஞ்சம் தீர்த்துக்கொண்டான். அந்த டாக்டரென்ன அவ்வளவு இரும்பு நெஞ்சு

பகையும் உறவும்

படைத்தவரா! கடமைக்கு இதயத்திலே இடமளிக்க வேண்டிய டாக்டர் கருணையற்றவராகவா நடந்து கொண்டார்'.

...டாக்டர் திருமூர்த்தியின் பெருமூச்சுக்குக் காரணமாகயிருந்த அந்தத் திடுக்கிடும் செய்தியை மீண்டும் படிக்கத் துவங்கினர்.

முப்பதாண்டுப் பகை— முடிந்ததோ படுகொலையில்!

அக்டோபர், 10—

நேற்று மாலை டாக்டர் பாஸ்கரின் மேல் மாடியிலே டுமீல், டுமீல் என்று துப்பாக்கி வெடிக்கும் ஓசை கேட்டு, கீழிருந்தவர்கள் மாடிக்கு ஓடோடிச்சென்று, பார்த்தனர். மார்பிலே கத்தி பாய்ந்து இரத்த வெள்ளத்

மா. தங்கவேலர்.

திலே துடித்துக்கோண்டிருந்தார் பாஸ்கர். அவர் மீது கத்திபாய்ச்சிய கோபிநாதன் இடதுகாலிலேகுண்டடி பட்டுச் சாய்ந்து கிடந்தான். அந்த கோரத்தைக் கண்ட டாக்டர் பாஸ்கரின் குமாரி தேவிகா, உடனே போலீசுக்கு 'போன்' செய்தாள். போலீசார் பறந்து வந்தனர் டாக்டரின் மாளிகையை நோக்கி. அவர்கள் மாடியிலே நுழைந்தபோது, பாஸ்கர் உயிர் பிரிந்து தலைசாய்ந்து கிடந்தார். அவரது கைவிரல்களுக்கு கிடையே கைத்துப்பாக்கி சிக்கிக் கிடந்தது. தப்பி ஓட முடியாத கோபிநாதனை கைதுசெய்து, ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்.

ஸ்டேஷனிலே இன்ஸ்பெக்டர்விசாரித்தபோதுதான் தனதுபயங்கர ரகசியத்தை-மூப்பதாண்டுப்பகையை -வெளியிட்டான் கோபிநாதன். மூப்பது ஆண்டு களுக்கு முன்பு, கோபிநாதன் வசித்துவந்த கிராமத்துக்குடாக்டராக மாற்றலாகி வந்திருக்கிறார் பாஸ்கர்.

கோபிநாதனுக்கு அப்போது மணமாகி இரண்டு வருடங்கள் ஓடி யிருந்தன. சின்னஞ்சிறு கைக்குழந்தையோடு அவரது மனைவிவாழ்க்கைப் போரிலே வெற்றகாணத் துடித்துக்கொண்டிருந்தாள். அவளது போராட்ட வாழ்க்கையிலே ஒருநாள் காய்ச்சலென்றுசொல்லிப் படுத்தவள், நாளடைவிலே படுக்கையைவிட்டு எழுந்து நடமாட முடியாத அளவுக்கு ஓய்ந்துபோய் விட்டாள். அழுது கொண்டிருக்கும்



குழந்தையோடு துடி துடித்துக்கொண்டிருக்கும் மனைவியைக் காணச் சகியாத கோபிநாதன் தேம்பித் திரிந்தான். அவனது பரிதாபத்தைக் கண்டு. அவளுக்கு விஷம்போல் ஏறிக்கொண்டிருந்த கடுமையான காய்ச்சல் இறங்கி விடவில்லை. வேதனை அதிகமாக அதிகமாகப் பிதற்றத் துவங்கினாள். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள், டாக்டரை அழைத்து வந்து காட்டும்படி யோசனை கூறினர். அவர்கள் கூறிய அந்த யோசனையை அவன் ஆயிரம் முறை நினைத்துப் பார்த்திருக்கிறானென்றாலும், டாக்டரை அழைத்து வந்து காட்டப் பணம் வேண்டுமே என்று பயந்தே அமைதியாக இருந்திருக்கிறான. வாழ்க்

கையின் கடைசி நேரத்துக்காகப் போராடிக்கொண் டிருந்தாள் அவனது மனைவி. 'பணப்பயம்' அவனுக்குத் தோன்றவில்லை, முதலில் டாக்டரை எப்படியாவது அழைத்து வந்து காட்டிவிட்டால் பிறகு...அவரது காலில் விழுந்தாவது கெஞ்சிக் கூத்தாடிச் சமாளித்துக் கொள்ளலாமென்ற முடிவுக்கு வந்து இருளிலே வெளியே பாய்ந்தான் கோபிநாதன். வீட்டை விட்டுப் புறப்பட்டபோது இடியையும், மின்னலையும் பக்கத் துணையாக அழைத்துக்கொண்டு பெய்த சிறு மழை, கோபிநாதன் டாக்டர் வீட்டை அடைந்தபோது பெருமழையாகப் பிடித்துக்கொண்டு சக்கைப்போடு போடத் துவங்கியது. அந்த நள்ளிரவிலே கோபிநாதன், டாக்டர் பாஸ்கரின் வீட்டுக் கதவைத் தட்டினான். அந்தக் கதவோடு அரை மணி நேரம் போராட்டம் நடத்திய பிறகு, கதவை லேசாகத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தார் பாஸ்கர். வெளியே கோபிநாதன் ஈரம் சொட்டச் சொட்ட நின்று நடுங்கிக் கொண்டிருந்தான். யாரது, என்ன வேண்டுமென்று டாக்டர் கேட்டார். கோபிநாதன் நிலைமையை விளக்கினான். 'இப்போது வரமுடியாது, காலையில் வந்து பார்க்கிறேன்' என்று பிடிவாதம் காட்டினார் டாக்டர். காலையில் வந்தால் அவளது பிணத்தைத் தான் பார்க்க முடியுமென்றும், இப்போது அவளது உயிர் அவரது கையில்தானிருக்கிறதென்றும் பலபட எடுத்துச் சொல்லி டாக்டரின் கால்களை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டான் கோபிநாதன். எப்படியாவது அவனிடமிருந்து தப்பித்தால் போதுமென்ற நிலைக்கு வந்தார் டாக்டர். 'சரி, வண்டி கொண்டு வந்திருக்கிறாயா' என்று கேட்டார். 'இதோ—ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே மழையிலே பாய்ந்து இருளிலே மறைந்தான் கோபிநாதன். அந்தக் கிராமத்திலிருந்ததோ ஒரே குதிரை வண்டிதான். அந்த வண்டிக்கார சாய்பு இமாம் இருந்ததோ ஊர்க் கோடியிலே. அவனைத் தேடி மழையோடு ஓடினான் இமாமின் குடிசையை நெருங்கியதும் பலமாகக் கத்திப் பார்த்தான் கோபிநாதன். பதில் வரவில்லை. நிச்சயமாக இமாம் வெளியே வரமாட்டான் என்பதைத் தெரிந்ததும், அவனது பதிலுக்காகக் காத்திருக்கவில்லை கோபிநாதன். கொட்டடியி லிருந்த குதிரையை இழுத்துவந்து பலவந்தமாக வண்டியிலே பூட்டிக்கொண்டு, மேலே ஏறி அமர்ந்து வண்டியை வேகமாகத் தட்டினான். மேட்டையும், பள்ளத்தையும் தாண்டிக்கொண்டு குதிரை விரைந்தது. எங்கெங்கோ சுற்றிக்கொண்டு ஒரு வழியாக டாக்டரின் வீட்டு முன்னே வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தினான் கோபிநாதன். அப்போது...

கதவைத் திறந்துகொண்டு தோல் பையும், கையுமாக டாக்டர் வெளியே வந்தார் வண்டியைவிட்டு கீழே குதித்தான் கோபிநாதன். ஆசையோடு அவரது வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். டாக்டரோ, விரைந்து நடந்து வீட்டின் ஓரத்திலே பாதையை மறைத்துக் கொண்டு நின்ற பளபளப்பான காரிலே போய் அமர்ந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து வேறு யாரோ முன் கதவைத் திறந்து அமர்ந்துகொண்டிருந்தார். 'டாக்டர்! என்று அலறிக் கொண்டே குதிரையை இழுத்துக் கொண்டு ஓடிவந்து நின்றான், கோபிநாதன் காருக்குப் பின்னே.

'பெரிய பண்ணைக்கு நெஞ்சு வலியாம். இதோ போய்த் திரும்பி விடுகிறேன்' என்று டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கார் பயங்கர ஓலத்தோடு கிளம்பியது 'டாக்டர் பெரிய பண்ணையின் வீட்டுக்கா போகிறீர்கள். போகும் வழியில்தான் டாக்டர் என் வீடிருக்கிறது. நானும் வருகிறேன் டாக்டர், டாக்டர்!...' என்று கதறினான் கோபிநாதன்.

"சீ! அவலட்சணம் போ அந்தப் பக்கம்" என்று சீறிக்கொண்டே கதவை நன்றாக இழுத்து மூடினார் டாக்டர். தாழ்த்தியிருந்த அவனது தலையை நிமிர்த்தியபோது, கடுவேகத்திலே போய்க்கொண் டிருந்த கார் அவனது கண்களிலிருந்து மறைந்து கொண்டிருந்தது. பெரு மழையைப் போல அவனது கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது. டாக்டரை மறந்தான்; அவன் இழுத்துவந்த வண்டியை நினைத்துப் பார்க்கவில்லை; வழியெல்லாம் அடம் பிடித்த அந்தக் குதிரையைக்கூடத் திரும்பிப் பார்க்கக் கூசினான். அவனது நினைவெல்லாம் மனைவியின் குடிசையை நோக்கித் திரும்பியது. ஈரத்திலே நடந்து நடந்து கால்களெல்லாம் கனத்துக் கிடந்தன கோபிநாதனுக்கு. இதயமோ அதைவிடக் கனத்துப்போய் அழுத்திக்கொண் டிருந்தது. மெதுவாக நடந்து நடந்து குடிசையை நோக்கி வந்துகொண் டிருந்தான்.

குடிசை தெரிந்தது. அந்தக் கொட்டும் மழையிலும் யாரோ சிலர் குடிசையின் முன்னே அலைந்துகொண் டிருந்தனர். பதைபதைக்கும் நெஞ்சோடு கால்களை எட்டிப் போட்டான் கோபிநாதன். குடிசையை நெருங்கியபோது, அவனது கைக்குழந்தை அலறிக்கொண் டிருந்தது. அந்தக் குழந்தைக்குத் துணையாக யாரோ சிலர் அழுது, தங்களது வருத்தத்தைத் தெரிவித்து இரவின் அமைதியை அழித்துக்கொண் டிருந்தார்கள். கோபிநாதனுக்கு நடந்த சம்பவத்தைக் கூற இரண்டொருவர் முன்னுக்கு வந்தனர் முட்டி மோதிக் கொண்டு உள்ளே நுழைந்த கோபிநாதன், இந்த உலகை மறந்து கண்களை மூடிக்கொண்ட மனைவியைப் பார்த்து மனம் இடிந்து நின்றான். ஓங்கி அழுவதற்குக்கூட அவனிடம் சக்தியில்லை. குழந்தையைத் தூக்கிக் கொண்டு சிறு திண்ணையிலே வந்தமர்ந்தான்.

அப்போது...பண்ணையார் வீட்டிலிருந்து டாக்டரின் கார் திரும்பி வந்து அவனது குடிசையைத் தாண்டிக்கொண் டிருந்தது. குடிசையிலிருந்து—கிளம்பி வந்த ஓலத்தைக் காணச் சகியாத டாக்டர் வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவர் திரும்பிய பக்கம்...குழந்தையை மார்போடு அணைத்தபடி கோபிநாதன் தலைசாய்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும் பரபரப்போடு முன்னே பார்த்தார் டாக்டர். கார் பறந்த வேகத்திலே கோபிநாதனை மறந்து விட்டார் டாக்டர். ஆனால், கோபிநாதன் மறக்கவில்லை அப்போது அவனது நெஞ்சிலே பற்றிய தீ, இப்போது முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தான் அணைந்து தீய்ந்து போயிருக்கிறது.

மனைவி போனபிறகு, குழந்தையை யாரிடமோ ஒப்படைத்துவிட்டு டாக்டரைப் பழிவாங்குவதற்கே அலைந்து திரிந்திருக்கிறான் கோபிநாதன் எங்கெங்கோ மாற்றலாகிச் சென்றிருக்கிறார் டாக்டர். கோபிநாதனும் விடாமல் அவரைத் தொடர்ந்தே சென்றிருக்கிறான்.

திருச்சியிலே டாக்சி டிரைவராக இருந்தபோது, ஒருமுறை டாக்டரை வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக தனது டாக்ஸியிலே அவசரமான கேஸென்று கூறி அவரை அழைத்துச் சென்றான். காடுமலைகளைக் கடந்து கார் பறந்தது டாக்டர் எவ்வளவோ பயந்துபோய்க் கேட்ட

போதுகூட எங்கே போகிருேமென்று கூறவில்லை கோபிநாதன். காரின் கதவைத் திறந்துகொண்டு வெளியே குதித்துவிடக் கூட முயற்சித்தார் டாக்டர். கோபிநாதனே கடுவேகத்தோடு காரைச் செலுத்தி அவரது முயற்சியை முறியடித்தான். ஒரு குக்கிராமத்தருகே கார் ஓடியபோது, கிராமத்தார் சிலர் பாதையை மறைத்து நின்று காரை நிறுத்தும்படி கூறினர். சிரமப்பட்டு நிறுத்தினுன் கோபிநாதன். டாக்டருக்கு உயிர் வந்தது. பாதையை மறைத்துநின்றவர்கள், காரைக் கொஞ்சம் கொடுத்து உதவும்படியும், பூர்ண கர்ப்பிணி யொருத்தியை மாடு முட்டித் தள்ளி மூர்ச்சையாகிக் கிடக்கிருளென்றும், அதற்காகப் பக்கத்து ஊருக்குச் சென்று டாக்டரை அழைத்து வர வேண்டுமென்றும் வேண்டினுர்கள். "இதோ இங்கிருப்பவரும் டாக்டர்தான்" என்று கூறி டாக்டரை வெளியேபோக அனுமதித்தான் கோபிநாதன். டாக்டர் திரும்பி வரும் வரை காத்திருக்கவில்லை கோபிநாதன். டாக்டரின் உயிரை வாங்கப் பார்த்தான். அவரோ ஓர் உயிரைக் காப்பாற்றப் போய் விட்டார். 'தப்பி விட்டானே' என்று மனத்தில் புலம்பிக்கொண்டே காரைக் கிளப்பிப் போய் விட்டான் கோபிநாதன்.

இதுபோல எத்தனையோ சந்தர்ப்பங்கள் வந்து வந்து போயின. ஆனுல், டாக்டரின் உயிரைத்தான் பலிகொள்ள முடியவில்லை கோபிநாதனால் ஒவ்வொரு முறையும் தப்பிக்கொண்டிருந்தார். முப்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. மேல நாடுகளுக்குக்கூட டாக்டர் போய்த் திரும்பி, ஓய்வு எடுத்துக் கொண்டார். தொழிலிலே அவரது இடத்தைப் பூர்த்திசெய்ய குமாரி தேவகி தயாராகி வந்தாள். இந்த நேரத்தில்தான் கடைசி முறையாக...

டாக்டரின் மாடியிலே புகுந்தான் கோபிநாதன் கடாரியோடு டாக்டரின் முன்னே பயங்கரமாக நின்றுகொண்டு பழைய நினைவை எடுத்துச் சொன்னுன். முப்பது ஆண்டுகளுக்குமுன்னே நடந்த சம்பவம் கனவுபோல அவரது நினைவுக்குத் திரும்பியது இத்தனை நாட்களாகத் தனக்குத் தொலலை தந்துவருபவன் அந்தக் கோபிநாதன்தானு? டாக்டரால் சத்தமிட முடியவில்லை. எதிரே கூர்மையான கத்தியை நீட்டிப் பிடித்திருந்தான். பதுங்கிப் பதுங்கி பின்னே சென்று திறந்து கிடந்த டிராயரிலிருந்த துப்பாக்கியை எடுத்து, கோபிநாத்தைச் சுட்டார் டாக்டர். டாக்டரின் குறி தப்பி அவனது இடது காலிலே குண்டு பட்டது. ஆனுல், கோபிநாத்தின் குறி தப்பவில்லை. டாக்டர் தீர்த்துக் கட்டப்பட்டார். தனது முப்பதாண்டுப் பகையைத் தீர்த்துக்கொண்டதற்காகப் பெருமைப் படுகிருன் கோபிநாதன். போலீஸ் லாக்கப்பிலே கவலையற்று இருந்தபடியே தனது கதையைக் கூறினுன். நீதிபதியின் அனுமதிபெற்று போலீசார் அரசினர் மருத்துவ விடுதிக்கு கோபிநாதனை அனுப்பி வைத்தனர். கோபிநாதன் இபபோது போலீஸ் பாதுகாவலோடு மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்று வருகிருன். போலீசார் மேற்கொண்டு புலன் விசாரித்து வருகின்றனர்.

பத்திரிகைச்செய்தி முடிந்தது. டாக்டர் திருமூர்த்திக்குத்தான் நினைவு திரும்பாமலே யிருந்தது. சற்று நேரத்துக்கு முன்பு மருத்துவ விடுதியிலிருந்து திரும்போதுகூட அந்தக் கொலைகாரக் கோபிநாதனைப் பார்த்துவிட்டுத்தான் வந்திருந்தார் திருமூர்த்தி எந்தக் கவலையுமின்றி அமைதியாகவிருந்தான். அந்தநீண்ட அமைதியேசுற்றியிருந்தவர்களுக்குப் பயங்கரத்தைத் தந்துகொண்டிருந்தது. டாக்டர் திருமூர்த்தி சோதித்து, மருந்து கட்டியபோதெல்லாம் அலட்சியமாகச் சிரித்தான் மருந்து கட்டிவிட்டு அவர் புறப்பட்டபோது, "ஒரு டாக்டரின் உயிரை வாங்கிவிட்டேன். இன்னொரு டாக்டரோ என் உயிரைக் காப்பாற்றப் பாடுபடுகிருர்" என்று சொல்லிக்கொண்டு மடமடவென்று சிரித்து முடித்தான்.

அவனை நினைத்தபோது, பரிதாபமாகத் தெரிந்தது திருமூர்த்திக்கு டாக்டர் பாஸ்கரை நினைத்தபோதோ, அந்தப் பரிதாபம் பல மடங்கு அதிகமாகியது அவரது உள்ளத்திலே. நீண்ட நேர நினைப்புக்குச் சாவுமணி அடிப்பதுபோல, 'போன்' ஒலித்துக்கொண்டிருந்தது. பத்திரிகையை மடித்து மேசையிலே போட்டுவிட்டு, 'போன்' எடுத்துப் பேசினுர் டாக்டர் திருமூர்த்தி.

"யாரது?"

"தேவிகா பேசுகிறேன்."

"ஓ! தேவிகாவா......தேவிகா இன்னும் நீ தூங்கவில்லையா! சாயந்திரம் எவ்வளவு கூறிவந்தேன் இன்னும் அழுகையை விடவில்லையா போ, தேவிகா போய்த் தூங்கு. எத்தனை நாளைக்கு விழித்திருந்து ஒன்றும் சாப்பிடாமல் இப்படி உடலைக் கெடுத்துக்கொள்ளப் போகிருய்!"

"தூக்கம் வரவில்லை டாக்டர்."

"மருந்தனுப்பட்டுமா? உன்னிடமில்லாத மருந்தையா நான் தேடி அனுப்பப்போகிறேன்"... வேடிக்கையாகப் பேசிவிட்டதாக டாக்டர் சிரித்தார் அந்த வேதனையான வேளையிலும் தேவகி மெதுவாகச் சிரித்துக்கொண்டே, "டாக்டர்! கவனப்பிசகால் அப்பாவைத்தான் தப்ப முடியாமல் செய்துவிட்டேன். இனி இருக்கும் உங்களைப் பாதுகாக்காவிட்டால் என் நிலை என்னுவது? அந்தக் கொலைகாரப்பாவி கோபிநாதன், உங்களிடந்தானே நேரடியான சிகிச்சைக்கு அனுப்பப்பட்டிருக்கிருன். நமது நட்பைத் தெரிந்து உங்களையும் ஏதாவது... அப்பப்பா நினைக்கவே பயமாயிருக்கிறது டாக்டர்."

"சுத்த அசடாக இருக்கிருயே, கோபிநாதனுக்கும் எனக்கும் என்ன பகையா? அதெல்லாம் ஒன்றும் தப்பாக நடக்காது. நீ பயப்படாமல் தூங்கு. காலையில் வந்து பார்க்கிறேன்."

தேவிகாவின் சிறுபிள்ளைத்தனத்தை நினைத்துச் சிரித்துக் கொண்டே, 'போனை'க் கீழே வைத்தார் டாக்டர் திருமூர்த்தி. கதவு மடமடவென்று தட்டப்படும் ஓசை கேட்டது எழுந்து கதவைத் திறந்தார். மடாரென உள்ளே யாரோ புகுந்துகொண்டு, டாக்டரையும் முன்னே தள்ளிக் கதவைச் சாத்திக்கொண்டிருந்தான்

"யாரது?.. கோபிநாதனு!" அசைவற்று நின்ருர் டாக்டர். கைகளிலே பூட்டப்பட்ட விலங்கோடு பயங்கரமாக, ஆனுல் மெதுவாக அறையிலே நடந்து கொண்டிருந்தான் கோபிநாதன் திகைப்பு அடங்காதவராய் டாக்டர். "கோபி! இங்கே ஏன் வந்தாய்?" என்று சற்று அதிகாரக் குரலிலேயே கேட்டார். கோபிநாதன் அலட்சியமாகச் சிரித்துக்கொண்டே, "என்ன டாக்டர் பகாத்திருடனுய் இருப்பீர்கள் போலிருக்கிறதே. பூட்டப்பட்ட விலங்கோடு இந்தக் கோபிநாதன் எதற்காகப் புறப்படுவான், இப்படியே பேசி நேரத்தைக் கடத்தி பிடித்துக் கொடுக்க நினைக்காதீர்கள் மீண்டும். போலீஸிடம் ஒரு வேலை முடிந்துவிட்டது இன்னு

மொன்று பாக்கியிருக்கிறது. அதற்காகத்தான் புறப்பட்டிருக்கிறேன்" என்று பேசினான்.

"மீண்டும் ஒரு கொலை செய்யப் புறப்பட்டிருக்கிறாயா?" ... டாக்டர் பதட்டத்தோடு கேட்டார்.

"இப்போது செய்யப் புறப்பட்டிருப்பது கொலைப்பணியல்ல, அறப்பணி...எனது கடமையைச் செய்யப் புறப்பட்டிருக்கிறேன். போகவிடுங்கள் டாக்டர்! என்னைத் தப்பிப் போகவிடுங்கள்" கொடூரமாகக் கதறினான் கோபிநாதன்.

பூட்ஸுக் கால்களின் ஓசை கேட்டது, அதைத் தொடர்ந்தே கதவு தட்டப்பட்டது 'போலீஸ்' என்று பயங்கரமாகக் கத்திக் கொண்டே மாடிக்குத் தாவி, அங்கிருந்த அறைக்குள்ளே நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டான் கோபிநாதன். போகும்போது அவன் பார்த்த பார்வையை அள்ளி வீச முடிகிறதே! டாக்டர் செய்வதறியாது அசையாமல் நின்றுகொண்டிருந்தார்.

மாடிக்கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே அறை முழுவதும் மெதுவாக நடந்த கோபிநாதனின் பார்வையிலே, சுவரிலிருந்த பெரிய படம் தெரிந்தது. அந்தப் படம்...ஆமாம், அது குருமூர்த்தி? கோபிநாதனின் நினைவு முப்பது ஆண்டுகளுக்கு முன்னே ஓடியது. தனது பால்மணம் மாறாத செல்வனை இதே குருமூர்த்தியிடந்தான் அநாதையாக விட்டுச் சென்றான் கோபிநாதன். கொட்டும் மழையிலே தாய் இறந்தபோது ஆதரவில்லாத கோபிநாதன் இதே குருமூர்த்தியிடந்தான் சின்னஞ்சிறு செல்வனைக் கொடுத்துவிட்டு நகர்ந்தான். குருமூர்த்தி அப்போது ஊரிலே பெரிய வக்கீலாகயிருந்தார். மனைவி மக்களில்லாத அவரிடந்தான் அநாதையான தனது செல்வத்தைத் தந்து விடைபெற்றான், கோபிநாதன், டாக்டர் பாஸ்கரை வஞ்சம் தீர்ப்பதற்காக. இப்போது அதே குருமூர்த்தியின் படம், பூஜைக்குரிய மாலை மரியாதையோடு திருமூர்த்தியின் அறையிலே காட்சி தருகிறதே! குருமூர்த்தியை டாக்டருக்குப் படிக்க வைத்து, தனது மகனாகவே நினைத்து சொத்தையெல்லாம் எழுதிவைத்துச் சென்றிருக்கிறார். திருமூர்த்தி தனது தந்தையென்று இப்போது கோபிநாதனை அடையாளங் கண்டுகொள்ளக் குருமூர்த்தி உயிருடனில்லையே அவர்மனிதருக்குள்ளே நல்ல தொண்டுள்ளம் படைத்த சீலர். அவனையுமறியாமலே கோபிநாதனின் கரங்கள் குவிந்து வணங்கின. குருமூர்த்தியின் படத்தை நோக்கி 'குருமூர்த்தி! எந்தக் கடமைக்காக இந்தக் குண்டுக் காயங்களோடு, பூட்டப்பட்ட கைவிலங்கோடு தப்பி வந்தேனோ, அந்தக் சடமை எனக்காக இங்கே காத்திருக்கிறது யாரைத் தேடி நெடும்பயணத்தைத் துவக்கவிருந்தேனோ, அவன் இங்கே கிடைத்துவிட்டான். தேடி வந்த மூலிகை காலிலே தட்டுப்பட்டுவிட்டது குருமூர்த்தி. இனி எனக்கு வேலையில்லை.

கோபிநாதனின் அழுத இதயம் பேசி முடித்தது. கட்டுப்போட்ட கால்களை மெதுவாகப் பிடித்துக் கொண்டே அறைக்குள்ளே நடந்து கொண்டிருந்தான் கோபிநாதன். அறையின் கதவோரமாகயிருந்த மேசையருகே வந்ததும், சிறிதுநேரம் தயங்கி நின்றான். அவனது வலது கரம், கவனிப்பாரற்று மேசைமீது விரிந்துகிடந்த பெரிய புத்தகத்தை நோக்கித் தாவியது. சாதாரணமாகப் புத்தகத்தைப்புரட்டிக்கொண்டிருந்த அவனது விரல்களிலே ஏதோ வழவழப்பாகத் தட்டுப்பட்டது! என்ன அது?

ஆவலோடு எடுத்துப் பார்த்தான். அவ்வளவு ஆவலைத் தூண்டியது ஒரு சாதாரண புகைப்படமாய்த் தெரியவில்லை, கோபிநாதனுக்கு. 'தேவிகா' வல்லவா படத்திலே சிரித்துக் கொண்டிருந்தாள். தேவிகா யார்? அவன் வஞ்சம் தீர்த்துக்கொண்ட டாக்டர் பாஸ்கரின் மகளல்லவா! அவளுக்கும், மகன் திநமூர்த்திக்கும் என்ன அபபடி உறவு?...உறவிருக்கிறது என்று கூறுவதுபோல படத்திலே தேவிகா சிரித்துக்கொண்டிருந்தாள். புகைப்படத்தைத் திருப்பினான் கோபிநாதன், 'அன்புள்ள அத்தான் திருமூர்த்திக்கு மறக்கமுடியாத தேவிகாவின் அன்பளிப்பு' என்று பெரிய பெரிய எழுத்திலே எழுதிக் கையெழுத்திடப்பட்டிருந்தது. இப்போது அவர்களின் உறவு தெளிவாகத் தெரிந்தது கோபிநாதனுக்கு. 'விஷத்தைக் கக்கும் நாகத்திடம் ரத்தினமிருப்பதுபோல, பாஸ்கரிடம் தேவிகாவிருப்பதாக உணர்ந்து கொண்டிருக்கிறானா திருமூர்த்தி? பாஸ்கர் எனது பகையாளி!........ தேவிகா உறவு கொள்ள வருகிறாள்! புயலுக்குப் பிறகு, வீச வேண்டிய தென்றல் வருகிறது. நான் வாழ்விலே கண்டது ஒரே பகை; செய்ய நினைத்ததும் ஒரேகொலையே. கொலையோடு பகை முடியட்டும். இனிச் சேர வேண்டிய உறவுக்குப் பகையாளியாக யிருக்க நான் யார்? இந்தக் கொலைகாரக் கோபிநாதன் கொலைகாரனாகவே தண்டனையை அனுபவிக்கப் புறப்படுகிறேன். இத்தனைகாலம் சென்ற பிறகு, எந்த மகனுக்குத்தான் எனது தந்தையை இந்தவேதனையான நிலையிலே பார்க்க சகிக்கும். எனது மகன் திருமூர்த்தி ஊர்புகழும் உத்தமன், அவனது தந்தை இந்தக் கொலைகாரக் கோபிநாதனாகவிருக்க வேண்டாம். மறைக்கப்பட்ட ரகசியம் மறைந்தே மடியட்டும். நான் வாஞ்சையோடு அழுது துடித்தாலும் எனது இதயக் குரலுக்கும் காது கொடுக்கும் தூரத்திலேயில்லை திருமூர்த்தி. நான்வளர்க்காத பூந்தோட்டம் அவன் பூத்துச் சிரிக்கும் அழகைப் பார்த்துக் கொண்டே, போக வேண்டிய இடத்துக்குப் புறப்படுகிறேன்.'

வெளியே மாடிக் கதவைப் பலமாகத் தட்டிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பரபரப்பிலே கோபிநாதன் நினைவு பெற்றான்.

மாடிக் கதவு திறக்கப்பட்டது. கோபிநாதன் விழியோரங்களிலே அன்புநீர் ததும்ப பூட்டியவிலங்கோடு கைகளை உயரே தூக்கிக் கொண்டு, முன்நோக்கி நடந்து வந்தான், டாக்டர் திருமூர்த்தி வியந்து போய்க் கோபிநாதனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அழகுமகன் திருமூர்த்தியை அள்ளி விழுங்குவது போலப் பார்த்துவிட்டு, போலீசார்களுக்கு இடையே மெதுவாக நடந்து போய்க் கொண்டிருந்தான் கோபிநாதன். கொலைகாரக் கோபிநாதனாலும் அவ்வளவு பாசத்தோடு பார்க்க முடிகிறதேயென்று நினைத்தார் திருமூர்த்தி. ஆனால், திடுமென நுழைந்து தப்பிக்கவேண்டுமென்று மிரட்டியவன், அதே வேகத்தில் திருப்பிய நிகழ்ச்சிக்குத் தான் காரணம் புரிந்து கொள்ள முடியவில்லை அவரால். கண்களைக் கசக்கிக் கொண்டே, 'போனை'ப் பார்த்தார். 'சற்று நேரத்துக்கு முன்பு தேவிகா எச்சரித்தது எவ்வளவு உண்மையாகப் போய் விட்டது'......அவனை அசடாக நினைத்து, அனுதாபப்பட்ட டாக்டரின் இதயம் இப்போது அவளுக்காக நன்றி சொல்லிக் கொண்டிருந்தது! ★

தென்மண்டலமும் நாமும்

"சோமலெ"

1947 வரை இந்தியா என்பது பல நூறு சிற்றரசுகளையுடைய நாடாக இருந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, இவை சர்தார் வல்லபாய் பட்டேலின் முயற்சியாலும் ராஜதந்திரத்தாலும் ஆங்காங்கே 'யூனியன்' ஆக்கப்பட்டு ராஜப்பிரமுகர்கள் தலைமையில் பெரிய சமஸ்தானங்களாகவும், பின்னர் இந்தியாவுடன் இணைந்த மாநிலங்களாகவும் உருவாக்கப் பெற்றன, 1956-ல் இந்தியாவெங்கும் மொழி அடிப்படையில் இராச்சியங்கள் அமைக்கப்பெற்றன,

மொழிவழி இராச்சிய அமைப்பு இந்திய தேசப்படத்தை மட்டுமின்றி, இந்திய மக்களின் மன உணர்ச்சிகள், எண்ணப்போக்கு, அடிப்படைக் கொள்கைகள் ஆகியவற்றைக்கூட மாற்றி விட்டன. பல இராச்சியங்களில் - தமிழ் நாட்டில் அன்று - மொழிவெறி தலைவிரித்தாடிற்று. இதன் விளைவாக, பிற மொழியாளரின் வேலைக்கும் சொத்துக்கும் உயிருக்கும்கூடப் பல இராச்சியங்களில் இன்னல் இருந்துவருகிறது, இந்நிலையில், மண்டலங்களை-அதாவது தொகுப்பாக உள்ள இராச்சியங்கள் அடங்கிய பகுதிகளை-ஆட்சி அமைப்பின் அடிப்படையாக வைத்து இந்தியாவின் வருங்காலத்தை வரையறுக்க வழி தொடங்கப் பெற்றிருக்கிறது.

தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, நடு என்று ஐந்து மண்டலங்களாக இந்தியா பிரிக்கப்பட்டிருக்கிறது இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு குழு உண்டு. இக்குழுவில், அந்தந்த மண்டலத்துக்குள் அடங்கிய இராச்சியங்களின் முதல் அமைச்சர்களும் இந்தியாவின் உள் நாட்டமைச்சரும் உள்ளனர். இக்குழுவை இன்னும் விரிவுபடுத்தி அதற்கேற்ப அரசாங்க அதிகாரங்களும் வழங்க வேண்டுமென்ற எண்ணம் இப்போது ஏற்றம்பெற்று வருகிறது. எல்லைத் தொல்லைகளும் சிறுபான்மையோர்க்கு ஏற்பட்ட தீங்கும் இதனால் நீக்கப்படும் என்று எண்ணுகின்றனர்.

தென்மண்டலம் :

நாம் இருப்பது தென்மண்டலம். இதில் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்று இராச்சியங்களும் 1957 முதலும் 1959 முதல் மைசூர் இராச்சியமும் இருந்து வருகின்றன. எனவே, தென்மண்டலம் என்பது திராவிட மொழி பேசும் இராச்சியங்களின் கூட்டமைப்பு,

தென்மண்டல உணர்ச்சி - அல்லது திராவிட மண்டல உணர்ச்சி-இங்குள்ள அரசாங்கங்களிடையேயும் பொது மக்களிடையேயும் வளர்ச்சி பெற்று வருகிறது. இதை இக்கட்டுரையில் தெரிவிப்போம்.

அரசாங்க முயற்சிகள் :—

தென்மண்டலத்தில் மக்கள் தொகை $10\frac{1}{2}$ கோடி. அதாவது இந்தியாவின் மக்கள் தொகையில் கால்பங்குக்கு மேற்பட்டது. இந்தியாவில் சதுர மைலுக்கு சராசரி 287 பேர் வாழ்கின்றனர் ; ஆனால் தென் மண்டலத்தில் சதுர மைலுக்கு 387 பேர் வாழ்கின்றனர் ; பிற பகுதிகளைவிட, தென் இராச்சியங்களில் மக்கள் நெருக்கம் மிகுதி.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவற்றைக் கருத்தில் கொண்டு தென் மண்டலத்துக்கு நியாயம் வழங்க வேண்டுமென்றும், முதல் இரு திட்டங்களிலும் போல இனி ஏமாறத் தயாரில்லை என்றும் நான்கு இராச்சியங்களிலுமுள்ள காங்கிரசு அமைச்சர்களே திட்டக் குழுவினரிடம் கூறியுள்ளனர். அணு மின்சார நிலையம், எஃகு ஆலை, கனரக மின்சாரக் கருவிகள் தொழிற்சாலை, பெட்ரோலைத் தூய்மை செய்யும் நிறுவனம் ஆகியவற்றைத் தென் மண்டலத்தில் அமைக்க வேண்டுமென்று அவர்கள் ஒரு மனத்தினராய் வேண்டியுள்ளனர். மங்களூரிலும் தூத்துக்குடியிலும் ஆழ் கடல் துறைமுகங்கள் கட்டவேண்டுமென்று இரண்டையும் ஒரே வேண்டுகோளாக, நான்கு முதலமைச்சர்களும் வலியுறுத்தி வருகின்றனர். இவர்களுடைய ஒற்றுமையால்தான் ஆந்திராவில் பெரியதொரு மருந்துத் தொழிற்சாலை, மைசூரில் எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை, கேரளத்துக் கொச்சியில் கப்பல் கட்டும் தளம், (கேரளத்தில்) திருப்பணித்துறையில் மின்சாரக் கம்பி உற்பத்தி நிலையம், தமிழ் நாட்டில் (1) கிண்டியில் டெலிபிரிண்டர் தொழிற்சாலை (2) கிண்டியில் அறுவை சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை (3) எண்ணூரில் இயந்திரக் கலப்பைகளும் மண்வெட்டும் கருவிகளும் செய்யும் தொழிற்சாலை ஆகிய இந்திய அரசாங்கத் தொழிற்சாலைகள் அமைந்து வருகின்றன.

உணவுத் துறையில் இந்நான்கு இராச்சியங்களும் ஒரே மண்டலங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. தென் மண்டலத்திற்கெனப் பொதுவான போலீசுப் படையும் உருவாக்கப்பட்டு வருகிறது. படைத்துறையிலும் தென் மண்டலத்துக்கென, தனித் தளபதி இருந்து வருகிறார். குடியரசுத் தலை

நிகழ்வதும்

மொழிவழி மாநில அமைப்பு

1. தமிழ்நாடு
2. கேரளம்
3. மைசூர்
4. ஆந்திரம்
5. மராட்டியம்
6. குசராத்
7. ரரசஸ்தான்
8. மத்தியப் பிரதேசம்
9. பிகார்
10. ஒரிசா
11. மேற்குவங்கம்
12. அசாம்
13. உத்தரப்பிரதேசம்
14. பஞ்சாப்
15. இமாலயம்
16. காஷ்மீரம்

வருடைய மாளிகை ஒன்றும் தென்மண்டலத்தில் - செகந்தராபாதில் ராஷ்டிரபதி நிலரல் என்ற பெயரில்-அமைக்கப்பட்டிருக்கிறது.

மின்சார அமைப்பும் இந்த மண்டலம் முழுவதற்கும் பொதுவாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது, மண்டலத்திற்குள் மின்சாரம் எங்கு உற்பத்தியானாலும் அது மண்டல மின்சார இணைப்புக்கு உட்பட்டே இருக்கும்.

இந்திய அரசாங்கத்தின் அலுவலகங்களும் இந்நான்கு இராச்சியங்களையும் கவனிப்பதற்கு மண்டல முறையில் அமைக்கப்பட்டுள்ளன. தென்மண்டல ரயில்வே நிர்வாகப் பகுதி, தென் மண்டல ஆயுள் இன்சூரன்சுக் குழுவின் நிர்வாகப் பகுதி பாஸ்போர்ட் வழங்கும் அலுவலகம் சாகித்திய அகடமி, தொழிற் கல்விப் பகுதி ஆகியவை குறிப்பிடத்தக்கன. வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகங்களும் தென்மண்டலத்திலுள்ள தங்கள் வேலைகளைக் கவனிக்கக் கிளை அலுவலகங்களை வைத்துள்ளனர்.

பிற ஒற்றுமைகள் :

மொழித்துறையில் தென்மண்டலமெங்கும் ஒருமைப்பாடு இருந்துவருகிறது. இதை, வெளிநாட்டாராகிய கால்டுவெல் தெரிவித்ததிலிருந்து ஒற்றுமையுணர்ச்சி பெருகி வருகிறது. திராவிடமொழி ஒவ்வொன்றிலிருந்தும் பிற திராவிட மொழிகளுக்கு நூல்கள் மொழிபெயர்க்கும் வேலை கடந்த நான்கு ஆண்டுகளாக பெருகிவருகிறது தமிழ் நூல்களின் தெலுங்கு, கன்னடப் பதிப்புக்கள் வெளிவந்த வண்ணமாக உள்ளன. எழுத்தாளர்களும் தம்மொழி எழுத்தாளரேயன்றி, ஏனைய திராவிட மொழி எழுத்தாளர்களுடனும் தொடர்பு வைத்து வருகின்றனர். கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளில் சிறந்த இலக்கியங்கள் மொழிபெயர்ப்பவர்களைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டும் கடமையைத் தமிழ் எழுத்தாளர் செய்துவருகின்றனர். இத்தகைய முயற்சிகளை ஊக்குவிக்க, தென்மொழிகளின் புத்தகக்குழு ஓரளவு பணி செய்துவருகிறது.

மொழி பெயர்த்து............

நிகழ் இருப்பதும்



மண்டல அமைப்பு

மொழித்துறையில் இன்னும் சில செய்திகள் குறிப்பிடத்தக்கன. கேரளப் பல்கலைக்கழகத்தில், மலையாள மொழிக்குப் பேராசிரியக் கட்டில் ஏற்படுமுன் தமிழ்த்துறையில் பேராசிரியப் பதவி ஏற்பட்டது. மைசூர் மாநிலத்துத் தலைநகரான பங்களூரில் கன்னட மொழிப் பத்திரிகைகளைவிடத் தமிழ் நாளிதழ்களின் விற்பனையே கூடுதலாக இருக்கிறது. ஆட்சி அலுவலர்களில் தமிழ்நாட்டில் மலையாளிகளும் ஆந்திரத்தில் தமிழர்கள் சிலரும் இருந்து வருகின்றனர். கன்னட மொழியில் தலைசிறந்த எழுத்தாளராக இருப்பவர் பலருடைய - எல்லோருடைய என்றும் சொல்லலாம்-தாய் மொழியும் தமிழே. கன்னடம், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளுக்கும் எழுத்தில் ஒற்றுமை மிகுதி; எனவே ஒரே லிபி (எழுத்து) யைக்கொண்டு இரு மொழிகளையும் அமைக்கும் ஏற்பாடு நிறைவேறும் நிலையில் இருக்கிறது.

கல்வித் துறை :—

திராவிட மக்களுள் ஒருவர் மொழியை பிற மொழியினர் கற்க வேண்டும் என்ற எண்ணம் சில ஆண்டுகளாக ஏற்றம் பெற்று வருகிறது. மலையாள மக்களுள் மிகப் பலர் தமிழ் பேசியும் எழுதக்கற்றும் வருகின்றனர். கன்னட மக்களில் பெரு நகரங்களில் வாழ்பவர் அனைவரும் தமிழைப் புரிந்து கொள்ளுகின்றனர்.

திராவிட பொழிகளுக்குள் உள்ள அடிப்படைச் சொற்களைத் தொகுத்து, சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டிருக்கிறது. இப்பல்கலைக்கழகத்தல் நான்கு திராவிட மொழிகளுக்கும் பேராசிரியர்கள் தலைமையில் தனித் தனித் துறை இருந்து வருகிறது.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நான்கு திராவிட மொழிகளுக்கும் ஆசிரியர்கள் உள்ளனர். திராவிட மொழிகளுக்கு ஒப்பியல் அகராதி வெளியிடும் பெரியதொருபணியை இங்கே தொடங்கியுள்ளனர். தமிழ் எம். ஏ. படிக்கும் மாணவர்கள் பிற திராவிட மொழிகளுள் ஒன்றையேனும் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்ற எண்ணமும் நிலவி வருகிறது.

தென் இந்தியாவிலுள்ள எட்டுப் பல்கலைக் கழகங்களில் கர்னுடகப் பல்கலைக் கழகத்தைத் தவிர எஞ்சிய ஏழிலும் தமிழுக்குத் தனித்துறை இருந்து வருகிறது. இந்த எட்டுப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களும் ஒரு குழுவாக அடிக்கடி கூடி, கொள்கைகளை முடிவு செய்கின்றனர். பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு, தென்மண்டலக் கிளை அமையவேண்டும் என்று துணைவேந்தர்கள் கூறியுள்ளனர்.

பல்கலைக்கழக மானியக் குழுவினர் தென் மண்டல மொழிகளுக்கென ஒரு பேராசிரியக் கட்டில் அண்ணுமலை நகரில் நிறுவ, மானியம் வழங்கியிருக்கின்றனர்.

கல்வித் துறையிலும் மண்டல அமைப்பு முறையைப் பரப்ப இந்திய அரசாங்கம் சில கல்வி நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இவற்றில், இந்த நான்கு மாநிலத்தாரும் சேர்ந்து கல்வி பயில வேண்டும் என்பது ஏற்பாடு. இவ்வாறு தமிழ் நாட்டில் நிறுவப்பட்டுள்ள கல்வி நிலையங்களே- கோயம்புத்தூர் காட்டியல் கல்லூரி, கோயம்புத்தூர் அவினுசிலிங்கம் மனையியல் கல்லூரி, கிண்டி இந்தியன்



நியாயம் வழங்கவேண்டும் என்று......

இன்ஸ்டிட்டியூட் ஆப் டெக்னுலஜி, சென்னையில் வேப்பேரியருகேயுள்ள கால்நடை உயர்படிப்பு ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியின் ஆராய்ச்சிப்பகுதி சென்னையிலுள்ள அச்சுக்கலை பற்றிய மண்டலப் பள்ளி ஆகியவை. சென்னையிலுள்ள கன்னிமரா நூலகம் தென்மண்டலத்துக்கான தேசிய நூலகமாக இருந்து வருகிறது-

வணிகத்துறை :

தென்னுட்டிலுள்ள வணிகர்களிடம் மண்டல உணர்ச்சி மேலோங்கி நிற்பதைக் காணலாம். வணிகர்களின் தாய்ச்சபை பெடரேசன் ஆப் சேம்பர்ஸ் ஆப் காமர்சு அண்டு இண்டஸ்ட்ரி என்பது; இது டில்லியில் இயங்குகிறது; வடநாட்டு வணிகர் இதை இயக்கிவைத்து வருகின்றனர், தென் மண்டல வணிகர்க்கு அச்சபையின் ஆட்சிக்குழுவிலும் உட்குழுக்களிலும் நியாயம் வழங்க வேண்டுமென்று வணிகர்கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

மண்டல அமைப்புப்படி வணிகர் மாநாடுகள் நடத்தப்படுகின்றன. இவ்வகையிலும் தொழில் வளர்ச்சியின் தென்மண்டலத்தின் பிற்போக்கைப் புள்ளி விவரங்களால் வலியுறுத்தியும் பெங்களூர் சாரங்கபாணி முதலியார் செய்துவரும் தொண்டு மிகவும் போற்றுதற்குரியது-

பெரும்பாலும் வணிகராலேயே நடத்தப்படும் ரோட்டரி கிளப், லயன்சு கிளப் என்னும் சமுகாயப் பொழுது போக்கு நிறுவனங்களும் மண்டல அமைப்புப்படியே நடைபெற்று வருகின்றன.



பெங்களூரில் உள்ள கன்னடப் புத்தகக் கடைகளில் தமிழ்த் தினசரிகள் அதிகம் விற்பனையாகின்றன.

முடிவுரை :

பிற திராவிட மொழி மக்களுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்ற எண்ணம் மலையாளத்தாரிடம் மிகுதியாக இருக்கிறது இதற்குக் காரணம், மக்கள் தொகைப் பெருக்கத்தால் அவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

தமிழ்நாட்டில், பிற திராவிட மொழியினர்மீது நல்லுறவு பெருக, முதலமைச்சர் காமராசர் (எல்லைக் கிளர்ச்சிகளை அளவுடன் நடத்தியும், சஞ்சீவ ரெட்டி சங்கர் ஆகியோருடன் நட்புக்கொண்டும்) பெரிதும் பாடுபட்டு வருகிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இயக்கமும் இதற்கு ஆதரவான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது பல்கலைக் கழகத்துத் துணைவேந்தராகவும். உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகவும் தெலுங்கைத் தாய்மொழியாக உள்ளவர்களையும் மேல் சபைத் தலைவராக மலையாள மொழியினரையும். கீழ்ச்சபை (சட்டசபை)த் தலைவராகக் கன்னட மொழியினரையும் நியமித்துத் திராவிட மொழிக் குடும்பத்தின் ஒற்றுமையை வலியுறுத்தி வருவது தமிழ்நாடு.

நமது தாய்மொழி எல்லா வகையிலும் முதலிடம் பெறவேண்டும் ஆட்சி மொழியாகவும பல்கலைக் கழக மொழியாகவும் தமிழே தமிழ்நாட்டில் இருக்க வேண்டும். அ்தே நேரத்தில் நாம் மிகப் பழங்காலத்து நிலைமைக்கு சென்றுவிடாமல்பிறமொழிகள் பலவற்றில் ஆழ்ந்த அறிவும் பிறமொழியாளர் பலரின் நெருங்கிய தொடர்பும் பெறவேண்டும் அதற்கு வகைசெய்ய மண்டல அமைப்பு முறை பயன்படும்: அது வரவேற்கத்தக்கதே. குவிந்துகிடக்கும் மத்திய அரசாங்க அதிகாரங்களைக் குறைக்கவும், அதே சமயம் நாடு சின்னபின்னமாகி விடுவதைத் தடுக்கவும் மண்டல அமைப்பு ஒரு வாய்ப்பைத் தருகிறது. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்ற கொள்கையை வகுத்த தமிழன், பிற திராவிட மொழி ஈினருடன் இன்னும் நெருங்கி உறவாடமுபலுவது இயல்பே, நல்லதே, நிறைவேற வேண்டியதே.

கடவுள் குணம்

★

கடவுளைப் பற்றி மதஸ்தர்கள், பக்தர்கள் கூறும் கதைகளை விசாரிக்கப் புகுந்தால், அவை எல்லாம் கட்டுக் கதைகளென ஏற்படுகின்றன. இந்தக் கட்டுக் கதைகளை எப்படி உண்டாக்கப் பழக்கம் வந்ததென்றால் மனிதனுக்கு இயற்கையாகவே பேச ஆரம்பித்த பிறகு தன் குணங்களைப் போல் கடவுளுக்கும் குணங்கள் உண்டு என ஆலோசிக்கும் சக்தி உள்ளவனானன். இந்தப் பழக்கத்தால், கடவுளும் தன்னைப் போலவே குணங்களைப் பெற்றிருக்கவேண்டுமென்று சிந்தித்தான். இந்தச் சிந்தனைகளைச் சொல் மயமாக்கி, புத்தகங்கள் எளிதில் வரையப் பெற்று அதனல் கடவுளரின் அபூர்வ காரியங்களெனப் பெயர் பெற்றன. இந்தக் கட்டுக் கதைகள்தான் புராணங்களிலும், விவிலிய நூல்களிலும். கொரான் சென்ட் அவிஸ்தா என்னும் பார்சீ ஆசகமங்களிலும் மற்றுமுள்ள மத நூல்களிலும் வரைந்துள்ளனர். இந்நூல்களை விசாரிக்குமளவில் மனிதனுக்குள்ள குணங்கள் யாவும் கடவுளுக்கு அதிகமாயிருத்தலை உணரலாம்.

—அறிஞர் ம. சிங்காரவேலு.

வேதநாயகனர் வாழ்வில்

தே. அறிவுடை நம்பி

சட்ட நுட்பம், இசைப் பாடல், நாவல்எனும் முப்பெருந்துறைகளை முத்தமிழாய் முயன்று சென்ற நூற்ருண்டிலேயே செழுமையுறச் செய்த செம்மல் மாயூரம். நீதிபதி வேதநாயகனுர் ஆவர்.

அவர் வாழ்ந்த காலத்தில் தாய் மொழியைக் கற்கும் வாய்ப்பே பெரும்பாலான கல்விக் கூடங்களில் இல்லாமலிருந்தது. கற்றவர்களும் தமிழைக் கொச்சையாகப் பேச மட்டும் தெரிந்த கல்லாதவர்களைப் போலவே ஆக்கப் பெற்றிருந்தார்கள். 'எனக்கு தமிழே பேசத் தெரியாது' என்று ஆங்கிலத்தில் பேசித் திரிவது ஒரு நாகரிகமாகக் கூடக் கருதப்பட்டது. பள்ளிப் பிள்ளைகளும் ஆங்கிலத்திலேயே உரையாடிக் கொள்ள வேண்டும். தமிழில் பேசுதல் தகாது. தப்பித்தவறி தமிழ்பேசுவோன் கையில், 'அவமானச் சின்னமாக' ஒரு மரக்கட்டை தரப்படும். அந்த சுதேசிக் கட்டையை வைத்திருப்பவன் மற்றவர்களால் எள்ளி நகையாடப் படுவான்.

சிலசமயம், தாய் மொழியே, மொழி-தெரியாத அயல் நாட்டு ஆசிரியக் கிருஸ்தவ குருமார்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் கருவியாகவும் அமைந்ததுண்டு. ஒரு மாணவன் மூக்குப் பொடி போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டார் பிரெஞ்சுப் பாதிரியார். மாணவனின் பெயரைக் கேட்டார். 'புடலங்காய்'' என்ருன் குறும்பிலே—கூர்மையுள்ள பையன். மறுநாள் காலை இறை வழிபாட்டு மண்டபத்தில், மாணவர் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கவிதிகளை அறிவுறுத்தி, அதனிற் தவறிய அந்த மாணவனைத் தண்டிக்க விரும்பி, ''புட் லங்காய்...கம்...ஹியர்'' என்று பெருத்த குரலில் அழைத்தார். மாணவர்களிடமிருந்து சிரிப்பு வெடித்துக் கிளம்பியது.

இவ்வாறு அயல் மொழியிலேயே, அனைத்துங் கற்ற 'வித்வத் சிரோமணிகளே' பெரும் அரசியல் பொறுப்புகளேற்று, தமிழில் 'வைத்தியலிங்கம்' என்பதைப் பைத்தியலிங்கம் என்றும், 'சுப்பிரமணியன்' என்பதைச் 'சொக்கிரமணியன்' என்றும், 'தர்மலிங்கம்' என்பதைக் 'கர்மலிங்கம்' என்றும் கையெழுத்து மட்டும் போடக் கற்றிருந்தார்கள் என்று வேதநாயகர் பின்னல் தமது முதல் நாவலில் விவரிக்கிருர்.

எனவே, வேதநாயகனுர் தமிழை முறையாகத் திருச்சி தியாகப் பிள்ளையிடம் கற்றுத் தேர்ந்தார். பின்னர் மகா வித்துவான். மீனுட்சிசுந்தரம் பிள்ளை முதலியோர் கூட்டுறவால் தமது கவிதை அறிவை வளப்படுத்திக் கொண்டார். தமிழில் புதிதாகவும், நிலையாகவும் ஏதாவது செய்யவேண்டுமென்று 'நாவல்' என்னும் புதினத் துறையைத் தோற்றுவித்தார்.

முதல் தமிழ்ச் சட்ட நூல் :—

நீதிபதித் தொழில் புரிந்து, நேர்மையை நிலை நாட்டியவர்

வேதநாயகம். மாயூரத்தில் காவிரிக்கரை ஓரத்தே, கோயில் மண்டப அமைப்பில், அவரது 'அறங்கூறவையம்' அமைந்திருந்தது.

ஒருநாள், வாதி ஒருவன் தாங்க மாட்டாத சுமையுடன் முறைமன்றம் வந்தடைந்தான் சற்றுமுன்னரே வந்துவிட்ட நீதிபதி. வேதநாயகர் ''என்னப்பா மூட்டை அது?'' என்று கேட்டார்.

''இதெல்லாம் எங்கள் வக்கீலையாவின் புத்தகங்கள் சாமி! எங்கள் வீட்டுச் சின்ன தகருரைத் தீர்க்க அவர் இவ்வளவு புத்தகங்களையும் படிக்கவேண்டியிருக்கிறதாம். 'நீதிபதி' சமுகத்திற்கும் ஆதாரம் காட்ட என் கையில் கொடுத்தனுப்பி யிருக்கிறார்!'' என்றான் அந்த அப்பாவிப் பாமர உழவன்.

சோழ வளநாடு, வயல் சம்பந்தப்பட்ட வழக்குகளிலும் வளமுடையதாகவே இருந்து வந்தது. 'அப்படியா, நீதிபதிக்கே புதிதாக இவர் சட்டங்களைக் காட்டி கற்றுத் தரப் போகிறாரோ? சொன்னால் தெரியாதோ?' என்று மனத்திற்குள் எண்ணியவராய், ''என்ன அப்பேர்ப்பட்ட புத்தகங்கள்! அவிழ்த்துக் காட்டு பார்க்கலாம்!'' என்று கட்டளை யிட்டார் நீதி நாயகர்.

பிரித்த மூட்டையில் 'பெரிய எழுத்து அல்லி அரசாணி மாலை, விக்கிரமாதித்தன் கதைகள், பஞ்சதந்திரக் கதை, பரமார்த்த குருகதை' போன்ற புத்தகங்கள் ஏராளமாக இருந்தன. மருந்துக்கேனும் ஒரு சட்டப் புத்தகம் இருக்க வேண்டுமே!

அதற்குள் உள்ளே நுழைந்த 'வழக்கறிஞர்' நடப்பதைக் கண்டு திடுக்குற்றுப் போனார். உடனே, ''மன்னிக்க வேண்டும்'' என்று வேத நாயகர் காலிலேயே விழுந்துவிட்டார்.

''எழுந்திருமையா! உம்மைச் சொல்லி குற்றமில்லை. ஆங்கிலத்தில் அனைத்தும் இருப்பதால் தானே உம்மால் கல்வி அறிவே இல்லாத மக்களை ஏமாற்றிப் பணம் கறக்க முடிகிறது! நீரும் தமிழர்; நீதிபதியும் தமிழர்... வாதி தமிழர்...பின் யாருக்காக இங்கே ஆங்கிலம்? தீர்ப்புகளை மட்டுமே ஆங்கிலத்தில் எழுதித் துரைத்தனத்தினருக்கு அனுப்ப வேண்டுமென்று சட்டம் இருக்கிறதே தவிர, இங்கு நடப்பவை எல்லாம் ஆங்கிலத்தில் நடக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இனி இங்கு எல்லாம் தமிழ், நானும் மக்கள் அனைவர்க்கும் பயன்படுமாறு, ஓரளவு அடிப்படைச் சட்ட அறிவைப் பெறுமாறு இந்தியன் பினல் கோடு சட்டங்களைத் தமிழாக்கித்தருவேன்'' என்று உணர்ச்சியுடன் சொற்பெருக் காற்றிச் சூளுரைத்தார் புரட்சி நாயகர்.

அறுபது ஆண்டு சட்டநுணுக்கங்களைச் சித்தாந்த சங்கிரகம். என்னும் பெயரால் (சித்தாந்தம்) சட்டம்; சங்கிரகம் - தொப்பு-' தொகுத்து அவரால் வெளியிடப் பெற்ற நூலே முதல் தமிழ் சட்ட நூலாகும். ஆனால் அந்நூலின் படி ஒன்றேனும் இன்றுகிடைக்கவில்லை.



எங்கள் வீட்டுச் சின்னத் தகராற்றைத் தீர்க்க அவர் இவ்வளவு புத்தகங்களையும் படிக்க வேண்டியிருக்கிறதாம்!

பதவியில் ஓய்வுற்ற பின் கண்ட உண்மைகள் :–

பதவியிலிருந்த வரையிலும், தடிகொண்டு அடித்து ஓட்டினாலும் பேட்டி காண வந்த பேர் வழிகளெல்லாம், பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் பேச்சுத் துணைக்கு ஆளில்லை என்று வெற்றிலைப் பாக்கு வைத்தழைத் தாலும், 'திண்டு மிண்டுஞ்' சொல்லி வாராதொழிந்தனராம்! இவர் செயலைக் கண்டுகொண்டோம், இனி மன்பதைக்கே தொண்டு கொண்டோம்'' என்று பதவியிலிருந்து நீங்கிய பின் கண்ட உண்மைகளைப் பாடி வைத்துள்ளார் வேத நாயகனார். ஆனால் அவர் வீட்டில் எஞ்ஞான்றும் சான்றோர் ஈட்டமும், புலவர் கூட்டமும் இசையும், பாட்டும், இனிய தமிழும் நாளும் நனி வளர்த்துக் கொண்டே இருக்குங் காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் விளங்கி இருக்கும். ★

இங்கிலாந்தின் அரசி

நா. ஜகந்நாதன். எம். ஏ.,

உலக நாடுகள் பலவற்றிலும் மன்னராட்சியை ஒழித்து மக்களாட்சியை நிறுவப் பல போராட்டங்கள் நடைபெற்றுள்ளன; பெரும்பாலானவை வெற்றியும் பெற்றன. 16-வது நூற்றாண்டு முதல் 20-வது நூற்றாண்டுவரை இத்தகைய போராட்டங்கள் நடந்துள்ளன. இன்று உலகில் மன்னராட்சி முறை விளங்கும் நாடுகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய இரண்டும் மன்னர்களை ஆண்டவனின் தூதர்களாக எண்ணிப் போற்றிப் புகழ்கின்றன. இன்றளவும் மன்னர்களை ஒழிக்கப் போராட்டங்கள் இங்கிலாந்திலும் நடைபெற்றுள்ளன; சில மன்னர்கள் நாட்டைவிட்டு ஓட்டப்பட்டார்கள்; சில மன்னர்களின் தலைகள் கொய்யாக் கனியெனக் கொய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்று மன்னராட்சிமுறையே சிறந்தது என்று எண்ணி இங்கிலாந்தில் அம்முறை அமுலில் இருந்து வருகிறது. அதுமட்டுமல்ல அம்முறையை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணமே இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளுக்குத் தோன்றாதபடி நல்லதோர் அடிப்படையில் இயங்கி, வருகிறது மன்னராட்சி முறை. "அரசர் தவறு செய்யமாட்டார்" (The king can do no wrong) என்றும் "அரசர் இறந்துவிட்டார்; அரசர் நீடூழி வாழ்க!" The king is dead long live the king) என்றும் அரசியலில் பழமொழிகள் சில விளங்குகின்றன அந்த நாட்டில்.

மன்னர் பதவிக்கு மக்கள் அவ்வளவு மதிப்புத் தருகிறார்கள் இங்கிலாந்து மன்னருக்குக் குழந்தை பிறக்கிறது என்றால் அது ஆணா, பெண்ணா என்று அறிந்து கொள்ள உலகமே ஆவல் அடைகிறது; இங்கிலாந்து மன்னரின் மகள் காதல் கொள்கிறாள் என்றால், அவளுடைய காதலன் யார், மாளிகை வாழ்பவனா மண்குடிசையில் இருப்பவனா என்று தெரிந்து கொள்ள உலகம் அவாக்கொள்கிறது. இங்கிலாந்து மன்னரின் குடும்பம், மன்னருக்குச் சொந்தமான ரேஸ் குதிரைகள், முதலிய எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள ஆவல் கொள்கிறார்கள் உலகமக்கள். காரணம், இங்கிலாந்தின் மன்னர் என்பவர் ஒரு தனிப்பட்ட மனிதரல்ல; ஒரு பெரிய அமைப்பு.

இங்கிலாந்து மன்னராட்சி முறை. இந்த அளவிற்கு மக்களால் விரும்பிப் போற்றப்படுகிறதென்றால், அதற்குக் காரணம், மன்னர்கள் பரம்பரை பரம்பரையாக ஒரு குடும்பத்திலிருந்து தோன்றுவதேயாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார் மனனர் என்றால் அந்த முறைக்கு ஆங்கில

மக்கள் அவ்வளவு மதிப்பு தரமாட்டார்கள் என்பது உண்மையாகும். அதுவுமன்றி, தான் தேர்ந்தெடுக்க உதவி செய்த கட்சிக்கு அல்லது தான் சார்ந்துள்ள கட்சியின் சார்பிலேயே அவர் மனம் செல்லும் ; அவர் பொதுவாக இருந்தாலும், அவர் தேர்ந்தெடுக்கப்பட உதவி செய்த கட்சியினர் அவரைத் தம் கட்சியின் பால் இழுப்பார்கள். ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜனாதிபதிக்கு அளிக்கும் மதிப்பைவிட அதிகமான மதிப்பை, கட்சிப் போரில் கலந்து கொள்ளாத, கலந்து கொள்ள விரும்பாத, பரம்பரை பரம்பரையாக மன்னர் குடும்பத்தில் உரிமை பெற்றுவரும் ஒரு மன்னர் அல்லது அரசி அதிகமான மதிப்பு பெற்று வருகிறார்.

ஆஸ்திரேலியா நாட்டுப் போர் வீரன் ஒருவன் தன் வயிற்றுப் பிழைப்புக்காக இராணுவத்தில் சேர்ந்து போரிட்டாலும், அவன் இங்கிலாந்தின் அரசருக்காக அல்லது அரசிக்காகப் போரிடுவதாகக் கருதப்படுகிறான். அதேபோல்தான் கானடாவில் ஒருவர் நீதி வழங்குகிறார் என்றால் அவர் அரசிக்காக நீதி வழங்குகிறார் என்று கருதப்படுகிறது. அரசாங்கக் கடிதங்களில் எல்லாம் அரசியின் அதிகாரத்தில் (On Her Mejesty's Service) என்று முத்திரை அடிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனுக்குட்பட்ட எல்லா நாடுகளிலும் நடக்கும் அரசியல் தொடர்பு கொண்ட எல்லா நிகழ்ச்சிகளும் இலண்டனில் வாழும் அரசிக்காகவே நிகழ்வதாகக் கருதப்படுகின்றன. அந்த அளவிற்கு பிரிட்டிஷ் அரசியின் தொடர்பு விரிந்து பரந்து, கட்டாயமில்லாமல், தானாகவே இயங்குகிறது பிரிட்டிஷ் பாராளுமன்றத்து உறுப்பினர்கள். அமைச்சர்கள் முதற்கொண்டு சாதாரண தோட்டிவரை மன்னரின் ஊழியர்கள் என்றே கருதப்படுகிறார்கள்.

இங்கிலாந்தின் அரசியின் செல்வாக்கு இவ்வளவு பரந்து கிடக்கிறது என்று கண்டோம். அரசியின் அதிகாரங்கள் எவை, அவருக்கும் முதல் அமைச்சருக்கும் உள்ள தொடர்பு என்ன, என்பவற்றைப் பார்ப்போம். இங்கிலாந்தின் அரசி வெளிப் பார்வைக்கு எல்லா அதிகாரங்களும் உடையவராய் இருப்பது போல் காணப்படுகிறார்; திடீரென்று பிரிட்டிஷ் படைகளைக் கலைத்துவிட அவருக்கு உரிமையுண்டு; எல்லா மக்களையும் பிரபுக்கள் சபையின் அங்கத்தினராக்க அவருக்கு உரிமையுண்டு; எல்லாப் பள்ளிக்கூடங்களையும் பல்கலைக் கழகங்களாக்கவும் அவருக்கு உரிமையுண்டு. ஆனால் உண்மையில் பார்க்கப் போனால், அவருக்கு ஒரு பென்ஸ் அளவு கூட அதிகாரம் கிடையாது ; இங்கிலாந்தின் முதல் அமைச்சர் காட்டிய இடத்தில் அவர் கையெழுத்திட வேண்டும்; அதுதான் அவரது வேலை. ஏன் எப்படி என்றெல்லாம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்க முடியாது. முதல் அமைச்சர்தான் இங்கிலாந்தை உண்மையில் ஆள்பவர். ஓர் அரசருக்கு மூன்று அதிகாரங்கள்-அதிகாரங்கள் கூட அல்ல-உரிமைகள்-உண்டு என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அரசரைக் கலந்துதான் எல்லாக் காரியங்களும் முடிவு செய்யப்பட வேண்டும் ; அரசர் முதலமைச்சருக்கு ஊக்கம் அளிக்க உரிமை உடையவர் ; அரசர் முதலமைச்சருக்கு எச்சரிக்கை செய்ய அதிகாரம் படைத்தவர். இவையே அரசருக்குள்ள அதிகார வரம்பாகும், இந்த வரம்பை மீறி அதிகாரம் செலுத்தச் சில மன்னர்கள் முயன்றனர்; தோல்வியுற்றனர். புகழ் பெற்ற அரசி விக்டோரியாவே இதில் தோல்வியுற்றிருக்கிறார். பாமர்ஸ்டன் என்ற அமைச்சர் விக்டோரியாவுடன் பலமுறை சச்சரவு இட்டார். அவர், ஒரு முதிய வழக்கறிஞர் தன்னுடைய இளம்பெண், வாதியிடம் எவ்வாறு நடந்து கொள்வாரோ, அவ்வாறு நடந்து கொண்டார். அவர் அரசிக்கு எழுதிய ஒரு கடிதத்தில், "இளம் சீமாட்டியே, உனக்கு விருப்பமிருந்தால் இவைகளை (அரசாங்கக் கடிதங்களை) படித்துப் பார். ஆனால் அவைகளை நீ தெரிந்து கொண்டு தான் ஆக வேண்டும் என்றில்லை; பார்த்தவுடனே கையெழுத்திட்டு எனக்கு அனுப்பி விட்டால் உனக்குத் தொல்லையும், எனக்கு நேரமும் மிச்சமாகும்; என்று குறிப்பிட்டாராம்! ஆனால் இந்தப்போக்கு விக்டோரியாவிற்குப் பிடிக்கவில்லை. விக்டோரியாவிற்கும் அப்போதைய முதலமைச்சருக்கும் நீண்ட கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. 'விக்டோரியாவின் கடிதங்கள்' ஆங்கில அரசியல் வரலாற்றில் நிரந்தரமான இடத்தைப் பெற்றுள்ளன.

இக்கட்டுரைக்கான படங்களைக் கொடுத்துதவியவர்கள் பிரிட்டிஷ் செய்தி பரப்பு (British Information Services) அலுவலகத்தார் ஆவர்.

அவர்கட்கு நம் நன்றி !

அதற்குப் பிறகு பிரிட்டிஷ் மன்னருக்கு இவ்வளவுதான் அதிகாரமுண்டு என்று வரையறை செய்யப்பட்டுள்ளது; மேலும் வரம்பை மீறிச் செல்ல மன்னர்கள் முயலவில்லை. ஆகவே சுமுகமான ஓர் ஏற்பாடு இப்போது அமுலில் இருந்து வருகிறது பிரிட்டனைப் பொறுத்தமட்டில் மன்னரே, தலையாய நீதிபதி, தலைமை அமைச்சர், தலைமைப் படைத் தலைவர் என்ற மூன்று அதிகாரங்களையும் செலுத்துகிறார். நீதியும், ஆட்சியும், படையும் மன்னருக்கு உட்பட்டே நடப்பதால் இவை மூன்றும் மன்னரால் நிர்வகிக்கப்படுவதாகக் கருதப்படுகின்றன. பிரிட்டனின் தலைமை நீதிபதி மன்னரால் நியமிக்கப்படுகிறார்; பிரிட்டனின் முதல் அமைச்சர் (தேர்தலில் வெற்றி பெற்ற கட்சித் தலைவராக இருப்பவர்) மன்னரால் நியமிக்கப்படுகிறார். பிரிட்டனின் படைத் தலைவர்களும் மன்னரால் நியமிக்கப்படுகின்றனர். ஆனால் உண்மையில் பிரிட்டனில் அதிகாரம் கொண்ட அமைப்பு பாராளுமன்றமேயாகும்; பாராளுமன்றம் மக்களின் பிரதிநிதிகளும், பிரபுக்களின் பிரதிநிதிகளும் கொண்ட அமைப்பாகும். பாராளுமன்றத்திற்குப் பதில் கூற வேண்டியவர் முதலமைச்சர். எனவே மக்களுக்கும், பிரபுக்களுக்கும், அரசுக்கும் தொடர்பு ஏற்படுத்துபவர் மன்னரேயாவர். ஏன் எனில் முதல் அமைச்சர் மன்னரைக் கலந்து தானே எல்லாச் செயல்களையும் புரிகிறார் ?

மன்னர் தமக்குத் தெரிந்த ஆலோசனைகளை அமைச்சரவையிடம் கூறவும், அவற்றைப் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளவும் உரிமை உடையவர். ஆனால் அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்த மாட்டார். நாட்டில் உள்ள பொது மக்களின் எண்ணத்திற்கு ஏற்ப அவற்றை ஏற்கவோ, மறுக்கவோ அமைச்சரவை முடிவு செய்யும் மன்னர் இவ்வாறு தம்முடைய எண்ணத்தைத்தான் அமைச்சரவை ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று விரும்பினால், அரச பீடமே ஆட்டம் கண்டுவிடும். ஆகவே அறிவாளியான ஓர் அரசன் தன் அறிவுரைகளை

எந்த அளவிற்கு நிறுத்திக் கொள்ள முடியுமோ, அந்த அளவிற்கு நிறுத்திக் கொள்வான். ஐந்தாம் ஜார்ஜ் அரசர் ஒருமுறை சோவியத் ருஷ்யாவின் தூதரைப் பார்ப்பதற்கு தயக்கம் தெரிவித்தார். ஆனால் வெளிநாட்டுத் துறைச் செயலாளர் ''நீங்கள் சோவியத் தூதரைப் பார்க்க வேண்டும் என்று அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது'' என்று எடுத்துக் கூறிய பிறகு ஜார்ஜ் அரசர் தூதரைப் பார்க்க முடிவு செய்தார். அமைச்சரவையின் முடிவை ஏற்றுக் கொண்டு, அதன்படி நடப்பதே மன்னர்களுக்கு ஒழுங்காக இருந்து வருகிறது, எந்த விஷயத்திலும் மன்னருக்குப் பொறுப்பு கிடையாது. பொறுப்பெல்லாம் முதல் அமைச்சருக்கே. மன்னர் செயற்கையான ஓர் அழகிய, ஆடம்பரமான வாழ்க்கைப் படகில் சுழன்று வரவேண்டும். பொது மக்களிடத்தில் அதிகமான தொடர்பு கொள்ளவோ, பழகவோ கூடாது. இதே காரணத்தால்தான் எட்வர்ட் என்னும் அரசர் தாம் விரும்பிய ஒரு சாதாரண குடிமகளை மணக்க முடியாததால்தான் - முடிதுறக்க நேரிட்டது. அரசர் எல்லா அமைச்சர்களையும் விட அதிகமான விஷயங்களை அறிந்திருக்கிறார்; அறிந்திருக்க இடம் உண்டு; அவருக்கு வரும் எல்லா ஆவணங்களையும் நன்கு படிக்கிறார். அமைச்சர்கள் இன்று இருப்பார்கள்; நாளை மாறிவிடுவார்கள்; ஆனால் அரசர்களோ தம் வாழ்நாள் முழுவதும் ஆட்சி செலுத்துகிறார்கள். இதே காரணத்தால்தான் மன்னர்கள் கட்சிகளின் போக்கில் ஈடுபடுவதில்லை. துவக்க காலத்தில் இங்கிலாந்து மன்னர்களில் சிலர், தேர்தலின் போது இன்னின்ன கட்சிகள்தாம் பதவிக்கு வரவேண்டும் என்று பகிரங்கமாகவே தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்; அரசி விக்டோரியா இதில் முன்னணியில் நின்றார். ஆனால் படிப்படியாக ஜனநாயகக் கருத்துக்கள் வளரத் துவங்கிய பிறகு, மன்னர்கள் தங்கள் பாரபட்சமற்ற, உயர்ந்த, நீதிபதியைப் போன்ற நிலையை உணரத்தலைப்பட்டனர்; தாங்கள் எந்தக் கட்சியிலும் ஈடுபடாமல் இருப்பதுதான் மன்னராட்சியைக்காப்பாற்றக்கூடும்



ஆங்கில நாட்டரசர்களின்
அழகிய மணிமுடி இதுதான்.

என்ற கருத்து வளர்ந்தது. இன்று மன்னர்கள் எந்தக் கட்சி தேர்தலில் அதிகமான வாக்குகளைப் பெறுகிறதோ, அந்தக் கட்சியின் தலைவரை அழைத்து அமைச்சரவை அமைக்குமாறு அழைக்கிறார்கள். அவ்வளவோடு அவர்கள் கடமை தீர்ந்துவிடுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர், தாம் தமது அமைச்சரவையில் இன்னின்னார் இருக்க விரும்புவதாக ஒரு பட்டியலை அரசியிடம் தருகிறார். அரசி அவர்களை 'மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் அல்லது அரசியின் விசுவாசமுள்ள அமைச்சர்களாக மகிழ்ச்சியுடன்'' நியமிக்கிறார். பிரிட்டிஷ் காலனிகளுக்கு கவர்னர்கள் நியமிப்பதும், பிறநாடுகளுக்குத் தூதர்களை நியமிப்பதும், தன்னுடைய பிறந்த நாளின்போது, சிறந்த தொண்டு புரிந்தவர்களுக்குப் பட்டங்கள் வழங்குவதும், பாராளு மன்றத்தைக் கூட்டுவதும், அங்கு சொற்பொழிவு நிகழ்த்துவதும், பாராளு மன்றத்தைக் கலைப்பதும் இன்ன பிறவும் அரசியின் முக்கியமான பணிகளாகும். இவையெல்லாம் முதலமைச்சரின் கருத்துப்படியே நடக்கின்றன. முதலமைச்சர், தனது அமைச்சரவையைக் கலந்துமுடிவுகள் செய்கிறார். அம்முடிவுகள் பாராளுமன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பட வேண்டியவை யாகும்.

அமைச்சரவையில் கட்சிப்பற்றற்ற ஓர் அமைச்சரைப் போல் மன்னர் விளங்குகிறார் என்று கூறுவது பொருந்தும். அமைச்சர்கள் இன்று இருப்பர்; நாளை பதவியிழப்பர்; ஆனால் மன்னர்கள் தங்கள் ஆயுட்காலம் வரை பதவியில் இருப்பர் என்று முன்னர் கண்டோம். இதே முறையில்தான் மன்னர்கள் அமைச்சர்களைப்போல் விளங்குகின்றனர். அமைச்சரவைக்கு மன்னர்கள் ஆலோசகர்கள் என்றும் கூறலாம். டௌனிங் தெரு பத்தாம் எண் வீட்டிற்கு வரும் பத்திரிகைகளையும அரசு ஆவணங்களையும்விட அதிக மானவை, பக்கிங்காம் அரண்மனைக்கு வருகின்றன. ஆதலின் மன்னர்கள் சிறந்த ஆலோசகர்களாக விளங்குகின்றனர். ஆலோசனைகளை சிறந்த முறையில் பயன்



பக்கிங்காம் அரண்மனையில் ஒரு பகுதி.

படுத்திக்கொள்வது அமைச்சரவையின் பொறுப்பாகும்.

அரசர்களின் மற்றொரு முக்கியமான பணி, இங்கிலாந்தில் இருக்கும் இரண்டு கட்சிகளுக்கும் நடுநிலைமையாளராக இருப்பதாகும். எதிர்க் கட்சிகளின் தீவிரத்தைக் குறைப்பது இவரது கடமையாகும். எதிர்கட்சித் தலைவருக்கு இங்கிலாந்தில் பெரும் மதிப்புண்டு. எதிர்க்கட்சித் தலைவரை அடிக்கடி விருந்துண்ண அழைப்பார் மன்னர். விருந்தின் போது இன்னின்ன பிரச்னைகளின் மீது இந்தக் கட்சியின் குறைந்த பட்சக் கோரிக்கை இது என்பதைத் தெரிந்து அந்த ஆளும் கட்சித் தலைவரிடம் கூறி, எதிர்க்கட்சியினரின் ஆவலையும் நிறைவேற்ற முயல்வார்; விக்டோரியா அரசி, எதிர் கட்சித் தலைவரிடம் அளவிற்கு மீறிய தொடர்பு கொண்டிருந்தது, நாட்டில் பெரும் பூசலைக் கிளப்பியது. பின்னர் ஒருவாறு அடங்கியது. எதிர்கட்சித் தலைவரை அழைப்பதுகூட பிரிட்டிஷ் பிரதமரைக் கலந்தாலோசித்த பிறகு நடப்பதாகும். இத்தகைய விருந்துகளில் கலந்து கொண்டதால் தான் போர்க்காலத்தில் சர்ச்சில் ஒருசிறந்த வெற்றி வீரராக மாறினூர் என்று கூறப் படுகிறது. சர்ச்சில் பிரதமராக இருந்தகாலத்தில் மன்னரோடு விருந்துண்டபோது, முப்படைத் தலைவர்களும் விருந்தில்கலந்து கொண்டு போரைப்பற்றிய செய்திகளை அறிவிக்கவும். செய்திகளை அறியவும் செய்தனர்.

அரசி, பல விருதுகளையும் பட்டங்களையும் வழங்குவது வழக்கமாக இருந்து வருகிறது. கலை, அரசியல், இலக்கியம், விளையாட்டுக்கள் சினிமா, நாடகம், முதலிய பலதுறைகளில்சிறந்தபணியாற்றியவர்களுக்கு இந்தப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் ராவ்பகதூர் திவான் பகதூர், சர், போன்ற பட்டங்கள் அரசியால் வழங்கப்பட்டனவாகும். இவை இப்போது வழங்கப் படுவதில்லை. இங்கிலாந்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்தப் பட்டங்கள் காமன்வெல்த் நாடுகளுக்கும் வழங்கப் படுகின்றன. இங்கிலாந்தின் முதலமைச்சரே இத்தகைய பட்டங்களைப் பெறுவோரின் பட்டியலைத் தயாரித்து அரசிக்கு அனுப்புகிருர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. மதத் தொடர்பு கொண்ட 970 பதவிகளும் அரசியா



அரசியார் பாராளுமன்றத்திற்கு ஊர்வலமாகச் செல்லுங்காட்சி

லேயே நிரப்பப்படுகின்றன. இவற்றுள் 700 பதவிகளுக்கு முதல் அமைச்சர், தம் விருப்பப்படி பெயர்களை அரசிக்கு அனுப்புகிறார். நீதிபதிகள், அரசியல் அலுவலர்கள் முதலியவர்களையும் அரசியே நியமிக்கிறார். அரசி 'கௌரவங்களின் ஊற்று' என்று கூறப்படுகிறார். சில கௌரவப் பட்டங்களை அரசியே வழங்குகிறார்.

அரசியின் முக்கியமான மற்றொரு பணி சமூகத் தொடர்பு கொண்ட விழாக்களில் கலந்துகொள்வதாகும். பள்ளிக்கூடங்கள் திறத்தல், பொது விழாக்களில் கலந்துகொள்ளுதல், கலைத் தொடர்பு கொண்ட நிகழ்ச்சிகளில் பங்கு பெறுதல் முதலியன அன்றாடம் நிகழ்வதாகும். இதன் மூலம் நாட்டில் உள்ள பல்வேறு மக்களும் ஒன்றுகூட ஒரு வாய்ப்பு ஏற்படுத்துகிறார் அரசி. மேயரோடு கரம் குலுக்குதலும், ஆல்டர்மென்களோடு பழகுதலும், பள்ளிக் குழந்தைகளுக்கு கை ஆட்டி மகிழ்ச்சி தெரிவித்தலும், கூட்டத்தினருக்குப் புன்சிரிப்பு வழங்குதலும் அரசியின் முக்கியமான சமூகப் பணிகளாகும்.

அரசியின் பாராளு மன்றத்துப் பேச்சு உண்மையில் அமைச்சரவையால் தயாரிக்கப்படுவதேயாகும். இதில் சில பகுதிகளை நீக்கவோ, சேர்க்கவோ அரசி விரும்பினால், அதை அமைச்சரவை மீண்டும் பரிசீலனை செய்த பிறகே, அவ்வாறு செய்யமுடியும். அரசியின் விருப்பு, வெறுப்புகளை வெளியே கூறுவது வழக்கமல்ல. கட்சிப் பூசல்கள், தேர்தல் சச்சரவுகளிலிருந்து அரசியின் பெயர் ஒதுக்கப்பட்டிருக்கும், அரசியை யாரும் தனிப்பட்ட முறையில் இங்கிலாந்தில் தாக்குவது கிடையாது. அரச முறையைத் தாக்குவது உண்டு; ஆனால் அரசியின் பெயர் கூறி, அரசியல் விவகாரங்களில் இழுக்கின்ற பழக்கம் அறவே கிடையாது. அரசி, இங்கிலாந்திற்கு மட்டும் தலைவியல்ல; கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆப்ரிக்கா, முதலிய நாடுகளுக்கும் தலைவி. அதுமட்டுமல்ல காமன்வெல்த்தின் தலைவியும்கூட; இந்தியா, பாகிஸ்தான், மலேயா, போன்ற நாடுகள் காமன் வெல்த்தில் உள்ளன.

இவ்வளவும் பார்த்தபிறகு அரசி ஓர் அழகு ஓவியம் அலங்கார பொம்மை ஆடம்பரத்தலைவி என்று தான் நினைக்கத் தோன்றுகிற தல்லவா? ஆண்டுதோறும் பல லட்சக்கணக்கான பவுன்கள் அரசிக்காகவும், அரசியின் வாழ்க்கைச் செலவுக்காகவும் ஒதுக்கப் படுகின்றன. இருந்தும் ஒரு பென்ஸ் அளவுகூட அதிகாரம் இல்லாத இந்தப் பதவி ஏன்? ஆரம்பகாலத்தில் கட்சி ஜனநாயகம் சரிவர வளரா திருந்த நாட்களில், எந்தக் கட்சியை அமைச்சரவை அமைக்க அழைப்பது என்பது ஒரு பெரும் பிரச்சனையாக இருந்தது. அரசி தம சொந்த அறிவைப் பயன்படுத்தி, நாட்டு மக்களின் எண்ணத்தையும் அறிந்து, கடமையாற்ற வேண்டியிருந்தது. சில பலசெயல்களில், அமைச்சரவை கொண்டு வந்த திட்டங்களைத் தீர ஆலோசித்து, முடிவு வழங்க, நடுநிலைமையாளரான ஒருவர் தேவைப் பட்டார், அவர் எந்தக் கட்சித் தொடர்பும் இல்லாதவராக இருப்பது சிறந்தது என்று பொதுமக்கள் எண்ணினர். அதன் முடிவுதான் மன்னர் ஆட்சிமுறை, இன்று அசைக்க முடியாத பலமான அடிக்கல் மீது அமைக்கப்பட்டுள்ளது. மன்னராட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று இங்கிலாந்தில் ஒரு துரும்புகூட முசுசு விடாது. எல்லா அதிகாரங்களும், முதல் அமைச்சருக்கே இருக்கும்போது, அவரை நல்ல பாதையில் அழைத்துச்செல்ல, அமைச்சரவை இருக்கும போது, அமைச்சரவையைக் கட்டுப் படுத்த பாராளுமன்றம் இருக்கும்போது, ஆடம்பரமான ஒருபதவியும்-அரசர் பதவி இருக்கத்தான் வேண்டும் என்று ஆங்கில மக்கள் திடமாக நம்புகிருர்கள். அந்த நம்பிக்கை வீண் போகாதவாறுதான், அரசர்களும், அரசிகளும், நடந்து கொண்டு வருகிருர்கள்.

இங்கிலாந்தை ஆண்ட சில முக்கிய அரசர்களில் அரசி விக்டோரியா குறிப்பிடத்தக்கவர். இவர் 1837 முதல் 1901 வரை ஆட்சி புரிந்தார். பதினைந்திற்கு மேற்பட்ட முதல் அமைச்சர்கள் இவரது ஆட்சியில் பணி புரிந்தனர். முதல் அமைச்சர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் சர் ராபர்ட்பீல், ஜான்ரஸ்ஸல் பிரபு, பாமர்ஸ்டன், டிஸ்ரேலி, க்ளாட்ஸ்டன் ஆகியோர் ஆவர். அரசி விக்டோரியா பல விஷயங்களிலும் முதல் அமைச்சர்களிடம் சச்சரவிட்டுக்கொண்டிருந்தார். அரசர்களின் அதிகாரம் செலுத்தப்பட வேண்டும் என்று விரும்பினர். இவருக்குப் பிறகு ஏழாவது எட்வர்ட் என்பவர் 1901 முதல் 1910வரை ஆண்டார். சிறந்த அரசர்களில் மற்றொருவரான ஐந்தாம் ஜார்ஜ் 1910 முதல் 1936 வரை ஆண்டார். இவரது ஆட்சியில் லாயிட் ஜார்ஜ், மாக்டனல்ட், சாம்பர்லேன் ஆகியோர் முதல் அமைச்சர்களாகப் பணியாற்றினர். ஏழாவது எட்வர்ட் 1936-ல் ஒரே ஆண்டு ஆட்சி புரிந்தார். காதலுக்காக முடி துறந்தார் அவருக்குப் பிறகு ஆரும் ஜார்ஜ் அரசர் ஆட்சி தொடங்கியது. 1936 முதல் 1952 வரை ஆண்ட இவர் காலத்தில் சர்ச்சில், ஈடன் ஆகியவர்கள் முதல் அமைச்சர்களாகப் பணி புரிந்தனர்.

இப்போது இங்கிலாந்தை ஆள்பவர் எலிசபெத் ஆகும். இவர் 1952ல் பதவியேற்ருர். 1926 ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் பிறந்த இவர் 1947-ல் எடின்பரோ கோமகனை மணந்துகொண்டார். 1952, பிப்ரவரி 6-ம் நாள் இங்கிலாந்தின் அரசியாக முடி சூட்டிக்கொண்டார். இங்கிலாந்தைப் பின்னுல் ஆளப் போகும் சார்லஸ் என்ற இளவரசன் பிறந்திருக்கிருன் இவர் காலத்தில் மாக்மில்லன் இப்போது முதலமைச்சராய்ப் பணி புரிகிருர்,

அரசியின் அரண்மனைப் பாதுகாவலர்கள் யார், யார் என்று பார்ப்போம், முக்கியமானவர் லார்டு சேம்பர்லேன் ஆவர். அரண்மனைப் பொருளாளர், அரண்மனைக் கணக்காயர், அரசியின் அந்தரங்கச் செயலாளர், பத்திரிகைச் செயலாளர், அரசியின் பொருளாளர், அரண்மனைமேல் அதிகாரி முதலிய பல பெரும் பதவிகளும், எண்ணற்ற சிறுபதவிகளும். தகுதியும், நாணயமும் உடையவர்களால் வகிக்கப்படுகின்றன.

எலிசபெத் அரசி சிறுவயது முதற்கொண்டே பல நாடுகளையும் சுற்றிப் பார்க்கும் ஆவல் படைத்தவராயிருந்தார். அதன் விளைவாகப் பலநாடுகளையும் பார்த்துக் கொண்டு வரும் போக்கில், இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகளையும் பார்க்க இந்தியாவிற்கு வர இருக்கிருர். இங்கிலாந்து மக்கள் விருப்பத்துடன் போற்றிப் பாதுகாத்து வரும் மன்னராட்சி முறைக்குச் சிறந்த தொரு உதாரணமாக, நடுநிலைமையுடன், நீதி பிறழாது ஆட்சிபுரிந்து வருகிருர் எலிசபெத்.

★

விகடராமன் கவிதைகள் :



சிலை

பி. சி. கணேசன்

முகில்

நீண்டதூரம் நடந்துவந்த சளைப்புத் தீர சாலையோரமாகவிருந்த அந்தப் பாழடைந்த கோயிலின் நிழலில் ஒதுங்கினேன். எப்பொழுது எவன் கட்டினானோ, இப்பொழுது நாதியற்ற நிலையில், பக்தகோடிகளின் திருப் பார்வை படாமல், ஏகாந்த நிலையில் மோனத்தவம் செய்துகொண்டிருந்தது அந்த ஆலயம். முன்மண்டபத்தில் ஒதுங்கிய நான் கொஞ்சம் பார்த்துத்தான் வைப்போமே என்று உள்ளே தலையை நீட்டினேன். மூலஸ்தானம்கூடக் காலியாகக் கிடந்தது. எந்தப் பராரி மூலவரைத் தன் அடுப்பங்கரைத் தேவைக்குப் பயன்படுத்திக்கொண்டானோ! அட ஆண்டவனே நான் பெருமூச்சு விட்டேன்! மேற்கொண்டு ஆராய என் சோர்வு இடந்தரவில்லை. 'அப்பாடா' என்று துண்டைக் கீழே விரித்து சடலத்தை நீட்டினேன்.

இமைகள் ஒன்றையொன்று தழுவி விழிக்கோளங்களைச் சிறையிடும் நேரம்; எதிரேயிருந்த கற்சிலை ஒன்றின்மீது என் கவனம் விழுந்தது. கல்லைக் காவியமாக்கியிருந்தான் சிற்பி! ஜடத்திற்கு உயிர்த்தத்துவம் ஏற்றிக் காட்டியிருந்த அந்த சிருஷ்டிப் பிரம்மாவை மனதுக்குள்ளேயே பாராட்டிக்கொண்டேன். தனிமையின் பயங்கர அமைதியிலே ஊடுருவி நிழலாடிய உயிரின் துடிப்பை என் இதயம் உணர்ந்தது. தெய்வீகம் களையப்பட்ட அந்தப் பாழ்மண்டபத்திலே, கலையின் நிறைவால் ஞானவொளி வீசியது அந்தச் சிற்பம்! அது என்ன கலையா? அல்லது தெய்வீகமா? கலைத்தெய்வமா அன்றி தெய்வீகக் கலையா? உணர்ச்சியின் பிரவாகத்தில் சிக்கி மனம் தடுமாறிக் கொண்டிருந்த சமயம்...

கல்லுருவான அந்தச் சிற்பத்தில் நிஜத்தின் மென்மையை வடித்திருந்தான் சிற்பி. பொய்யை மெய்யாக்கி நம்ப வைப்பதுதான் கலையின் சாதனையோ! அல்லது மெய்யான லட்சியங்களுக்குப் பொய்யான உருவம் கொடுத்து மனித அறிவைத் திணற அடிப்பதுதான் அதன் நோக்கமோ! எது எப்படியிருந்தால் என்ன? கல்லை உளிகொண்டு கனிய வைத்திருந்தான் சிற்பி! அந்தக் கனிவின் சுவை உள்ளத்தைத் தொட்டது; உணர்ச்சியைத் தொட்டது. இமைக்காமல் அந்த எழில் கோலத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். எப்பொழுது கண்ணயர்ந்தேன் என்று எனக்கே தெரியாது... ...மெட்டிகள் தாளமிட்டன. வளையல்கள் ஸ்வரம் எழுப்பின. கட்டழகே வடிவான காரிகையொருத்தி என் முன் காட்சியளித்தாள்.

கண்களை கசக்கிவிட்டுக் கொண்டு பார்த்தேன். கல்லுரு தசையுருவாக என்முன்னே நின்றுகொண்டிருந்தது.

''நீ...?'' சொல்ல நினைத்த வார்த்தைகள் வெளிவரவில்லை. தசையும் ரத்தமும் சேர்ந்த உயிர்ப்பொருளாய் நிற்பவளைகல்லா என்று கேட்க மனம் ஒப்பவில்லை.

''என்ன விழிக்கிறாய்? கல்லாய் இருந்தவள் எப்படிக் கன்னியானாள் என்றுதானே ஆச்சரியப்படுகிறாய்?'' நான் ஒளிக்க முயன்றதை அவள் கேட்டேவிட்டாள்.

''ஆமாம்'' என்று மட்டும் தலையை ஆட்டிவைத்தேன்.

''கல் கன்னியானதைக் கண்டு திகைக்கிறாய்! கன்னியாக இருந்தவள்தான் கல்லானேன் என்பதை நீ உணர்ந்தால்...''

ஏதோ கதைக்கு அவள் பீடிகை போட்டாள். 'அகலிகையின் கதை போலிருக்கிறது. கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போய்விட்டது,'' என்றேன்.

''உனக்கு அகலிகையின் கதை மட்டும்தான் தெரியும் போலிருக்கிறது. சாபத்தால் கல்லானவள் அவள். கலைஞன் ஒருவனின் பாபத்தால் கல்லானவள் நான்!''

''அகலிகையின் நவீன பதிப்போ?''

''நீ ஒரு விதண்டாவாதி போலிருக்கிறது''-அவள் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

''சரி, சரி, சொல் உன் கதையை கேட்கிறேன்.''

''காண்டம் காண்டமாகக் கதை சொல்ல ஒன்றுமில்லை. மன்னன் ஒருவனின் மகளாகப் பிறந்தேன். சிற்பி ஒருவனின் கைத்திறனைக் காதலித்தேன்...விளைவு...?''

''மன்னர் விஷயமறிந்தார். இளவரசன் ஒருவனுக்கு உன்னைத் திருமணம் முடித்தார். காதலில் தோல்வியுற்ற கலைஞன் உன்னைக் கற்சிலையாக்கி மகிழ்ந்தான். அப்படித்தானே?''

''அப்பப்பா! நீ பெரிய வம்புக்காரனாயிருப்பாய் போலிருக்கிறது. கேட்க இஷ்டமில்லையானால் சொல்லிவிடு. கல்லாகிவிடுகிறேன்.''

அழகுருவாய் நிற்கும் அந்த ஆரணங்கு மீண்டும் கல்லாகிவிட நான் விரும்பவில்லை. ''சரி, பேசு!'' என்றேன்.

''அந்தச்சிற்பி இளைஞர். எழிலான ஆண்மகன். கலை அவருடைய கரங்களில் குடியிருந்தது. ஆலயத்

திருப்பணிக்காக என் தந்தையால் அழைக்கப்பட்டார். தேவாலயம் முழுவதும் உயிர்ச்சிற்பங்களைச் சமைத்தார். கண்டவர் அவரது கைத்திறனை வியந்தனர். பாராட்டினர். பட்டிதொட்டியெல்லாம் அவருடைய புகழ் பரவிற்று உருவாகும் ஆலயம் காண ஒரு நாள் நானும் என் தோழிகளோடு போனேன். உளி கொண்டு அவர் சிற்பம் சமைப்பதை வியந்து பார்த்தபடியே நின்று கொண்டிருந்தேன். அவரோ நாங்கள் வந்ததைக் கவனிக்காமல் தன் வேலையிலேயே ஒன்றியிருந்தார். கல், கட்டழகு பெறுவதை அன்று தான் நான் முதல் முறையாகக் கண்டதால் "அற்புதம் அற்புதம்!" என்று வாய்விட்டுக் கூவினேன். உளியைக் கோபமாகக் கீழே எறிந்துவிட்டு அவர் என்னைத் திரும்பிப் பார்த்தார். அந்தப் பார்வையிலிருந்த கடுமை! இப்பொழுது நினைத்தாலும் என் நெஞ்சம் நடுங்குகிறது. பிறகு பேசாமல் தன் வேலையை விட்டு எழுந்து போய்விட்டார். நான் யாரெனக்கூட அவர் கேட்டறியவில்லை "செருக்குப் பிடித்தவன்!" என என் தோழிகள் கூறினர். "உண்மைக் கலைஞன்!" என்றேன் நான். 'இளவரசி, உங்களுக்குக் கொஞ்சம்கூட ரோஷமில்லை!' என்றனர் தோழிகள். என் விழிகள் மட்டும் சிற்பி சென்ற திக்கையே வெறிச்சிட்டு நோக்கின... என்ன, கொட்டாவி விடுகிறாய்? தூங்குகிறாயா. கதையைக் கேட்கிறாயா?"-கதையின் நடுவே குறுக்குவிசாரணை செய்தாள்.

"கதை சுவையான கட்டத்தை அடைந்துவிட்டதே! எப்படித் தூங்குவேன்! இனித்தானே சூடு பிடிக்கும் என்றேன் நான்.

"நீ பொல்லாத ஆள்...!" மறுநாள் இரவு சிற்பியைத் தேடிக்கொண்டு புறப்பட்டேன் நான். தனிமையாகத்தான் வழக்கம்போல்- அவர் வேலையில் ஈடுபட்டிருக்கவில்லை ஏதோ சிந்தனையில்-ஆழ்ந்திருந்தார். தீவர்த்திகளின் ஒளியில் அவருடைய சோக வதனமும் ஒரு சோபையுடன் விளங்கிற்று. "சுவாமி!" என்றேன். என் இதயத்தின் தாபம் அந்தஸ்து என்ற அணையை உடைத்தெறிந்து மரியாதைச் சொல்லாக வெளிப்பட்டுக் காற்றில் கலந்து இழைந்தது. சிற்பி நிமிர்ந்தார். கண்களில் கோபமில்லை. கலையுள்ளத்தின் கருணையுணர்ச்சி பொங்கி வழிந்தது. "இளவரசி தெரியாமல் நேற்று அபச்சாரம் செய்துவிட்டேன். இந்த ஏழையை மன்னித்துவிடுங்கள்!" என்றுகூறிக் கொண்டே என் முன் மண்டியிட்டார். "என்ன பாவம் செய்கிறீர்கள். கலைஞரே! என்னிடம் தாங்கள் மண்டியிடுவதா?" எனக் கூறிக்கொண்டே அவரைத் தூக்கி நிறுத்தினேன். அவர் ஸ்பரிசம் பட்டவுடன் என் உடலெங்கும் இன்பவுணர்ச்சி பரவி இதயத்தைக் கிளுகிளுக்க வைத்தது. "சிற்பியாரே, கலையில் ஒன்றியிருந்த தங்கள் கருத்தைக் கலைத்த நான்தான் குற்றவாளி. இளவரசி என்றாலும் அந்த உரிமையை நான் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது" சிற்பி என் பேச்சை இடைமறித்து "இளவரசியார் என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தை சொன்னால்தான் என் மனம் சமாதானம் அடையும்" என்றார். "நல்லது கலைஞரே, செய்யாத குற்றத்தை மன்னிக்கும் நீதி இன்னும் எனக்குப் பாடமாகவில்லை பரவாயில்லை. ஒரு காரியத்தைத் தாங்கள் செய்வதாக வாக்களித்தால் நான் மன்னிப்பேன்" என்றேன். "ஆணையிடுங்கள்" என்றார் சிற்பி. என்னைத் தாங்கள் என்றும் அழியாச் சிற்பமாக வடிக்க வேண்டும்!" என்றேன். கரும்பு தின்னக் கூலியா?" என்றார்கலைஞர். கேட்டுவிட்டு என்னையே கூர்ந்து நோக்கினார். என் வடிவ அழகில் அவருடைய பார்வை ஐக்கியப்பட்டது. நான் நாணத்தால் தலை கவிழ்ந்து நின்றேன் நேரம் போனதே தெரியாமல், அவருடைய பார்வையின் சுகானுபவத்தில் நெட்டுயிர்த்து நின்றேன.

திடீரென்று சிற்பி, "நீங்கள் போகலாம்!" என்ருர். நான் என்னுணர்வு அடைந்தேன். எனக்கோ அங்கிருந்து போகவே மனம் வரவில்லை. "நான் போய்விட்டால் எதைப் பார்த்து என் சிற்பத்தை வடிப்பீர்கள்?" என்றேன். "கண்ட காட்சியைக் கலையாத ஓவியமாய் இதயத்தில் இருத்திக்கொள்ளக்கூடிய ஆற்றல் கலைஞனின் கண்களுக்கு உண்டு. என்முன் உள்ள இந்தக் கல்லில் நான் இப்பொழுது கல்லையே காணவில்லை. தங்களின் திருவுருவத்தை மட்டுமே காணுகிறேன். தங்கள் திருவுருவம் தவிர மற்ற வேண்டாத பகுதிகளைக் கல்லிலிருந்து செதுக்கி யெறிந்துவிட்டால் தங்களின் உருவம் தானுகவே அமைந்துவிடும். சிற்பக் கலைருக்குக் கண்தான் விசை; கை, அந்த விசையால் இயக்கப்படும் கருவி...!" சிற்பியின் கரங்கள் கல்லின்மேல் இழைந்தன. "கல், கல்!" என ஒலி! அது உளியின் ஓசையாக எனக்குக் கேட்கவில்லை. சிருஷ்டியின் ஜீவநாதமாய் என் இதயத்தில் ஒலித்தது. நான் அரண்மனை நோக்கிப் புறப்பட்டேன்...என்ன, கதையைக் கேட்டுக்கொண்டு வருகிருயா?"

"வினையின் வித்து இடப்பட்டு விட்டது...பிறகு?" என்றேன்.

"அதற்குப் பிறகு ஒவ்வொருநாள் இரவும் சிற்பி இருக்குமிடம் செல்லுவேன். ஓரிருமுறை என்னை நோக்கிவிட்டுத் தன் வேலையில் ஒன்றிவிடுவார். நான் கால் கடுக்கும்வரை நின்றுவிட்டு அரண்மனை திரும்புவேன். கல், அவருடைய கைத்திறமையால் படிப்படியாக என்னுருவம் பெற்றுக்கொண்டு வந்தது. நான் மகிழ்ந்தேன். சிலையும் முற்றுப் பெற்றது...ஐயகோ!" அவள் தேம்ப ஆரம்பித்தாள்.

"என்ன நடந்தது?" என்றேன் நான் பதட்டமாக.

"அரசிளங்குமரியை அரசனின் அனுமதியின்றி சிலையாக வடித்த குற்றத்துக்காக சிற்பி சிரச்சேதம் செய்யப்பட்டார்!"

நான் திடுக்கிட்டேன். கதாநாயகன் இப்படி திடீரென்று கொல்லப் படுவான் என நான் எதிர்பார்க்கவே இல்லை.

இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "ஏன், நீ உண்மையைச் சொல்லித் தடுத்திருக்கலாமே?" என்றேன்.

"சொல்லாமலா இருந்திருப்பேன்? அரச அதிகாரம் தன் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ளக் கலைஞனை பலியிட்டுவிட்டது. நான் அழுதேன், அரற்றினேன், புலம்பினேன்! முடிவில் என் நிலைகண்டு இரங்கிய என் தந்தை சிற்பி வடித்த என் சிலையை, என் வேண்டுகோளுக்கிணங்கி, என்னுடைய அந்தப்புரம் கொண்டுவந்து சேர்த்தார். கலைஞனை அழித்துவிட்டுக் கம்பீரமாக நிற்கும் அந்தக் கலையுருவின்மீது காறியுமிழ்ந்தேன். நாளாக நாளாக அந்தச் சிலையின்மீது எனக்கு அனுதாபம் பிறந்தது. என்ருே ஒரு நாள் நான் அழிந்துபோவேன். ஆனுல் என் சாயலாக வடிக்கப்பட்ட அந்தச் சிலை அழியாமல் பார்ப்போரைப் பரவசப்படுத்திக்கொண்டேயிருக்கும். பிணி, மூப்பு, சாக்காடு முதலியவற்ருல் இந்த உடல் மாறும், விகாரமடையும், அழியும்! ஆனுல் காலத்தை வென்று நிற்கும் இந்தச் சிற்பம்..."

"இவ்வளவு தத்துவம் பேசுகிருய்...முடிவில், உன் சுயநலத்துக்குத்தானே சிற்பியைப் பலியிட்டுவிட்டாய்?"

"முழு வாக்கு மூலத்தையும் கேட்காமல் ஏன் தீர்ப்பு வழங்குகிருய்? அதற்குப்பின் அந்த ஆலயத் திருப்பணி முற்றுப் பெறவே இல்லை. மூளியாக நின்று போன கோவிலின் மூலஸ்தானத்தில் கொலையுண்ட சிற்பியின் உடலைப் புதைக்க ரகசியமாக ஏற்பாடு செய்தேன். எனக்கு ஒரு நப்பாசை. பக்தி மார்க்கத்தில் ஊறித் திளைத்த தமிழர்கள், எந்தப் பாழ் மண்டபத்தையும் கோவிலாக்கி வழிபட ஆரம்பித்துவிடுவார்களென்று..."

"அது அந்தக் காலம்...இப்பொழுது தமிழகக் கோவில்களெல்லாம் சுயநலமிகளால் சுரண்டப்பட்டு பாழ் மண்டபங்களாக.."

நான் முடிக்கவில்லை. அவள் தொடர்ந்தாள்;



"என்றே ஒரு நாள், சிற்பியின் உடலைப் புதைத்த இடத்தில் விக்ரகம் ஒன்றை வைத்து, தெய்வத்தன்மையூட்டி வழிபடுவார்களென எண்ணினேன். அந்த என் கனவும் நனவாகவில்லை. நான் உயிரோடிருக்கும்பொழுது முற்றுப் பெருத கோவில் பாழ் மண்டபமாகவே நின்றுவிட்டது. நானும் கன்னியாகவே காலம் கழித்துவிட்டேன். நான் இறக்கும்போது விட்ட வேண்டுகோளின்படி, என் சிலை, சிற்பியின் அந்த மகோன்னதப் படைப்பு, முற்றுப் பெருத கோவிலின் பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது...."

நான் சோம்பல் முறித்தேன்.

"ஏன், சுவாரஸ்யமாக இல்லையா? நான் எண்ணியபடி எதுவும் நடக்கவில்லை. மூலஸ்தானத்தில் கடவுள் வழிபாடு நிகழவில்லை. மாருக சுவாமியில்லாத அம்மன் என்று கூறி பிரகாரத்திலிருந்த என்னை மக்கள் வழிபட ஆரம்பித்துவிட்டார்கள்..."

"மீண்டும் உன் நலன்தான் வெற்றி பெற்றது என்று சொல்!"

"நான் என்ன செய்யட்டும்; நீயே சொல்...உண்மையில் பார்க்கப் போனல் கலைஞனுக்குத் தோல்வி. ஆனல் கலைக்கு வெற்றி. இதில் என் சுயநலம் எதுவுமே இல்லை!"

"எப்படி?" என்றேன் நான்.

"சிற்பிக்கு என்மேல் எத்தகைய அன்பிருந்தது என்பது எனக்குத் தெரியாது. அவர்மேல் நான் கொண்டுவிட்ட அன்பையும் என்னல் எளிதில் இனம் கண்டுகொள்ள முடியவில்லை. நான் அவருடைய கலைத்திறமையில் மனத்தைப் பறிகொடுத்தது என்னவோ உண்மை. அவரது கலைத்திறனல் வாழ எண்ணியது உண்மை. அவர் அமைத்த கலை வடிவுக்குக் கருப்பொருளானது உண்மை. இதைத் தவிர வேறெந்தக் குற்றமும நான் புரியவில்லை. இளவரசியைச் சிற்பமாக வடித்த சிற்பியை பழிதீர்த்துக் கொண்டார்கள். உண்மையான கலாபிமானம் மன்னனுக்கோ மக்களுக்கோ இருந்திருந்தால், சிற்பி கொல்லப் பட்டிருக்கமாட்டார் கடவுளின் உருவங்களைப் படைக்க சிற்பிக்கு அந்தஸ்து இருப்பதாக எண்ணிய மன்னன், தன் மகளின்உருவம் சிற்பியின் கரத்தால் சிலை வடிவம் பெறுவதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தெய்வீகத்துக்கும் கலைக்கும் உள்ளபடியே மன்னர் மதிப்பளிப்பதாயிருந்தால் இருந்திருந்தால் தன் மகள் தெய்வ வடிவம்அமைக்கும்சிற்பியால்சிற்பமாவதைப் பெரும் பேருக எண்ணியிருப்பார்...தெய்வத்தையும் கலையையும் உயர்ந்ததாக உலகிற்குக் காட்ட மனிதன் முயல்கிருனே தவிர உள்ளத்தால் உணருவதே இல்லை."

"உன்னைப் பார்த்து நான் அனுதாபப்படுகிறேன்." என்றேன்.

"உன் அனுதாபம் யாருக்குத் தேவை? உன்னுடைய அனுதாபத்தைப் பெற நான் இந்தக் கதையைச் சொல்லவில்லை. எனக்கு நீ ஒரு உதவி செய்யவேண்டும்..."

அதைக் கேட்டவுடனேயே என் உடல் சில்லிட்டது "அம்மா, இளவரசியாரே, நீங்கள் கேட்ட உதவியைச்செய்யப்போய்தான்சிற்பி பிணமானன் நானும்..."

"உண்மையைக் கண்டாலும் கேட்டாலும் மனிதர்கள் கோழையாகிவிடுவார்களா?" என்றுள் அவள் ஆத்திரமாக.

"வாழ ஆசைப்படுகிறவன் கோழையாகத்தான் இருக்கிருன். சாகப் பயப்படாதவனிடம் தான் துணிவு இருக்கும். நான் வாழ விரும்புசிறவன்..."

"சரி, சரி...கோழையாகவேவாழ்ந்து தொலை! நீ என் காரியத்துக்குப் பயன்படமாட்டாய்!" என்றுள்.

"பரவாயில்லை, சொல்...முடிந்த வரையில் உதவுவேன்," என்றேன்.

'நீ சொல்லுவதும் உண்மைதான். என் காரியத்தில் ஈடுபட்டால் சிற்பிக்கு நேர்ந்ததுபோல் உனக்கும் ஏதாவது தீங்கு நேரலாம்...உன்மீது என்னையறியாமலே அன்பு பிறக்கிறது...ஆமாம், வேண்டாம்......நீ போ...நான் வேறு யாரையாவது..."

பேசிக்கொண்டே அவள் நடந்தாள். நான் அவளைத் தொடர்ந்து ஓடினேன். கல்லுருக்குள்ளே அவள் ஒன்றிக் கலந்தாள். என் தலை படீரென்று கல்லின்மீது மோதியது. கண் விழித்தேன். அழகியிலை. வடிவம் நின்றுகொண்டிருந்தது. கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டேன். சிலை ஒரு கணம் பெண்ணுகி என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தது. மூலஸ்தானததை எட்டிப் பார்த்தேன். 'கல் கல்' என்று சிலை செதுக்கும் ஓசை கேட்டது. நெஞ்சில் திகில் நிறைய சாலையின் பக்கம் ஓடினேன். சூரியன் அஸ்தமித்து இருள் எங்கும் பரவத்தொடங்கியிருந்தது.

கனவா? கற்பனையா? பிரமையா?

வளமான கற்பனை மனம் படைத்தவர்கள், கனவிலேகூட வாழ்கிருர்கள் என்று எங்கோ படித்தது என் நினைவுக்கு வந்தது.

★

விகடராமன் கவிதைகள் :



தமிழாக்கம் செய்யுமின்

க. அறிவழகன் எம்.ஏ.,

நாம் வாழுங்காலம் இருபதாம் நூற்ருண்டே என்ருலும் அல்லன வற்றை நீக்குவதும், நல்லனவற்றைத் தேர்ந்தெடுப்பதும் நாளும் எளிதில் கைக்கொள்ளக் கூடியமுறையாக்குவது இயலவில்லை. ஆதிக்கம் பெற்ற மொழியினை அகற்றி, தாய் மொழிக்கு உரிய இடம் தருதல்கூட எதிர்க்கப் படுகிறது. ஓங்கும்தமிழாக்கத்திற்கு அணைபோடும் ஆகாச் செயல்களைப் போலத்தான், உலக மொழிகள் பலவும் வளரும் காலத்தே எதிர்ப்புக்களும் எழுந்தன.

பைபிளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்த காரணத்திற்காக ஜான் விக்ளிப் தொல்லைக்கும் துயரத்திற்கும் ஆளானதும், உப நிசத்துக்களை உருதுவில் மொழி பெயர்த்த காரணத்தைக் காட்டி தாரசுகோவை அவனுடைய தம்பி ஔரங்கசீப் முடிதுறக்கச் செய்ததும், வேதத்தை வேறு மொழியில் சொல்லாதே என்ற மனுநீதி காலத்து பழக்கமும் மாறிவிட்டதென்ருலும் தமிழ் மொழி ஆக்கம், வேண்டப்படும் அளவு ஓம்பப்படவில்லை. தமிழகத்தில் தான் பற்றை 'வெறி' யென்றும், மொழியை 'கருவி' என்றும், முன்னேற்றத்தை 'முனகல்' என்றும், தூய்மையைத் ''துயரம்' என்றும் கருதுவோரைக் காண முடிகிறது. இங்கே படித்தவர்கள் அறிவை வளர்ப்பதை விட்டு வேற்று மொழியை வளர்ப்பதிலே அக்கறை செலுத்துகிருர்கள்.

தாய்மொழி தழைக்காமலிருப்பினும். புதியநூல்கள் தமிழ் மொழியில் எழுதப் படாமல் இருப்பினும், தாம் அறிவுபெற மகிழ்ச்சியுற, தம் புகழைப் பரப்ப ஆங்கிலம் இருந்தால் போதும், இப்போதே இந்தியையும் கற்றுக் கொள்வோம் என்ற எண்ணமும், ஆண்டிற்கு ஒரு முறை வெளிநாடுசென்று பேச, குலாவ 'உங்கள் மொழியிலும் என் வல்லமை பாரீர்' என்று எடுத்துரைக்கும் சிலபல தலைவர்களின்தன்மையும், அவர்களிடம் கட்டியங்கூறி காலந்தள்ளி வந்தால் போதும் என்றிருக்கும் வேறுபலரின் போக்கும், நீக்கப்படத்தக்க முறையில் அவர்கள் அறிவுக்கண் திறந்திடவும், அவர்களின் மொழிப்பற்று பெற்றிடவுமான நிலையில் இன்றைய தினம் மொழி உணர்ச்சி பெருகிவருகிறது. ஆனுலும் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழ் மொழியில் பெயர்ப்பதிலும் இன்னும் பிற்போக்குக் காணப்படுகிறது.

தேம்சு நதிக் கரையில் வாழ்வோர், 'ஏவுகணை' பொறியியலில் வளர்ந்திருக்கிற ருசிய மொழி நூல்களையும், காடுகளில் அலைந்து கொண்டிருக்கிற காங்கோ காட்டு மக்களின் நாட்டுப் பாடல்களையும், ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொண்டேயிருக்கிற இந்த நேரத்தில், எதையும், 'உங்கள் தாய்மொழியில் கற்றுக் கொள்ள உங்களால் முடியும்' என்று பிறர் கூறினும் ''எங்களால் முடியாது; முடியவே முடியாது'' என்று கூறுகிற போக்கு தமிழ்நாட்டில் தான் உள்ளது.

அரசாங்கத்தின் கருத்தடைப் பிரச்சாரத்தைப் போல், தமிழ்மொழி அறிவியல் நூற்களை பெறுவது இப்போது கூடாது, இயலாது என்ற கருத்துப் பரப்பப் படுகிறது,

குவளைநீர் குடிக்க கிணற்று நீரையே குறைக்க வேண்டுமென்று கூறுவது போல், வடநாட்டிற்குச் சென்ருல் இந்தி பேசத் தெரிய வேண்டும் என்பதற்காகத் தென்னுட்டு இளைஞரெல்லாம் இந்தியை வாழ்நாளெல்லாம் கற்க வேண்டும் என்று செப்புகின்றனர்.

கதிரவனின் வெப்பத்தால் கடல்நீர் கருநிற மேகமாகி மழை பொழிய, அதைக் குடித்து மகிழ்ந்தவன், கடல் நீர் தானே மழையாகப் பொழிந்தது, அதையே குடித்து மகிழ் என்று கூறுவதுபோல், ஆங்கிலம் ஒரு கடல் அதையே குடித்து வாழ் என்று கட்டளையிடுகின்றனர்.

'தனிமைச் சுவையுள்ள சொல்லை தமிழன்றி வேறெங்கும் யாங்கண்டதில்லை' என்று கூறப்படுகிற தமிழ் மொழியில், மொழிபெயர்க்க முடியுமா? என்று கேட்போரும், ஒன்றை மொழி பெயர்க்குமுன், ஓராயிரம் வேறு மொழிகளில் வெளிவருமே என்று அச்சுறுத்துவோரும் உள்ளனர்.

பிறப்பவரெல்லாம் இறத்தலால் மருத்துவத்துறையே வேண்டாமென்று நவில்வாரும் உளரோ? மேலை நாட்டினரின் அறிவியல் முன்னேற்றத்தைக் கண்டு மருண்டு இங்குள்ள அறிவியற் கூடங்கள் முடப்பட வேண்டுமென்றும் கூறுவாரோ? நூருயிரக் கணக்கில் நூல்கள் ஆங்கிலத்தில் வெளி வருகிறதாம்! ஆகவே உம்மொழியில் ஒரு நூலும் வேண்டாம்; பிற மொழியே படித்து பெரும் பலன் பெறுவீர் என்று பேசுகின்றனர்.

நல்ல மொழி பெயர்ப்பினுல் மக்களின் காலச் செலவு குறைகிறது; கருத்தழிவு தடுக்கப் படுகிறது;

பொருட் செலவு சிறுக்கிறது; பிற் போக்கு மறைகிறது.

கற்றும் பிறர்க்கு உரையாப் பேதையர் போல் வாழும் ஆங்கிலம் ஒன்றே அறிந்த தமிழர்களைவிட தரங்குறைந்த மொழி பெயர்ப்பாளர்கள் எவ்வளவோ மேல்.

நாட்டைக் காக்கும் மன்னனைக் 'காவலன் என்றும், நகரத்தைக் காப்பவரை 'காவலாளர் என்றும், பண்டையநாளிலிருந்து வழங்கிவரும் நம்மகத்தில் 'காவல் நிலையம்' புரியாத சொல்லாகவும், 'போலிஸ்) ஸ்டேஷன்கள்' புரியும் சொல்லாகவும் சிலருக்குத் தோற்றுகிறது! புரிந்ததே போதும்: புரியாதது வேண்டாம் என்று கடைசித் தாத்தோர் நிலையில் அவர் பேசுகின்றனர்

பிறமொழி 'மோகம்' தாய்மொழி வளர்ச்சியைத் தடுக்கும் நிலைக்குவளர்ந்திருக்கிறது. பிற மொழி நூற்களை தமிழாக்கும் வேலை பல்லாண்டுகளாக நடைபெற்றிருக்கு மாயின் பல்லாயிரக் கணக்கானவரின் பிறமொழி கற்கும் காலம் மிச்சப் பட்டிருக்கும். அருகேயுள்ள ஆங்கிலேயரின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சி ஓய்ந்துவிடாமல் தங்கள் தங்கள் மொழிகளிலே நூற்களை எழுதவும் விஞ்ஞான நுட்பங்களை ஆராயவும், ஐரோப்பாவில் உள்ள சின்னஞ்சிறு நாடுகள் பெற்றிருக்கும் வெற்றியை நோக்குவோரும், சப்பான், செர்மனி ருசியா முதலிய நாடுகளின் முன்னேற்றத்தை அறிவோரும், ஆங்கிலம் என்ற ஒரே மொழியில் அனைத்தும் அடங்கியிருக்கிற தென்றே, அதைத் தமிழில் மொழி பெயர்க்க முடியாதென்றே, மொழி பெயர்த்தால் புரியாதென்றே கூறுர்.

தமிழ் மொழி தகுதியுடையதா என்றும் விஞ்ஞானச் சொற்கட்கு ஏற்ற சொற்கள் உண்டாஎன்றும் பௌதிகமும், புதுக்கலைகள் பலவும் தமிழில் ஆக்கம் பெற்றிருக்கிறதா என்றும் கேட்போர் நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறுவதைக் காண்க. 'மேனாட்டார், புத்தறிவு பெருமளவுக்கு உதவாத கலன்களென அவர்தம் மொழிகளை புறக்கணித்துப் புதுமொழிகள் தேடிவளர்க்கவில்லை,

மொழிபெயர்ப்பில் கைக்கொள்ளப் பட வேண்டிய முறைகள் நோக்குதற் குரியன. தமிழில் பெயர்க்க முடியாத அறிவியற் சொற்கட்கு ஆங்கில சொற்களையே கையாளலாம். ஆனால் ஆங்கிலேயர் சொற்களைக் கடன் வாங்குவதையே தொழிலாகக் கொள்ளாது, புத்தம் புதிய சொற்களை ஆங்கிலத்தில் ஆக்கிக்கொண்டவர் என்பதறிதல் நன்று. 'கட்டமரான்' என்று மருவிய தமிழ்ச் சொல்லை தங்கள் மொழியில் ஏற்றுக் கொண்டாலும், முருங்கக் காயை, 'டிரம்ஸ்டிக்' என்றும், வெண்டைக்காயை 'லேடிஸ் பிங்கர்' என்றும் தங்கள் மொழியில் பெயர்த்தனரே அன்றி தங்கள் மொழியில் இல்லாத ஒரு பொருளின் பெயரைக்கூட அவ்வாறே பயன்படுத்தினரல்லர்.

மொழி பெயர்ப்பு, புரியாத கடின நடையில் இருப்பதில் பலனில்லை. சொல்லைவிட கருத்தில் கவனம் செலுத்தலும் நன்றும்.

மொழி பெயர்க்கும்போது இயற்கைப் பொருட்களின் பெயர்கள் அறிய விரும்புவோர், குறிஞ்சிப் பாட்டினையும், சமயச் சொற்கள் வேண்டுவோர், முத்தியிலம்பகம் சமயக் கணக்கர் திறங் கேட்ட காதை, சீவகசிந்தாமணி, தேவாரம், திருப்பாசுரம் போன்ற நூற்களையும், அரசியல், வாழ்வியல், பொருளியல்பற்றி எழுத விரும்புவோர், திருக்குறள், புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற நூற்களையும், வடமொழிச் சொற்களை தமிழாக்கம் செய்ய விரும்புவோர் கம்பராமாயணத்தையும் இன்ன பிற தமிழிலக்கியங்களின் ஆட்சிச் சொற்களைத் தழுவிக்கொள்ளுதல் வேண்டற் பாலதாகும்.

ஒரு மொழிக்கே உரிய சொற்கள் மொழிபெயர்ப்புக்குக் கிடைக்காமற் போகின் புதியவற்றைப் படைத்துக் கொள்ளலாம். இப்படைப்பு நன்கு உணர்ந்து செய்தல் வேண்டும்.

மொழி பெயர்ப்புத் துறையில் 'ரெவரன்ட் பெஸ்கி' ஆகிய வீரமா முனிவரும் தன்னை ஒரு தமிழ் மாணவனென்று தன் கல்லறையில் பொறிக்கச் சொன்ன சி. யூ. போப்பும், உரையும் பாட்டும் விரவிய முறையில் சாகுந்தலத்தை மொழிபெயர்த்த மறை மலை அடிகளும், 1862-ல் தமிழ் ஆங்கில அகராதியைச் செய்த வின்ஸ்லோ பாதிரியாரும், மிருகச் சடகத்தைத் தமிழில் 'மண்ணியல் சிறு தேர்' என மொழி பெயர்த்த பண்டித மணியும், உலகவரலாற்றை எழுதிய பரிதிமாற்கலைஞனும், உமர்கயாம் பாடல்களை, 'பிட்ச்கெரால்டு' ஆங்கிலக் கவிதைகளாக்க, அதைத் தமிழிலே பெயர்த்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும், ஷேக்ஸ்பியரை மொழிபெயர்த்தநாடகத் தந்தை பம்மல் சம்பந்தனும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு துணைபுரிந்த தகைமையாளராவர். இன்று டாக்டர் சிதம்பரனுர் தலைமையில் இயங்கும் அகராதித் தயாரிப்பும், கலைக் களஞ்சியமும், தென்னகப் புத்தக 'டிரஸ்டும்' சென்னை அரசாங்கத் தமிழ் வளர்ச்சிக் குழுவும் இந்தத் துறையில் பணியாற்றி வருகின்றன.

போர்க் காலத்தில் வாள்வடிக்கும் உலைக்கூடம் போல் நாளும் ஆயிரக் கணக்கான ஆங்கிலச் சொற்களை மிக வேகமாக மொழி பெயர்க்கும் பத்திரிகாசிரியர்கள் பாராட்டத் தக்கவராவர்.

மைசூர் கவர்னர் உயர்திரு சயராம ராசர் சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் குறிப்பிட்டது இங்கு நினைவு கூறத்தக்கதாகும்:-

"Things would have been easier and the problem would not have been so acute, if in the last hundred years of English Education our intelligentsia had in addition to mastering english also engaged themselves in embodying occidental learning and science in books in our own languages. western learning could then have percolated to the masses and the spread of the technical knowledge of the west would have been rendered easier while at the same time the modern development of our own languages would have been greatly promoted"

அவர் குறிப்பிட்டதாவது,

"ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற கடந்த ஒரு நூறு ஆண்டில், படித்த நம்மவர்கள், ஆங்கிலத்தில் திறனை வளர்த்துக் கொண்டதோடு அல்லாமல், கற்ற மேல்நாட்டு கலை விஞ்ஞான அறிவை நம்முடைய தாய் மொழிகளில் எழுதியிருப்பார்களேயானுல் இந்தப் பிரச்சினை எளிதாகவும் இருந்திருக்கும். இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது.

★

கள்வன்

ப.சி.அ. வணங்காமுடி

''கட்டாயம் போலீசில் சொல்லித்தான் தீரவேண்டும். இப்படியே விட்டுவிட்டால், நாளைக்கு வீடே களவுபோனாலும் போய்விடும்.'' மிகுந்த ஆத்திரத்தோடு பொன்னப்பன் கத்தினார்.

''ஒன்றா? இரண்டா? முதலில் மோதிரம்; பிறகு வளையல்; அப்புறம் சங்கிலி; வைரக்கம்மல்; கடிகாரம் என்று, களவுபோய்க் கொண்டே யிருந்தால் கையைக் கட்டிக்கொண்டு இருக்க முடியுமா ?''

பொதுவாகப் பொன்னப்பன் நிதானமானவர்;

சிறு சிறு நகைகளாக இது வரையில் அவர் வீட்டில் களவாடப்பட்டு வந்தன. போகட்டும் என்று இருந்துவிட்டார். இப்போது விருந்துக்கு வந்த மாமனாரின் வைரக் கடிகாரச் சங்கிலியைக் காணோம். அதனால்தான் அவரால் அடக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

''நான் சொல்வதைக் கேளுங்கள். ஏன் இப்படிப் படபட வென்று பேசுகிறீர்கள்? போலீசில் போய்ச் சொன்னால் வந்து விடுமா? போலீசென்றால் இலை சாக்கும். களவுபோன துன்பத்தைவிடப் பன்மடங்கு அல்லலை அவர்கள் நமக்கு உண்டாக்கி விடுவார்கள்'' என்று பத்மாவதி தன் கணவரின் ஆத்திரத்தை அடக்கினாள்.

''பத்மாவதி உனக்கு ஆறு பிள்ளைப் பெற்றும் அறிவு வரவில்லை. இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வராவிட்டால் அதைப் போன்ற கேவலம் வேறு இல்லை.''

''எல்லாம் எனக்குத் தெரியும். போலீசுக்குப் போனால் தான் கேவலம்.''

பலதடவைகளில் களவுநடந்த பின்னால் இவ்வாறு தான் பத்மாவதி சொல்வாள். அவளுடைய நகைகளே பெரும்பாலும் களவு போயிருக்கின்றன இருந்தாலும் அதற்காக அவள் கவலைப்படுவதும், ஆத்திரமடைவதும் இல்லை.

''நமக்குத் தேவைக்குமேல் நகைகளிருப்பதால்தான் இப்படித் திடீர் திடீரென்று மறைந்து விடுகின்றன'' என்று வேதாந்தம் பேசுவாள்.

''போனால் போகிறது'' என்று பொன்னப்பன் ஒவ்வொரு முறையும் விட்டுவிடுவார். மனைவி சொல்வது சரிதான் என்று அமைதிப்பட்டு விடுவார். ஆனால் இன்று நிலைமை வேறுவிதமாக இருந்தது. கட்டாயம் போலீசுக்குப் போகவேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்றார்.

அவருடைய மூத்த மகன் வீட்டுக்கு அடங்காத பிள்ளை. அந்தப் பையன் ஒருவேளை தன் வீட்டு நகைகளையே திருடலாம் என்றாலும், அப்படி எண்ணிப் பார்க்க அவளுக்கு மனம் ஒப்பவில்லை.

அந்தப் பிள்ளை பணத்தைக் கேளாமல் எடுத்துச் செல்வது உண்டு. எத்தனையோ தடவைகள் அம்மாதிரிச் செய்து மிருந்தான். ஆனால் ரொக்கபணத்தை இரும்புப் பெட்டியில் வைத்துத் திறவுகோலை மடியிலேயேபொன்னப்பன் கட்டிக்கொண்ட பின்னர் பணத்தை அவன் எடுக்கும் வழக்கம் குறைந்தது.

குறைந்தது என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் எப்போதோ ஒரு வேளையில் இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் இரும்புப்பெட்டியிலிருந்து பணம் எடுக்கப்பட்டிருந்தது. மகன்மீது ஐயப்பட்டு அவர் பாயப் போன போதுதான், அவன் ஊரை விட்டே ஓடிப்போனான் என்று தெரிய வந்தது. அப்போதும் பத்மாவதிதான் குறுக்கே வந்து விழுந்தாள்.

ஊரைவிட்டுச் சென்ற மகன் ஒரு திங்களுக்குப் பிறகு திரும்பி வந்தான். வந்தபோது கேட்டதற்குப் பணத்தைப்பற்றித் தனக்குத் தெரியவே தெரியாது என்று சாதித்தான். அப்புறம் ஒருவழியாக மகனைப் பொன்னப்பன் மன்னித்துவிட்டார்.

ஆனால் வீட்டில் களவுபோகும் போதெல்லாம் அவர்களுக்கு மகன் நினைவுதான் வரும். மகனோ குற்றமற்றவன் என்று கூறி விடுவான். பொன்னப்பா மகனை நம்பினார். அந்த நம்பிக்கை யிருந்ததால்தான், தன்

மாமனுரின் வைரச் சங்கிலி களவு போனபோதும் மகனைக் குற்ற வாளியென்று கருத அவரால் இயலவில்லை.

பத்மாவதி மன்ருடியும், கெஞ்சியும், பயனில்லை. கட்டாயம் காவல் நிலையம் போவேன் என்று நின்ருர். இருபத்தைந் தாண்டுத் திருமண வாழ்க்கையால் அவர் மனைவியின் சொல்லை மீறிச் செய்த முதல் செயல் இதுதான்.

''இனிமேல் களவு போகாதபடி நாம் எச்சரிக்கையாக இருந்து கொள்வோம். இதுவே கடைசித் திருட்டாக இருக்கும்படி நடப்போம். தயவுசெய்து போலீசாரிடம் போய் வீட்டின் பெருமையைக் கெடுத்துவிடாதீர்கள்.''

பத்மாவதி மன்ருடுவதன் பொருள் விளங்கவில்லை.

''திருடியது யாராக இருந்தாலும் சரி. அவனைப் பிடித்தே ஆக வேண்டும்'' என்று கூறிவிட்டு விர்ரென்று வெளியேறினுர்.

★

கோமதிநாயகம் முதன்முதலாக சப்-இன்ஸ்பெக்டர் தேர்வில் தேறிப் பதவியேற்ற ஊர் வெற்றியூர். ஒரு காலத்தில் அதிகமாகக் குழப்பம் நிறைந்த ஊராக இருந்தது.

ஊரையே கிடுகிடுக்க வைத்த கல் ஆறுமுகம், மனிதர்களை ஆடுகளைப்போல் வெட்டிக் குவித்த மகாலிங்கம், பெருங் கூட்டத்தையே தன்னந் தனியாக எதிர்த்துநின்று விரட்டிய சேட் இராமையா, எவருக்கும் அஞ்சாத எமன் ஆகிய பெரிய சண்டியர்கள் முன்னர் இருந்தனர். பாண்டியன் பிள்ளை என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டர் அவர்களை ஒருவரோ டொருவர் மோதச்செய்து ஒழித்துவிட்டார்.

ஆனுல்கோமதிநாயகம்தம்பதவிக்குவந்த காலத்தில் போரொழிந்து அமைதியடைந்த நாட்டைப்போல் ஊர் இருந்தது. சில்லறைக் குற்றங்கள் மட்டும் நடக்கும். அவையும் உடனே வெளியாகிவிடும்.

இப்படிப்பட்ட ஊரின் செல்வாக்கு மிக்க ஒரு குடும்பத்தில் பெருமதிப்புள்ள நகைகள் களவு போய்க்கொண்டே இருப்பதைக் கேட்கவும், கோமதிக்கு அதிர்ச்சியே ஏற்பட்டது என்று கூறலாம்.

''நீங்கள் ஆரம்பத்திலேயே வந்திருக்க வேண்டும். களவை நீங்களே நடக்க அனுமதித்தது போல நடந்துகொண்டு விட்டீர்கள்.'' என்று பொன்னப்பனிடம் கோமதி சலிப்பாகச் சொன்னுர்.

''உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் ?''

''ஐந்து ஆண்களும், ஒரு பெண்ணு மிருக்கிருர்கள்.''

''பெண்ணுக்கு வயது என்ன ?''

''பதினேழு வயது நடக்கிறது.''

''என் மகள்மீது சந்தேகமா?''

''எனக்கு யார்மீதும் ஐயப்பாடில்லை. களவு பெரும்பாலும் பகலில்தான் நடந்திருக்கிறது அல்லது அந்நியர் இல்லாத நிலையில், வீட்டாரே இருக்கும் வேளைகளில் திருட்டுப் போயிருக்கிறது. குறிப்பிட்டு இவர்தான் எடுத்திருப்பார் என்று யாரையும் உங்களால் கூற முடியவில்லை.''

''அதனுல் களவாடியவர்கள் எங்கள் வீட்டிலேயே இருக்கிருர்கள் என்கிறீர்களா ?''

''இல்லை. களவாடியவர்**கள்** அல்ல. **களவாடியவர்**.''

''எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்லி விட்டீர்கள் ?''

''நிச்சயமாகச் சொல்லவில்லை. **இருக்கக்கூடும்** என்பது என் கருத்து.''

கோமதி இவ்வாறு சொன்னதும் பொன்னப்பன் அவரை உற்றுப் பார்த்தார்.

''என் மனைவி சொன்னது சரியாய்ப் போயிற்று.''

''பொதுவாகப் பெண்களின் சொல்லில் நூற்றுக்குத் தொண்ணூறு பலிக்கும்'' என்று கோமதி சிரித்துக்கொண்டே சொன்னுர்.

அந்நேரம் நிலைய எழுத்தர் மணியமும், தலைமைக் காவலர் நல்லசிவமும் கோமதிநாயகத்தின் அறைக்குள் வந்தனர்.

''என்ன வேண்டும்?''

''ஒரு களவு. சண்முகம் என்னும் சமையல்காரன் காசுமாலையொன்றை விற்கப் போகும் போது பிடித்து விட்டோம். ஆசாமி இந்த ஊர்க்காரன்.''

''ஆளைப் பிறகு பார்க்கலாம். முதலில் நகையைக் கொண்டு வாருங்கள்.''

''நகை இதோ இருக்கிறது'', என்று தாளில் மடித்திருந்த நகையை எடுத்துக் கோமதியின் கையில் நல்லசிவம் கொடுத்தார்.

நகை கோமதி கைக்கு வரும் போதே, ''இது என் மனைவியின் நகைதான்' என்று பொன்னப்பன் குதித்துக் கூவினுர்.

''அப்படியா ? அடையாளம் எதுவும் உண்டா ?''

''உண்டு. எல்லாக் காசுகளிலும் என் பெயரும் என் மனைவியின் பெயரும் பொறித்திருக்கும். இது களவுபோய் ஓராண்டுக்குமேல் இருக்குமே !''

நகையை ஆராய்ந்த கோமதி ''இது உங்கள் நகைதான்'' என்ருர். ''நல்லசிவம், அந்த ஆளை உள்ளே வரச் சொல்லுங்கள்.''

★

சண்முகத்திற்கு நாற்பத்தைந்து வயது இருக்கும். சமையல் வேலையே அவன் தொழில். யாருமில்லாத அவனுக்கு மனைவியும் இல்லை; அதனுல் மக்களும் இல்லை. நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரையில் ''காடு பரதேசமாகத்'' திரிந்த சண்முகத்தின் கையில், அணிமைக் காலத்தில் பணம் நிறையப் புரளுவதாக ஊரில் சிலர் பேசிக் கொண்டனர்.

எப்படி இவனுக்குப் பணம் வந்தது என்பதை யாரும் அறிய

வில்லே. அது இப்போது வெளிப் பட்டுவிட்டது.

பார்த்தால் திருடன்போல அவன் இல்லை. சண்முகத்தையே வைத்த விழிவாங்காமல் கோமதி நாயகம் பார்த்தார்.

"இந்த நகை உன் கைக்கு எப்படி வந்தது என்பதை நீ சொல்லாவிட்டால், சிறைக்குப் போவதற்குள் இங்கே சித்திர வதைக்கு உள்ளாவாய். நீசெய்த திருட்டுக்கள் என்ன? திருடியவை எங்கே உள்ளன; எங்கே விற்ருய் என்பனவற்றை இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் சொல்லாவிட்டால் உன்னை நான் என்ன செய்வேனென்று எனக்குத் தெரியாது."

இதன்பின் சண்முகத்தை அழைத்துச் சென்று விட்டார்கள். சண்முகம் பொன்னப்பனையே பார்த்துக்கொண்டு போனுன்.

சற்று நேரத்தில் நல்லசிவத்தைக் கோமதி அழைத்தார். "நல்லசிவம் சண்முகம் இருந்த வீடு; அவன் பழகிய இடங்கள் அனைத்தையும் துருவித் துப்புடன் வரவேண்டும். போங்கள். அந்த வேலையைப் பாருங்கள்."

பொன்னப்பன் பக்கம்திரும்பி, "இவனை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியும்," என்று கடுப்போடு சொன்னுர்.

"தெரிந்தால் கொஞ்சம் சொல்லுங்கள்."

"என் பெரியப்பாவின் மகன். பெற்ருேர் தேடிய சொத்தை அழித்து விட்டுக் கடைசியில் திருடனுகத் திரிகிருன்."

"உங்கள் வீட்டிற்கு வருவானு?"

"இல்லை. நாங்கள் அவனைத் தள்ளி வைத்துவிட்டோம்."

"ஒருவருமறியாமல் வீட்டிற்குள் வந்து திருடி யிருப்பானே?"

"தெரியவில்லை...என் மனைவி சொன்னது சரியாகிவிட்டது..." என்று முன்னுக்குப் பின் முரணுகப் பேசினுர்.

"இன்சுபெக்டர் நான் வருகிறேன். சற்றுமுன் நான் கொடுத்த புகாரைப் பதிவு செய்ய



வேண்டாம். விட்டு விடுங்கள். என் மனைவி சொன்னது சரியாகி விட்டது.''

மறுமொழிக்குக் காத்திராமல் பொன்னப்பன் வெளியேறினர். கோமதியும் அவரைத் தடுக்க வில்லை.

''மணியம், சண்முகத்தைக் கொண்டு வாருங்கள்.''

முன்புபோல் அவன் வந்து நின்ருன்.

''சண்முகம் உண்மையைச் சொன்னுல் விட்டுவிடுவேன்.''

நிமிர்ந்து சண்முகம் அவரைப் பார்த்தான்.

''என்னுல் உண்மையைச் சொல்ல முடியாது.''

''அப்படியா சேதி? உன்னை வதை செய்வோம்.''

''செய்யலாம். ஆனுல் சொல்வதற்கு என்னிடம் பொய்யைத் தவிர வேறென்றும் இல்லை. என்னைப்பற்றி என் தம்பி பொன்னப்பன் சொல்லவில்லையா?''

''சொன்னுரே அவர் மனைவி சொன்னது சரியென்றும் கூடச் சொன்னுர். அதனுல் வைரச் சங்கிலி களவுபோனது குறித்துக் கொடுக்கவந்த புகாரைக் கூடப் பதியவில்லை.''

''என்ன? அவன் மனைவி சொன்னது சரியா?''

''ஆமாம்.''

''அப்படியானுல் எல்லாளற்றையும் பத்மாவதி சொல்லிவிட்டாளா?''

நாக்கையும், உதடுகளையும் மீறி இச் சொற்கள் அவன் வாயிலிருந்து வந்துவிட்டன. இது தான் வேளையென்று கோமதி நாயகம் பற்றிக் கொண்டார்.

''ஆமாம். என்னிடமும் அவள் சொன்னுள். ஆனுல் நான் நம்ப வில்லை. இப்போது நம்புகிறேன்.''

''அப்படி அவள் என்னதான் சொன்னுள்?''

எங்கோ ஒரு மூலையில், ஆழத்தில், அடித்தளத்தில் அமிழ்ந்து போய்க் கிடந்த உண்மையை வரவழைத்து விட்டோமே என்ற மகிழ்ச்சியின் கோமதி புன்னகை பூத்தார். எரிமலை குமுறட்டும்; ஊற்றுப் பெருகட்டும்; ஆறு கரை புரளட்டும் என்று அவர் வாய்பேசாமல் இதழ்க் கடையை விரித்து ஓசைப்படாமல் சிரித்தார்.

''பத்மாவதி ஏன் சொன்னுள்?''

அவனே எழுப்பிய வினவுக்கு அவனே விடை சொல்லட்டும் என்று மீண்டும் அவர் இதழ் மட்டும் அசைத்துச் சிரித்தார்.

''அவள் தன்னை மறந்துவிட்டாள். தான் பெரிப வீட்டுப் பெண்; பெரிய இடத்து மருமகள்; ஆறு பிள்ளைகளுக்குத் தாய் என்பதை அவர் கருதிப் பார்க்கவில்லை.''

சண்முகம் குமுறிக்கொண்டே போனுன். இனி அவனை பேச விடக்கூடாது என்று கோமதி குறுக்கிட்டார்.

''உனக்கு ஏன் இத்தனை ஆத்திரம்? நாளைக்கு நீதிமன்றத்தில் வந்து நின்றுகொண்டு உனக்குப் பரிந்து அவள் பேசப் போகிருள்.''

''இந்தக் கள்வனுக்கா?''

''நீ, கள்வன் இல்லை. நல்லவன்.''

''நான் கள்வனேதான்.''

★

அவன் கள்வன் என்பதற்கு ஆயிரம் சான்றுகள் வேண்டாம். பொன்னப்பரின் வீட்டில் களவுபோன நகைகளில் பல அவன் வீட்டிலிருந்து எடுக்கப் பட்டதே போதும்,

மேலும் தான் கள்வன் என்று அவனே ஒப்புகிருன். ஆனுல் கோமதி மட்டும் அவனைக் கள்வனில்லையென்று ஏன் சொல்ல வேண்டும்?

''சில குற்றங்களை ஆராய்ந்து துப்புத் துலக்கி இறுதியில் உண்மையை அறியும்போது, துப்பறிபவனே, குற்றவாளிக்காக இரங்கும் நிலை உண்டாகி விடுகிறது. அதுபோன்ற வழக்குகளில் இதுவும் ஒன்று. சண்முகம் குற்றவாளிதான். ஆனுல் கள்வனன்று என்பது என் கருத்து,'' என்று கோமதிநாயகம் வழக்குத் தொடரு முன்னுல் அரசாங்க வழக்குரைஞனிடம் கூறினுர்.

தொடர்ந்து அவர் கூறினுர் :-

''இது ஒரு துன்பம் நிறைந்த காதல் காதை. ஆனுல் அதைத் தொடர்புடையவர்கள் வாயால் நான் அறிந்துகொள்ள முடிய வில்லை.''

''கொஞ்சம் விவரமாகச்சொல்லுங்கள்.''

''இதற்குமேல் என்னுல் விளக்கமாகக் கூறமுடியாது. ஏனென்ருல் ஒரு தாயை மாசுபடுத்திக் கூறியவன் என்ற பழி எனக்கு வந்து சேரும்.''

''அதெப்படி? என்னுல் இதை ஏற்றுக்கொள்ள முடியாது.''

''ஒரு பெரிய வீட்டுப் பெண் மனத்திற் கிசைந்தவனை மனத்தில் வரித்தாள். ஆனுல்வேருெருவனுக்கு மணப் பந்தலில் வாழ்க்கைப்பட்டாள். தன் அன்புக்குரியவன் ஏழையாவதையும், துன்புறுவதையும் பொறுக்க முடியாமல் தன் நகைகளையும், கணவனின் பணத்தையும் அள்ளிக் கொடுத்தாள். தன் செயல்மூலம் அவன் உயர்ந்துவிட முடியும் என்று நம்பினுள். அவன் மறுத்தும் அவள் கேட்கவில்லை.''

''இதென்ன புதிர் போடுகிறீர்கள்?''

''புதிர்தான் இது. நான் இந்த வழக்கை ஆராய்ந்து கடைசியாகப் பெற்றது இந்தப் புதிர்தான். அதன் முடிச்சை அவிழ்க்க முடியாது நான் இருப்பதால்தான், சண்முகத்திற்குச் சட்டம் கள்வன் என்ற பெயரைத் தரப் போகிறது. ஆனுல் அவன் கள்வனல்ல.''

தமிழ் இன்னமுதம்

என்ன சுகம்! ஆகா! என்ன சுகம்!—மாறா
இளமைத் தமிழ்ச் சிரிப்பில் என்ன சுகம்!

என்ன சுகம்—ஆகா......

சின்னமுகம் கோடிச்
சித்திரங்கள் காட்டும்
தென்னமுதாம் தமிழ்
இன்னமுதை நினைந்தால்

என்ன சுகம்—ஆகா......

கன்னியர் தோகைமயில்!
காளையர் சிங்கம்!
காதல் பிறந்துவிட்டால்
கலைநயம் பொங்கும்
பொன்னி நதிவளர்க்கும்
புதுப்புனல் நாதம்
புவனங்கள் யாவினுக்கும்
தரு மெழிற் கீதம்!

என்ன சுகம்—ஆகா......

முத்துக் குவித்திருக்கும்
சேரலர் மங்கை!
முல்லைப் படையெடுக்கும்
பாண்டிய நங்கை!
மொத்தத் தமிழ் உருவம்
சோழர்தம் தங்கம்!
மூவரும் சேர்ந்து வந்து
காவிரி ஓரம் நின்றால்!

என்ன சுகம்—ஆகா......

—'மாங்கனி' காவியம்

பாடல்: கவிஞர் கண்ணதாசன்   ஆடல்: திருமதி எல். விசயலட்சுமி
படங்கள்: சாமுவேல்

என்ன சுகம்! ஆகா என்ன
சுகம் - மாற
இளமைத் தமிழ்ச்சிரிப்பில்
என்ன சுகம்....

.... சின்ன முகம் ....

....கோடிச் சித்திரங்கள்
காட்டும்.....

கன்னியர் தோகை மயில்



காளையர்
சிங்கம்



காதல் பிறந்து விட்டால்
கலைநயம் பொங்கும்

பொன்னி நதி வளர்க்கும்
புதுப்புனல் நாதம்
முத்துக் குவிந்திருக்கும்
சேரலர் மங்கை
முல்லைப் படை எடுக்கும்
பாண்டிய நங்கை....
மொத்தம் தமிழ் உருவம்
சோழர்தம் தங்கம்

காட்சி 1.

இடம்
பூகம்ப விலாஸ்

பாத்திரங்கள்
ராணி
நிருபர்
நாயகம்

[சினிமா வில்லன் என்ற பத்திரிகையின் நிருபர், பூகம்ப விலாஸ் பங்களாவின், முன் பகுதியிலுள்ள சோபாவில் அமைதியுடன் தூங்கிக்கொண்டிருக்கிறார். நடிகை ராணியின் நாய் காலடியில் கிடந்த பழைய



செருப்பைச் சுவைத்துத் தின்று கொண்டிருக்கிறது! அங்கு வந்த மானேஜர் நாயகம் [மிகவும் ஆத்திரத்தோடு]

நாயகம் :- யாருய்யா இது? யோவ் இதென்ன சத்திரமா சாவடியா? இங்கே வந்து தூங்கிக்கிட்டு? யோவ்...

[திடுக்கிட்டு விழித்த சினிமா வில்லன் பத்திரிகைநிருபர்]

நிருபர் :- மன்னிக்கணும்! தினசரி பத்து மணிக்கு ஆபீஸிலே தூங்கித் தூங்கிப் பழக்கமாயிடுச்சு!

நாய :- அடப்பாவி! இதென்னய்யா? நீ உன் செருப்பை என் நாய் முன்னுடி போட்டு, நாய் உன் செருப்பிலே பாதியைத் தின்னுடுச்சே!

நிரு :- என் செருப்பா? அய்யய்யோ! இன்னிக்குத்தான் சார் கஷ்டப் பட்டுக் கடன் சொல்லி வாங்கிட்டு வந்தேன்!

நாய :- அநியாயமாய் என் நாய் வயித்தைக் கெடுத்திட்டீரே ஐயா...! இப்ப அது வயித்துக்குள்ளே இருக்கிற பாதிச் செருப்பை நான் எப்படிய்யா எடுக்கிறது? எடுக்கல லேன்னு, அது உயிருக்கே ஆபத்தாச்சே?

நிரு :- இந்தச் செருப்பில்லாமே என் வீட்டுக்குப் போனு என் உயிருக்கே ஆபத்தாச்சுங்களே சார்! நம்ம ஒய்பு ரொம்பக் கண்டிப்பானவ சார்!

நாய :- நம்ம என்னய்யா நம்ம? உன் ஒய்புன்னு சொல்லித் தொலையேய்யா!

நிரு :- ஆமா சார்!

நாய :- யாருய்யா நீர்? எதுக்கு இங்கே வந்தே? உனக்கு இப்போ என்ன வேணும்?

நிரு :- நான் சினிமா வில்லன் என்ற பத்திரிகையின் நிருபர் சார்.

நாய :- ஆ...நீதானு அது? டேய்! ஏண்டா...

[நாயகம் பாய்ந்து நிருபரின் சட்டையை எட்டிப் பிடித்துக் கொண்டு]

நீதானே புயல் ராணிக்குக் கல்யாணமே ஆகல்லே, அவகூட இருக்கிறது நாயகம் ஒன்னு, நாய் ஒனனுன்னு எழுதினது?

நிரு :- அய்யய்யோ! சட்டையை விடுங்க! இந்த ஒரே சட்டைதான் இப்போ எங்கிட்ட இருக்கிறது! இது கிழிஞ்சு போச்சுன்னு இரவல் குடுத்த இந்தச் சட்டையின் சொந்

தக்காரன் என் உடம்பைக் கிழிச் சுடுவான்!

நாய :- அவன் என்னய்யா நானே உன்னே உடைச்சுக் கிழிச்சுக் குரோட் டன்சுக்கு உரமாப் போட்டுர்றேன்!

நிரு :- வேண்டாம் சார், நான் இப்பத் தான் கல்யாணமானவன்?

நாய :- பின்னே ஏன் ஐயா அப்படி எழுதினே?

நிரு :- அது நான் இல்லே சார்! நான் வேலே பார்க்கிற சினிமா வில்லன் பத்திரிகை ஆசிரியர் சிவக்கொழுந்து சார்!

நாய :- அந்தக் கொழுந்தைக் கிள்ளி எறியறேன் பாரு! ஏன்ய்யா, இப் போ நீ எங்கே வந்தே?

நிரு :- பொன்னம்மாவைப் பேட்டி கண்டு அவுங்க வாழ்க்கை வரலா றை எழுதலாம்னு வந்தேன் சார்!

நாய :- எவ்வளவு திமிரு உனக்கு? என் பெண்டாட்டி வாழ்க்கை வரலா றை நீ யாருடா கேக்குறது? நீ எதுக்குடா எழுதுறது?

நிரு :- சினிமா நடிகங்க எல்லாருமே வாழ்க்கை வரலாறைச் சொல்றுங்க; நாங்களும் தொடர்ந்து எழுதுறேம் சார்!

நாய :- ஓகோ! அப்படின்னு முதல்லே புயல்ராணி புருஷன் வரலாறுன்னு என் வரலாறை எழுது, அப்புறம் அவ வரலாறை எழுதலாம்!

நிரு :- சரி சார், சொல்லுங்க சார்!

[நிருபர் பேப்பரையும் பேனு வையும் எடுத்துக் கொண்டு எழுத உட்காருகிருர்.]

நாய :- என் முகத்தை ஏன்ய்யா பாக் குறே? எழுதுய்யா! காட்டூர் ஜில்லா கரடிப்பட்டி கிராமம், சிங்கண்ண முதலியார் மகன் நாகலிங்கம் என்ற நாயகம், சின்ன வயசிலே வீட்டுலே நெல்லேத் திருடி வித்துட் டான்னு அவுங்க அப்பா அவனே அடிக்கப்போயி, அவன் ஊரை விட்டே திருட்டு ரயிலேறிப் பட்டணத் துக்கு வந்து......

நிரு :- வந்து...வந்து...

நாய :- என்னய்யா வந்து? என்ன இது! ஒண்ணுமே எழுதாமே வெறும் பேப்பரை வச்சிருக்கே?

நிரு :- பேனுவிலே மை இல்லீங்க...

நாய :- மை இல்லியா? கொஞ்சம் இப்படியே இருங்க, உள்ளேபோயி மை எடுத்தாரேன்!

[நாயகம் உள்ளே சென்ற தும்,நிருபர் நைஸாகக்கீழே கிடந்த செருப்பை கையில் எடுத்துக்கொண்டு ஓடுகி ருன்! நாய்உறுமிக் கொண்டு அவனேத் துரத்துகிறது! துரத்திய நாய், நிருபர் வேஷ்டியைப் பிடித்து இழுக்கிறது! வேஷ்டி பாதி கிழிந்துவிடுகிறது! நிருபர், தன் கையிலிருந்த ஒரு செருப்பை நாய்மீது, விட் டெறிய, அப்போதுதான் உள்ளிருந்து தற்செயலாக வெளியே வந்த புயல்ராணி யின் முகத்திற் போய் செருப்பு விழுகிறது! அலறித் திரும்பிய புயல் ராணி, திறந்த மைப்புட்டி யுடன் வந்த நாயகத்தின் மீது மோதிக்கொள்ள, மை முழுவதும் புயல்ராணியின் முகத்தில் கொட்டி விடு கிறது!]

புயல்ராணி : அடப்பாவி மனுஷா! ஒரு மணி நேரம் உட்கார்ந்து போட்ட மேக்கப்பை நீ ஒரு நிமிஷத் திலே தொலேச்சுட்டியே! இப்ப நான் ஸ்டுடியோவுக்கு எப்படிப் போறது?

நாய : சும்மா முகத்தைத் துடைச்சிக் கிட்டுப் போ!

புயல் : என் சொந்த முகத்தோடே நான் போனு எந்தப் படத்திலே எவன்யா எனக்குச் சான்ஸ் குடுப் பான்?

நாய : ஏன், மேக்கப் போட்டதுக்கப் புறம் உன்னே நீ மேனகைன்னு நினேச்சுக்கிட்டிருக்கியா? சூர்ப்ப னகை மாதிரி கோரமாவில்லே இருக்கே!

புயல் : யோவ்! என்ன சொன்னே? சூர்ப்பனகையா? வேலேக்காரனு வந்த நீ, வீட்டுக்காரனு மாறி, இப்ப என்னேக் கேட்டுக்கு வெளியே போன்னுகூடச் சொல்லிடுவே போலிருக்கே!

நாய : இந்தா பொன்னம்மா, நீ புயலா இருக்கலாம், இல்லே சினிமா ராணியா இருக்கலாம்! ஆனு, இந்த நாயகத்துக்கு இப்ப நீ நாயகி! ஞாபகமிருக்கட்டும் மறந்திடாதே!

[கார் ஹாரன் சப்தம் கேட்கிறது. திடுக்கிட்ட ராணி]

புயல் : யாரோ வர்ருங்க போல இருக்கு? எனக்கு இப்ப ஒரே தலே வலின்னு சொல்லி அனுப்பிடு!

[புயல்ராணி உள்ளே ஓடுகிருள்]

காட்சி 2

இடம்	பாத்திரங்கள்
சினிமா வில்லன் ஆபீஸ்	சிவக்கொழுந்து நிருபர்

[மேசைமேல் கால்களே நீட்டிக் கொண்டு நாலரைக் கட்டை யிலே குறட்டை விட்டுக் கொண்டிருக்கிருர் சிவக் கொழுந்து. அங்கு எட்டிப் பார்த்த நிருபர்]

நிரு : சார்...சார்...

சிவக் : வாய்யா வா! என்னுச்சு?

நிரு : எல்லாம் ஆச்சு! நான் உயி ரோடு தப்பிச்சு வந்தது நான் எப் பவோ செஞ்ச புண்ணியம்!

சிவக் : நான் உனக்குக் கொடுக்கிற சம்பளம் தண்டமய்யா!

நிரு : அந்தத் தண்டத்தைக்கூட நீங்க அஞ்சு மாசமா குடுக்கலீங் களே!

சிவக் : சொந்த விஷயத்தை இப்பப் பேசாதே! புயல்ராணியின் அந்த ரங்க வாழ்க்கை அடுத்த வாரம் வெளிவரும்னு அரைப் பக்கம் விளம்பரம் பண்ணி, ரெண்டுவாரமா பத்திரிகை வரல்லே! மிஷின் ரிப் பேர், மிஷின் ரிப்பேர்ன்னு டுப் விட் டுக்கிட்டிருக்கோம்!

நிரு : நான் என்னங்க செய்யுறது? சினிமா வில்லன்னு சொன்னுலே வில்லனுமாறி, மேலே பாயுருன் அந்த நாயகம்! இன்னென்னு, அந்த நாயகம்தான் புயல்ராணிக்கு புருஷனும்!

சிவக் : ஆகா! அது போதுமே!

நிரு : அந்த நாயகம் திடீர்னு அவன் சொந்த வாழ்க்கையைச்

சொல்ல ஆரம்பிச்சுட்டான்!

சிவக் : ஆகா! சரியான ஐடியா! யோவ்! இன்னிக்குச் சாயந்திரத்துக்குள்ளே அந்தப் புயல்ராணியோடே அந்தரங்க வாழ்க்கையை அக்கு வேறெ ஆணி வேறே யாப் பிச்சுப்புடுவோம்! நீ முதல்லே நாயகத்துக்குப் போன் பண்ணி இங்கே அவரை வரச் சொல்லு! நீ நாயகத்தூக்கிட்டே பேச்சுக் கொடு. அதுக்குள்ளே நான் போயிப் புயல்ராணியைப் பார்த்துப் பேசிட்டு...இப்படிப் பக்கத்திலே வாய்யா ..

[நிருபரைப் பக்கத்திலே அழைத்து அவர் காதில் ஏதோ சொல்லுகிறுர் சிவக் கொழுந்து. நிருபர் பயந்து கொண்டு]

நிரு : அய்யய்யோ! அவன் ரொம்ப முரடன்! அவன் என்னை ரொட்டியா தட்டிப்பிடுவான்!

சிவக் : அட என்னய்யா நீ, மகா மட்டமா பயப்படுறியே! சொல்றபடி செய்! இன்னிக்கு ஒரு மாசச் சம்பளத்தை எப்படியாச்சும் அழுது தொலைக்கிறேன்!

நிரு : அழுது தொலைக்கவேணும் சார், தந்து தொலைங்க! உங்க யோசனைப் படியே செய்யறேன்! வேறே என்ன செய்யறது? என்னமோ உங்க கிட்டே சம்பளம் வாங்கிக்கிட்டுப் போறவரைக்கும் எனக்கு ஆயுசு இருந்தாப் போதும்!

சிவக் : சரி போய்யா! போயி, உடனே நாயகத்துக்குப் போன் பண்ணு!

[நிருபர் போன் செய்யச் செல்லுகிறுர்.]

காட்சி 3

இடம்	பாத்திரங்கள்
பூகம்ப விலாஸ்	புயல்ராணி
	சிவக்கொழுந்து
	நாயகம்

[புயல்ராணியின் எதிரே அமர்ந்திருந்த சிவக் கொழுந்து சாமர்த்தியமாகப் பேசுகிறுன்]

சிவக் : இதுமட்டுமா சொன்னுன்? உங்களைப்பத்தி இன்னும் என்னென்னமோ சொன்னுன்! எனக்கே சொல்லக் கஷ்டமா இருக்கு! அது னுலேதான் நாயகம் சொன்னது உண்மை தானுன்னு தெரிஞ்சுக் கிட்டுப் போயிடலாம்னு நான் வந்தேன்.

புயல்: அவன் சொன்னது பூராத் தப்புங்க! இன்னிக்கு அவன் இந்த வீட்டுக்குள்ளே வரட்டும், அவன் காலை ஒடிக்கலே, நான் பத்துவாரம் ஓடின படத்திலே நடிச்ச நடிகை இல்லே!

சிவக் : அவன்தான் தப்பாச் சொல்லிட்டான்! தொலையுருன்! நீங்களாவது சொல்லுங்களேன், உங்க அந்தரங்க வாழ்க்கையைப் பத்தி!

புயல் : என் வாழ்க்கையைப் பத்தி எந்தப் பத்திரிகையிலும் வரக் கூடாது. நான்சொல்லவும்மாட்டேன்! நீங்க தயவு செஞ்சு போயிடுங்க சார்!

சிவக் : அப்ப நாயகம் சொன்னதை நான் எழுதிவிடட்டுமா?

புயல் : அவன் சொன்னதுதான் பொய் யிங்கறேனே!

சிவக் : அப்ப உண்மையை நீங்க சொல்லுங்க!

புயல் : முடியாது! முடியாது! இப்ப நீங்க போறீங்களா, இல்லே டைகரைக் கூப்பிடட்டுமா!

சிவக் : அடடே! அது உங்களுக்குத் தெரியாதா? நான் வரும்போதுதான் லைசென்ஸ் இல்லாத நாயுன்னு உங்க டைகரைக் கார்ப்பரேஷன் காரன் பிடிச்சுக்கிட்டுப் போருன்!

[நாயகம் ஆத்திரத்தோடு பொன்னம்மா என்று கத்திக் கொண்டே வருகிருன்]

புயல் : வாய்யா! வா! உனக்கு என்ன திமிரு இருக்கும்? என்னைப் போய் பிச்சைக்காரியா தெருவிலே சுத்தினவள்னு சொன்னே நீ?

நாய : என்னைப் பிக்பாக்கெட் அடிச்சவன்னு நீ சொன்னே?

புயல் : நான் யாருகிட்டே சொன்னேன் அப்படி?

நாய : சினிமா வில்லன் பத்திரிகை நிருபர்கிட்டே!

புயல் : நீ இந்தச் சிவக்கொழுந்து கிட்டே என்ன சொன்னே?

நாய : நான் சொல்லலே! நீதான் தண்டச்சோறு, வேலைக்காரன்,

அவன் இவன்னு என்னைப்பத்தி மட்டமா சொல்லியிருக்கே!

[சிவக்கொழுந்து நைஸாக அங்கிருந்து நகர்ந்து வெளிப் பக்கம் வந்து பேப்பரும் பேனு வும் வைத்துக் கொண்டு எழுதத் தயாராக இருக் கிருன்]

புயல் : நானு பேசினேன்? நீதான் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி என் மானத்தைப் பறிச் சிருக்கே! தெருவிலே சுத்தின உன்னை வேலைக்குச் சேர்த்து, உன் சாமர்த்தியப் பேச்சை நம்பி உன்னைக் கட்டிக்கிட்டதுக்கு இது மட்டுமா நீ செய்வே?

நாய : இட்லிக்கடை வச்சிருந்த நீ, எதிர் வீட்டுக்காரனைச் சிநேகம் பிடிச்சு அவனை ஏமாத்திக்கிட்டுப் பட்டிணத்துக்கு ஓடி வந்தது எனக்குத் தெரியாதுன்னு நினைச்சே?

புயல் : யோ! நிறுத்துய்யா! நீ மட்டும் என்ன ஒழுங்கா? என் பேரைச் சொல்லி எத்தனை பேருகிட்டே நீ கடன் வாங்கியிருக்கே?

நாய : எவன் சொன்னுன்?

புயல் : சினிமா வில்லன் சிவக் கொழுந்து சொன்னுன்!

நாய : அப்படியா சொன்னுன்! நாயை அடிக்கிறமாதிரி நாயகத்தை அடிச்சுத் துரத்தறேன்னு நீ என்னைப்பத்திச் சொன்னியா?

புயல் : எவன் சொன்னுன்?

நாய : அந்தச் சினிமா வில்லன் நிரு பர் சொன்னுன்!

புயல் : நானு சொன்னேன்? எங்கே அவன்?

[சிவக்கொழுந்து ஓடுகிருன்]

நாய : அதோ ஓடுருன் பாரு சிவக் கொழுந்து! டேய்...

[நாயகம் துரத்துகிருன்]

காட்சி 4

இடம்	பாத்திரங்கள்
சி,வில்லன்	சிவக்கொழுந்து
அலுவலகம்	நிருபர்
	புயல்ராணி
	நாயகம்
	ஆபீஸ்பாய்

[நிருபர் எழுதுகிருர். சிவக் கொழுந்து அங்குமிங்கும் நடந்துகொண்டு]

சிவக் : சீக்கிரம் எழுது! ஏன்னு, நாய கம் வர்றதுக்குள்ளே ஆபீஸைப் பூட்டிக்கிட்டு ஓடனும்! நாலாயிரம் பிரதி விக்கனும்! நல்லா எழுது! "இட்லிக்கடை பொன்னம்மா எதிர் வீட்டு........."

[நாயகமும் பொன்னம்மாளும் உள்ளே நுழைந்து பொன்னம் மா, நிருபரையும், நாயகம் சிவக்கொழுந்தையும் பிடித் துக் கொண்டு]

புயல் : யோவ்! நான் என்னய்யா உங் கிட்டே சொன்னேன்?

நிருபர் : வ...வ...வந்து......

நாய : பொன்னம்மா கிட்டே நீ என் னடா சொன்னே?

சிவக் : ஒன்னு ... ஒன்னு... அய்யோ அடிக்காதே! ஐயோ! அடியைமட்டும் என்னுலே பொறுக்க முடியாது! ஐயோ......

[சற்று நேரம் அந்த அறை யில் தடால், படார்என்ற சப் தமும், அய்யோ அம்மா என்ற கூக்குரலும் கேட்கிறது! கொஞ்ச நேரத்தில் பொன்னம் மாளும் நாயகமும் கை கோத் துக் கொண்டு வெளியே வரு கிருர்கள். ஆபீஸ்பாய் கையில் ஒரு பத்திரிகையுடன் உள்ளே வருகிருன். மேசைக் கடியில் நிருபரும் மேசைமேல் சிவக் கொழுந்தும் இரத்தக் காயத் தோடு புலம்பிக் கொண்டு கிடப்பதை அவன் கண்டு]

ஆபீஸ்பையன் : என்னங்க இது... என்ன இது......

நிரு : புயல் வந்து......ராணி வந்து

சிவக் : அவன் திரும்ப வந்திடப் போருன்...கதவைச் சாத்துடா! ஐயோ அப்பா

ஆபீஸ் : யாருங்க?

சிவக் : புயல் ராணியும், புருஷனும்!

ஆபீஸ் : நீங்க என்னங்க? புயல் ராணியும், அவுங்க புருஷனும் பத்துமணி விமானத்திலே வர்ருங்க, அஞ்சு மாசமா இந்திப் படத்தில் நடிக்க பம்பாய் போயிருந்தாங் கன்னு இன்னிக்குப் பேப்பர்லே போட்டிருக்கே!

நிரு : என்ன! உண்மையாகவா? கொண்டா பேப்பரை!

சிவக் : புயல் ராணியும் அவளது கணவர் தெய்வநாயகமும் ஐந்து மாதங்களுக்குப் பிறகு சென்னை வருகை!

நிரு : அப்ப இந்த ராணியும் நாயகமும் யாரு?

ஆபீஸ் : எங்கே......!டுப்ளே தெரு நம்பர் முப்பத்திமூணுலயா......

நிரு : ஆமா! ஆமா......

ஆபீஸ் : அது துணைநடிகை பொன் னம்மாவும் அவ புருஷன் நாயகமும் சார்! புயல்ராணிக்கு டூப் போடுற வங்க அவங்க! அதனுலே அவங் களையும் புயல்ராணின்னு சொல்லு வாங்க!

சிவக் : யோவ்! உன்னுலே வந்த வினைதானே இது! சரியா விசாரிக் காமே எங்கேயோ போயி எதையோ உளறி...உன்னை இப்போ என்ன செய்யுறேன் பாரு!

நிரு : அய்யோ! தாங்காது! நீங்க வேறே அடிக்காதீங்க!

[நிருபர் ஓட, சிவக்கொழுந்து துரத்துகிருர். இருவரும் ஓடு வது கண்டு, கடனை வசூலிக்க வந்த வீட்டுக்காரனும் அவர் களைத் துரத்திக்கொண்டு ஓடு கிருன்]

★

ஒரு தாரம்

பஞ்சு அருணாசலம்

சுகமான மாலைப்பொழுதில் காணுகின்ற சுவையான கனவுகளைப் போல், புதிதாகப் பெய்திருந்த மழையில் பூரித்திருந்த கண்மாய், நீர்க்குமிழிகளை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. நீர்க்குமிழிகளில், வெடிப்பிலே பிறந்ததைப் போல் கெண்டைமீன்கள் துள்ளித் துள்ளி விழுந்தன. இவையெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன் கொஞ்சம் கொஞ்சமாக இவையெல்லாம் என் கண்களைவிட்டு மறையத் தொடங்கின. கண்களில் பொங்கிவந்த கண்ணீர் சண்களைப் பனித்திரை யிட்டு மறைத்தது. அந்தத் திரையை ஊடுருவிச் சென்ற நீண்டபார்வையில் தெரிந்ததெல்லாம் ஒரே ஒரு உருவம்தான். புன்னகை தவழும் அந்த முகத்தில் ஒருநாள் நான் கண்ணீரை வடியவைத்தேன்!

மேளச்சத்தம் எங்கிருந்தோ மெல்லியதாக ஒலித்தது. நேரம் ஆகஆக சத்தம் அதிகமாகிக் கொண்டே வந்தது. கடைசியில் உச்சஸ்தாயியில் - ஒரே சுரத்தில், டுண் ... டுண் ... டுண ... ப்பீய்... என்று பயங்கரமாக ஒலித்தது. என் உடம்பே அதிர்ந்தது. காது ஜவ்வுகள் கிழிந்துவிடும்போல் இருந்தது. இரண்டு கைகளாலும் காதுகளை இறுக அடைத்துக் கொண்டேன். அந்தப் பேரொலி வெளியிலிருந்து வந்திருந்தால், காதுகளை அடைத்துக் கொண்டவுடன் கேட்காமல் போயிருக்கும். நெஞ்சின் அலறலுக்கு காரணமேது? முடிவேது?

திடுக் என்று, 'டுபுக்'கென்ற சப்தம் கேட்டது.

ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்த பறவை சுடப்பட்டு தொப்பென்று விழுவதைப்போல், எங்கோ உழன்று கொண்டிருந்த என் உணர்வு கண்மாய்க் கரையில் இருப்பதை உணர்ந்தது. கண்கள் சுற்றுப் புறத்தில் தாவின. ஒன்றுமில்லை. ஒரு மாட்டுக்காரப் பையன் கரையில் மாடுகளை நிறுத்திவிட்டு தண்ணீரில் குதித்திருக்கிறான். இரண்டு நிமிடம் கழித்து அவன் தலை மேலே வந்தது. அப்பொழுதுதான் அவன் என்னைப் பார்த்தான் போலும்.

'என்னாங்க ஐயா கல்யாணத்திற்கு வந்திருக்கீங்களா?' என்று கேட்டான். ஆமாம் என்ற பாவனையில் நான் தலையை அசைத்தேன்.

'மாப்பிள்ளை யழைக்க கோயிலுக்குப் போயிட்டாங்களே! நீங்க போகலையா?' என்றான். இல்லையென்ற பாவனையில் தலையசைத்தேன். அவன் என்னை ஒருமாதிரியாகப் பார்த்துவிட்டு மறுபடியும் தண்ணீருக்குள் தலையை இழுத்துக் கொண்டான். அவன் தலை மேலே தெரிய இன்னும் இரண்டு நிமிடம் ஆகலாம்!

ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்தேன். அடங்கிப்போன எண்ணங்களின் ஆவியோடு புகையையும் சேர்த்து ஊதினேன். சுருள் சுருளாக வளையங்களிட்டு வந்த புகை சிறிதுநேரத்தில் காற்றோடு கலந்து மாயமாக மறைந்துவிட்டது. ஆனால் எண்ணங்கள் திரும்பவும்பின்னலிட ஆரம்பித்தன ஒருநாள் அம்மா என்னிடம் அவர்களுடைய ஆசையைச் சொன்னார்கள். நான் திகைத்தேன். ஒருவர், தனக்காக பிறருடைய வாழ்வோடு பிணைக்கும் விதமான, ஒரு நிகழ்ச்சியில் ஆசைவைக்கும் பொழுது அதில், அவர் எந்தவிதமான எண்ணங்கொண்டிருக்கிறார் என்பதை ஏன் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள்!

என்னுடைய அம்மான் மகள் மீனாள், தாயில்லாத அந்தப் பெண் பெரும்பாலும் எங்கள் வீட்டில்தான் இருப்பாள். மகளில்லாத குறையை அவளால் மறந்திருப்பார்கள் என் அம்மா. இதைத்தவிர வேறு எந்த நினைவும் எனக்கு வந்ததில்லை. ஆனால் மீனாளையே எனக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று என் அம்மா எவ்வளவு நாளாக மனத்தில் முடிவு செய்து வைத்திருந்தார்களோ? மீனாளைத் திருமணம் செய்து கொள்வதாக எனக்கு எண்ணமில்லை, என்று கூறியதும், 'ராஜு' என்று வீடே அதிரும்வண்ணம் இறைந்தார்கள். எனக்கு மீனாளைத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென்று அவ்வளவு ஆசை அவர்களுக்கு.

ஆனால் எனக்கு வசந்தாமீதுள்ள பிரியத்தை எப்படி மறப்பது? வசந்தாவும் என் இன்னொரு அத்தை மகள்தான் 'அதனாலென்ன? கண்குளிர என்னையும் வசந்தாவையும் மணக்கோலத்தில் பார்த்துவிட்டால் அவர்களுடைய மனம் மாறிவிடாதா?' என்று என்மனத்தைத் தேற்றிக்கொண்டேன்.

ஒருதரம் வசந்தாவும் அவள் குடும்பத்தினரும் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். என்னைக்கவர்ந்த வசந்தாவின் குறும்புக்கண்களையும் துடுக்குப்பேச்சையும், அப்பொழுது நன்றாக ரசித்தேன். அதே சமயத்தில், வசந்தாவை எப்படியாவது தனியாகச் சந்தித்து என் ஆசையைத் தெரிவித்துவிட வேண்டுமென்று துடித்தேன். "அத்தான் அத்தான்" என்று வளைய வளைய வந்து சிரிக்கச் சிரிக்கப் பேசுவாள். "உங்களைத்தான் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன்" என்று அவள் என்னிடம் சொல்லவேண்டும் என விரும்பினேன். அன்றுதான் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது.

நான் என் அறைக்குள் உட்கார்ந்து ரேடியோக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவள் வந்தாள். எனக்கு 'சிலீ'ரென்று இருந்தது. தடுமாற்றத்துடன் "வா வசந்தா! என்ன வேண்டும்!" என வினவினேன். "ஒன்றுமில்லை. தலையை வலிக்கிறது...ஆஸ்ப்ரோ ஏதாவது இருக்கிறதா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"அடடா ... ஆஸ்ப்ரோ இல்லையே!" என்றேன். இருந்தது. ஆனால், கொடுத்தால் உடனே திரும்பிவிடுவாளே! "சரி பரவாயில்லை ..." என்று சொல்லியபடி திரும்ப யத்தனித்தாள். "இரு, பார்க்கிறேன்." என்று சொல்லிவிட்டு, அலமாரியைத் திறந்து ஒரு சின்ன டப்பியை எடுத்தேன்.

'டைகர்பாம் இருக்கிறது. போட்டுக் கொள்கிறாயா' என்றேன். அவள் திரும்பிவந்தாள். வலி ரொம்பப் போலிருக்கிறது. இடது கையால் தலையை ஒற்றிக் கொண்டிருந்தாள்.

முதலில் டப்பியை அவளிடம் நீட்டினேன். ஆனால் ... மறுபடியும் கையை இழுத்துக் கொண்டேன். சின்ன ஆசைதான்! அவளை என்னுடைய நாற்காலியில் உட்காரச் சொன்னேன். டப்பியைத் திறந்து ஆள்காட்டி விரலால் கொஞ்சம் மருந்தைஎடுத்தேன். அவள் அதை எதிர்பார்த்திருக்க மாட்டாள். இருப்பதா,மறுப்பதா என்று அவள் தெளிவு பெறுமுன்னரே, அவள் மோவாயைத் தொட்டு மெல்லத் திருப்பினேன். மருந்தை பூப் போன்ற அவள் நெற்றியில் மிருதுவாகத் தேய்த்துவிட்டேன். தேய்த்த பின்னரும் கையை எடுக்க முடியவில்லை. காந்த சக்தி என்ன என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன். அவளும் விடுபடமுடியாமல் தடுத்தாள். கண் இமைகள் படபடக்க, உதடுகள் துடிக்க, நெஞ்சம் விம்ம, உடலெங்கும் இன்ப உணர்ச்சி பொங்கித் ததும்ப...இன்னும் ஒரு விநாடி தாமதித்திருந்தாலும், பின்பு நினைத்து மகிழும் விதத்திலோ, அல்லது வேதனைப்படும் மாதிரியோ, ஏதாவது நடந்திருக்கும். கனவு மயமாக ஒலித்துக் கொண்டிருந்த ஓர் இனிமையான பாடல் திடீரென நின்றது. அவள் எழுந்து விட்டாள். பெருமழை பெய்வதற்குக் கூடிய பெருமேகங்கள் உடனே கலைந்துபோய் விடுவதில்லையா? அவள் போய்விட்டாள். எவ்வளவோ பேசவேண்டுமென எண்ணினேன். அதற்குப் பிறகு மறுபடியும் அவளைத்தனியாகச் சந்திக்க சந்தர்ப்பம் நேரவில்லை. சில சமயங்களில் ஜாடையாக என் எண்ணங்களைச் சொன்னேன். அவள் புரிந்து கொண்டாளோ இல்லையோ! புரிந்து கொண்டதாகக் காண்பித்துக் கொள்ளவில்லை.

சிலநாட்களுக்குப் பிறகுமறுபடியும் மீனாவைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி என்தாயார் வற்புறுத்தினார்கள். அந்தச் சமயத்தில் நான் கேள்விப்பட்ட வேறொரு செய்தி என்னைத் தடுமாற்றத்தில் ஆழ்த்தி விட்டது. வசந்தா சொன்னாளாம், "எனக்கும் அவருக்கும் ஒத்துவராது, அவர் அவசரக்காரர், ஆத்திரக்காரர்,சபலபுத்தியுள்ளவர். இத்தனை நாளாக அவர் மீனாவைத் திருமணம் செய்துகொள்ளப்போகிறார் என்றுதான் எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது திடீரென மாறிவிட்டார். அவரை எப்படி நம்புவது? நான் அவரைத்திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று."

ஆணவக்காரி! என்நெஞ்சம் சபலம் கொண்டது. மீனாவுக்கு என்ன குறைச்சல்? இருந்தாலும் தோல்வியை ஒப்புக்கொள்ள மனம் வரவில்லை. ஒருத்தியை விரும்பினேன். ஒருத்தியை வெறுத்தேன். விரும்பியது கிடைக்கவில்லை என்பதற்காக வெறுத்ததை விரும்ப முடியுமா?

தோதுபோல சிலசம்பவங்கள் எதிர்பாராதவிதமாக நடப்பதுண்டு. சிலசமயங்களில் அது வேடிக்கையாக இருக்கும். வேதனையாகவும் இருக்கும். ஒருநாள் மீனா என் அறைக்குள் வந்தாள். அவள் எப்போதுமே இந்த அறைக்குள் வந்தது கிடையாது. என்ன என்கிற பாவனையில் அவளைப்பார்த்தேன். அவள் முகம் சோர்ந்திருந்தது. 'தலைவலி மருந்து இருக்கிறதா?' என்று கேட்டாள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒருவேளை அன்று நடந்ததை இவள் தெரிந்து கொண்டு நம்மைக் கேலி செய்கிறாளோ என்று தோன்றியது. அவள் சிரித்தாள். 'ஏன் தடுமாறுகிறீர்கள்?' என்றாள்.

நான் அவளை முறைத்துப் பார்த்தேன். தலையை வலித்தால் இப்படித்தான் சிரிப்பார்களோ? அவள் முகம் கறுத்துச் சிறுத்து விட்டது. எனக்குப் பரிதாபமாக இருந்தது. டைகர் பாமை எடுத்துக் கொடுக்கப்போனேன். ஆனால் கொடுக்கவில்லை. வசந்தாவைவிட இவள் என்ன குறைவு! 'இப்படி உட்கார்' என்றேன். அவள் முகம் ஆச்சரியத்தால் விரிந்தது. மருந்தை எடுத்துத் தேய்த்தேன். அவள் நெற்றியில் என்கை ஒட்டிக்கொள்ளவில்லை. அவள் நெஞ்சம் விம்மவில்லை. உதடுகளும், கண்களும் துடிதுடிக்கவில்லை. ஆனால், அவள் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்தது. ஒருபக்கம் பனிமேடிட்டிருந்த என்நெஞ்சம் பாகாய் உருகியது. அவள் கண்ணீரைத் துடைத்தேன். என்னுடைய பரிவு, அவளுடைய அடங்கிப்போன ஆசைகளின் தூண்டுகோலாகி விட்டது. கண்ணீர் வெள்ளமாகப் பெருகியது. அப்படியே அவளை இறுக அணைத்துக் கொண்டேன். 'அத்தான்' என்று விம்மினாள். அவள் மட்டும் சட்டென விடுபடாமலிருந்தால் ஆயிரம் முத்தமிட்டிருப்பேன். கொஞ்சம் தள்ளிப்போய் நின்றாள். 'அத்தான்' என்றாள் நடுங்கும் குரலில். 'உன்னைக்கைநழுவவிட்டுவிட மாட்டேன்' என்றேன் மகிழ்ச்சியோடு. அவள் முகத்தில் மகிழ்ச்சியை ஆவலோடு எதிர்பார்த்தேன். அவள் வரட்சியாக எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். 'நான் இப்பொழுதே போய் அம்மாவிடம்...' அவள் இடை மறித்தாள். 'சொல்லி ஒன்றும் பயனில்லை. நம் இருவருக்கும் கொடுத்து வைக்கவில்லை. இந்த வீட்டில் வாழ எனக்கு விதி இல்லை...' என்று கடைசி வார்த்தையை விம்மலோடு விழுங்கி விட்டு வெளியேறி விட்டாள்.

அம்மாவைப் பார்க்க ஓடினேன். 'அம்மா அம்மா' என்று கெஞ்சினேன். எனக்குத் தெரியாமல் எவ்வளவோ நடந்திருக்கிறது. கவனிக்காதது என் குற்றமோ, தெரிவிக்காதது அவர்கள் குற்றமோ, தண்டனை முழுதும் எனக்குத்தான். மீனாளுக்குத் திருமணம் பேசி முடித்து விட்டார்கள்.

பேசி முடிப்பது என்ன? இதோ இன்னும் ஒருமணி நேரத்தில் அவள் கழுத்தில் தாலியேறிவிடும். கதைகளில் வருவதுபோல, கடைசி நிமிஷத்தில், மாப்பிள்ளை விஷத்தைக் குடித்துவிட்டோ, பாம்பால் கடிக்கப்பட்டோ செத்தால் எனக்கு அவள் கிடைப்பாள்.

ஒரே ஒரு தரம்தான் தவறினேன். இரண்டையும் இழந்து விட்டேனே!

★

டேய் குப்பா! நேற்று நீ நம்ம பசங்கள்ட்டே என்னைப் பற்றி மட்டமாப் பேசினை யாமே?
என்னடா, நான் கேட்கிறேன் நீ பேசாமே யிருக்கே?

கவிஞன

ருக்குமணி இராமநாதன் பி. எஸ்சி.

உலகில் உயர்ந்த இனம் என்ற சிறப்பைக் கவிஞர் பெருமக்களே பெறத் தகுதி படைத்தவர் எனலாம். ஒரு பொருளை நாம் பார்க்கிறோம்-புறத்தோற்றமே புலனாகிறது அதனையே கவிஞன் பார்க்கிறான்-காவியமே உருவாகிறது. உள்ளும் புறமும் உள்ளார்ந்த கற்பனையோடு கருத்துச் செறிவோடு கவினுறும் காட்சியாகக் கவிதை வடிவெடுக்கச் செய்யும் கவிஞன் உயர்ந்தவனே. அவ்வாறு வடிக்கும் கவிதைகளை அகம்-புறம் என்று இருவகைப் படுத்துவர் அறிஞர்.

அகம்-புறம் பாடுவதற்கு வேறுபாடு உண்டு. பெயர் வேறுபாடு அல்ல. அகம்: பாடும்போது பாடுகின்ற கவிஞர் நாடக அரங்கத்தை நடாத்துபவராக மட்டும் இருக்கிறார். ஆனால் புறம்: பாடும்போது பாடுகின்ற கவிஞரும் நடிகராக நாடக அரங்கத்திற்கு அவரும் வந்தாக வேண்டும். புறப்பொருளைப் பாடும்போது கவிஞர்தம் வாழ்க்கை நிலை சிறப்பாகப் பாடலில் இடம்பெறும்.

அன்றாட வாழ்க்கையில் அகமுக நட்புக்கொண்டோர் பலரைக் காணலாம். நட்பு - பலருக்கும் உண்டு. நட்புடையோம் என்பவரில் சிலர் நட்பையே அறியாதார். கவிஞர் ஒரு மன்னனோடு நட்புக்கொண்டவர். எப்படிப்பட்ட நட்பு தெரியுமா? எளியோரும் அறியக்கூடிய வகையில் தம் நட்பினை அக்கவிஞர் விளக்கும் முறை கண்டு மகிழ்வோம்.

களிறுகளைக் குளிப்பாட்டப் பாகர்கள் நீர்நிலைகளுக்கு ஓட்டிச் செல்வர். யானைகளைப் பார்த்தவுடன் பயந்து ஒதுங்கிச் செல்வர் வயது மிக்கோர். அதன் அழகிய வெண்மையான தந்தத்தைப் பார்க்கும் சிறுவர் அதனோடு விளையாட எண்ணுவர். எண்ணுவதோடு அதில் ஏறி யானையின் பிடரியில அமர்ந்து விளையாடுவர். இது வேடிக்கையாக மட்டுமல்ல - குழந்தைகள் விளையாடும் இயல்பை எவ்வாறு கவிஞர் புலப்படுத்தியிருக்கிறார். என்பது அழகே. அதைவிடச் சிறப்பு: அவர் நட்பு. யானையைப் போன்ற வலிமை படைத்த வேந்தனோடு சிறுவர்கள் விளையாடும் பான்மைபோல் புலவர் பழகுவாராம். இந்த நிலை சங்ககாலத்தில காணப்படும் உயர்ந்த நட்பாகும்.

மகிழ்ச்சிப் பெருக்கால் எழக்கூடிய கற்பனையில் கவிஞர் நட்பு பற்றியும் மிக அழகோடும் அருமையோடும் எடுத்துக் கூறியுள்ளார். தான் நட்புக்கொண்டுளள பெருவேந்தனைப் பார்த்ததும் இல்லை; பழகியதும் இல்லை. செவிவழிச் செய்தியாற் கொண்ட சேனுயர் நட்பு. இந்த நிலையில் அந்தப் பெரும்புலவர் அவ்வேந்தன் ஆளும் நாட்டையடையும் ஒருவருக்கு வேண்டிய உதவிகளைப் பெறத் துணைசெய்யும்திறன் நட்பைப் பெருமைப்படுத்துகிறது. உதவி பெறும் ஒருவர் வேறு யாருமில்லை-ஒரு பறவை. இமயம் நோக்கிச் செல்லும் அதனை நோக்கி, வழியில் கோப்பெருஞ் சோழன் அரண்மனையில் இறங்கி ''நான் ஆந்தையின் கீழ்வாழ்பவன்'' என்று கூறினால்பொன்னும் - மணியும்-பொருளும்வேண்டியயாவும் கொடுப்பான் என்கிறார் கவிஞர்.

இங்குக் குறிக்கப்பட்ட செய்தியால் புலவருக்கும் மன்னருக்கும் இடைப்பட்ட நட்பு நேரானதல்ல என்பது புலனாகிறது. பெருந்தொலைவு இருந்தாலும் பேரறிவும் பெருந் திறனும் காரணமாகக் கொண்ட பெருநட்பே இது என்பதைப் பறவை மூலம் காட்டும் கவிஞன் திறமை உயர்வுடையதாகும்.

கவிதைச் சுவையில் உளநாற் கருத்துக்கள் உயிரோட்டம்கொள்ளுகின்றமை சிறப்பாகும். மக்கள்-உயிரினங்கள் உள்ளத்தே புகுந்து ஊடுருவி உண்மை நிலையைப்படமிட்டுக் காட்டவல்ல பான்மை கவிஞருக்கே உண்டு.

பரிபாடலில் காணப்படும் ஒரு செய்தியை எடுத்துக்கொள்வோம். உலகில் மனிதன படைத்த இசைக் கருவிகள் ஒரு புறம்-செயற்கை படைத்த இசைக் கருவிகள் மறுபுறம்-பெரும்போட்டிதான் இயற்கையிற் கண்டதை எப்பொழுதும் பெறுதற்கு மனிதன் முயன்றதைக் காட்டுவதே செயற்கைக் கருவிகள்.

இயற்கை இசையரங்கிற் காணப்படும் நிகழ்ச்சி;

பாட்டு—முழவு.

பின்பாட்டு—வண்டு.

தாளம்— அருவி.

ஆடல்—கொடி.

நட்டுவனார்—தென்றல்.

இதிற் சுவை இல்லாமலா இருக்கும்; இதைக் கண்டு உணர்ந்து களிப்பெய்தும் ஆற்றல் கவிஞனைத் தவிர-பேறுபெற்ற பாடலை இயற்றும் ஆற்றல் படைத்த புலவனைத் தவிர பிறருக்கு ஏது? இயற்கை இசையரங்கில் எழும் இனிய ஓசையைக் கவிதைவடிவில் கண் படைத்த மக்களுக்குக் காட்டும் கவிஞர் மக்களினதத்தில் உயர்ந்தவர் அன்றோ!

சேயாறு என்று சங்ககாலத்தில் பெயர் பெற்ற ஆறு இன்று 'செய்யாறு' என்று வழங்கப்படுகிறது. அப்பெயரில் ஒரு வட்டமும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. (1)சேயாறு சவ்வாது மலைத் தொடரில் தோன்றுகிறது.

சவ்வாது மலைத்தொடர் வடஆர்க்காடு மாவட்டத்தில் திருப்புத்தூர் வட்டத்தின் கிழக்கிலும் போளூர், செங்கம் வட்டங்களின் மேற்கிலும் அமைந்துள்ளது. அதன் வடபகுதி வேலூர் வட்டத்தின் தென்பகுதியிலும அமைந்துள்ளது. சவ்வாது மலைத்தொடரே சங்ககால நன்னன் ஆட்சிக்கு உட்பட்ட மலைநாடாகும்.

சவ்வாது மலைத்தொடரில் அடர்ந்த காடுகள் மிகுதி. புதியவர் இம்மலைப் பகுதிக்குச் சென்றால் காய்ச்சல் கண்டு இறந்துவிடுவர். இக்காரணத்தால் இம்மலைத் தொடரைப்பற்றிய முழு விவரங்களையும் செம்மையாக அறியக்கூட வில்லை. கி. பி. 1866.இல் சேலம் மாவட்டத்தண்டல் நாயகமாய் இருந்த அர்ப்பத்நாட் (D. Arbuthnott) என்பவரும் அவருடைய நண்பரும் இம்மலைத் தொடரில் சில பகுதிகளைப் பார்வையிட்டனர். (2) திரு. அர்ப்பத்நாட் இம்மலையைப் பற்றி எழுதியுள்ளனர். 1871-க்கு முன்பு திரு. சி.எஸ். அட்கின்சன் (Atkinson) என்பவர் இத்தொடரைப் பார்வையிட்டார். ஆயின், அவர் இம்மலைத்தொடரைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தண்டல் நாயகமாய் இருந்த லீ பனு (H. Le Fanu) என்பவர் 1875-இலும் 1877-இலும் இம்மலைத்தொடரைப் பார்வையிட்டார். அவர் இம்மலைத்தொடர் பற்றி எழுதியுள்ள குறிப்புகள் கவனிக்கத் தக்கவை.

சவ்வாது மலைத்தொடரின் நீளம் ஏறத்தாழ 40கல்; அகலம் 10கல். இதன் உயரம் ஏறத்தாழ மூவாயிரம் அடி. இம்மலைத்தொடர் வேலூருக்குத் தெற்கே ஓரிடத்திலிருந்து புறப்பட்டுச் செங்கம்மா (3) அல்லது சிங்காரம் பேட்டைக் கணவாயில் முடிகிறது. இம்மலைத் தொடர் அடர்ந்த காடுகளை உடையது; புதியவருக்குக் காய்ச்சலை உண்டாக்கும் இயல்புடையது. இதன்தட்ப வெப்ப நிலை புதியவருக்கு ஒத்

(1) North Arcot District Manual part 1. p. 6 (2) அவர் எழுதியகட்டுரை டாக்டர் ஷார்ட் (Shortt) என்பவர் எழுதியுள்ள "தென்னிந்திய மலைத்தொடர்கள்" என்னும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. Salem Dirtict Manuel vol. .II p. 311. (3) செங்கண்மா என்பது 'செங்கம்மா' என்று வழங்கப்படுகிறது.

விகடராமன் கவிதைகள் :



துக் கொள்வில்லை. ஆயினும், இம் மலைத்தொடரில் அழகிய காட்சிகள் பல உண்டு. இங்குள்ள தண்ணீர் புதியவருக்கு விடம் போன்றது.

திருப்புத்தூர் வட்டத்தைச்சேர்ந்த சவ்வாது மலைக் காடுகளில் கடுக்காய் மரங்களும் மூங்கிற் புதற்களும் சந்தன மரங்களும் மிகுதியாக இருக்கின்றன போளூர் வட்டத்திலுள்ள சவ்வாது மலைப்பகுதியில் மூங்கில், சட்டடங்களுக்குப் பயன்படும் மர வகைகள், கருவேல மரங்கள், குங்கும மரங்கள், சணல், முதலியன பயிராகின்றன. வேலூர் வட்டத்தைச் சேர்ந்த சவ்வாது மலைக்காடுகளில் ஆச்சா. அழிஞ்சில், மூங்கில், பில்லு மருதி, கருப்பு மரம், பூரகம், சந்தனம், செருஞ்சி, நாவல் மரம், இலுப்பை, கருவேலம், குங்குலியம், காட்டுவாகை, கல்துரிஞ்சி, துரிஞ்சி, மா மயிலம், பாலை, பாதிரி, புங்கை, சீயக்காய் மரம், முதிரைமரம், விளா, ஒதியம் வாகை, வெள்வாகை, வேங்கை முதலிய மரங்கள் பயிராகின்றன. இவற்றுள் சந்தன மரம் பல உருவங்களை அமைக்கவும், கட்டு முதலிய பல பொருள்களைச் செய்யவும் பயன்படுகிறது. போளூர், வேலூர் வட்டங்களில் உள்ள சவ்வாது மலைக்காடுகளில் சந்தன மரங்கள் மிகுதியாகும். வேலூர் வட்டத்திலுள்ள சவ்வாது மலைக்காடுகள் பல அழிக்கப்பட்டன; அக்காட்டுமரங்கள் இரயில் தண்டவாளம் போட பயன்பட்டன. (1)

திருப்புத்தூர் வட்டத்திலுள்ள காடுகளில் முன்பு புலி முதலிய கொடிய விலங்குகள் இருந்தன. 1872-இல் இங்கு இருந்த கடைசிப் புலியும் சுடப்பட்டுவிட்டது. மான்களில் மிகப் பெரிய உருவமுடைய இனத்தவை, காட்டு எருமைகள் ஆகியவை முன்பு இருந்தன -- இப்பொழுது இல்லை. ஆயின், அவை கல்ராயன் மலைக் காடுகளிலிருந்து இங்கு வந்து விடும். அவை புல்லுக்கும், நீருக்கும் இங்கு நெருக்கடி ஏற்படும் போது அங்குப்போய் விடுகின்றன வாம். சில ஆண்டுகட்கு முன்பு இரண்டு யானைகள் கல்ராயன் மலைகளிலிருந்து சவ்வாது மலைகளில் பிரயாணம் செய்து மேட்டூர் என்னும் இடத்தில் மலையை விட்டு இறங்கிப் பள்ளத்தாக்கைக் கடந்து ஏலகிரி மலைகள் மீது ஏறிச்சென்றன; பின்பு தாம் வந்த வழியே மீண்டும் கல்ராயன் மலைகட்குச் சென்றுவிட்டன வாம். காட்டுப் பன்றிகளும், பலவகை மான்களும், மயில்களும் இப்பொழுதுஇருக்கின்றன. (2)

போளூர் வட்டத்துக் காடுகளில் காட்டு எருமை, கரடி, சிறுத்தை, பலவகை மான்கள், காட்டுப்பன்றி முதலியவை இருக்கின்றன. அண்மைக் காலம் வரையில் யானைகள் இருந்தன. புலிகள் சில சமயங்களில் காணப்படுகின்றன. (3)

தேன், மெழுக்கு, அரக்கு, சீயக்கால், சணல், மூலிகைகள் சாயம் தோய்க்கவும் தோலைப் பதனிடவும் பயன்படத்தக்க மரப்பட்டைகள், விதைகள் முதலியன சவ்வாது மலைகளில் மிகுதியாகக் கிடைக்கின்றன. (4)

திருப்பத்தூர் வட்டத்தின் வடகிழக்குப் பகுதியில் **ஆலங்காயம்** என்னும் சிற்றூர் அமைந்திருக்கிறது. அங்கு ஏல - மலைகளும் சவ்வாது மலைத்தொடரும் மிக நெருக்கத்தில் சந்திக்கின்றன. அவ்விடம் 'ஆலங்காயம் பள்ளத்தாக்கு' என்று கூறப்படுகிறது. ஆலயங்காயத்திலிருந்து சவ்வாது மலைகளின் மீதுஏறிச்செல்லலாம். இம்மலைத்தொடரில் **138 சிற்றூர்கள்** இருக்கின்றன. ஆலயங்காயத்திலிருந்து புறப்பட்டுச்சென்று மலைகள் மீதுள்ள **ரெட்டியூரை** அடையலாம். அதன் அருகிலுள்ள மேட்டு நிலப்பகுதி மிக்க அழகிய தோற்றத்தை உடையது. அம் மேட்டு நிலப்பகுதியில் ஒருவகைப் பசும்புல்லால் மூடப்பட்ட ஆழமான பள்ளங்கள், பூங்கா போன்ற காட்சி நல்கும் பசிய புல்வெளிகள், அப்புல்வெளிகளில் மூங்கிற்புதர்கள், ஆங்காங்கு நீர் நிலைகள் என்பன காட்சியளிக்கின்றன.

திருப்புத்தூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள ஆண்டியப்பனூருக்கும் கிங்காரம் பேட்டைக்கும் இடையிலுள்ள மலைத்தொடரில் மூவாயிரம் அடிக்கு மேற்பட்ட **ஐந்து**

( ) North Arcot Dt. Manual, ol. I. pp. 5, 24, 398 (2) Salem District Manuel vol. II p. 311 (3) Notrh Arcot Dt. Manuel, vol. 1. p. 398. (4) Ibid, p. 25.

மலை உச்சிகள் (குடுமிகள்) இருக்கின்றன. அவற்றுள் ஒன்று 3840 அடி உயரமுள்ளது. பொம்மைக்குப்பம், மட்டரப்பள்ளி ஆகிய இரு சிற்றூர்களும் இடையிலுள்ள மலைத் தொடரின் சரிவில் ஒரு சிற்றுறு ஓடுகிறது. அவ்யாற்றின் அடியில் ஒரு வகைச் சுண்ணாம்புக் கற்கள் இருக்கின்றன. அவற்றால் அத்தண்ணீரில் விழும் இலைகள் குச்சிகள் முதலியவை வியக்கத்தகும் மாறுதலை அடைகின்றன.

இம்மலைத்தொடரில் அம்மைநோய் அடிக்கடி தோன்றுகிறது. இங்கு அந்நோயால் இறப்பவர் தொகை மிகுதியாகும். நோயாளிகள் நோயின் கொடுமையால் தமது சிற்றூரை விட்டு ஓடிவிடுவர். அவரால் புறக்கணிக்கப்பட்ட வீடுகளில் புல்முளைத் திருக்கும். (1)

இம்மலைத்தொடரில் **138 சிற்றூர்கள் உண்டு** என்று கூறப்பட்டதன்றோ? அவற்றில் மக்கள்தொகை ஏறத்தாழ 18,000 ஆகும். அம்மக்கள் இம்மலைத்தொடரை **ஒன்பது நாடுகளாகப்** பிரித்துள்ளனர். (2) அவை (1) நெல்வாசல் நாடு, (2) புதூர் நாடு, (3) புங்கம்பட்டு நாடு, (4) தென்மலை நாடு, (5) மூலைக்காடு நாடு (6) பர்கூர் நாடு, (7) பல்லப்ப நாடு, (8) நடுப்பட்டு நாடு, (9) பீமகுளம் நாடு என்பன. நெல்வாசல் நாட்டில் காப்பி பயிராகிறது. இம்மலைத்தொடரில் கம்பு, ராகி, பனிவரகு, சோளம், தினை, கோதுமை, எள், உளுந்து, பயறு, கொள்ளு, மொச்சை, துவரை, முத்துக் கொட்டை, கொல்லைநெல், கஞ்சா இலை, பேய் எள், கடுகு முதலியன பயிராகின்றன. (3)

வேலூர், போளூர் வட்டங்களைச் சேர்ந்த மலைப்பகுதியில் உள்ள மலைவாணர் தங்கள் பகுதியை 18 நாடுகளாகப் பிரித்துள்ளனர்.

(1) Salem District Manual, vol. II. p. 311

(2) North Arcot District Manual, vol. I. p. 212.

(3) Salem District Manual, vol. II p.312.

குட்டிக் கதை:—

பக்தா ! மெச்சினேம் !!

கடவுள் படத்துக்கு முன்னல் உட்கார்ந்துகொண்டு ஓர் ஏழைப் பக்தன் தினமும் வேண்டிக்கொள்வான். அவன் மனத்திற்குள் வேண்டிக்கொள்வதே கிடையாது. பக்கத்து வீடுகளுக்குக் கேட்கும்படிதான் வேண்டிக்கொள்வது வழக்கம்.

"கடவுளே! கருணாமூர்த்தி, எனக்கு நூறு ரூபாய் கொடுத்தால் போதும். வேறு எதுவும் உன்னைக் கேட்கவில்லை. இந்த ஏழையின் கூக்குரல் உன் காதில் விழவில்லையா?" என்று நன்ருக இரைந்து வேண்டுவான்.

பக்கத்து வீட்டுக்காரன் காதில் தினமும் இந்த வேண்டுகோள் விழுந்து கொண்டேயிருந்தது. அவன் கொஞ்சம் வேடிக்கை செய்ய வேண்டுமென்று எண்ணி, ஒரு நாள் பக்தன் கடவுளை வேண்டிக்கொள்ளும்போது தன் குரலை மாற்றிக்கொண்டு பேசினன்.

"பக்தா! உன் பக்திக்கு மெச்சினேம். ஆனல், நீ கேட்கிறபடி நூறு ரூபாய் கொடுக்கமுடியாது. தொண்ணூற்ரென்பது ரூபாய்தான் கொடுக்கமுடியும். என்ன சொல்கிருய்? சம்மதமா?" என்று கேட்டான்.

"கடவுளே! நூறு ரூபாய்க்கு ஒரு ரூபாய் குறைந்தாலும் உன்னிடம் பணம் வாங்கமாட்டேன். தொண்ணூற்ரென்பது ரூபாய் கொடுத்தால் அதைத் தூக்கி எறிந்துவிடுவேன். இரக்கப்பட்டுக் கொடுத்தால் நூறு ரூபாய் கொடு. இல்லை விட்டால் பேசாமல் இரு" என்ருன்.

அடுத்த நாளும் ஏழைப் பக்தன் கடவுளை வேண்டிக்கொண்டான். 'கடவுளே! கருணாமூர்த்தி! நூறு ரூபாய் கொடு" என்ருன். பொதுக்கென்று சன்னல் வழியாக ஒரு முடிச்சு வந்து விழுந்தது.

ஏழைப் பக்தன் ஆவலோடு அதை எடுத்தான். முடிச்சை அவிழ்த்தான். வெள்ளி ரூபாய்கள் சலசலவென்று கொட்டின. எண்ணிப்பார்த்தான். சரியாகத் தொண்ணூற்ரென்பது ரூபாய் இருந்தது. தன் தோள் துண்டை எடுத்துக்கட்டி, அறைக்குள் கொண்டு போய்ப் பெட்டியில் பூட்டி வைத்துவிட்டுக் கூடத்திற்கு வந்தான். பண முடிச்சைச் சன்னல் வழியாகத் தூக்கி எறிந்த அடுத்த வீட்டுக்காரன் திரும்பவும் அது வெளியில் வந்து விழாமல் போகவே உள்ளே வந்தான்.

"சரியாக நூறு ரூபாய் வேண்டும் என்று கேட்டாயே? சரியாகக் கிடைத்ததா?" என்று கேட்டான.

"அதைப்பற்றி உனக்கென்ன அக்கறை?" என்று கேட்டான் ஏழைப் பக்தன்,

"ஒரு ரூபாய் குறைந்தாலும் தூக்கி எறிந்துவிடுவேனென்று நேற்றுச் சொன்னயே, இன்று ஏன் தூக்கி எறியவில்லை? நான்தான் உன் வார்த்தையைச் சோதிப்பதற்காகத் தொண்ணூற்ரென்பது ரூபாயைக் கட்டிப் போட்டேன். உண்மையுள்ள பக்தனுக இருந்தால் ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிடு" என்ருன் பக்கத்து வீட்டான்.

"இன்றைக்குத் தொண்ணூற்ரென்பது ரூபாய் கொடுத்த கடவுள் நாளைக்கு ஒரு ரூபாய் கொடுத்துக் கணக்கை நேர் செய்துவிடுவார். எனக்கும் அவருக்கும் இடையே நீர் வீணுகத் தலையிட வேண்டாம், சென்று வாரும்!" என்ருன் அந்த ஏழைப்பக்தன்.

தலையிலே கையை வைத்துக்கொண்டு குனிந்த தலை நிமிராமல் தன் வீட்டை நோக்கி நடந்தான், பாடம் கேட்டுக்கொண்ட பக்கத்து வீட்டுக்காரன். கடவுளுடைய இடத்தைப் பிடிப்பதென்ருல் சாதாரணமானதா?

—**வெள்ளைக் கண்ணாடி.**

அவர் எங்கே?

மு. கணபதி

அன்று ஞாயிற்றுக்கிழமை, நானும் என் நண்பர்கள் பூங்குன்றன், இளவழகன், கிள்ளிவளவன் ஆகியவர்களும் சாத்தனூர் அணைக்கட்டைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டோம்.

நாங்கள் சென்ற 'கார்' சுமார் பத்து மணிக்குச் சாத்தனூர் அணைக்கட்டை அடைந்தது. அணைக்கட்டிற்குச் சிறிது தூரத்தில் பெரிய ஆல்மரம் ஒன்றிருந்தது. நாங்கள் கொண்டு சென்ற உணவுப் பொருள்களையும், மற்ற சில்லரைச் சாமான்களையும் அந்த மரத்தடியில் வைத்துவிட்டுப் பிரயாணக் களைப்புத் தீருவதற்காகச் சிறிது நேரம் உட்கார்ந்தோம். எனது நண்பன் பூங்குன்றன் மட்டும், சிறிது தூரத்திலிருந்த குளத்தருகே சென்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது இருபத்திரண்டு வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தாள். வந்தவள் நேரே குளத்தருகே நின்றுகொண்டிருந்த பூங்குன்றனிடம் சென்று 'அவர் எங்கே? எப்பொழுது வருவார்? என்ன சொல்லி அனுப்பினார்?' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள். 'திருதிரு'வென்று பூங்குன்றன் விழித்தான். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"யாரைக் கேட்கிறாய்?" என்றான் பூங்குன்றன் தன்னைச் சமாளித்தவாறு.

"யாரைக் கேட்கிறேனா? முட்டாள்! யாரையடா கேட்பேன்! பைத்தியக்காரன்!" என்று சொல்லிக் கொண்டே பூங்குன்றனைக் குளத்தில் தள்ளிவிட்டாள். தடுமாறித் 'தொப்'பென்று குளத்தில் விழுந்தான் பூங்குன்றன்.

எங்கள் அனைவருக்கும் ஒரே வியப்பாகவும் திகைப்பாகவுமிருந்தது. துடித்த கிள்ளிவளவன் 'ஏய்!' யென்று அதட்டினான் அவளைப் பார்த்து.

"யாரையடா 'ஏய்!'யென்று கூப்பிடுகிறாய்" என்று சொல்லிக் கொண்டே எங்களை நோக்கி வந்தாள். அவளுடைய வார்த்தையும், பார்வையும், தோற்றமும் எங்களைப் பீதியடையச் செய்தன. அவள் எங்களை நெருங்கியதும் நாங்கள் எல்லோரும் இரண்டடி பின்னுக்கு நகர்ந்தோம்.

அவள் எங்களைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தாள். சிரித்துவிட்டு அவள் வந்த வழியாகத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தாள். அவள் எங்களை நோக்கி வீராவேசத்துடன் வந்ததும் நாங்கள் இரண்டடி பின்னுக்கு நகர்ந்ததால், அவளுக்கு நாங்கள் பயந்துவிட்டோம் என்ற எண்ணத்தில்தான் அவள் எங்களை ஒன்றும் செய்யாமல் திரும்பிச் சென்றிருக்க வேண்டும்.

அவள் சென்றதும், குளத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த பூங்குன்றனை, வெகு சிரமப்பட்டுக் கரைக்குக் கொண்டு வந்தோம்.

"அவள் ஒரு பைத்தியமாக இருக்க வேண்டும்" என்றான் இளவழகன்.

"அவளைச் சும்மா விட்டுவிட்டீர்களே!" என்றான் பூங்குன்றன் ஆத்திரத்துடன்.

"அவள், நம் அனைவரையும் குளத்தில் தள்ளாமல், பூங்குன்றனை மட்டும் குளத்தில் தள்ளியதற்கு, நாம் அவளுக்கு நன்றி செலுத்த வேண்டும்" என்றான் கிள்ளிவளவன் கிண்டலாக.

இந்தச் சமயத்தில் எங்களை நோக்கி ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார்.

"தம்பிமார்களே! வருத்தப்படாதீர்கள். அவள் சார்பாக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

"அவளுக்கு என்ன பைத்தியமா?" என்று கேட்டான் இளவழகன்.

"பைத்தியமென்று சொல்லிவிட முடியாது தம்பி. இருந்தாலும் இப்போதைக்கு அவள் ஒரு பைத்தியம்தான்" என்றார். பெரியவர். அவர் குரலில் சோகம் கலந்திருந்தது.

"அவளைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான் கிள்ளிவளவன்.

"அவளைப்பற்றி இந்த வட்டாரம் முழுவதும் தெரியும். இந்த வட்டாரத்திலேயே அவள் ஒரு ராணியைப் போன்று வாழ்ந்து வந்தாள்"

"அப்படிப்பட்டவள், இப்பொழுது ஏன் திடீரென்று பைத்தியமாகி விட்டாள்?" படபடப்புடன் கேட்டான் பூங்குன்றன்.

"அவளைப்பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா?" என்றார் பெரியவர்.

"அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும் பெரியவரே. அதிலும் பூங்குன்றன் மிகவும் கோபமாக இருக்கிறான். ஆகையால், அவனுக்காக வேண்டியாவது அவளைப்பற்றி நீங்கள் அவசியம் கூறத்தான் வேண்டும்" என்றான் இளவழகன்.

"சரி!" என்று ஆலமரத்தடியில் போய் உட்கார்ந்தார் பெரியவர். அவரைச் சுற்றி நாங்கள் உட்கார்ந்தோம். அவசர அவசரமாக ஈர உடைகளை மாற்றிவிட்டுப் பூங்குன்றனும் வந்து எங்களுடன் உட்கார்ந்துகொண்டான்.

பெரியவர் ஆரம்பித்தார்; "சென்ற ஆண்டு தமிழகம் முழுவதும் 'இந்தி எதிர்ப்புப் போர்' ஆரம்பமாகியதல்லவா, அந்தச் சமயம், அதாவது இந்தி எதிர்ப்புப் போர் ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கு முன் ஒரு நாள், இதே மரத்தடியில் பசியால் மயக்கமுற்றுப் படுத்திருந்தான் அவன்..."

"அவன் என்றால் யார்?" என்றான் பூங்குன்றன்.

"பூங்குன்றனாரே! அவசரப்படாதீர்! உமக்காகத்தானே பெரியவர் கதை சொல்லுகிறார்" கேலியாகப் பேசினான் இளவழகன்.

"இளவழகனாரே! நீர் ஏன் கேலி பேசமாட்டீர்! உம்மையும் சேர்த்து அவள் குளத்தில் தள்ளியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்" என்றான் பூங்குன்றன். மீண்டும் பெரியவர் ஆரம்பித்தார்.

"அவன் பெயர் இராசேந்திர பூபதி பெயருக்கேற்ப அவன் வாட்ட சாட்டமாகவும், அழகாகவும் கெம்பீரமாகவுமிருந்தான்"

"உங்களைக் குளத்தில் தள்ளினாளே, அவள் பெயர் பூங்கோதை. ஏழைக் குடும்பத்திலே பிறந்த அந்த எழில் மங்கை, இந்தவட்டாரத்திற்கே ராணியைப் போன்று வாழ்ந்தாள். நல்ல சிவப்பு. நல்ல உடற்கட்டு. பருவத்தால் வளர்ந்த ஒவ்வோர் அங்கமும் அவளை மேலும் அழகுபடுத்தியது. அவளுடைய அழகுக்கு ஈடு அவளேதான்.

"எல்லோரிடமும் அன்போடு பழகுவாள். சிறுபிள்ளைகள் முதல், வயோதிகர்வரை அவளுடைய பேச்சைக் கேட்பார்கள். இந்தக் கிராமத்தில் நடைபெறும் எல்லா நல்ல நிகழ்ச்சிகளுக்கும், துக்க நிகழ்ச்சிகளுக்கும் அவளே முன்னின்று நடத்தி வைப்பாள். அவள் இல்லாமல் ஒரு காரியமும் நடைபெறாது.

"அவளைத் திருமணம் செய்துகொள்வதற்காக உள்ளூர் இளைஞர்களும், மிராசுதார்களும், வெளியூரிலிருந்து பெரும் பணக்காரர்களும் முயற்சி செய்தார்கள். திருமணம் வேண்டாமென்று சொல்லி வந்



தாள். பிறகு மெதுவாகப் பார்த்துக் கொள்ளலாமென்று நாட்களைக் கடந்து வந்தாள்.

"அன்று மாலை சூரியன் மறையும் சமயம் இதே மரத்தடியில் இராசேந்திர பூபதி பசியால் மயக்க முற்றுப் படுத்திருந்தான். முகத்தில் வேர்வைத் துளிகள் அரும்பி ஓடிக் கொண்டிருந்தன.

"அப்பொழுது, இந்தப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த பூங்கோதை, இவனைப் பார்த்தாள். விலை உயர்ந்த ஆடைகளை உடுத்தியிருந்த அவன், அலங்கோலமாக மரத்தடியில் படுத்திருந்த காட்சியைக் கண்ட அவளுக்கு ஒரே பதட்டமாகிவிட்டது. குளத்திலிருந்து சிறிது தண்ணீர் கொண்டு வந்து அவன் முகத்தில் தெளித்து, அவனைச் தன் நினைவுக்கு கொண்டு வந்தாள். சுய உணர்வு பெற்ற அவன், பூங்கோதையைப் பார்த்து 'திருதிரு'வென்று விழித்தான்.

'நீங்கள் யார்? எங்கு வந்தீர்கள்?' என்று விசாரித்தாள் பூங்கோதை.

'எல்லாவற்றையும் பிறகு சொல்லுகிறேன். இப்பொழுது எனக்குப் பசி அதிகமாக இருக்கிறது. ஏதாவது உதவி செய்தால் நன்றாயிருக்கும்...' என்றான்.

'எங்கள் வீட்டிற்கு வாருங்கள் நிறையச் சாப்பாடு போடுகிறேன்.'

'வேண்டாம்-வேண்டாம்! நான் இங்கே இந்த ஊரிலேயிருப்பது ஒருவருக்கும் தெரியக்கூடாது. கொஞ்சம் நாட்களுக்கு ஒருவருக்கும் தெரியாமலிருக்க வேண்டும். வேண்டுமானால் பிறகு உங்களுக்கு விவரமாகச் சொல்லுகிறேன்?"

'அப்படியா?' அவள் சிறிது நேரம் யோசித்தாள். பிறகு அதோ தெரிகிறதே மண்டபம்! அந்த மண்டபத்தில்தான் நான் இருப்பது,

அந்த மண்டபத்தில், இராசேந்திர பூபதியைக் கொண்டு வந்து, விட்டு விட்டு சாப்பாடு கொண்டு வருவதற்காக அவள் வீட்டிற்குச் சென்றாள்.

"சிறிது நேரத்திற்கெல்லாம், ஒரு சட்டியில் சாப்பாடும், சிறு செம்பில் பாலும் கொண்டு வந்தாள். சாப்பாட்டை இலையில் போட்டு வைத்ததும் அவன் சாப்பிட ஆரம்பித்தான். அவசர அவசரமாகச் சாப்பிட்டான். தன்னையும் சுற்றுச் சார்புகளையும் மறந்து சாப்பிட்டான். அவன் அவசர அவசரமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்த பூங்கோதைக்கு உள்ளத்திலே இரக்கமும் உதட்டிலே சிரிப்பும் வந்தன.

'மெதுவாகச்சாப்பிடுங்கள்' என்று இலேசாகச் சிரித்தாள். எதிரில் பூங்கோதை உட்கார்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை, அப்பொழுதுதான் அவனால் உணர முடிந்தது. 'இன்று முழுவதும் ஒன்றும் சாப்பிடவில்லை. பசி அதிகமாகி விட்டது அதனாலதான்......'

'அதனாலென்ன மெதுவாகச்சாப்பிடுங்கள்...'

"அவன் அமைதியாகச்சாப்பிட்டு முடித்து. 'உங்கள் உதவியை என்றும் மறக்க மாட்டேன். உங்கள் பெயர் என்ன?' என்றான்.

'பூங்கோதை' அது இருக்கட்டும், நீங்கள் இந்த ஊரிலிருப்பது ஒருவருக்கும் தெரியக்கூடாது—என்று சொன்னீர்களே ஏன்?'

'தெரிந்தால் போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள்.'

'அப்படியானால் யாரையாவது கொலை செய்துவிட்டு வந்து-விட்டீர்களா? அல்லது எங்கேயாவது கொள்ளையடித்து விட்டு வந்திருக்கிறீர்களா? உண்மையைச் சொல்லுங்கள்?,

'சேச்சே! அப்படியெல்லாம் நினைக்காதீர்கள். அந்த வழிக்கெல்லாம் நான் செல்லமாட்டேன். என்பெயர் இராசேந்திர பூபதி. அடுத்த மாதம் தமிழக சரித்திரமே காணாத அளவுக்கு இந்தி எதிர்ப்புப் போர் நடைபெறவிருக்கிறது. அந்தப் போராட்டத்தில் என் தலைமையின் கீழ் சுமார் ஆயிரம் பேர்கள் கலந்து கொள்ளத் தயாராக விருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்ட அரசாங்கம், என்னையும், மற்ற முக்கியமானவர்களையும் கைது செய்யும் படி உத்தரவிட்டிருக்கிறது. எங்களைக் கைது செய்தவன் மூலம் போராட்டத்தைக் கலைத்து விடலாமென்று நினைக்கிறார்கள். ஆனால் போராட்டம் எப்படியும் நடந்தே தீர வேண்டும் மென்பதற்காகத் திட்டம் வகுத்து நானும் எனது முக்கிய தோழர்களும் தலைமறைவாகி விட்டோம். போராட்ட தினத்தன்று எல்லோரும் ஒருகுறிப்பிட்ட இடத்தில் சந்தித்துப் போராட்டத்தில் கலந்து கொள்வோம்.

'ஏன்? அப்படிப் போராட்டம் நடத்த வேண்டும், போலீசுக்குப் பயந்து இப்படி வாழவேண்டும்...?'

'அதுவா! வருங்காலத்தமிழ் நாட்டுச் சந்ததிகளை, நிரந்தர அடிமைகளாக ஆக்கவேண்டுமென்று வடநாட்டுக்காரர்கள் செய்யும் சூழ்ச்சிதான் இந்தஇந்தித் திணிப்பு-அதை எதிர்த்து நாங்கள்நடத்தும்போராட்டம்?'

'சூழ்ச்சியும் போராட்டமும்... எனக்கு ஒன்றும் புரியவில்லை. போகட்டும்! ஒருமாதம் வரை சாப்பாட்டுக்கு என்ன செய்வீர்கள்?'

'அவசரத்தில் திடீரென்று புறப்பட்டதால் நிறையப்பணம்கொண்டு வரவில்லை. ஏதோ கையில் பத்து ரூபாய் இருக்கிறது. அதைக் கொண்டு சமாளிக்க வேண்டியது தான்...'

'கவலைப்படாதீர்கள்! சாப்பாட்டிற்கு நானுச்சு. இந்தப்பாலை படுக்கச்செல்லும் பொழுது சாப்பிடுங்கள். படுக்கை கொண்டுவர வில்லை போலிருக்கிறதே.'

"படுக்கைகொண்டு வர வில்லை. போர்வை மட்டும் கொண்டு வந்திருக்கிறேன். அதை வைத்துச் சமாளித்துக் கொள்கிறேன்.

'இருங்கள் நான்போய்ப்படுக்கை கொண்டு வருகிறேன்.'

"சிட்டாகப் பறந்து சென்று ஒரு படுக்கையுடன் வந்து, அவனிடம் படுக்கையைக் கொடுத்து நிம்மதியாகத்தூங்கச் சொல்லி விட்டுப் போய் விட்டாள் பூங்கோதை.

"அதற்குப் பிறகு ஒவ்வொரு நாளும், காலையில் காப்பி பலகாரமும், பகலிலும் இரவிலும் சாப்பாடும் கொண்டு வந்து கொடுப்பாள். அவற்றை அவன் சாப்பிடும் வரை அவனருகிலேயே உட்கார்ந்திருந்து கவனித்து வருவாள். இப்படியே ஒரு வாரம் நகர்ந்தது. அவளுக்கு வயலில் வேலைநேரம் போக மற்ற நேரங்களில் அவனுடனே பேசிக் கொண்டிருப்பாள்.

"நாட்கள் சென்றன. இருவரிடமும் அன்பும் பாசமும் வளர்ந்து வந்தது. அவனின்றி அவள்இல்லை. அவள் இன்றி அவனில்லை—என்ற அளவுக்குப்பாசம் இருவர் உள்ளத்தையும் பிணைந்திருந்தது. இந்தி எதிர்ப்பு போராட்டம் முடிந்ததும்' பூங்கோதையை அவன் திருமணம் செய்து கொள்வதாகக்கூறினான்.

"திருமணம்—என்று சொன்னதும், நாணத்தால் முகத்தை இரு கையாலும் மூடிக்கொண்டாள். அந்தக் காட்சி இன்னும் என்கண்முன் அப்படியே நிழலாடுகிறது. திருமணத்திற்குப்பிறகு அவன் அவளைச் சென்னைக்கு அழைத்துச்செல்வதாகக் கூறியிருந்தான். எப்போதும் சென்னையைப் பற்றியே நினைவாகவே இருந்தாள் பேதை பூங்கோதை.

"அன்று இந்தி எதிர்ப்புப் போராட்ட நாளுக்கு முந்திய தினம். அவளிடம் அவன் விடை பெற்றுக் கொண்டான். 'இந்தி எதிர்ப்புப் போராட்டம் முடிந்து ஒரு மாதத்திற்குள், திருமண ஏற்பாட்டோடு வந்து உன்னை, என் மனைவியாக ஆக்கிச் சென்னைக்கு அழைத்துச் செல்கிறேன்' என்றான்.

"அவனுடையநெஞ்சிலே, அவள் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். அவள் வாழ்க்கையிலேயே அப்படி அழுதது அதுதான் முதல் தடவையாகவிருக்கவேண்டும். பதிலுக்குச்சிறு பிள்ளை போல் அவனும் அழுதானே தவிர அவனால், அவளைத் தேற்ற முடிய வில்லை. சிறிது நேரத்திற்குப்பிறகு, அவன் அவளிடம் பிரியா விடை பெற்றுச் சென்றான்.

"அவன் சென்னைக்குச் சென்று ஒரு மாதத்திற்குமேல் ஆகிவிட்டது. இந்தி எதிர்ப்புப் போர் தமிழக சரித்திரமே காணமுடியாத அளவுக்குப் பயங்கரமாகவும், தீவிரமாகவும் இருந்ததாகக்கூறினார்கள். மாதங்கள் இரண்டும் அதைத் தொடர்ந்து மற்றொன்றுமாக மூன்று மாதங்கள் ஓடி மறைந்தன. ஆனால் இராசேந்திர பூபதியைப் பற்றிய செய்தி ஒன்றுமே தெரியவில்லை.

"பூங்கோதைவடித்த கண்ணீரையும், பட்டவேதனையையும் சொல்லி முடியாது. அந்தமண்டபமேகதியாகவிருந்தாள். அவள் படும் வேதனையைக் காணச் சகிக்காத நான் ஒரு நாள் சென்னைக்குப் புறப்பட்டேன் இராசேந்திர பூபதியைத் தேடிக் கொண்டு.

"சென்னையில்,இராசேந்திரபூபதியைப் பற்றி நான்கேள்விப்பட்டதும் என் இருதயமே நின்று விடும் போலிருந்தது. என்னாலேயே தாங்கிக் கொள்ள முடியாத அந்தச் செய்தியைப்பிஞ்சுஉள்ளம்படைத்த பூங்கோதைஎபபடித்தாங்கிக்கொள்வாளோ—என்று எண்ணிய போது அழுதே விட்டேன்.

"இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், அவன் ஒரு முக்கியமானவன் என்பதைத் தெரிந்து போலீசார் அவனை வேண்டுமென்றே சுட்டுக் கொன்று விட்டார்களாம்"

இதைச் சொல்லிக் கொண்டே பெரியவர் 'ஓ' வென்று அழுதார். எங்கள் எல்லோர் கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மீண்டும் பெரியவர் ஆரம்பித்தார்.

"இந்தச்செய்தியைப் பூங்கோதையிடம் எத்தனை நாட்களுக்கு மறைக்க முடியும். ஊர் வந்து சேர்ந்த நான் ஒரு நாள் உண்மையைச் சொல்லி விட்டேன். ஆனால் அவள் அதை நம்பவில்லை.

"வானம்பாடி போல், இந்தக் கானத்தில் சுற்றித்திரிந்த வாடா மலர் பூங்கோதையின் முகம் வாட ஆரம்பித்தது. சிரித்துச் சிரித்து எங்கள் எல்லோரையும் இன்ப வெள்ளத்தில் மூழ்க வைத்த; அந்தப் பேதை சிந்தித்துச் சிந்தித்துச் சித்தம் கலங்கிச் சித்திரவதைப் பட்டாள். துன்பத்தைக் காணாத அவள் துயரத்தால் துவண்டாள்.

"உணவை மறந்தாள், உறக்கத்தை மறந்தாள், உடையை மறந்தாள், இந்த ஊரைமறந்தாள், ஊர் மக்களை மறந்தாள், தன்னை மறந்தாள், இந்த உலகத்தையும் மறந்தாள். ஆனால், ... இராசேந்திர பூபதியை மட்டும் மறக்கவில்லை.

"என்றாவது ஒரு நாள் அவன் வருவான், தன்னைத் திருமணம் செய்து கொண்டு சென்னைக்கு அழைத்துச் செல்வான் — என்று இன்று வரை நம்பிக்கொண்டுதான் இருக்கிறாள். அதனால் தான் வெளியூர்களிருந்த எவராவது வந்தால், 'அவர் எங்கே? எப்போது வருவார்? என்ன சொல்லி அனுப்பினார்?' என்று கேட்கிறாள். வந்தவர்கள் தக்க பதில் சொல்லா விட்டால் சிலசமயம் அவர்களை அறைந்தும் விடுகிறாள். இந்த தடவை நீங்கள் அகப்பட்டுக் கொண்டீர்கள்." பெரியவர் கண்ணீரைத்துடைத்துக் கொண்டே கதையை முடித்தார்.

நாங்கள் எல்லோரும் அந்தக் கிராமத்தைத் திரும்பிப்பார்த்தோம். பூங்கோதை எங்களை நோக்கித் தூரத்தில் வந்து கொண்டிருந்தாள். நாங்கள் அவசர, அவசரமாக எங்களுடன் இருந்த சில்லரைச்சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு காரில் போய் உட்கார்ந்தோம். கார் சென்னையைநோக்கிப் புறப்பட்டது. நான் திரும்பிப்பார்த்தேன். பூங்கோதை பெரியவர் அருகில் வந்து நின்றுகொண்டிருந்தாள். இருவரும் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த சோகக் காட்சியைக் கண்ட என் கண்கள் இரண்டு கண்ணீர்த் துளிகளை உதிர்த்தன.

★

கடற்குமரி கைலைமலை சிவனார் மீது
காதலுற்றுக் கடுந்தவமே புரிந்த போதும்
உடலுறவு கொள்ளாமல் இருந்தா ளென்று
உரைக்கின்ற கதைகேட்ட பண்டை வானில்
இடர்கலந்து புகுமிந்தி எழுச்சி கண்டும்
இனக்கலவை புரியாத்தூய் தமிழைப் போல்
படரிரவிற் பட்டும்படா பாதரசம் போல்
பவளத்தீ பளபளக்கப் பகலோன் வந்தான்.

சிறுபொய்கைத் தாமரையே சிரிப்பி னூடே
சிந்திற்றுப் பனிக்கண்ணீர்! பாடும் வண்டின்
கருங்கண்கள் ஆடிற்று. ஆனந்தத் தால்
கமலக்கதிர் காதலர்கள் மோன முற்றார்!
பெருக்குற்ற அன்புளத்தின் பேச்சைப் போல
பின்னிவரும் இரண்டலைகள் மெல்லப் பேசும்,
வருமிந்தப் புதுநாளில்; தைமுதல் நாளில்
வழங்குகிற அணிஉடைகள் வாழ்த்து மென்ன!

விலையேறிப் போச்சுதடி. பொன்னும் ஆள்வோர்
விடுத்திட்ட அறிக்கையிலே பெண்கட் கெல்லாம்
தலையாய கற்பொன்றே நல்லணி; சூடும்
தங்கநகை யெதற்கென்று சொல்லி விட்டார்.
உலையூதும் பொற்கொல்லன் ஆறில் ஒன்று
ஒழுங்காகத் திருடுவதில் குறைய வில்லை.
பலரின்று அணி'கில்டு' நகையிட் டாலே
பல்லிளித்துப் பரிகாசம் செய்யு மன்றோ?

வாங்குகிற கதர்த்துணியின் கடைக்குப் போனேன்
வைத்தவிலை மூன்றிலொன்று குறைவென் றார்கள்.
ஏங்குகிற இராட்டினத்தார் வாங்கும் கூலி
இறங்கிமனம் நைவரென வாங்க வில்லை.
பாங்குமிகும் கைத்தறியாற் கடைக்குப் போனேன்
பரவசமாய்ப் பணமெடுத்தேன். அந்த வேளை
ஆங்கிலனே, 'அதுஎதற்கு? சாயம் போகும்;
அடுத்தடுத்து நிறம்மாறும் ஓந்தி என்றான்

கனற்பந்தம் நிகர்நீயே பட்டின் ஆடை
கட்டிடவே எரிந்திடுமே எனநி னைந்தேன்.
முனம்மூவ ரின்முன்நிர் வாண மாக
மொய்குழலாள் அநுசுயையே நின்ற கற்பு
உனக்கிங்கே உண்டிலையோ? கண்ணகி போல்
உயர்ந்தவள்நீ தமிழினோ டுதித்த பூவே!
மனத்தாங்கல் விட்டெழிலின் முகம்தி ருப்பு!
மனஒளித்தேன் முத்தமதில் மகிழு வாயே!

கலக்கின்ற நம்முத்தின் ஓசை மென்மை
கானமிடும் தென்றலிதில் திராவி டத்தின்
குலச்செல்வ செல்வியரும் வேர்வை சிந்தி
குவலயத்தை ஏர்முனையில் காக்கும் ஏழை
இலமெல்லாம் இன்பநிலா வீச அன்பின்
இதயமெலாம் கடலலைபோல் பெருகிப் பொங்க
உளமார இந்நாளில் உரைப்போம் வாழ்த்து
ஒளிர்செக்கர் இருட்கலந்த வான்கொடி பாராய்!

குஞ்சுப் பட்டிப் பஞ்சாங்கம், அம்பி ஐயங்கார் என்றால் அந்த வட்டாரத்தில் குழந்தைகளுக்குக் கூடத் தெரியும்! அவ்வளவு பிரபலம்!

அம்பியின் பாட்டன் பஞ்சு ஐயங்கார், பஞ்சாங்கம் கணித்து வெளியிட்டவராம்! அந்தக் காலத்தில் 'குஞ்சிப்பட்டிப் பஞ்சாங்கம்' என்றால் சோசியர்கள் வீட்டில் மட்டுந்தான் கிடைக்குமாம்!

காரணம், பஞ்சாங்கத்திற்குப் புகழ் ஏற ஏற விலையும் ஏறி, பொது மக்கள் வாங்க முடியாத அளவுக்குப் போய் விட்டதென்று குஞ்சிப்பட்டி வாசிகள் இன்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

பஞ்சு ஐயங்கார் காலத்திற்குப் பிறகு ஒருவரும் பஞ்சாங்கம் கணிக்கவில்லை. ஆனால், பேர் மட்டும் தொடர்ந்து நிலைத்திருந்தது.

அப்படி நிலைத்திருந்ததற்கும் காரணம் இல்லாமல் இல்லை. பஞ்சுவின் சந்ததியாருக்கு பஞ்சாங்க கணிதம் தெரியாவிட்டாலும் ஜாதகம் கணித்தல், மணப்பொருத்தம் பார்த்தல், முகூர்த்த நேரம் பார்த்தல், ஆரூடம் சொல்லுதல், முதலிய சோசியத் தொழில் தொடர்ந்து நடந்து வந்தது!

அந்த பரம்பரைத் தொழில் ஒன்றுதான் அம்பி ஐயங்காரின் சிறுவயதில் வருமானவழியாக இருந்தது.

குஞ்சிப் பட்டி மக்களுக்கும் ஐயங்கார் என்றால் தனி அபிமானம்!

வீட்டில் பல்லி கத்தினாலும், தெருவில் ஆந்தை அலறினாலும், தூக்கத்தில் கனவுகண்டாலும், ஐயங்காரிடம் பலன் கேட்க வருவார்கள் ஊர் மக்கள்!

குஞ்சிப்பட்டி உழவர்கள் நிறைந்த இடம்! மூட நம்பிக்கைகளுக்குச் சொல்ல வேண்டுமா?

உழவு போடுவதிலிருந்து கதிரடித்துக் களஞ்சியம் சேர்ப்பதுவரை-வீட்டுக்கு அடித்தளம் போடுவதிலிருந்து புதுமனைபுகும் வரை இடையில் செய்ய வேண்டிய ஒவ்வொரு காரியத்திற்கும் ஐயங்காரின் சோதிட ஆலோசனை தேவைப்படும். இதனால் ஐயங்கார் குடும்பம் எல்லாருக்கும் அபிமானத்திற்குரியதாக இருந்ததில் அதிசயம் இல்லை.

இப்படி ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகப் பலன் சொல்வதுடன் ஒவ்வொரு நாள் காலையிலும் ஊர்ச் சாவடியில் இருந்து பஞ்சாங்கம் வாசிப்பது ஐயங்கார்குடும்பத்திற்குப் பரம்பரை வழக்கம்.

பஞ்சாங்கம் கேட்பதற்கென்றே சில பெரியவர்கள் காத்திருப்பார்கள். ஐயங்கார் குளித்துச் சாப்பிட்டுவிட்டு நெற்றியில் திருமண் துலங்க சாவடிக்கு வருவார். அதற்குள் ஊர் மக்கள் 50 பேருக்குக் குறையாமல் கூடி நிற்பார்கள். ஐயங்கார் வந்ததும் பஞ்சாங்கத்தை விரித்து:—

''திதிங்க ஸ்ரீமா, விநோதி வாரம், ஆயுஸ் வர்த்தனம்: நட்சத்திரே, ஹரதே பாவம்: யோகே, ரோக நிவாரணம்: கரணாத், கர திஞ்சா பஞ்சாங்கம் பல உத்தமம்.

சார்வரி வருஷம் ஐப்பசி மாதம் 14-ம்தேதி வெள்ளிக்கிழமை பூர்வ பட்சம் பஞ்சமி திதி 13-15-க்கு மேல் சஷ்டி திருவோண நட்சத்திரம் 22-18க்குமேல் அவிட்டம். மேற்கே சூலம்''

இதைச் சொல்லி முடிப்பார். இதைச் சொல்வதனால் என்ன பயன் என்பது யாருக்குமே தெரியாது-ஐயங்கார் உட்பட! ஆனாலும் பஞ்சாங்கம் சொல்லி முடிக்கும்வரை பக்தி விநயமாக இருந்து கேட்பது குஞ்சிப்பட்டி வாசிகளுக்கு வழக்கமான ஒன்று. பஞ்சாங்கம் சொல்லி முடிந்ததும் ஊர் மக்களில் சிலர்-முக்கியமானவர்கள் ஐயங்காரிடம்:—

''சாமி திருக்கார்த்திகை எப்போது வருகிறது?''

''இன்னும் ஒரு மாதம் இருக்கிறது.''

''சாமி! தீபாவளி எப்போது?''

''இன்னும் ஒன்பது நாள் இருக்கிறது''

''சாமி! இன்றைக்கு சூலம் எந்தப் பக்கம்?''

''அதுதான் சொன்னேனே மேற்கே என்று''

இதுபோன்ற ஐயவினாக்கள் எழும்! இந்த வினாக்களுக்கு விடை கூறிவிட்டு வீடு திரும்புவார் ஐயங்கார்.

பிறகு, சாதகம் பார்ப்பது, கிரக தோஷங்களுக்கு சாந்தி-பரிகாரம் செய்வது, இதுதான் ஐயங்காருக்கு அன்றாட வேலை!

இதனால் கிடைத்த வருமானம் அதிகமில்லை என்றாலும் போதுமானதாக இருந்தது.

காலையில் பஞ்சாங்கம் வாசிப்பதற்காக ஊர்ப் பொதுவிலிருந்து ஆண்டுக்கு ரூ 100 கொடுத்து வந்தார்கள்.

இது போக, தினசரி காய்கறிகள் பழம் பால் நெய் நெல் பருப்பு முதலியன அன்பளிப்பாக வரும்.

ஜாதகம் பார்ப்பது வருமானங் குறைந்த தொழிலானாலும், சாந்தி-பரிகாரங்கள் மூலம் கிடைப்பது-கொள்ளையிட்டு வந்ததுபோல்

இருக்கும். மொத்தத்தில் ஐயங்காருக்குப் போதுமான வரும்படி இருந்த தென்றே சொல்ல வேண்டும்.

ஐயங்காரின் குடும்பமும் பெரியது தான். அம்பி, அவருடைய மனைவி அலர்மேலு. தாயார் சீதாலட்சுமி, தகப்பனார் கிட்டுவையங்கார், பங்கஜம், பத்மா, பர்வதா, என்ற மூன்று பெண்கள் ஆக ஏழு பேர்-போதாதா என்ன?

குடும்பம் பெரியதாக இருந்ததால் வருமானம், செலவுக்குப்போய் மீதப் படுவதாக இல்லை.

அம்பிக்கு பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிற மனக்குடைச்சல் கொஞ்சகாலமாகவே வலுப் பெற்றிருந்தது. ஆனால், அதற்குத் தகுந்த கல்வியோ, மூலதனமோ, வியாபாரம் கைத்தொழில் பற்றிய அறிவோ, எதுவும் இல்லை அவருக்கு.

அவருக்குத் தெரிந்த தெல்லாம் பஞ்சாங்கம் வாசிப்பதும் சாதகம் பார்ப்பதும்தான். திண்ணைப் பள்ளியில் 3-ம் வகுப்பை முடித்துவிட்டு முன்னோர்களின் கிட்ட இருந்து அனுபவமாகத் தெரிந்து கொண்டதுதான் பஞ்சாங்கம் சாதகம் கூட!

இந்த இலட்சணத்தில் பணம் சம்பாதிப்பது எப்படி? பலவகை யோசனைக்குப் பிறகு, புதிய தொழில்களில்-வியாபாரங்களில் இறங்கி அல்லற் படுவதை விட இப்போது செய்யும் தொழிலுடன் சேர்ந்ததாகவே துணைத் தொழில் ஒன்று தொடங்க வேண்டும் என்று முடிவு செய்தார், அம்பி!

அந்த முடிவுதான் ஆஞ்சநேயர் தியானம்! மறுநாளே செப்புத் தகட்டில் ஆஞ்சநேயர் உருவமும், ஐயும் கிலியும் சவ்வும் ரீயும் என்று மந்திரங்களும் எழுதிக் கொண்டுவர உத்திரவு செய்தார்.

ஆஞ்சநேயர் சக்கரம் வந்தது! அதுமுதல் ஐயங்கார் வீட்டில் தினசரி பூசைகள் தியானங்கள் ஒரே அமர்க்களம்! குஞ்சிப்பட்டி முழுதும் இதே பேச்சு!

''ஆஞ்சநேயர், ஐயங்காருக்கு சித்தியாயிட்டதாமே?'' என்பான் ஒருவன்.

''ஆமாம், அனுமார் இப்போது ஐயங்காரு சொல்றதைக் கேட்டுக் கொண்டு அவர் வீட்டிலேயே இருக்காரு!'' என்பான் மற்றவன்.

''ஏண்டா, அனுமாரைப் பார்க்கவே பயமா இருக்குமாமே! வானத்திற்கும் பூமிக்கும் ஒண்ணு, விசுவரூபம் எடுத்துக் கொண்டு வருவாராமே?'' என்பான் வேறொருவன்.

''விசுவரூபம் எடுத்தா என்னடா பயம்? தெய்வத்தைப் பார்ப்பதற்கு! அப்படியே பயமாயிருந்தாலும், அனுமார் சாமி! விசுவரூபத்தை மாற்றி சுய ரூபத்திலே வா சாமி! என்று கேட்டா, உடனே குழந்தை மாதிரி வந்திடுவாருடா!'' இப்படி அனுபவம் சொன்னான் இன்னொருவன்.

இப்படிப் பலபேர் பலவிதமாக-ஆஞ்சநேயரைப் பலநாள் பழகியவர் போல-விளக்கம் சொன்னார்களே தவிர, ''மூடர்களின் செல்வத்தை மூட்டை போடுவதற்கு ஏற்பட்ட வழிகளில் இதுவும் ஒன்று'' என்று ஒருவர்கூடச் சொல்லவில்லை!

இப்படி ஊரெல்லாம் அமர்க்களப் பட்டுக்கொண்டிருந்த போதுதான், பொம்மன்பட்டிப் பெரிய பண்ணையார் புழுகுவீரன் அம்பலம், அம்பி ஐயங்காரைத் தேடி வந்தார்.

குஞ்சுப்பட்டிக்கு மேற்கே 12 கல் தொலைவில் இருப்பதுதான் பொம்மன் பட்டி.

பொம்மன்பட்டியில் 100 வேலி நன்செயும், அரண்மனை போன்ற இரண்டு மாடியுள்ள வீடும், ஏவல் எடுபிடி வசதியும் உடையவர் புழுகு வீரன் அம்பலம்! ஊரின் கிராம முன்சீப் வேலையும் பரம்பரை பரம்பரையாக வந்து இப்போது அவர் கையில் இருந்தது. அவ்வளவு இருந்தால் போதாதா சிற்றூர்களில்? பொம்மன்பட்டி முழுவதுமே அம்பலத்தின் கையில்தான்!

அம்பலத்திற்கு 32 வயதிருக்கும்-இந்த வயதுக்குள் அவர் செய்யாமல் விட்ட தீச்செயல் பாக்கி இல்லை.

அவருக்கு மங்கையர்க்கரசி என்ற மனைவி இருந்தாள். உயர்குடிப் பிறந்த உத்தமி. ஒழுக்கத்தின் பிறப்பிடம். ஆனால், அம்பலத்தின் திருவிளையாடல்களுக்கெல்லாம் அவள் உடந்தையாக இருப்பதில்லை. இதனால், நீண்ட நாட்களாக கணவன்-மனைவி உறவு, புலியும்-புள்ளிமானும் ஆகியிருந்தது. சுருக்கமாகச் சொன்னால், அவர்களுடைய மகன் பிறந்த பிறகு-சுமார் 3 வருடமாக இல்லறம் நல்லறமாக இல்லை! ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு நாட் காலையில் மங்கையர்க்கரசி வீட்டில் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்துபோனாள்.

அவள் இறந்த பிறகு பேயாகித் திரிவதாகவும் இராத்திரி நேரங்களில் வீட்டுக்குள் அழுகுரல் கேட்பதாகவும் அக்கம்பக்கத்தில் இருந்த வீட்டுக்காரர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

பேய் வருகிறதோ இல்லையோ-மங்கையர்க்கரசி இறந்த பிறகு அந்த வீட்டில் ஒரு நாட்கூடப் புழுகு வீரன் அம்பலம் இரவில் தங்கியதில்லை. அவ்வளவு பயம் அவருக்கு!

அம்பலத்திடம் யாரோ சொன்னார்களாம்; குஞ்சுப்பட்டிப் பஞ்சாங்க ஐயங்கார் பெரிய மந்திரவாதி என்று. உடனே வண்டியைப் பூட்டிக் கொண்டு வந்துவிட்டார்.

பொம்மன்பட்டிப் பண்ணையார் வந்த போது, அம்பி வீட்டிலே இருந்தார். பண்ணையாரின் வில் வண்டியில் பூட்டிய காங்கேயம் காளைகளின் சதங்கைச் சத்தம் குஞ்சுப்பட்டியில் நுழைந்ததும் சிறுவர் பட்டாளம் ஒன்றையே திரட்டிக்கொண்டு ஐயங்கார் வீட்டுக்கு முன்னால் வந்து நின்றது.

ஐயங்காரின் இல்லக் கிழத்தி அலர்மேலு அப்போது வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

வண்டிநின்றதும் வியப்பு, மகிழ்ச்சி, நாணம் ஆகிய உணர்ச்சிகள் தாங்க முடியவில்லை. பரபரப்பாக உள்ளே சென்று ''யாரோ மனுசாள் தேடி வந்திருக்கா வில்வண்டியில்'' என்றாள்.

அம்பி வாசலுக்கு வந்து, ''வாருங்கோ! வாருங்கோ!'' என்று வரவேற்றார். 'பெரிய வேட்டை' ஏதோ கிடைக்கப் போகிறது, என்று அவருடைய உள் மனம் உணர்த்தியது.

பண்ணையார் இறங்கியதும், ''சாமி! நீங்கதானே பஞ்சாங்கம் அம்பி ஐயங்கார்?''

''ஆமாம், நீங்கள்...?''

''சாமி! நான்தான் பொம்மன்பட்டிப் பெரிய பண்ணை கிராம முன்சீப்-கேள்விப் பட்டிருக்கீங்களா?''

''நன்னாக் கேள்விப் பட்டிருக்கேனே! அடடா...! நிக்கிறேளே! உக்காருங்கோ!'' என்று சொல்லிக் கொண்டே ஆசனம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

''சாமி! உட்கார நேரமில்லை. தயவு செய்து நீங்க நம்ம வீட்டுவரைக்கும் வந்து திரும்பணும். நம்ம வண்டிலேயே திரும்பிடலாம்!''

''நன்னா வரேன்! என்ன காரியமோ?''

"சாமி! அதெல்லாம் பிறகு சொல்றேன்! நீங்க வண்டிலே ஏறுங்க!

"சரி! வாருங்கோ! போவோம்!"

"அடியே அலமு! நான், பண்ணையார் ஆத்துவரை - பொம்மன் பட்டிக்குப் போயிட்டு வந்துடறேன். யாராவது தேடிவந்தா விவரமாகச் சொல்லுவையோ?" என்று மனைவியை எச்சரித்துக் கொண்டே ஐயங்கார் வண்டியில் ஏறினார்-தொடர்ந்து பண்ணையாரும் ஏறினார். வண்டி பொம்மன் பட்டி நோக்கிப் பறந்தது!

பகல் 11-30 மணி இருக்கலாம். அப்போது பண்ணையாரின் வீட்டு வாசலில் வண்டி நின்றது. பண்ணையாரும் ஐயங்காரும் வண்டியிலிருந்து இறங்கினார்கள். அதற்குள் வண்டியைச் சுற்றி ஒரு பட்டாளமே கூடி விட்டது.

வண்டியிலிருந்து இறங்கிய இருவரும் உடனே வீட்டுக்குள் சென்று நாற்காலிகளில் அமர்ந்தனர். பண்ணையாரின் 8-வயது மகனும் அங்கே இருந்தான்.

"சாமி! சோடா சாப்பிடுறீங்களா? சாமி! மோர் வேணுமா? சாமி! காபியாவதுபாலாவதுசாப்பிடுங்களேன்!"

என்பன போன்ற உபசாரமும் பரிவும் மரியாதையும் ஐயங்காருக்குத் தாங்க முடியவில்லை.

"பண்ணையார்வாள்! நேக்கு ஒண்ணும் வேண்டாம்! வேண்டாமின்னு நீங்கள் வருத்தப்படுவேள்! கொஞ்சம் மோர் இருந்தாக் கொண்டு வரச் சொல்லுங்கோ! அதற்குள்ளற அழைச்சிண்டு வந்த காரியத்தையும் சொல்லுங்கோ- நாழியாகிறது! நானும் ஊருக்குப் போகணும் பாருங்கோ-யாராவது உங்களைப் போல மனுசாள் தேடுவா! விஷயத்தைச் சொல்லுங்கோ"

"சொல்கிறேன் சாமி! நீங்க தாகத்திற்கு ஏதாவது சாப்பிடுங்க அப்புறம் சொல்றேன்" என்ற பண்ணையார் சுற்றிலும் ஒரு முறை பார்த்துக் கொண்டு மகனைப் பார்த்து "தம்பி சுந்தரம்-(அதுதான் அவன் பேர்) நீ அடுத்த தெரு அனந்தம்மா அத்தை கிட்ட நல்ல மோரா ½ படி மோர் கொடுன்னு வாங்கிண்டு ஓடியா!" என்றார். பையன் வெளியே போனான்.

அவன் போன பிறகு பண்ணையார் சொன்னார். "சாமி! இந்த வீட்டிலே கொஞ்ச காலமா பேயினுடைய அட்டகாசமா இருக்கு. இராத்திரி எல்லாம் ஒரே அழுகையும் :கூச்சலுமா இருக்கு. சாமியவர்கள் பெரிய மந்திரவாதி என்று சொன்னார்கள். நீங்கள்தான் பேயை விரட்டி எனக்கு நிம்மதி உண்டாக்க வேண்டும்."

"பண்ணையார்வாள் பேய்த்தொல்லை எவ்வளவு நாளா இருந்துண்டிருக்கு?"

"அது ஏழெட்டு வருஷமா இருந்து வருகிறது சாமி! என் மனைவியைக் கூட புத்திபேதம் ஏற்படும்படி செய்து போன மாசம் தற்கொலை செய்துவிட்டாள் சாமி!"



பண்ணையார் சொல்லி முடிந்ததும் ஐயங்கார் ஆலோசனையில் ஆழ்ந்தார். பேயை விரட்டமுடியுமா? தன்னுடைய மந்திரம் பலிக்குமா? பலிக்காவிட்டால் எவ்வளவு அவமானம்? என்பன போன்ற கேள்விகள் குடைய ஆரம்பித்தன. இதற்குள் பண்ணையார் மகன் பாத்திரம் நிறைய மோருடன் திரும்பி வந்தான்.

மோரைக் குடித்துவிட்டு ஐயங்கார் சொன்னார்:-"பண்ணையார்வாள் கவலைப்படாதீங்கோ! எந்தத் தோஷமாயிருந்தாலும், பிரம்ம ராட்சசா இருந்தாலும், சாந்திபண்ணி ஓட்டிடறேன். இப்போ நான் வாய்க்காலுக்குப் போகணும். எந்தப் பக்கம் போகவேணும்கிறது தெரியாது. கொஞ்சம் பையனைக்கூட அனுப்பறேளா?"

"ஆகா! தம்பி சுந்தரம்!" சாமியை நம்ம தோட்டத்திற்குக் கூட்டிப் போய்க்கூட்டி வா! என்றார் பண்ணையார்.

சுந்தரமும் ஐயங்காரும் புறப்பட்ட போது. பண்ணையாருக்கு வேண்டிய பெரியவர் ஒருவர் வந்து பண்ணையாரிடம்; "ஐயா! இவரு குஞ்சுப்பட்டி ஐயங்காரு மகன்னுலே! எதற்கு வந்திருக்காரு? ஜாதகம் பார்க்கவா?" என்று விசாரித்தார்.

"இல்லை தாத்தா! இந்த, இருந்துங் கெடுத்துப் போயும் கெடுத்த முண்டை கயிற்றைப் போட்டுச் செத்தாளே! அதிலே இருந்து இந்த வீட்டிலே குடியிருக்க முடியலே. யாராவது தொழிலாளியைக் கொண்டு வந்து அதை ஒடுக்கணும் என்று உங்களைப்போல இருக்கிற பெரியவங்க சொன்னாங்க! அதுக்காகத்தான் ஐயங்காரைக் கூட்டி வந்தேன்"

"அப்படியா! சரி சரி, செய்ய வேண்டியதுதான்! ஆனால்இவருக்கு ஜோசியம் தானே தெரியும்! மந்திரமும் தெரியுமா?"

"மந்திரமும் படிச்சிருக்காராம் தாத்தா! எல்லாரும் சொல்லுறாங்க!"

"அப்படியா! அந்தக் காலத்திலே இருந்து பஞ்சாங்க ஐயங்கார் வீடு சோசியர் வீடுன்னுதான் சொல்லக் கேட்டிருக்கேன். மந்திரம் தெரியும் கிறது இப்போதான் கேள்விப்படுறேன். சரி. ஐயா! முதல்லே ஐயங்காரு வந்ததும், எந்த இடத்திலே செத்தா! என்ன காரணத்தாலே செத்தா! என்கிற விவரமெல்லாம் பூசை முகத்திலே உட்கார்ந்து சொல்லணும்னு கேளுங்க. அதைச் சரியாச் சொல்லிட்டா மற்றதும் சரியாத்தான் இருக்கும். நான் போயிட்டு வாரேன்!"

இவர்கள் இங்கே இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது வாய்க்காலுக்குப் போனவர்கள் என்ன பேசிக் கொண்டு போகிறார்கள் என்று கவனிப்போம்.

"ஏண்டா அம்பி! உங்க அம்மா இறந்து போனாளாமே! அன்னிக்கி நீ வீட்டிலேதானே இருந்திருப்பே?"

"ஆமா சாமி! வீட்டிலேதான் இருந்தேன்!"

ஆத்தா சொல்லிச்சு. அவ்வளதான் அப்பாவுக்குக் கெட்ட கோபம் வந்திச்சு. ஆத்தாளைக் கீழே இழுத்துப் போட்டு நெஞ்சிலே ஏறி உட்கார்ந்துக்கிட்டு ''தேவிடியா மகளே! உனக்கு அத்தனை கொழுப் பேறிப் போச்சா? செத்துப்போ! செத்துப் போ!'' அப்பிடின்னு சொல்லிக் கிட்டே ரெண்டு கையைக் கொண்டும் ஆத்தா கழுத்தைப் பிடிச்சு நெருச்சுக் கிட்டேஇருந்தாரு! அப்போ ஆத்தா திருதிருன்னு முழிச் சது. அவ்வளவுதான். அப்புறம் ஒண்ணும் பேசவே இல்லே.

ஆத்தா பேசாம இருந்த அப்புறம் அப்பாவுக்குக் கோபம் போயிட்டது.

''உங்கம்மா தூக்குப் போட்டுக் கிட்டப்போ ஒருத்தருக்கும் தெரியாதா?''

''நானும் அப்பாவும் கீழ் வீட்டிலே படுத்திருந்தோம். ஆத்தா மாடிலே இருந்து தூக்குப் போட்டுட்டா!''

''தூக்குப் போட முந்தி உங்க ஆத்தாளை எப்போ பார்த்தே?''

''முதல் நாள் ராத்திரிலே நானும் ஆத்தாளும் மாடியிலேதான் இருந்தோம்!''

''பிறகு ஏன் கீழே வந்தே, ஆத்தாளை விட்டுட்டு?''

''அன்னிக்கு ராத்திரி ஆத்தாளும் நானும் மாடிலே இருந்தோமா? அப்போ, அப்பா விருவிருன்னு மாடிக்கு வந்தாரு! வந்து, 'ஏண்டி எடுபட்ட சிறுக்கி, நேத்து விடியற் காலம் முத்தாயி இங்கிருந்து போற போது நீ என்னடி சொன்னே?' அப்படின்னு சொல்லிண்டே ஆத்தாளோட தலே மயிரைப் பிடித்து இழுத்துப் பரபரன்னு சுத்துனரு! சுத்துனரா?

''நீங்க என்னைக் கொண்ணாலும் சரி; அவ இந்த வீட்டுக்கு வாரதையும், நீங்க அவளை அறைக்குள்ளே போட்டுப் படுத்துக்கிறதையும் பார்த்துக் கிட்டு-சகிச்சுக்கிட்டு இருக்க என்னாலே முடியாது! நான் இந்த மாதிரி எவளையாச்சும் கூட்டிவந்தாப் பார்த்துக் கிட்டு இருப்பீங்களா? அப்படின்னு அழுதுக்கிட்டே நெஞ்சிலே இருந்து எந்திரிச்சு கிட்டக்

குந்திக்கிட்டு ''மங்கை! ஓ மங்கை!'' இன்னு ஆத்தாளைக் கூப்பிட்டாரு.

ஆத்தா ஒண்ணுமே பேசவில்லை. அப்புறம் ஆத்தா மூக்கிலே விரலை வச்சுப் பார்த்தாரு! இங்கிட்டும் அங்கிட்டுமா ஆத்தாளைப் பிரட்டினாரு. இத்தனைக்கும் ஆத்தா ஒண்ணுமே பேசாம பிரட்டறபோதும் கொளக்கு கொளக்குன்னு பிறண்டா.

அப்புறம், அப்பா கொஞ்சூண்டு நேரம் ஆத்தாளைக் 'குறுகுறு'ன்னு பார்த்திட்டு ''கழுதை தொலைஞ்சயா!'' அப்படின்னாரு.

அப்போதான் நான் ஆத்தா கிட்டப் போனேன். அப்பா என்னைப் பார்த்ததும் ''ஏண்டா நீ இங்கேதான் இருந்தியா? இங்கே ஏண்டாவந்தே? ஆத்தா கோபமா இருக்கா, அவ கிட்டப் போகாதே. வா நம்ம கீழே போவோம்: அப்படின்னு கூட்டிக்கிட்டு கீழே வந்திட்டாரு! ஆத்தா கீழே வரவே இல்லை! மறுநாள் பார்த்தா, ஆத்தா தூக்குப் போட்டுநிற்குது. எனக்கு அழுகையா வந்திச்சு.''

''ஆமடா அம்பி! அன்னிக்கு உங்க ஆத்தாளைக் கழுத்தைப் பிடிச்சு நெரிச்சாரே உங்கப்பா! அதையாரிடமாவது சொன்னியோ?''

''இல்லை-அப்பா கீழ் வீட்டுக்கு வந்ததும் நீ போயி இதையெல்லாம் யார் கிட்டேயும் சொல்லாதே. 'சொன்னியோ அடி நொறுக்கிறுவேன்' அப்படின்னு சொல்லி விட்டாரு''

''இப்போ எங்கிட்டே சொல்றயே, அப்பா அடிக்கமாட்டாரோ ?''

''நான் போயி சொன்னாதானே அடிப்பேன் இன்னு சொன்னாரு! நீங்க கேட்டிங்க - சொன்னேன்! எதுக்கு அடிப்பாரு?'' என்று கண் கலங்கினான் சுந்தரம்.

அந்தக் கரவறியா-கள்ளமில்லா-வெள்ளை உள்ளப் பாலகன் சொன்ன அத்தனையும் உண்மை என்று, அவனுடைய தட்டுத் தடையற்ற சொல் தொடர்பும், அதனுடன் இழைந்த துயர பாவமும், தெளிவுபடுத்திக் கொண்டிருந்தன.



இதற்குள் ஐயங்காரின் வாய்க்கால் அலுவலும் முடிந்தது. எனவே, இருவரும் வீட்டுக்குத் திரும்பினர். இவர்கள் வரும்போது பண்ணையார் மட்டும் தனியாக வீட்டில் இருந்தார். ஐயங்காரைக் கண்டதும்,

''சாமி! சாமவேத விலாஸ் சாப்பாடு ஓட்டலிலே சாப்பாடு வந்திருக்கு! சாப்பிடுங்க''

''இல்லை நான் ஆத்துலே போய் சாப்பிடறேன்! சிரமம் வேண்டாம்! ஏதாவது பழம் இருந்தாக் குடுங்கோ அது போதும்!''

''ஏன் சாமி பழம்? சாமவேத விலாஸ் இன்ன உடனே என்னமோ ஏதோன்னு நினைக்கிறீங்களா ? பிராமணாள் ஓட்டல்தான்-பரிமாறக்கூட ஓட்டல் ஐயரே வந்திருக்காரு!'' என்றார் பண்ணையார்.

''நீங்கள் இவ்வளவு பிரயாசை எடுக்கறப்போ நான் என்னபண்றது? சாப்பிடறேன்''

ஐயங்கார் சாப்பிட்டு வந்ததும், வீட்டில் நடமாடிக்கொண்டிருக்கும் பேயின் வரலாற்றைப் பூசைமுகத்தில் இருந்து தெரிந்து சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார், பண்ணையார்.

அப்படியானால் சூடன், சாம்பிராணி, எலுமிச்சம்பழம் ஒரு குலை மலை வாழைப்பழம், 3 தேங்காய், மலர்மாலை 3, உதிரிப்பூ 1000 இப்படி ஒரு பட்டியல் கொடுத்தார் ஐயங்கார்.

பட்டியல் சாமான்கள் அத்தனையும் அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தன. பூசையும் ஆரம்பமாயிற்று. ஒரு மணி நேரம்வரை ஐயங்கார் கண்ணை மூடிக்கொண்டிருந்தார். பிறகு பண்ணையாரைப் பக்கத்தில் அழைத்து:—

''பண்ணையார்வாள்! பூசை முகத்தில் எல்லாம் நன்னாத் தெரிஞ்சுண்டேன். ஆனா, சொல்லகூடியதா இல்லை. சொன்னா வருத்தப்படுவேன்னு நினைக்கிறேன்'' என்றார்.

பண்ணையாருக்குப் பீதியும்-மந்திரவாதி சொல்வதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவலும் உள்ளத்தில் போராடத் தொடங்கின. கடைசியில் என்ன வந்தால் தான் என்ன! எவன் என்ன செய்து விடமுடியும்? இத்தனை செல்வமும் செல்வாக்கும் இருக்கும் போது நான் ஏன் இவ்வளவு கலவரம் அடைய வேண்டும் என்று தனக்குள்

தீர்மானித்துக் கொண்டவராய் ஐயங்காரைப் பார்த்து வரட்டுச் சிரிப்புடன், "சாமி! நான் வருத்தப்பட என்ன இருக்கிறது? எதுவா இருந்தாலும் கூசாமல் சொல்லுங்கள்! இருக்கிற கெடுதல்களின் - காரணங்களை - உண்மைகளைத் தெரிந்து கொள்வது நல்லதில்லையா?" என்றார்.

"சரி, பண்ணையார் வாள்! அப்புறம் உங்கள் இஷ்டம்! முதலில் யாரும் திடீரென்றுவந்துவிடாதபடி கதவைப் பூட்டுங்கள்! உங்களைத் தவிர யாரும் இருக்கப்படாது! புரிஞ்சுதோன்னோ?" என்றார் ஐயங்கார்.

பண்ணையார் கதவைப் பூட்டுவதற்காக எழுந்தார். சுந்தரம் அங்கே நின்று கொண்டு இருந்தான். அவனிடம், "தம்பி! நீ கொஞ்ச நேரம் வாசலில் விளையாடு. நான் சாமிகிட்ட தனியாக் கொஞ்சம் பேசணும். பேசி முடிந்ததும் அப்புறம் கதவைத் திறக்கிறேன்" என்றார். 'சரிப்பா!' என்று வெளியேபோனான் சுந்தரம். கதவை மூடித் தாழிட்டு விட்டுப்பண்ணையார் வந்தார். "இனிமே சொல்லுங்க சாமி" என்று ஐயங்காரின் அருகில் அமர்ந்தார். ஐயங்கார் பண்ணையாரின் காதோடு காதாகச் சொன்னார்.

"பண்ணையார்வாள்! நான் ஆஞ்சநேயர் உபாசனை செய்கிறவன். ஆஞ்ச



நேயர் சாதாரணத் தெய்வமல்ல— இராமதூதன்! அவரை அழைச்சுப் பண்ணையார் ஆத்திலே நடக்கிற அட்டகாசம் என்னப்பா! என்று கேட்டேன். ஆஞ்சநேயர் சொன்னார்:- இந்த மாடிலே 30 வயதுப் பெண் ஒருத்தி இருக்காளாம்—அவள் ஒங்களோட ஆத்துக்காரிதானாம். அவளை ஆஞ்சநேயரே நேரில் விசாரிச்சாராம். அவள் சொல்லுறாளாம் போன மாசம் ஒருநாள் ராத்திரி நேரத்திலே என் ஆத்துக்காரர்தான் என்னைக் கழுத்தை நெரிச்சுக் கொன்னு நானே தற்கொலை பண்ணிக்கிட்ட மாதிரியாத் தூக்குப் போட்டு வச்சாரு. அதுனாலே நான்



பழிக்குப் பழி வாங்கறதுக்காக இங்கேயே இருக்கேன் என்று சொன்னாளாம். அதான் நான் சொல்கிறதுக்கே வருத்தப்படறேன்'' என்றார் ஐயங்கார்.

இதைக் கேட்டதும் பண்ணையாருக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது. ஆனால் சமாளித்துக் கொண்டே சிறிதுநேரம் யோசனை செய்துவிட்டு, "சாமி! இந்தச் சண்டாள முண்டை செத்தும் கூட பழைய விரோதம் குறையாமல் என் மேலே பழி போடுறான்'' என்று சொல்லிவிட்டுத் திகைத்தார். ஒருவேளை சுந்தரம் சொல்லி விட்டானோ?

தூக்குப் போட்டதெல்லாம் சுந்தரத்திற்குத் தெரியாதே! எதற்கும் ஐயங்காரை இன்னொரு வழியில் சோதனை போட வேண்டும் என்று தீர்மானித்தவராய்:—

"சரி சாமி! அவள் மாடியிலே எந்தப் பக்கம் எந்த அறையில் நிலையாக இருக்கா என்கிறதைச் சொல்லமுடியுமோ?'' என்றார்.

ஐயங்கார் இப்படி ஒரு சோதனை ஏற்படும் என்று எதிர்பார்க்கவே இல்லை. சுந்தரம் கொலை நடந்த விவரத்தை மட்டுமே சொன்னான்! மாடியில் எத்தனை அறை இருக்குமோ! பண்ணையார் கேள்வியில் இருந்து அவளைத் தூக்குப் போட்ட இடம் ஓர் அறை என்பது மட்டும் தெளிவாகிறது! எந்த அறை என்று தெரிவித்தால் அல்லவா மந்திரம் பலித்ததாக இருக்கும்! திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவராய் எலுமிச்சம் பழம் ஒன்றுக்குத் தூப தீபம் நைவேத்தியம் செய்து கண்ணை மூடி ஏதோ முணங்கிவிட்டு அந்தப் பழத்தைக் கையில் எடுத்துக்கொண்டு புன்சிரிப்புடன், "பண்ணையார்வாள்! வாருங்கோ மாடிக்குப் போவோம். உங்களுக்குச் சந்தேகம் தீரும்படியா ஆஞ்சநேயரே இடத்தைக் காட்டுவார்! பார்க்கலாம்!'' என்றார்.

பண்ணையாருக்கு இந்தக் கேள்வி 'திக்' என்றது. குற்றமுள்ள நெஞ்சல்லவா? ஆனாலும் சமாளித்துக் கொண்டே சொன்னார்:—

"மாடிக்கு எதுக்கு சாமி! எனக்கு ஒரே பயமா இருக்கு''

"பயமா? பண்ணையார்வாள்! நீங்கள் என்ன குழந்தையா? நான் இருக்கும்போது—ஆஞ்சநேயர் துணை இருக்கும்போது என்ன பயம்? பயப்படாமே என்னோடே வாருங்கோ!'' என்று எழுந்தார் ஐயங்கார்.

அதற்குமேல் மறுப்பது பேடித்தனமாகும் என்பதுடன் தன்னையே 'கொலைகாரன்' என்று, ஐயங்கார் தீர்மானிப்பதற்கும் இடம் ஏற்படும் என்று கருதிய பண்ணையார், பேசாமல் ஐயங்காரைப் பின் தொடர்ந்தார். பண்ணையாரின் முகம், தூக்கு மேடைக்குப் போகும் கைதியின் முகம்போல் இருந்தது அப்போது.

இருவரும் மாடிக்கு வந்து நின்றனர். அந்த மாடியில் 10 அறைகள் இருந்தன. பண்ட பாத்திரங்கள் ஒன்றிலும் துணிமணிகள் ஒன்றிலும், படுக்கையறை ஒன்றிலும், விளைந்து வந்த நெல், மிளகாய் வற்றல், பருத்தி, வெங்காயம் இவைகள் ஒவ்வொன்றிலுமாக அறைகள் இருந்தபடியால் சில பூட்டப்பட்டும் சில திறக்கப்பட்டும் இருந்தன. அத்துடன் ஆட்புழக்கம் ஒருமாதமாக அடியோடு நின்று விட்டதால், எங்கு பார்த்தாலும் தூசியும், நூலாம்படையும் நிறைந்து, மாடி முழுவதும் அலங்கோலமாகக் காட்சி அளித்தது.

ஐயங்கார் ஒவ்வோர் அறையையும் பொதுவாகப் பார்த்து விட்டு பூட்டியுள்ள அறைகளையும் திறந்து வைக்கச் சொன்னார். நெல் முதலிய விளை பொருட்கள் இருந்த அறைகளில் ஆட்கள் நிற்க முடியாத அளவுக்கு அவை நிறைந்து கிடந்தாலும் ஒரு மாதத்திற்கு முன்னமே அவை அப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று தீர்மானிப்பதற்குரிய நூலாம்படை தூசிமுதலிய அடையாளங்கள் இருந்தாலும் அந்த அறைகளில் தூக்குப் போட்டிருக்க முடியாதென்று யாரும் எளிதில் முடிவு செய்யலாம்.

எனவே, அந்த அறைகளை நீக்கி விட்டு மீதியுள்ள அறைகளில் ஐயங்காரின் கவனம் பாய்ந்தது. அவ்வாறு ஆராயத் தக்க அறைகளில் ஐந்துமட்டுமே இருந்தன. ஆதலால் அவைகளுக்குள் ஏதோ ஒன்றில் தான் தூக்குப் போட்டிருக்க முடியும் என்று ஊகம் செய்தார்.

உடனே தாமதமில்லாமல் பண்ணையார் பக்கம் திரும்பி:-

"பண்ணையார்வாள்! இங்கே வாருங்கோ இந்த எலுமிச்சம்பழத்தை மந்திரித்து அறைக்குள்ளே எறிவேன் நீங்கள் போய் அதை எடுத்துண்டு வந்து கொடுக்கணும். தைரியமாப் போய் எடுங்கோ. பழத்திலே ஆஞ்சநேயரே குடி கொண்டிருக்கிருர். பயப்படாதேயுங்கோ!" என்று முதலில் ஒரு அறைக்குள் பழத்தை எறிந்தார். பண்ணையார் போய் எடுத்து வந்தார்.

பழத்தைக் கையில் வாங்கிய ஐயங்கார் ஏதோ முணுமுணுத்தார்! பிறகு, இன்னேர் அறையில் எறிந்தார்! பண்ணையார் இரண்டாவது அறைக்குள் நுழையும் போது அவருடைய கால்கள் நடுங்கிக் கொண்டு தள்ளாட ஆரம்பித்தன. உடலெங்கும் வேர்வை கொட்டி அவர் போட்டிருந்த விலையுயர்ந்த பட்டுச் சட்டை நனைய ஆரம்பித்தது. அதிர்ச்சியால் கீழே சாயும் போது, ஐயங்கார் பலமாகப் பிடித்துக் கொண்டார், "சரி! வாருங்கோ கீழேபோவோம், அந்தப் பிசாசு இப்ப ரொம்ப ஆங்காரத்திலே இருக்கு! இருக்கட்டும் பிறகு பேசிக்குவோம்!" என்று பண்ணையாரைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொள்ள இருவரும் கீழே வந்தனர்.

கீழே வந்த பிறகும் பண்ணையாருக்கு நெடுநேரம் வரை அதிர்ச்சி நீங்கவில்லை. நாம் ஐயங்காரைச் சோதிக்க விரும்பியதே தவறுஎன்று கருதினர். அவருடையமனம் கட்டுக்கடங்காமல் தத்தளித்தது.

பண்ணையாரின் நிலைமையைப்புரிந்து கொண்ட ஐயங்கார் தானே போய் வாசற் கதவைத் திறந்ததுடன் வேலைக்காரனைப் போய் காபி வாங்கி வரும்படி ஏவிவிட்டு மீண்டும் பண்ணையாரிடம் வந்து அவரைத் தேற்றுகிற தோரணையில் தன்னுடைய பிரதாபங்களை அளக்க ஆரம்பித்தார்.

தற்கொலை செய்துகொண்டதாகப் பொய் சொன்னது, அந்தப் பிசாசுக்குத் தெரிந்திருப்பதாகவும், ஐயங்கார்வந்தது முதல்தனக்குத் தொல்லை தரவே வந்திருப்பதாக அது தெரிந்து கொண்டு கட்டுக்கு மிஞ்சிய கோபங்கொண்டிருப்பதாகவும், அந்த நேரத்தில் அது நிலையாக இருக்கிற அறைக்குள் மந்திரித்த எலுமிச்சம் பழத்தை எறியவே, பேய்க்குக் கடுமையான ஆத்திரம் ஏற்பட்டு பண்ணையாரைத் தாக்க வந்ததாகவும் ஐயங்கார் இல்லையானல் விபரீதம் நடந்திருக்கும் என்றெல்லாம் அளந்தார்.

இத்தனைக்கும் மௌனமாக இருந்த பண்ணையார் சொன்னர்.

'சாமி! ஏதோ நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் ஒரு நிமிடங்கூட இந்தப் பேயை இங்கே விடக்கூடாது. என்ன செலவானலும் சரி- நீங்கள் ஆக வேண்டிய காரியங்களை இது முதல் செய்யுங்கள். இதை முடித்துவிட்டுத்தான் நீங்கள் ஊருக்குப் போக வேண்டும். முதலில் உங்களுக்குத் தட்சணை எவ்வளவு என்பதும் மற்ற செலவுகள் சாமான்கள் என்னென்ன என்பதும் சொல்லுங்கள்'' என்றர்.

"பண்ணையார்வாள்! சொல்றேன்னு வருத்தப்படாதேள். நான் தினசரி காலையில் ஊரில் பஞ்சாங்கம் வாசிக்கிறவன். அந்நேரத்துக்கு ஊரில் இருந்தாகணும்! இந்தப் பிசாசுகளை எங்காவது கொண்டு போயி ஸ்தாபிதம் செய்யறதுன்னு சாமான்யமில்லை. 40 நாள் பூசை போடணும், தினசரி பழம், தேங்காய், பூ, சாம்பிராணி, சூடன், அது இதுன்னு நிறைய செலவாகும். செலவு உங்களுக்குப் பெரிசில்லை. நான் இங்கேயே வாசம் பண்ணிண்டிருக்க முடியாதேன்னு தான் யோசிக்கறன்''

"சாமிகளே! தினசரி காலை 5 மணிக்கு நம்ம வண்டியைப் பூட்டி விடச் சொல்கிறேன். ஊருக்குப் போய்ப் பஞ்சாங்கம் வாசிக்கிறதை முடித்துவிட்டு 9 மணிக்குத் திரும்பி வந்துவிடலாம். தேவையான சாமான்களை எழுதிக் கொடுத்தால் வேலைக்காரன் வாங்கி வந்துவிடுவான்! நீங்கள் இங்கேயே உங்களுக்குச் சௌகரியமான இடத்தில் பூசையை ஆரம்பிக்கலாம். இப்போதே எல்லாம் நடத்த ஆரம்பிக்க வேண்டும். இந்தாருங்கள் ரூபாய்'' என்று இருப்புப் பெட்டியிலிருந்து ரூ 1000 எடுத்துக் கொடுத்தார்.

ஐயங்கார் பூசையைத் தொடங்கினர். 40 நாள் பூசை நடந்தது. 40-ம் நாள் சூளையில் சுடாத பச்சைக் குடம் ஒன்றில் ஏதோ மந்திரம் சொல்லி இலையால் அதன் வாயை மூடி எடுத்துக்கொண்டு போய் ஊருக்கு வெளியில் ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டதாகவும் அது இனிமேல் வீட்டுப் பக்கமே எட்டிப் பாராதென்றும் பண்ணையாரிடம் சொன்னர்.

பண்ணையார் வேட்டி சேலை பழம் வெற்றிலை முதலிய சன்மான உபசாரங்களுடன் ஐயங்காரை ஊருக்கு அனுப்பினர்.

இது நடந்து முடிந்த பிறகு ஐயங்கார் பெரிய மந்திரவாதி-சகல சித்திகளும் அவருக்கு உண்டு என்று ஊர் மக்கள் பேசிக்கொண்டார்கள்.

ஐயங்காருக்கு இப்போது நல்ல வருமானம்! ஏற்கனவே இருந்த சோசிய வருமானத்துடன் பேய் விரட்டல், பில்லி சூனியம் எடுத்தல்-வைத்தல் ஆகிய தொழில் மூலம் ஏராளமான வருமபடி வந்தது. எந்த நேரமும் வீட்டில் கூட்டம்! தடபுடல் பூசைகள்-சாந்திகள்- பரிகாரங்கள்!

இப்படி இருக்கும்போதுதான் சடையாண்டி ஏகாலி என்பவன் ஐயங்காருக்குப் போட்டியாக முளைத்தான்! சடையாண்டி ஏகாலி மலையாளத்திலுள்ள அச்சுதக்குட்டி ஆசான் என்பவனிடம் காளிகாதேவி உபாசனை கற்றவனும்!

வஞ்சனை பில்லி சூன்யத் தொழிலுடன் தம்பனம் மோகனம் உச்சாடனம் முதலியனவெல்லாம் தெரிந்தவனும்! அத்துடன் பேய்விரட்டும் போது கோடாங்கி அடித்து ஆடிப் பாடி அமர்க்களம் செய்வானும்.

அவன், கோடாங்கியை எடுத்துக் கொண்டு :—

"ஆண்சிங்கம் ஏறும்
ஆதிபரா சக்திநீ!
வாளேந்தும் கையுடையாள்
மாகாளி ஆத்தாளே!
கச்சணிந்த கொங்கை
கடகமிட்ட கையுடையாள்
பொட்டணிந்த நெற்றி
புலிநடுங்கும் வேல்விழியாள்
தண்டை கலகலென்ன
தனிச்சிலம்பு ஓசையிட
கொண்டை அவிழ்ந்தாட
கூர்விழிகள் மின்னலிட
எடுத்தாள் திரிசூலம்
ஏவினள் பாவிகள்மேல்
குடித்தாள் உயிரை
குடல்உருவி மாலையிட்டாள்
ஒற்றை அடிவைத்தால்
குட்டிப்பேய் ஓடிவிடும்
இரண்டு அடிவைத்தால்
எழுந்தோடும்
பேய்களெல்லாம்
சாட்டையைத் தூக்கிவிட்டால்
சடாமுனிகள் நடுநடுங்கும்
ஆத்தாள் சிவகாமி
அகிலாண்ட நாயகியாள்
ஆதி சிவனும்
அடிவணங்கும் தெய்வமவள்
சிங்கத்தில் ஏறிச்
சினத்தோடு வருகின்ருள்

பாய்ந்து வருகின்றாள்
பராசக்தி நீலியவள்.''

இப்படிக் கோடாங்கிகள் பாடுகின்ற இராகத்தில் கோடாங்கியைத் தாளந் தவறாமல் அடித்துக்கொண்டு ஆடி அசைந்து பாடுவான் - ஆடுவான் - ஆர்ப்பாட்டம் செய்வான்! இது பாமர மக்களுக்கு மிகவும் கவர்ச்சியாக இருந்தது. குஞ்சிப்பட்டியில் இன்னும் அவன் பாடலைப்பற்றிப் பேசிப் பரவசமடைகிறார்கள்!

ஐயங்கார் வீட்டில் பாட்டு ஆட்டம் எதுவும் இராது. ஆகையால் வரவர ஐயங்காருக்குக் கூட்டம் குறைந்தது. வருமானமும் குறைந்தது!

ஐயங்காருக்கு வயிற்றெரிச்சல்! ''ஒரு ஏகாலிப்பயல் வீட்டில் போய் கூட்டம் போட்டு ஆசாரத்தையே கெடுக்கிறார்களே! அவனுக்கு என்ன தெரியும்? கைக்கறுப்பு வைத்து ஆட்டிக்கொண்டிருக்கிறான்.'' என்று சொல்ல ஆரம்பித்தார்.

இவர், இப்படி இழிவாகப் பேசுவது சடையாண்டிக்குத் தெரியாமல் இருக்கமுடியுமா? பல பேர் வாயிலாக கேள்விப்பட்டான்- ஆத்திரமடைந்தான். கடைசியில் போட்டிக்குக் கூப்பிட்டான்:—

ஐயங்காருக்கு மந்திரமும் தெரியாது-கிந்திரமும் தெரியாது! குருவில்லாத தான்தோன்றி! உண்மையாகவே அவர் ஒரு தொழிலாளியாக இருந்தால் என்னோடு மோடிக்கு வரட்டும்! நான் வைக்கிறமோடியை அவர் எடுக்கட்டும்! அல்லது அவர் வைக்கிற மோடியை நான் எடுக்கிறேன்.

நான் தோற்றால் அவருக்கு அடிமையாய் இருக்கிறேன். அவர் தோற்றால் தொழிலையே விட்டுவிட்டுப் போகட்டும்.

''இது காளிகாதேவி மேல் ஆணை'' என்று சவால் விட்டான். இதைக் கேள்விப்பட்டார் ஐயங்கார்.

முதலில் ஐயங்கார் இந்த சவாலைப் பற்றி அலட்சியமாகவே இருந்தார். ''ஒரு ஏகாலிப் பயலுடன் மோடி செய்வதா?'' என்ற எண்ணம் அவருக்கு.

ஆனால் பொது மக்களுக்கு இதனால் ஐயங்கார் மேல் இருந்த மதிப்புக் குறைவதாகத் தோன்றியது. மந்திரத் தொழில் மூலம் வந்த வருமானம் பெரிதும்குறைந்து ஏகாலிக்கு வருமானம் உயர ஆரம்பித்தது.

கடைசியில் ஏதோ ஒரு தீர்மானத்தின் மேல் சவாலை ஏற்றுக் கொண்டார்.

''முதலில், ஐயங்கார் வைக்கிற மோடியை ஏகாலி எடுக்கவேண்டும். அப்படி எடுத்து விட்டால் அதன் பிறகு ஏகாலி வைக்கிற மோடியை ஐயங்கார் எடுப்பார்'' என்று, சில பெரிய மனிதர் முன்னிலையில் திட்டம் செய்து மோடிக்கு நாள் குறித்தார்கள். ஊரெல்லாம் பக்கத்துக் கிராமங்களிலெல்லாம் மோடிச் செய்தி அடிப்பட்டது. மோடி நாளும் வந்தது.

குஞ்சிப்பட்டி சாவடி முன்னால் இருந்த திடலில் அன்று பெருங் கூட்டம்! கிராமத்துமக்கள் மாட்டு வண்டிகளைப் பூட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்க வந்தவர்கள் ஏராளம்!

குறித்த நேரம் வந்தஉடன் ஐயங்கார் எழுந்தார். பெரிய வாழையிலைகளால் சுற்றிலும் மூடிக் கட்டப்பட்ட பெரும் பூசணி (சாம்பல் பூசணி)க் காய் ஒன்றைத் தூக்கி வந்து திடலின் மேல் மத்தியில் வைத்து மூடியிருந்த கட்டுகளை அவிழ்த்துப்:பரப்பி வைத்தார். பிறகு, தூபதீப நைவேத்தியம் செய்து விட்டு, கையில் திருநீற்றுப்பை ஒன்றை வைத்துக் கொண்டு தயாராய் நின்றார்! அவருக்குப் பக்கத்தில் பையன் ஒருவன், புளிச்ச மோர் நிறைந்த பாத்திரம் ஒன்றை வைத்துக் கொண்டு நின்றான்!

''இந்தாப்பா சடையாண்டி! இந்தப் பூசணிக் காயைத் தூக்கிப் போட்டு உடைத்துவிடு பார்க்கலாம்!'' என்றார் ஐயங்கார்.

சடையாண்டி அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே பூசணிக்காயை நெருங்கினான். அதே நேரத்தில் பையிலிருந்த திருநீற்றைக் கை நிறைய அள்ளி, சடையாண்டியின் முதுகில் கொட்டினார் ஐயங்கார். மறு கணம் சடையாண்டி பூசணிக்காயை விட்டுவிட்டு முதுகை இரண்டு கையாலும் பரபர வென்று தேய்த்துக் கொண்டிருந்தான்! தீப்பட்டது போன்ற உணர்ச்சி இருந்தது அவனுக்கு. அப்போது ஐயங்கார் பக்கத்தில் சிறுவன் வைத்திருந்த மோர்ப் பாத்திரத்தில் கையை விட்டு அலம்பிக்கொண்டே ஏதோ மந்திரம் சொல்வதுபோல் பாவனை செய்து கொண்டிருந்தார். இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கூடியிருந்த மக்கள்!

இதற்குள் சடையாண்டி முதுகு சிவந்து தடிக்க ஆரம்பித்தது. ஆனால் அவன் அதற்கெல்லாம் பயந்தவனாக இல்லை! மீண்டும் ஒருமுறை பூசணிக்காயை நெருங்கினான். அதற்குள் ஐயங்கார் கையை மேல் துண்டில் துடைத்துவிட்டு மீண்டும் திருநீற்றை அள்ளி சடையாண்டியின் முதுகில் வீசினார்.

திருநீறு பட்டவுடன் சடையாண்டி ஒரு துள்ளுத் துள்ளினான்-ஐயங்கார் மோர்ப்பாத்திரத்தில் கையை விட்டு அலம்பிக்கொண்டே ஏதோ முணு முணுத்தார்.

ஆனால் இந்தத் தடவை சடையாண்டி துணிந்துவிட்டான்! முதுகு எரிச்சலைக் கவனியாமல் பூசணிக் காயைத் தூக்கினான்-பூசணிக்காய் இருந்த இலையிலிருந்து ஒரு முழ உயரம் வந்தபோது காயின் அடிப் பொந்தில் இருந்து ஏதோ வருவது போல் இருந்தது. பூசணிக்காய் மார்பு உயரம் வந்திருக்கும்-திடீரென்று நல்ல பாம்பு ஒன்று சீறிப் பாய்ந்து சடையாண்டியின் கழுத்திலிருந்த இரத்த நாளத்தில் ஆங்காரத்தோடு 4 தடவை கடித்தது. ஆனால் சடையாண்டிக்கு இருந்த மோடி வெறியில் இதையெல்லாம் சட்டை பண்ணவே இல்லை. பூசணிக்காயைத் தலைக்குமேல் தூக்கி தரையில் வீசி உடைத்தான். காயின் அடியில் இருந்த பொந்தை யாரும் கவனிக்கவே இல்லை!

பாம்பு கூட்டத்தைச் சிதறடித்துக் கொண்டு வெளியேறியது! அது மந்திரப்பாம்பு என்று கருதப்பட்டதால், மக்கள் அதை நெருங்கவே நடுங்கினார்கள்! அது நிம்மதியாக ஓடி மறைந்தது!

பூசணிக்காய் உடைந்த மறு கணமே சடையாண்டி தரையில் சாய்ந்தான். பொதுமக்கள் மோடியின் முடிவு என்ன என்று தெரிவதில் கவனத்துடன் இருந்ததால் சடையாண்டிக்குப் பாம்பு கடியால் உயிர் போகிறது என்பதாக ஒருவரும் நினைக்கவே இல்லை. ஐயங்கார் வென்றதாகக் கூட்டம் அமர்க்களம் செய்துவிட்டுக் கலைந்தது.

ஆனால் அன்று இரவில் ஐயங்கார் போலீசாரால் கைது செய்யப்பட்டார். செந்தொட்டிச் சுணையை திருநீற்றில் கலந்து சடையாண்டிமேல் வீசிய குற்றம்! நல்லபாம்பைப் பூசணிக் காய்க்குள் ஒளித்து வைத்துச் சடையாண்டியைக் கொன்ற கொலைக் குற்றம்! ஆகிய இரண்டு குற்றங்களுக்காக இப்போது ஜென்ம தண்டனை அனுபவிக்கிறார்.

கடலினடியில்

ந. தாமோதரன்

கடலினடியில் என்றதும். கடல் மாதாவின் வயிற்றில் கருவாய், உருவாய்ப் புதைத்து கிடக்கும் அதிசயப் பொருள்களைப் பற்றியும், மனத்தை உசுப்பும் மாக்கடலின் ஆழமும். ஆங்கு வதியும் விநோத உயிரினங்களும். மலைகளும், பாசிக் காடுகளும், மணிக்குவைகளும், பல பல பொருட்செல்வங்களும் ஆகியவற்றைப் பற்றியும்; அவற்றை மனிதன் தேடிக்கொணர்வதையும், தேடிக்கொண்டு இருப்பதையும் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணுவீர்கள். ஆம்! கடலினடியில் என்றதும் கடலும், கடலாழத்திலுள்ள மற்ற யாவும்தான் நினைவிற்குவரும். ஆனால், உலக உருண்டையின் பரப்பில், நமது தாயகத்தின் தென்கோடிக்கும், ஈழ நாட்டின் வடகோடிக்கும் இடையிலிருக்கும்மிகச்சிறியபாகமான கடற் பரப்பின் அடியில் எண்ணற்றமறத் தமிழர்களின் சோக வாழ்க்கைச் சரித்திரங்கள், அருந் தமிழர்களுடைய துயர வாழ்க்கைவரலாறுகள் புதைக்கப் பட்டிருக்கின்றன! தொன்மைக் காலந்தொட்டு தமிழர்கள் கடல் சூழ் இலங்கைக்குப் போய்க்கொண்டும், தாயகம் திரும்பிக் கொண்டும் இருந்தனர்! இன்னும் அவ்வாறே அநாதைகளாய்க் கடல் தாண்டிக் கொண்டிருக்கின்றனர்.

தென்னகத்திலே வாழ்விழந்தோர், வாழவகையற்றோர், பஞ்சை பராரி, பட்டினிகிடந்தோர் என எத்துணையோ வகை வகையானோர், ஈழ நாட்டுப் பயணத்திலே, பெரு மழைப் புயலுக்கும், கடல் நீர்ச்சுழலுக்கும், உறுமீன் சுருக்களும் இரையாகிக் கடனடியில் போய்ச் சேர்ந்தோர் ஆகியவர்களைப் பற்றி எண்ணும்போது, நமதுள்ளத்திலே நெருஞ்சிப்பழம் தைத்தது போல் துடிக்கிறோம்.தனியாகவும் குடும்பத்துடனும் கடல் தாண்டத் துணிந்த தமிழனின் நெஞ்சுரத்தை என்னென்பது! அத்தகையோரின் இருப்பிடம்—கடல் கொண்ட உடலின், ஊன் அழுகி மீன் உண்டு, மீதியுள்ள எலும்புக் கூடுகள் நிறைந்து கிடக்கும் இடத்திற்குஅன்புகூர்ந்து வாருங்கள்! இதோ கடலினடியில் எலும்புக் கூடுகள் உரையாடுவதைக் கேளுங்கள்!

"என்ன, நம்ம கூட்டத்திற்கு ஒரு புது ஆள் வந்திருக்கிறார் போலிருக்கிறது."

"ஆமாம். அவருக்கென்ன குறையோ,கவலையோடுஇருக்கிறார். எங்கு போக வந்தாரோ, இந்தக் குறையில்லாத உலகத்திற்கு அமைதியாக வந்து சேர்ந்து விட்டார்."

"அதெப்படிங்க இதைக்குறையில்லாத உலகமுன்னு சொல்லிட்டிங்க"

"சந்தேகமில்லாமல்! ஆகா நாம் இருக்கும் இந்தமோன உலகத்தில், பொய்யும், புனைசுருட்டும் இல்லை! ஆண்டான், அடிமையில்லை! ஏய்ப்பவன், மாய்பவன் இல்லை!ஏழை, பணக்காரன் கிடையாது! சாதி சம்பிரதாயம், குலம் கோத்திரம் இல்லை! மதம், மாச்சரியம் இல்லை! வாழ்க்கையில் போட்டியும், பொருமையும் இல்லை! பூசலும், ஏசலுமில்லை! கொலை,கொள்ளைஎதுவுமே இல்லை! ஏன்? ஆண்,பெண் வித்தியாசமே நமக்கு இல்லையே! சரிநிகர் சமானமாய் அல்லவா இருக்கிறோம்! இங்குதானே "எல்லோரும் சமமென்பது உறுதி"யாகிறது! உயர்வு தாழ்வைக்காட்டும் உடையில்லை! யாவர்க்கும் உருவம் ஒன்றே! யாவர்க்கும்அழகுஒன்றே! யாவர்க்கும் பசி இல்லை; ஆசையில்லை. எல்லோர்க்கும் துன்பமென்பதேயில்லை! இந்த அருமையான உலகத்தைக் குறையில்லா உலகமென்று கூறுவதில் தவறென்ன?

"என்னமோங்க; நீங்க இப்படித்தான் ஏதாவது தத்துவம் பேசுவீங்க. நீங்கவாழ்க்கையைவெறுத்து வந்தவர் தானே! என்னைப்பாருங்க ஊரிலேபிழைக்க முடியாமல், இலங்கைக்குப் போனால் குடும்பத்திலே எல்லோரும் வேலை செய்து நிறைய சம்பாதித்து நல்லபடியாக வாழலாம்னு, குழந்தை குட்டியோடு வந்தவன், வந்தவன் வந்தவன் தான் நேராக இங்கே வந்து விட்டேன்!"

"நான் மட்டும் என்னவாம். நல்லாப் படித்துப்பட்டம் வாங்கினவன் தான். வேலை வேலையென்று சோறு தண்ணீரில்லாமல், தினந்தினம் செத்துக் கொண்டிருந்தவன் தான். இலங்கைக்குப்போனால், ஏதாவது ஒரு தேயிலைக் கம்பெனியில் வேலை கிடைக்கும், பிழைத்துக் கொள்ளலாம் என்று தனிக்கட்டையாகவந்தவன் தான். வறுமைக்கும், இளமை வாழ்வு அழிவுக்கும்பயந்துபலகவலைகளுடன் வந்தவன் தான். வழியில் சுறுமீனிடம் அகப்பட்டுக் கொண்டேன். சதைக்கூட்டை அதனிடம் கொடுத்து விட்டு, எலும்புகூட்டை எடுத்துக்கொண்டு, இந்தக்கவலையற்ற உலகுக்கு வந்து சேர்ந்தேன் நான்."

"சரி...சரி. நம்ம பழைய கதையிருக்கட்டும், அந்தப்புதுஆள் ஏன் அங்கேயே உட்கார்ந்துகிடக்கிறாரு? இந்தக் குறையற்றஉலகில், என்ன குறையோ விசாரிப்போம் வாயேன்"

“நமக்குத்தான் பொழுது போகவில்லை அதையாவது செய்வோம் வாருங்கள்.”

“என்னப்பா! இந்தஇடத்திற்குப் புதுசு போலிருக்கு. ஒரு மாதிரியா உட்கார்ந்து கொண்டிருக்கிறியே, என்ன தம்பி?”

“அதெல்லாம் ஒன்றுமில்லைங்க. சும்மா இப்படி......”

“பார்த்தியா, பார்த்தியா எங்ககிட்டேயே மறைக்கிறியே, சும்மா சொல்லு தம்பி!”

“ஆமாம், நீ எப்படிவந்தே?”

“எல்லாம் நீங்க வந்த வழியாகத்தான்”

“அதெப்படி முடியும்? எல்லோருக்கும் சேருமிடம் ஒரேயிடமாக இருந்தாலும், வழி வெவ்வேருகவல்லவா யிருக்கும்? உங்க வழி, ஒருக்காலும் எங்க வழியா இருக்காது!”

“தம்பிமாத்திச்சொல்லிப்புட்டுது• நான் வந்தவழி புயல்; இவரு வந்த வழி சுரு. நீ வந்தவழி என்ன? அதைச்சொல்லு தம்பி!”

“அதையேன் கேட்கிறீர்கள்?— அது ஒரு பெரிய கதைங்க!”

“எல்லோருடைய வாழ்க்கையும் ஒரு கதையாகத்தான் இருக்கு. சரி உன்னுடைய கதையத்தான் சொல்லேன் கேட்போம்.”

“சொல்லாவிட்டால் விடமாட்டீர்கள் போலிருக்கிறதே”

“இப்படிப்பல புதியக்கதைகளைக் கேட்டா எங்களுக்குத்தெரியாததையும் தெரிந்து கொள்ளலாமே.”

“அடாடடட... சொல்லி விடுகிறேன் வாயை மூடிக்கொண்டு சும்மாஇருங்கள்!”

“சரி சொல்லு.”

“நான் வறுமையால் வாழ்க்கையை வெறுத்துவந்தவனல்ல! காதல் தோல்வியில், சாதல் வேண்டி வந்தவனுமல்ல! ஆனல்,வாழ்க்கை வெற்றியடையாமல் வந்தவன். இலங்கையில் ஒரு பெரிய துணிக்கடை முதலாளியின் மகன்நான். என்தாயும், தந்தையும் தமிழ் நாட்டை விட்டு இலங்கைக்கு ஓடி வந்து, தம் இடைவிடாத கடும் உழைப்பால் முன்னுக்கு வந்தவர்கள். செல்வச் செழிப்பிலேதான் நான் இருந்தேன். தமிழர்கள் கல்லூரியில் நான் பயின்று வந்தேன். அதே கல்லூரியில் சுந்தரியும் பயின்று வந்தாள். அவளும் ஓர் தமிழ் இனப்பெண்தான். நாங்கள் இருவரும், கண்ணேடு கண் நோக்கிக், கருத்திலே அன்பு தேக்கிக் காதலெனும் பாதைநோக்கி ஓடிக்கொண்டிருந்தோம். சிலருக்குக் காதல்பாதையின் கோடியில்சோகப் பள்ளமும், சிலருக்குக் கரடு முரடானகடுந்தடைகளும், சிலருக்குப் போகப் போகத் தொடுவானம் போல் எட்டிப்போய்க் கொண்டும் இன்பம் கிட்டாமல் போய் விடுகிறது. சிலருக்குப் பாதையில் தடையின்றி, வழியெல்லாம்மலர்ச்சோலைகளாகவும், தங்குமிடங்களெல்லாம் தவழும் கொடிப்பந்தல் களாகவும் அமைந்து இன்பப் பாதையின் முடிவு, தென்றல் தவழும் இல்வாழ்க்கையிலே முடிகிறது! இந்த இன்ப முடிவுதான், எங்களுக்கும் உண்டானது. ஆனல், எங்களுடைய இல்லற வாழ்வின் முதல் நாளிலேயே அது சூறையாடப்பட்டது!

“எங்கள் காதலைஎன்தாய் தந்தையரிடம் தெரிவித்தேன். அவர்கள் உடனடியாகச்சுந்தரியின் பெற்ருேர் களைச்சந்தித்து, ஒருமுகமாக எனக்கும் சுந்தரிக்கும் திருமணத்தை நடத்த ஒப்புதல் பெற்றுக்கொண்டு, மண விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். எங்கள் இன்ப வெள்ளம் அணையின்றிக் காட்டாறெனப் பெருக்கெடுத்தோடியது. திருமணப் பந்தலிலே, மணக்கோலத்திலே, என் அருகில் என்னை ஒட்டி, என் இன்பராணி சுந்தரி, தமிழ்ப்பெண்களுக்கே உள்ள நாணம்விஞ்ச, இன்பம் கொஞ்ச குனிந்த தலையுடன் கடைவிழியோரம், கருமணி சுழற்றி என்னைப்பார்த்தாள்! மனையறம் படுத்த காதையில் கோவலன் கண்ணகியைப் போற்றிப்புனைந்து, “மாசறு பொன்னே,வலம்புரி முத்தே,காசறு விரையே, கரும்பே - தேனே,அரும் பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே, மயிலைடைப் பிறவாமணியே, அலையிடைப்பிறவா அமிழ்தே, யாழிடைப்பிறவா இசையே - தாழிருங் கூந்தல்தையால்” என்று கூறியது போல் புனைந்துரைக்க என் உள்ளம் துடித்தது! கவி பாடும் புலமையைத்தந்தாள்! இதயம் கவிபாட முனைந்தது. “வட்ட விழிக்கோதையர்க்குக் கட்டவிழ் காளையரைத் தட்டிவிட்டுத் தான் சிரிக்கக் கட்டுடல் ஏன் படைத்தாய்” படைப்பைப் பழித்துக் கவிபாடினேன். இயற்கையால் எழும் உள்ளத்துக் கவிதைக்கு இலக்கணம் ஏது. தாலியை எடுத்துச்சுந்தரியின் கழுத்தில் கட்டிவிட்டு, அவளது முகமலரைப் பார்த்தேன். அவள் கண்களில் நீர் தளும்பலுற்றது! துயரத்தின் முடிவு கண்ணீர்தான்! இன்பத்தின் முடிவும் கண்ணீர்தான்! இதில் எந்த வகையில் அவள் கண்



ணீர் விட்டாளோ? ஆனால், நான் இன்பத்தின் கண்ணீர் என்றே எண்ணிக்கொண்டேன்! அப்போது வாயில் பக்கம் உயிருக்குப்பயந்து ஓலமிட்டுக் கத்துவதுபோல், சிலர் கத்தும் ஒலிகேட்டு, அச்சமுடன் அப்பக்கம் பார்த்தேன். பத்துப் பன்னிரண்டு சிங்கள வெறியர்கள், ஓங்கியகையில் தாங்கிய கத்தியுடன் திபு - திபுவெனப் புகுந்தார்கள். திருமண மண்டபம் அமளிதுமளிப் பட்டது! ஓலமிட்டுக் கொண்டே எல்லோரும்சிதறிஓடினர்! எனக்கு ஒன்றுமே புரியவில்லை! என் கண்ணெதிரிலேயே சிலர்வெட்டுப்பட்டு, ரத்தம் கொட்டக் கொட்டத் தலை தெறிக்க "ஐயோ" எனக்கத்திக் கொண்டு ஓடினர்! என்கையும், காலும் தம்பித்து விட்டன! என் அன்பு மனைவி, ஆம் என் ஆரம்ப வாழ்க்கையின் இளந் துணைவி "அத்தான்" என்று என்னை இறுக அணைத்துக்கொண்டாள்! அப்போது என்தலையில் "படீர்" என்ற ஒலி; அதைத்தொடர்ந்து காலால் யாரோ என்னை எட்டி உதைத்தார்கள். இதுதான் எனக்கு நினைவில் நிற்கிறது! ஒரு சிங்கள வெறியன் என்னைத்தடியால் அடித்து, உதைத்திருக்கவேண்டும்! அடுத்த கணம் என்னை நான் மறந்தேன்! என் சுந்தரி என்ன ஆனாள், மற்றவர்கள் எப்படிப் போனார்கள் என்பதை அறிய முடியாதவனாக மயங்கிக் கிடந்தேன். மீண்டும்விழித்து, மூர்ச்சை தெளிந்து பார்க்கும் போது...

"ஐயையோ!... அந்தக்காட்சியை நான் எப்படிக்கண்டு சகித்துக் கொள்ள முடியும்? அந்த வெறியர்கள் அடித்த அடியிலேயே நான் மாண்டு மடிந்திருக்கக் கூடாதா" என அழுதேன். எங்களுடைய மண மேடை பலி மேடையாகக் காட்சி தந்தது! எங்கள் புது மணப் பந்தல், பிணப்பந்தலாக இருந்தது! சந்தனமும், பன்னீரும் மணக்க வேண்டிய இடத்தில் குருதிநாற்றம் வீசியது! பூக்கள் கொட்டிக் கிடக்க வேண்டிய இடத்தில், வெறும் ஈக்கள் மொய்த்த பிண்டங்கள் சிதறிக் கிடந்தன! என் சுந்தரி-என் அன் காதலி- என் இனிய மனைவி- நான் சூட்டிய மாலையுடன்- நான் கட்டிய மாங்கல்யத்துடன், அழகே உருவான இளமானனையாள்-வாழைத் தண்டெனக் குழைந்து திரண்ட தோள்களில் வெட்டுப் பட்டு, சங்கு நிகர் மணிக்கழுத்தில் குத்துபட்டுக்

குருதியிலே கிடந்தாள்! அம்மட்டோ... தமிழத்திற்கே உரிய பண்பையும், மானத்தையும், மூடி மறைத்து அடக்கமாகக் கட்டியிருந்த ஆடைகள் கிழிந்து, அலங்கோலப் படுத்தப்பட்டுக் கிடந்ததைப் பார்த்தும் ஐயோ நான் சாகாமல் இருந்தேனே! என் உள்ளந்தான் என்ன இரும்பினும் கொடியதோ?

இளமைஉள்ளத்தால், வளமைப் பருவத்தால் தன்வாழ்வை எண்ணி எண்ணி, என்னென்ன இன்பக் கனவுகள் கண்டிருந்தாளோ! "ஆசைக்காதலனை, அன்புநாயகனை மனம்போல் அடைந்து விட்டோம்! இதை விடப் பெரும்பேறு இவ்வுலகில் வேறென்ன? என்று எத்தனை இறும்பூதெய்தியிருந்தாளோ? குயிலின் கானத்திற்கும், மயிலின் சாயலிற்கும், மானின் துள்ளலுக்கும், தென்றலின் அசைவிற்கும், நிலவின் தண்மைக்கும், மலரின் மென்மைக்கும், தேனின் சுவைக்கும், காதலின் போதைக்கும் பொருள் தேடிச் சுவைக்கும் நேரத்தில் கொன்றுவிட்டார்கள் வெறியர்கள்! இன்பம் காணும் வேளையிலே எரித்து விட்டார்கள் ஈனர்கள்! வாழ்வு மலர்ந்து மணப்பதற்குள் கருகடித்து விட்டார்கள் கசடர்கள்!

என்னை மறந்து, என் நிலையை மீறி, இழிதகை புரிந்தோரைப் பழி தீர்க்க எழும்பியது என் உள்ளம்! கொடுமை செய்தோரின் குடலைப் பிடுங்கத் துடித்தது என் கைகள்! வெறியர்களின் வெறிச்செயல், வெறியை மூட்டிவிட்டது எனக்கு! ஆம்; இலங்கை அப்போது கொந்தளித்துக் கொண்டிருந்தது! தமிழர்களும், சிங்கள வெறியர்களும் மோதிச் சச்சரவுகளை வளர்த்துக் கொண்டிருந்தனர் அப்போது. சிங்களவர்களின் இனவெறி, இரத்த வெறியாகத் தாண்டவமாடியது! அந்தக் கொடுஞ்செயலால் தமிழர்கள் சிலர் வெறிமூண்டெழுந்தனர்–அல்ல அல்ல வெறி மூளும்படி ஆக்கப்பட்டனர்! நானும் அப்படித்தான் ஆக்கப்பட்டேன்! எனக்கு நடத்தப்பட்ட இரத்தவிழா வைபவம், வேறு யாருக்காவது நடந்திருந்து. அவன் வீர உணர்வு பொங்கி வெறியுணர்வு அடையாதிருந்தால் அவன் தமிழனாகமாட்டான்! அந்த இன உணர்வு, தமிழனான எனக்கேற்பட்டதில் வியப்பில்லை! கொதிக்கும் எண்ணெயை என் தலையில்கொட்டி விட்டதுபோல் தவித்தேன்! பழிக்குப்பழி வாங்க என் உள்ளம் துடித்தது. "ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டு" என்று ஏசுநாதன் கூறித்தான் இருக்கிறான்! நான் என்ன ஏசுநாதன் பரம்பரையல்லவே, அப்படிச்செய்ய! என் சுந்தரியின் மானம் சுந்தரிக்காக அல்ல,- தாய்க்குலத்தின் வழித்தோன்றல் யாவர்க்கும்,- அங்கமெலாந்தெரிய, ஆடைகள் கிழிக்கப்பட்டு-அவமானத்திற்குள்ளாவதைக் கண்ணாரக்கண்டும், தன்மானத்தால் வீரம் கொள்ளாத மறத்தமிழனும் உண்டோ? அப்படி யாராவது ஒருவன் இருப்பின் அவன் தமிழனாக இருக்கமாட்டான்! உலகத்திலுள்ள அத்தனை இனத்தின் மொத்தமான ரத்தக் கலவையில் பிறந்தவனாகத்தான் ஆவான் என்று என் உள்ளம் கூவிற்று! "ஒரு சிங்கள வெறியனையாவது ரத்த வெள்ளத்தில் மிதக்க விட்டுப் பார்த்த பிறகுதான் நான் சாக வேண்டும்" என்ற, முடிவிற்கு உந்தப்பட்டேன்! சுற்றமும், மற்றவரும் எனக்கு மறந்து விட்டனர்! கூர் வெட்டுவாள் ஒன்றைக் கையிலேந்தினேன்! ஓடினேன் சிங்களவெறியர்கள் வசிக்கும் தெருவை நோக்கி! ஒரு தெருவில் புகுந்தேன்! தமிழ். சிங்கள வேற்றுமையைப் பரப்பி விட்ட புத்தபிட்சுகளின் உருவம் ஒன்று எதிர்ப்படடது. மொட்டைத் தலை, மண்டையில் ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்தது! காவியுடை, இரத்தவெறியின் அடையாளமோ? முதல்வெட்டு அவனது நெஞ்சுக் குழியிலே விழுந்தது. "ஆ... ஆ... அதோ பிடியுங்கள்!" என்று, பக்த்திலிருந்த சிங்களவர்கள் கத்தினர்! நான்கைந்து பேர் என்னைத்துரத்தியும் வந்தனர்! ஓடிக்கொண்டிருந்த நான், கதவு திறந்து கிடந்த ஒரு சிங்களவனின் வீட்டில் புகுந்து கொண்டேன்! அங்கு ஒரு சிங்களப்பெண்ணும், அவள் தகப்பனும் மதுக்குடித்துக் கொண்டிருந்தனர்! என்னைக்கண்டதும் இருவரும் பயந்து, கத்திக்கொண்டே ஓட முயன்றனர். ஆனால் நான் வசமாக மடக்கிக் கொண்டேன்! ஓங்கியகத்திக்குப்பயந்து நின்றனர்! அருகில் சென்று அந்தச் சிங்களப் பெண்ணை இழுத்து என்னுடன் அணைத்துக் கொண்டு, கிழவனைப் பார்த்து "உம்... வெளியேயுள்ளவர்களைப் போகச் சொல்லுங்கள். இல்லையேல் இவள் பிணமாகி விடுவாள்" என்று இரைத்தேன். கிடுகிடுத்துப்போன கிழவன் வெளியே இருந்தவர்களைப்பார்த்து..."அவன் பின்புறம் ஓடிவிட்டான்—பின்னால் ஓடுங்கள் பின்னால்! என்றுகத்தினான்! எல்லோரும் பின்பக்கம் ஓடினார்கள். கிழவனின் சமயோசித புத்தியை மெச்ச வேண்டியதுதான்! சிங்களப்பெண்ணை அவனிடம் தள்ளி விட்டு வெளியே ஓடினேன். அப்போது தான் முன்பக்கம் வாயிலில், தடியும், கையுமாக, "எங்கே...யார்?" என்று கத்திக்கொண்டு ஒரு சிங்களத்தான் ஓடி வந்தான். கொஞ்சமும் தாமதிக்கவில்லை நான். அவன் தோளிலே ஒரு வெட்டு வெட்டி அவனை வீழ்த்திவிட்டு ஓடினேன்— ஓடிக்கொண்டேயிருந்தேன்! யாருமற்ற அடர்ந்த காட்டிற்கு ஓடிவந்து விட்டேன்! இரவும் வந்தது! என் தீவிரசிந்தனைக்குப்பின், அன்றிரவே இலங்கையை விட்டுதமிழகம் ஓடிவிடுவதென முடிவெடுத்துக் கொண்டேன்! இரவு பத்து மணி சுமாருக்கு ஒரு காய்ந்த தென்னை உருட்டைத் துண்டுடன் கடலில் இறங்கினேன்! அப்போது..."யார் அது?" என்ற உரத்தகுரல் கேட்டுத் திடுக்கிட்டேன். ஆம், இலங்கைக் கரையோரம் காவல் புரிந்து கொண்டிருக்கும் ஒரு காவற்காரனின் உரத்த குரல் என்று எனக்கு நன்றாகவேபுரிந்தது! நான் வேகமாக நீந்தலுற்றேன், பதில் குரல் கொடுக்காமல். அடுத்தகணம் "டுமீல்" என்ற வெடிச்சத்தத்தைத்தொடர்ந்து என் முதுகில் குருதி கொப்பளித்தது. பிறகு நான் நீந்தும் சக்தியை இழந்தேன்".

"சரிதான் இது துப்பாக்கி வழி!" என்று கதை கேட்டுக் கொண்டிருந்த இரண்டு எலும்புக் கூடுகளும் கூறிக்கொண்டே மெல்ல நகர்ந்தன.

★

மாசறு காட்சியவர்

ஜீவபந்து ஸ்ரீபால்

நமது தமிழ் இலக்கியங்களில் மாசறு காட்சி, மையறு காட்சி, துகள்தீர் காட்சி, பொய்தீர் காட்சி எனப் பல காட்சிகள் காணப்படுகின்றன- இக் காட்சிகளின் உண்மைப் பொருளைச் சிறிது ஆராய்வோம். காட்சி என்பது இங்கே அறிவு என்னும் பொருளில் அமைந்துளள்து. மாசறு காட்சி போன்றவை குற்றமற்ற அறிவைக் குறிக்கும். இக்காட்சிகளை அடியார்க்கு நல்லார் 'நற்காட்சி' என்று கூறுவர், கண்கள் எவ்வாறு புறப் பொருளைத் தெளிவாக அறிகின்றனவோ, அவ் வாறே நூற் பொருள்களின் உண்மை களைத் தெளிவாக அறியும் அறி வினையே நற்காட்சி எனத் தமிழ்ச் சான்றோர் அழைத்துப் போற்றினர்.

'மெய்ப்பொருள் தேறுதல்,
நற்காட்சி என்றுரைப்பர்
எப்பொருளுங்
கண்டுணர்ந் தார்.'

என அருங்கலச் செப்பும் கூறுகின்றது.

எப்பொருள் யார்யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப
தறிவு.'

'எப்பொருள் எத்தன்மைத்
தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப
தறிவு.'

எனத் தமிழ் மறை தந்த தேவர் அறிவுக்குச் சுதந்தரம் வழங்கியுள்ளார். எத்தகைய பேரறிஞராயினும் சரி, அவர் கூறுவனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாது நமது சுயஅறி வால் நன்கு ஆராய்ந்து அறிவதே அறிவு என்கின்ளுர். அதுபோன்றே எத்தகைய பொருளாயினும் அதனை நன்கு ஆராய்ந்து தெளிதலே அறிவு என அறுதியிட்டுக் கூறுகின்ருர் திருக் குறளாசிரியர். இவ்வாறு எதையும் ஆராய்ந்து உண்மை காணும் அறி வையே பண்டைக் காலத்தில் நற் காட்சி என அழைத்தனர். அப்பேர றிவை இக்காலத்தில் பகுத்தறிவு எனப் போற்றுகின்றனர். இப்பகுத் தறிவு துணிவு மனப்பான்மைகொண்ட வர்களிடமே தோன்றும்.

அறிவுக்குப் பொருந்தாக் கொள்கை யாயினும் அக்கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள் அதனையே விடாப் பிடியாகக் கொண்டாடுவார்கள. அவர் களிடம் எதையும் ஆராய வேண்டும் என்னும் அறிவும் துணிவும் ஏற்படுவ தில்லை. சிலர் அவ்வாறு ஆராய்வதைப் பாவமெனக் கருதி அச்சம் கொள்ளு கின்றனர். இத்தகைய அச்சம் பெரும் பாலும் மதவாதிகளிடமே காணப்படும். எப்பொருளையும் ஆராய்ந்து அறியும் அறிவையே ஆளும் அறிவு எனத் தொல்காப்பியம் கூறுகிறது. இப் பேரறிவு படைத்தவர்களையே நம் பண் டைய இலக்கியங்கள் நற்காட்சியுடை யவர்கள் அல்லது மாசறு காட்சியார், பொய் தீர் காட்சியார் என்றெல்லாம் போற்றுகின்றன. இவ்வாறாய்ச்சி அறிஞர்கள் இக்காலத்தில் பகுத்தறிவு வாதிகளென்றும் அறிவியக்கக் கொள் கையார் (Rationalists) என்றும் அழைக்கப்படுகின்றனர். இவ்வியக்கம் இன்று உலகெங்கும் பரவியுள்ளது. இவ் வியக்கத்தினர் மூட நம்பிக்கைகளினின் றும் அகன்றவர்.

மூடநம்பிக்கை அறிவுவளர்ச்சிக்குத் தடையாகும்- இவ்வுண்மையை அறிந் தே நம் பண்டைய இலக்கியங்களில் உலகமூடம், தேவமூடம், பாசண்டி மூடம், என்னும் மும்மூடங்களை அகற்றி யவனே நற்காட்சி உடையவன் என அழகாகக் கூறப் பட்டுள்ளது. அத்த கைய சிறந்த அறிவியக்கக் கொள்கை யையும் அவ்வியக்கச் சான்ருேர்களையும் அவர்களின் இயல்புகளையும் கண்டு மகிழ்வோம். நமது தமிழ் மறையாகிய திருக்குறளில்,

'இலம்என்று வெ·.குதல்
செய்யார் புலம் வென்ற
புன்மையில் காட்சி யவர்'

'பொருடீர்ந்த பொச்சாந்தும்
சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சியவர்'

செயரிற் றலைப்பிரிந்த
காட்சியார் உண்ணர்
உயிரிற் றலைப்பிரிந்த ஊண்'

'இருள்நீங்கி இன்பம்
பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு'

'கொளப்பட்டே மென்
றெண்ணிக்
கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்'

என்றும் சிலப்பதிகாரத்தில் மாதவி, தன் காதலனுகிய கோவலனுக்கு எழுதிய ஓலையில்,

'கையறு நெஞ்சம்
கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப்
புரையோய் போற்றி'

என்றும் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் மாடலன் செங்குட்டுவனைச் சந்தித்துப் பல அறவுரைகளைப் பகர்கின்ருன். முடிவில், இவை யாவும்

'பொய்யில் காட்சியோர்
பொருளுரை யாதலின்

எனக் கூறி முடிக்கின்றான். தமிழ்க் காவியங்களுள் தலை சிறந்து விளங்கும் சீவக சிந்தாமணியின் ஆசிரியர் அதன் உரைச் சிறப்புப் பாயிரத்தில்.

'பொய்யா மொழிபுகழ்
மையறு காட்சித்
திருத்தகு முனிவன்'

எனப் புகழப்பட்டுள்ளார்.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் தன் பாயிரத்தில்,

'துளக்கறு கேள்வித்
துகடீர் காட்சி
யளப்பருங் கடற்பெய
ரருந்தவத் தோனே'

என அழைக்கப்பட்டுள்ளார்.

பெருங் கதையில் நற்காட்சியைப் பற்றிய ஒரு நிகழ்ச்சி நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது. அறுவகைச் சமயப் புலவர்களும் தம்முன் எதிர்த்து வாதம் செய்தலைக் காணப் பிரச்சோதன மன்னன் விரும்புகின்றான். அவ்வாறே அரசர் அவையில் அறு சமயத்தறிஞர்களும் கூடி வாதிக்கின்றனர், அவர்களில் சமண முனிவர் நற்காட்சியை முன்னிறுத்தி வாதிடுகின்றார்; வெற்றியடைகின்றார். இதனைக் கொங்கு வேளிர்,

'கற்றோர் மொய்த்த
முற்றவை நடுவண்
தாழாப் பெரும்புகழ்க்
காளக் கடவுண் முன்
பாலகன் என்னும்
பண்ணவர் படிவத்துக்
காளச் சமணன்
காட்சி நிறுப்ப
ஐம்பெருஞ் சமயமும்
அறம் தோற்றன.'

என விளக்கு கின்றார்.



'தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாளைத் திறக்குறளிலே காண்கின்றோம். சோம குண்டம் சூரிய குண்டம் முழ்கிக் காமன் கோட்டத்துக் கடவுளை வழிபட மறுத்துக் கொழுநனையே தெய்வமாகக் கொண்டாடும் கற்புக் கடம் பூண்ட கண்ணகியின் மாண்பினை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பல பகுதிகளில் வியந்து புகழ் கின்றார். இங்கேயும் நம் கொங்கு வேளிர் பெண்ணின் பெருமையைப் பேசும் போது பெண்களுக்கு அறிவு- அதினும் பகுத்தறிவு எவ்வளவு இன்றியமையாத துணையாக விளங்குகின்றது என்பதை

'எழுந்த
கையறு
வீழினுங்
கணவ
னல்லது
தெய்வ
மறியாத்
தேர்ந்துணர்
காட்சிப்
படிவக்
கற்பிற்
பல்கோ
மகளிர்'

எனப் பாராட்டு கின்றார்.

வளையாபதியில்.

'துக்கந் துடைக்கும்
துகளறு காட்சிய
நிக்கந்த வேடத்
திருவடி கணங்களை,

என நற்காட்சியை உடைய துறவிகள் போற்றப் பட்டுள்ளனர். நாலடியாரில்,

'கள்ளார், கள்ளுண்ணார்
கடிவ கடிதொரீஇ
எள்ளிப் பிறரை
இகழ்ந்துரையார்-தள்ளியும்
வாயின் பொய்கூறார்
வடுவறு காட்சியார்
சாயின் பரிவ திலர்,

என நற்காட்சியுடையாரின் பண்புகள் கூறப்பட்டுள்ளன.

பகவான் மகாவீரர் அறிவியக்கக் கொள்கையாகிய அருளறத்தை மக்களிடையே உபதேசித்து வருகையில், இராஜக்கிரக நகரம் வந்து சேர்ந்தார். சுவாமிகள் வரவினை அறிந்த அந்நாட்டு மன்னன் சிரேணிக மகராஜன் பெரு மகிழ்ச்சி கொண்டு மகாவீரர் வருகையை நகரமக்கள் அறியும் வண்ணம் ஆனந்த பேரிகை மூலம் அறிவித்தான்.

இச்செய்தியைக் கேட்டு அறிவியக்கக் கொள்கையுடையார் பலரும் அத் தூயோனின் அறிவுரைகளைக் கேட்க விரைந்து வந்தனர். இச்செய்தியை ஜீவசம்போதனை என்னும் நூலில்,

'ஆனந்த மெய்தி
அரசன் அணிநகரத்
தானந்த பேரி
யறைவித்தான்-ஆனந்த
சொல்லாரக் கேட்டுத்
துகள்தீர்ந்த காட்சியார்
எல்லாரும் வந்தடைந்தா
ரீண்டு.

என விளக்கி நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்ருர். மகாவீரர் அறிவுரை பகர்ந்த பின்னர், முடிவுரையாக. 'மக்களே! நீங்கள் என்னைத் தெய்வீக, புருஷனுகப் போற்றுகின்ற காரணத் தால் யான் கூறுவதை யெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ளாதீர்கள். உங்கள் பகுத்தறிவால் எனது உரை யை நிறுத்து, அறுத்துச் சுட்டு உரைத் துப் பொன் கொள்வார் போல ஆராய்ந்து அறிந்து ஏற்றுக் கொள் ளுங்கள் என வற்புறுத்துவார். இப் பரந்த நோக்கத்தை அறிந்தமக்கள் அப்பெருமகனை,

'தீதில்லா நயமுதலாத்
திருந்தியநல் லார்வைகளாற்
கோதில்லா வரும்பொருளைக்
குறைவின்றி யறைந்ததற்பின்
போதில்லா வியற்காட்சி
யருளியதுன் பெருமையோ.'

எனப்பாராட்டிப்போற்றியிருக்கின்றனர். எப்பொருளையும் ஆராய்ந்தறியும் ஆற்றலை உண்டாக்கும் நற்காட்சியின் சிறப்பை அருங்கலச் செப்பு ஆசிரியர்

"காட்சியோ டொப்பா
தியாங் காணும் வையத்து
மாட்சி யுடைய துயர்க்கு"

என்ருர்.

இவ்வாறே பகுத்தறிவு, அல்லது நற்காட்சி இயக்கம் பண்டைய காலத் தில் தமிழ் நாடெங்கும் பரவி இருந்தது. அதனுல் மக்கள் பலரும் நல்லறிவும் நற்குணமும் நற்பண்பாடும் பெற்று விளங்கினர். நற்காட்சியுடையார் அனை வரும் அன்பு நெறியை மேற்கொண்ட வர்கள், அதனுல் மக்களிடையே வேறு பாடின்றிப் பலரும் உடன்பிறந்தார் போல் வாழ்ந்து வந்தனர் என்பதைத் திருக்குறள், சிலப்பதிகாரம், பெருங் கதை, சீவக சிந்தாமணி, நாலடியார், சூளாமணி போன்ற ஜைன இலக்கியங் கள் அனைத்திலும் காணலாம்.

★

வெற்றிப் பாதை

துறையூர் ந. அலி, பி. ஏ.

முச்சடக்கிக் கடல்மூழ்கும் வீரன் கையில்
முத்துக்கள் ஒளிசிந்தும்; சுரங்கம் தோண்டி
தீச்சூட்டிற் கஞ்சாமல் இறங்கும் வீரன்
சித்திரப்பூங் கரங்களிலே தங்கம் மின்னும்
பூச்சூடி மலரணையில் சாயும் மங்கை
பொன்மேனி தருகின்ற சூட்டிற் காக
முச்சடக்கி நிற்கின்ற வீரன் மார்பை
முத்தமிடத் துடிப்பாளா வெற்றி மங்கை?

கல்லென்றும் மலையென்றும் முட்க ளென்றும்
கருதாமல் நடைபோடும் கால்க ளுக்கே
வெல்லம்போல் இனிக்கின்ற வெற்றி கிட்டும்
வேறெவர்க்கும் அவ்வெற்றி கிட்டா துண்மை
கொல்லனுலை இரும்பாகக் காய்ந்தா லன்றி
கொள்கைவெறி மூளாது நெஞ்ச கத்தில்
வெல்லுதிறல் தோளுயர்த்தி விரைந்தா லன்றி
வெற்றிக்கு வழியில்லை; சாவே மிஞ்சும்

தொலைவினிலே தெரியுதுபார் வெற்றிப் பாதை
துவளாதே, எந்தமிழா நிமிர்ந்து நோக்கு
தலைஉருளும், முண்டங்கள் தரையில் வீழும்
தளராதே அவற்றின்மேல் நடந்து செல்நீ
விலைபோட்டு வாங்குகிற பண்ட மென்ருல்
விடுதலையை ஏன்உயிராய் மதிக்கின் ருர்கள்?
அலையாகச் சுருண்டாலும் வெற்றி தன்னை
அணைக்காமல் சுருளாதே உன்மேல் ஆணை!

நடைமெலிந்து நில்லாதே; அஞ்சி யஞ்சி
நகராதே புழுப்போல; இடைம றிக்கும்
தடைக்கல்லை உடைத்தெறிவாய், வெற்றிப் பாதை
தானுகத் தெரியும்பின் நடந்து செல்வாய்
அடலேறே! தயங்காதே, இந்த வேளை
அலட்சியமாய் நீயிருந்தால் வாணுள் முற்றும்
அடிமையென்ற தளைபூண்டு வைய கத்தில்
அணுவணுவாய் இறப்பாய்உன் புகழும் மாயும்!

கனவின் பொருள்

வை. சுப்ரமணியன்

மதி வளர்ந்து முழுமையாகிற நாளைக் கணக்கெடுத்து, மனத்தில் குறிப்பும் போட்டுக்கொள்கிற பழக்கமுடைய அமுதா வானில் இயங்கிக் கொண்டிருந்த மதியை வெறித்து நோக்கினாள். அன்றும் முழுமதியின் ஆட்சியே. அவள் மனம் அந்த மதி தேய்ந்து ஒரு ஒளி விளிம்பு என வானில் ஊசலாடும் நாளை நோக்கிக் கணக்குப் போட்டது.

இன்னும் பதினான்கு தினங்கள்... 'இருபதாம் தேதிக்கும் பதினான்கு தினங்கள்தாமே ?...இருபதாம் தேதி தானே ?' காலையில் படித்த கடிதத்தின் வாசகத்தை நினைவூட்டிக் கொண்டாள் அமுதா '...பதினைந்து நாள் லீவும் எனக்குக் குதிரைக் கொம்பு போல் கிடைத்திருக்கிறது, அமுதா ! இந்தக் காலத்தைக்கற்பனையால் ஊதிக் கணக்கிட்டால் அது நாம் வேண்டுமளவு பெருங் காலமாய் விரியலாம் ; ஏங்கிக் குமைந்து இமைத்தால் போனது தெரியாமல் புகைந்துவிட்ட சிறுநாட்களாகவே போய் விடும். எனவே, அதனைக் கற்பனையால் கட்டிப் பிடிப்போம். இந்தப் பதினைந்து நாட்களில் நான் புறப்பட்டு வரும் அலுவல் நாலைந்து நாட்களை விழுங்கி விடும். மீதமுள்ள நாட்கள் உனக்கும் - எனக்கும் !

பிறகு...பிறகு என்ன ! அதுதான் நேரில் வருகிறேனே...நினைவில் வர மறுத்து எழுத்தில் படிய மறுக்கும் செய்திகளை நேரில் சொல்லிக் கொள்கிறேன்.

இப்படிக்கு உன்,

மயிலேறு.'

பி.கு : இங்கிருந்து பத்தொன்பதாம் தேதி புறப்பட்டு இருபதாம் தேதி காலை அங்கே வந்து சேர்வேன். ம.'

மதியின் தேய்வைச் சில கண நேரம் விரும்பிவிட்ட தன் சுயநலத் தன்மையை நினைந்து அமுதா வெட்கினாள். இப்படி ஒருநாளும் அவள் சிறுமையுடன் நடந்து கொண்டதில்லை. நாளை எண்ணிப் பெருக்க, அதன் வளர்ச்சியைப் பலமுறை கணக்கிட்டிருக்கிறாள். ஆனால், இந்த நிலை இன்று...

மயிலேறுவை நினைத்துக்கொண்டால் இப்படிப்பட்ட எண்ண அதிர்ச்சிகள்கூட ஏற்படாதிருக்குமா? ஒரு வகை அதிர்ச்சிதான் அதுவும். மயிலேறு கடிதங்கள் எழுதியே காலத்தை ஓட்டி, முழுமையாக இரண்டாண்டுகள் இந்தப் பக்கம் திரும்பிப் பாராமல் இருந்துவிட்டு, தான் எதிர்பாராதிருக்கும்போது இப்படியொரு கடிதம் எழுதினான் என்றால் அமுதாவுக்கு அது அதிர்ச்சியாய் முடிந்ததில் வியப்பில்லை. மகிழ்ச்சியை ஏந்த ஏதாவதொரு உணர்வு அடிப்படையாய் வேண்டும்; இப்படித்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே...

மயிலேறுவுக்கும் - அமுதாவுக்கும் என்று பெரியோர்கள் முடித்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பெரியவர்கள் இந்தச் சிறியவர்களின் பெற்றோர் தான் எனினும் அந்த முடிப்புக்கு ஆதாரமானவர்கள் அமுதாவும் மயிலேறுவுமே. அவர்கள் முதன்முதலில் ஒருவரை யொருவர் கண்டனர் ; மனம் விண்டனர்; ஒருவருக்காக மற்றவர் பிறந்திருக்கும் உண்மையறிந்துகொண்டனர். இது மூன்று ஆண்டுகளுக்கு முந்திய கதை.

அவர்கள் திருமணம் நடைபெறுவதற்குப் பெற்றோராகிய பெரியோர் பெருமுயற்சி யெடுத்தனர். பொறுப்பும், உலக நியதியும், 'நாளை நாளை' என்ற 'நாளை'யில் உள்ள நம்பிக்கை- அவநம்பிக்கை இரண்டில் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி குரல்கொடுக்கும் உணர்வும் சேர்ந்து அவர்களைத் தூண்டி, திருமணத்தை விரைவில் முடித்துவிட வெருட்டின. ஆனால், மயிலேறு தலையசைத்து விட்டான். 'திருமணத்துக்குக் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தான். "நாளை என்பதில் நம்பிக்கை வைக்கத்தான் வேண்டும்; இன்றையப் பிரச்னை எதை எடுத்துக்கொண்டாலும் 'நாளை' என்ற சொல்லில்தான்

வந்து அது தொற்றுகிறது. எனக்குச் சிறிது 'பிறந்த கடன்' இருக்கிறது. அது நாட்டுக்கு நான் செய்யவேண்டிய அணுவளவு கடமை என்பதில் மறைந்து கிடக்கிறது. அதற்குச் சமயம் வரும்போது நான் தயாராயிருக்க வேண்டும். என் கடமை சிறிதளவுதானே தவிர, அதைப் பொறுத்த என் சௌகரிய-அசௌகரியங்கள் பெரிய அளவிலே விளையலாம் அதற்கும் நான் தயாராகத்தான் இருக்கவேண்டும். திருமணம் ஒன்றிரண்டு பேரின் திருப்திக்காகக் கழித்துவிடும் ஒரு சிறிய 'பிரார்த்தனைக் கடமை'யல்ல; அந்த ஒரு சொல்லில் அடங்கியுள்ள கால விரிவையும், கடமை யளவையும், உறவு வலிமையையும் ஆராய்ந்து அறிந்து நடந்துகொள்ள நான் திட்டமிட்ட பின்னரே நிமிர்ந்து பார்க்க இயலும். இப்போதைக்கு என்னை என் இயல்பில் போகவிடுங்கள் !''

மயிலேறு இப்படி ஒரே யடியாக, ஒருமுறைப் பதிலாகச் சொல்லி விடவில்லை: மனப்போக்கால் உணர்த்த ஆரம்பித்து, அமுதாவிடம் சொல்லக் கூடியன சொல்லி, இறுதியில் நெருக்கடி என்று வந்தபோது தன் உள்ளக் கிடக்கையை எழுத்திலே வடித்துக் காட்டியது இது. அவன் போக்கில் அவனை விட்டனர். உள்ளூரிலேயே ஓராண்டு காலம் சுற்றிய பிறகு, அவன் கருத்துக்களை ஓரளவு வடித்துச் சொல்ல வாய்ப்பளிக்கும் கலையகமாக ஒரு பத்திரிகை அலுவலகம் அழைக்கவே அவன் புறப்பட்டான்.

அன்று புறப்பட்டவன்—

★

இன்றுதான் வந்தான்; 'மயிலேறு' என்று ரயில் நிலையத்தில் அழைப்புக் குரல்கள், வரவேற்புக் குரல்கள் ஆர்த்தெழும் என்று கண்ட அவன் சிறு கனவு சிதைந்து, வெறும் நினைவாய் நீண்டது... உலகத்தின் இயக்கமே அவரவர் போக்கில், தம் காரியமே கண்ணாக, தம் நினைவே நினைவாக, தாம் கண்ட பயனே பயனாகத் திரிபவரின் மொத்த இயக்கத்தின் விளைவாகத்தானே நேர்கிறது! இதில் மயிலேறு எங்கே! அவன் கனவுகள் எங்கே! 'பைத்தியக்காரன்!' என்று தன்னைத்தானே சொல்லிக் கொண்டதில் அந்தச் சிந்தனையை முடித்துக் கொண்டு திரும்பினான்.

வண்டியில் ஏற வந்தவர்கள்-வண்டியினின்றும் இறங்கியவர்கள் மத்தியில் வெள்ளைக் கோலத்துக்கு இட்ட வண்ணப் புள்ளிகள்போல் தெரிந்தனர் சில பெண்கள். அதையொட்டி அவன் நினைவு அமுதாவைப் பற்றிப் படர்ந்தது. அவள் அங்கே வந்திருக்க மாட்டாள் என்பது தெரியும் மயிலேறுவுக்கு. அத்தனை சுதந்திரம் அவளுக்கு இன்னும் வந்து விடவில்லை. ஆனால், ரயில் நிலையத்தில் தான் வந்து இறங்குவது,இறங்குகிற நேரம் இத்தனையும் அறிந்து அவள் தன் வீட்டுத் தோட்டத்தில், அல்லது எங்கு வாய்க்கிறதோ அங்குத் தென்படும் ஒரு கம்பத்தைத் தன் உருவாக மாற்றி, வரவேற்பளித்து மகிழ்ந்து கொண்டிருப்பாள் என்று எண்ணிக் கொண்டான் அவன்.

கூட்டத்திடை முயன்று முன்னேறினான்.

அன்று மாலை அமுதாவைச் சந்தித்தான் மயிலேறு. ஒரு சிறிய வடிகாலின் மதகண்டை அவர்கள் சந்திக்கிற வழக்கம். பெரிய ஆறு ஒன்றிலிருந்து குளத்துக்கு நீர் பாயும் அந்த வடிகால் அவர்களது இதயத்தில் இன்ப உணர்வுகளையும் வடிக்கும் உயிர்நதியாகத் தோன்றியது. கட்டறுத்து ஓடும் கலகலத்த உணர்வுச் சுழல்களுக்கு ஒப்பாக ஓடிய அந்தக் காட்டாற்றினின்றும் அமைதியையும் தூய்மையையும் மட்டும் வடித்துக் கொண்டு வரும் நதியாகவும்கூட விளங்கியது அது.

அந்தத் தெள்ளிய நீர்ப் பரப்பின் எதிரே, தென்றல் கதை சொல்லி-இசை பாடி வரும் அந்தச் சூழ்நிலையில்தான் அமுதாவும் மயிலேறுவும் சந்திக்கிற வழக்கம். அந்தச் சிறு வாய்க்காலின் மதகு அவர்களது சந்திப்புக்கு ஒரு அடையாளம்; காதலுக்கு ஒரு மௌனப் பொருளான சாட்சி.

''என்ன, இப்படி வைத்த விழி பெயர்க்காமல் பார்க்கிறீர்கள்? நான் நான்தானா என்ற சந்தேகம் வந்து விட்டதா உங்களுக்கு?'' என்று கேட்டாள் அமுதா. அந்தச் சொற்கள் அருவியோசையின் வகையானவை; தேன் துளிகளின் சுவையானவை.

''ஆமாம், நீ நீதானா என்ற சந்தேகம்தான் வந்துவிட்டது, அமுதா. இரண்டு வருஷங்களுக்கு முன் பார்த்த அமுதாவை உருவில் மட்டும் நான் இத்தனை நாட்களாக அப்போதைக் கப்போது மாறுதல் படுத்தி, வளர்ச்சியின் அடிப்படையில் கற்பனை பண்ணி வந்திருக்கிறேன்: உன் அழகை மறந்துவிட்டேன்.''

காலில் தீப்பட்டவள்போலக் குரல் காட்டினாள் அமுதா.

''என் அழகை மறந்துவிட்டீர்களா?'' கவலை அலையடித்தது அந்தக் குரலில்; ஏக்கம் சிறகடித்தது; திடீரென்று கவிந்த இருளில் விழித்துக்கொண்டே ஒளிக்குத் தடுமாறும் கண்கள்போல் தோன்றின அவளது கண்கள்.

மயிலேறு அதிர்ச்சி யடையாமல் சிரித்தான். ''அழகை மறந்தேனென்றால் அறவே மறந்தேனென்று அர்த்தமில்லை,அமுதா. நான் இரண்டு வருஷங்களுக்கு முன் உன்னிடம் சிறு சுடராய்க் கண்டுபோன உன் அழகு இப்போது எப்படி ஒளி வீசுகிறது தெரியுமா? உன்னை நான் நிமிர்ந்து பார்க்கவே கூசும் அளவுக்கு அது சக்தி பெற்றிருக்கிறது. இதை எண்ணிப் பார்க்க மறந்தேன் என்றுதான் சொன்னேன்.''

அமுதாவின் மனம் குடமாய் நிறைந்து விட்டதென்பது அவள் முகக் குறியினின்றும் தெரிந்தது. இரண்டாண்டுகளாகக் காதை மயிலேறுவை அவள் கடிந்துகொள்ள நினைத்துத் தயார்ப்படுத்தின சொற்களும், கடிதலின் தொடர்பாகவே கருத்துக்குள் பாய்ந்து இன்பக் கதைகள் பேசத் தொடுக்க நினைத்த சொற்களும் ஒன்றோடு ஒன்று குழம்பி, அவள் முகத்திலே குழம்பிய நாணச் செங்குழம்பையும் மேவிக்கொண்டு புரண்டன. இறுதியில் நிலைத்தது மௌனமே.

வடிகால் ஓடை தன் இயல்பில் இயங்கிக்கொண்டிருந்தது. குளத்தில் பாய வேண்டிய தண்ணீர் தங்காமல் தடம்பார்த்துச் சென்றபடி யிருந்தது. சூழவிருந்த மரக் கிளைகளினின்றும் உதிரவேண்டிய இலைகள் உதிர்ந்து கொண்டிருந்தன. கதிரவன் தனது அன்றைய ஒளியாட்டத்தின் இறுதிக் காட்சிகளில் ஈடுபட்டிருந்தான்.

''உங்களிடம் ஒரு முக்கியமான பிரச்னையைக் கிளப்பலாமா?'' என்று குரலில் குழைவுடன் கேட்டாள் அமுதா.

''என்ன பிரச்னை அது அமுதா? முக்கியமல்லாத எதையும் நமது இதயங்கள் அநுபவிக்கும் பொன்னான நேரத்திடை கொண்டுவர நீ மாட்

டாயே!" என்றான் மயிலேறு பரிவுடன்.

"நீங்கள் உங்கள் பிரச்னை என்று சொல்லி மலைபோல் தடுத்து நிறுத்தியிருக்கும் நமது வாழ்க்கையைப் பற்றித் தான்; அந்த வாழ்க்கையிடை திறக்கப்பட வேண்டிய கதவம் எனும் ஒரு இனிமையான சம்பவம்—"

"நமது திருமணத்தைத் தானே குறிப்பிடுகிறாய் அமுதா? நேரம் நேரும்போது அது நடைபெறும். என் கடமையைச் செலுத்த வேண்டிய காலம் இப்போது நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதில் தீவிரமாக ஈடுபடும் முன்பு ஒரு முறை விடுமுறையில் வந்துவிட்டுப் போவோம் என்றுதான் இப்போது வந்தேன்..."

"உங்கள் கடமை வாழ்க்கை பூராவும் உங்களை நிழல்போல் தொடர்ந்திருக்குமா?"

மயிலேறு பொருள் பொதிந்ததொரு புன்னகையைத் தொடர்ந்து சொன்னான்: "ஒரு மனிதப் பிறவியின்—ஒரு தலைமுறையின்-ஆயுட்காலம் வரை நாட்டைப் பொறுத்த அந்தப் பிரச்னை தீராதிருக்கவும், என் போன்றோரின் கடமை அதற்குத் தேவைப்படவும் நேரும்படி நீ வேண்டாதே, அமுதா! சின்னதும் பெரிதுமான பல பிரச்னைகள் இப்போது எங்கள்முன் முளைத்துக் கிடக்கின்றன. அவற்றுள் மிக முக்கியமானதைத் தீர்க்க ஒரு மாபெரும் இயக்கம் உருவாகியிருக்கிறது. பத்திரிகைத் துறையில் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்த என்னைப் பற்றியும், என் துடிப்பையும் லட்சியங்களையும் பொறுத்த இயல்பு பற்றியும் உணர்ந்துள்ள எங்கள் தலைவர்கள் எனக்கு முக்கியமானதொரு பணியிட்டிருக்கிறார்கள். அது நிறைவேறியதும், நிறைவுறும் நம் திருமணம்..."

"உங்கள் லட்சியங்களையெல்லாம் நான் புரிந்துகொண்டிருக்கிறேன்; உங்கள் பற்றுதல்களை எண்ணி நான் பூரிப்பும் அடைகிறேன்; ஆனால், பெண் உள்ளத்தைப் பற்றி நீங்கள் முழுதும் அறிவீர்களா என்று அறிய நான் விரும்புகிறேன்."

"பெண் உள்ளம் பொன்போன்றது; அதன் ஒளி -"

"இந்த இலக்கியத் தொடுப்பெல்லாம் இருக்கட்டும்; உங்களை எனக்குத் தெரியாதா, இல்லை - என்னைத்

தான் உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்கு ஒரு சிறிய சோதனை இன்று; ஒடிந்துபோன இதயத்தை ஒட்டவைக்கும் திறன் உங்களிடம் இருக்குமா?"

"எதற்கு இந்தப் பீடிகையெல்லாம் அமுதா?"

"சற்றுமுன் என் அழகை நீங்கள் மறந்துவிட்டதாக நீங்கள் கூறியதும் என் உள்ளம் எப்படி ஒரு சில கண நேரம் அதிர்ச்சி யடைந்துவிட்டது தெரியுமா? அதையொட்டி என் மனம் ஏதோ நினைவுகளில் வட்டமிட்டுக்கொண்டே யிருக்கிறது. என் நினைவு உங்கள் உள்ளத்தில் எப்படி ஒட்டிக்கொண்டிருக்கிறது என்று கண்கூடாகப் பார்த்துவிட ஒரு வேகம் என்னுள் எழுந்திருக்கிறது."

"என் நெஞ்சைப் பிளந்து பார்..."

"இப்படிச் சொன்ன ஒரு மனிதரின் நினைவு வருகிறது..."

"மனிதரா?"

"ஆமாம்; என் சிநேகிதி ஒருத்தி இருக்கிறாள்; அவள் வாழ்வைச் சொர்க்கமாக்குகிறேன் என்று வந்தவர். அவரைப் பற்றியும் அவர் காதலைப்பற்றியும் என் சிநேகிதி அணு அணுவாக-தினக் குறிப்பை ஒப்பிப்பது போல - ஒப்பித்திருக்கிறாள். ஆனால், அவர் நயவஞ்சகர் என்பது தெரிந்துவிட்டது. என் சிநேகிதி தன் இரு கண்களையும் அம்மை நோய்க்குத்திரும்பும்வழிகாட்டத்துணை கூட்டி அனுப்பிவிட்டாள். கண்போன செய்தி கேட்டுக் கணவராக வரவிருந்தவரும் போனவர்தான். அவர் வேறொரு பெண்ணுடன் வாழ்க்கைத் தோணியில் ஏறிப் பயணம் போய்விட்டார்.

ஆனால் இந்தப் பிறவியை அவருக்கு ஈந்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டு என் சிநேகிதி கடலும் மலையும் ஆறும் ஏரியும் போல் காத்துக் கிடக்கிருள். அவள் நிலையில் நான் இருந்து, அவர் நிலையில் நீங்கள் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் ?''

மயிலேறு ஒரு நீண்ட பெருமூச் செறிந்தான். ''உன் சிநேகிதியின் கதை உள்ளத்தைப் பிழியும் தன்மை கொண்டது. ஆயினும் அப்படி நேர வேண்டாம். அந்தக் கயவரின் நிலையில் நான் இருந்தால். வைத்தியர் வருமுன்னரே கூட என் இரு கண்களையும் பறித்துப் பதிக்கவேண்டிய இடத்தில் பதித்துவிட முயல்வேன்!'' என்றுன்.

பெருமை முகத்தில் பூக்க அமுதா ஒரு கொடியாய் அவன் எதிரே ஆடி நின்ருள். பிறகு கலகலவென்று சிரித்துக்கொண்டே, ''எனக்குக் கற்பனை வரும் என்று தோன்றுகிறதா உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''சாதாரணமாக வராது; விபரீதமாக வரும் என்று தெரிகிறது. உனக்கு யாராவது சிநேகிதி இருப்பதாவது உண்மையா யிருக்குமா ?'' என்று கேட்டான் மயிலேறு.

அவளது சிரிப்பின் சிற்றலைகள் இன்னும் தொடர்ந்துகொண் டிருந்தன.

★

இயற்கையில் விளைந்த மழை இயற்கையையே எதிர்க்கத் தூண்டப்பட்டாற்போல் ஒரே சீறலாகப் பெய்துகொண்டிருந்தது. அன்றிரவு புயலும் மழையும் இடியுமா யிருக்கும் என்ற வானிலை அறிக்கையைப் பறைசாற்றச் செய்திருந்தனர் அதிகாரிகள். அமுதா மழையைக் கண்டு கரிக்கத் தொடங்கி யிருந்தவள் இந்தப் பறையறையைக் கண்டதும் புயலாகவே மாறினுள். 'பதினைந்து நாள் லீவில் வந்திருக்கும் அவரை அவரது சொந்தப் பணிகள் ஆறு நாட்களும், இந்தப் பேய் மழை ஆறு நாட்களுமாகப் பங்கு போட்டுக்கொண்டுவிட்டன. இன்னும் புயலும் இடியும் வேறு –'

அவள் மேலே எண்ணுவதை மின்னலொன்று வெட்டியது. மின்னலைத் தொடர்ந்து வானத்தில் முழக்க வேண்டிய இடி அமுதாவின் அடிவயிற்றினின்றும் சீறிக்கொண்டு புறப்பட்டது. ''ஐயோ! என் கண்கள்!'' அந்த அலறல் வீடு முழுதும் எதிரொலித்தது. வீட்டிலுள்ளவர்கள் பரபரப்படைந்தனர். டாக்டருக்குச் சொல்லி யனுப்பினுர்கள். அவர் வந்து பார்த்து ஏதோ முயன்றதைச் செய்துவிட்டு, பக்கத்திலுள்ள நகர வைத்தியசாலைக்கு அனுப்பவேண்டுமென்று சொல்லிவிட்டார்.

அமுதாவின் மனம் குன்றியது; உள்ளம் குன்றியது; ஆனுல் அவள் கரங்கள் நீண்டன. நீண்ட கரங்களைப் பற்றிக்கொண்டு ஆதரவு தர 'நீ நான்' என்று உறவினர்களில் ஒவ்வொருவரும் வந்தனர். ஆனுல் மயிலேறு இன்னும் வரவில்லை. மயிலேறு வருவானு, அல்லது...

'அவருக்கு இந்தச் செய்தி எட்டியே யிருக்காதோ ?...விடுமுறை முடிந்து அவர் ஊருக்குப் புறப்பட்டிருப்பார்...கண்களின் கட்டுக்களை அவிழ்த்தபின் என்ன நேரும் ?... பார்வை நிரந்தரமாகப் போய் விடுமோ?...அப்படி நேர்ந்தால் அவர் என் நீண்ட கரங்களைப் பற்ற வருவாரா ?...'

★

விடிந்தது. உடலைத் தொட்டு உலுக்கிய பிறகுதான் எழுந்திருந்தாள் அமுதா. அவள் முன் தெரிந்த காட்சி – அந்தக் காட்சிமுன் எரிந்த காட்சிகளாயின முந்தையக் காட்சிகள் அனைத்தும்! 'அட, சே! அத்தனையும் கனவா? மழை பெய்ய ஆரம்பித்தது ஒன்றுதான் உண்மையா?'

அவள் வெட்கினுள். ஆயினும் வியந்தாள், கனவேயானுலும் காட்சிகள் தொடர்பாகச் சென்றன என்பதைக் குறித்து !

''மயிலேறுவை இன்றைக்கு நம் வீட்டில் சாப்பிட வரச் சொல்லியிருக்கிறது தெரிந்துமா நீ இப்படித் தூங்குகிருய்?'' என்று கேட்டாள் தாயார். விழிப்பின் எல்லைக்கே சென்று அவள் மீண்டிருப்பதை அந்தத் தாய் எங்கே கண்டாள்!

அன்று பூராவும் இந்தக் கனவு அமுதாவை ஆட்டுவித்துக்கொண்டிருந்தது. எந்தக் காரியத்துடன் தன்னைப் பிணைத்துக்கொண்டு இயங்கினுலும் கனவு நினைவில் வந்தபடி இருந்தது. மயிலேறுவிடம் இந்தக் கண்ணருவிக் கனவைச் சொல்வதா வேண்டாமா என்று முடிவு செய்ய இயலாதபடி தவித்தாள். எப்படியும் அவன் அன்று பகலில் அவர்கள் வீட்டுக்குச் சாப்பிட வந்திருந்தபோது இதைச் சொல்லவோ, எதையும் சொல்லவோ வாய்ப்பு ஏற்படவில்லை. அவள் அவனுக்குப் பார்வையையே பரிமாறிக் கொண்டிருந்தாள்; அவன் அலுக்காமல் விருந்து உண்டு கொண்டிருந்தான்.

அன்று மாலையில் அவர்கள் மதகடியில் சந்தித்தனர். இன்னும் இரண்டு மூன்று தினங்களிருந்தும் மயிலேறு வேறு அலுவல் காரணமாக எங்கோ சென்று அப்படியே ஊர்போய்ச் சேருவதை அமுதாவுக்கு அறிவித்து விடை கேட்டான்.

''உங்களுக்கு விடையளிக்கு முன் என் பைத்தியக்காரக் கனவு ஒன்றை உங்களிடம் சொல்ல வேண்டும்'' என்று ஆரம்பித்து அந்தக் கனவுக் காட்சிகளை வரிசைப்படுத்திச் சொன்ஞள்; இறுதியாக, ''என் சிநேகிதி ஒருத்தியைக் கற்பித்து, அவள் கண்களையும் பறித்து நான் கதை கட்டிய தன் பலன்தான் இந்தக் கனவு இல்லையா?'' என்று கேட்டாள் அமுதா.

''உன் கனவு பைத்தியக்காரக் கனவல்ல, அமுதா. தூய்மையான கனவு அது. சாதாரணமாகக் கனவுகள், அன்றையப் பொழுதில் நினைவு கூறும் வார்த்தைகளை அடிப்படையாகக் கொள்வன என்றுலும் உன் கனவில் ஒரு உண்மை பொதிந்து கிடக்கிறது. இன்று நான் கலந்துகொள்ளப் போகும் இயக்கத்தை யொட்டி நினைத்துப் பார்த்தால் தமிழ் நாட்டின் நிலை உன்னைப்போல, நீ கற்பனை செய்த உன் சிநேகிதிபோல, கண் அளித்துக் காப்பாற்றப்பட வேண்டிய தெய்வ மகளின் நிலையில்தான் இருக்கிறது ! நான் பிறந்த நாட்டுக்குக் கண் தேடுபவர்களின் குழுவில் சேர வேண்டியது முதல் பணியென்றும், அதன்பின் உன் கரம் பற்றுவது இரண்டாவது பணியென்றும் ஒரு அறிகுறியாக வலியுறுத்துகிறது உன் கனவு!'' என்றுன் மயிலேறு. அமுதா முகம் குவியத் தலையும் குனிந்தாள்.

★

பரணிக்கோர் செயங்கொண்டான்



இந்தியத் துணைக்கண்ட வரலாற்றிலே குறிப்பிடத்தக்க பல திருப்பு முனைகள் உள. அத்திருப்பு முனைகளை ஏற்படுத்திய நாடுகள் பல. அவற்றுள் ஒன்று கலிங்கநாடு. கலிங்கநாடு என்ற பெயரைக் கேட்டதும் வரலாற்றாசிரியர்களின் விழிகள் அகலும்; அகத்திலே உணர்வு எழும்பும்; முகத்திலே வியப்பின் ஆட்சி பொங்கும். ஆம்! உண்மை. அந்த அளவுக்குக் கலிங்க நாடு தனது பெயரை வரலாற்றிலே ஆழப் பதித்திருக்கிறது.

அரசியலின் தந்தை; கீழைநாட்டு மாக்கியவல்லி; இந்தியநாட்டு அரசியற் கலைஞன் என்று வரலாற்றுப் பேராசிரியராலும் பிறநாட்டு அரசியல் அறிஞராலும் ஏற்றிப் போற்றப்பட்ட சாணக்கியன் வகுத்த அரசியலை அரிச்சுவடியாகக் கொண்டுதான் அரசியல் நடத்தினான் அசோகன். சாணக்கியன் சொன்னவாறே அரசியல் சூழ்ச்சிகளைக் கையாண்டு களம்பல கண்டான் அசோகன்; காவலர் பலரை வென்றான்; அவர்தம் நாடுகளைப் பின் கவர்ந்தான். தன் நாட்டைப் பெரியதாக்கினான். இத்தகைய வீரமும் தீரமும் வாளாற்றலும் தோளாற்றலும் உடைய வீரனும் அசோகனையும் தோற்கச் செய்த ஒருநாடும் உண்டு என்றால் அது கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெருவியப்பைத் தருவதொன்றாகும். அத்தகைய நாடு எது? அதுதான் கலிங்கம். தென்னகத்தின் ஒரு பகுதி கலிங்கம். களம் பல கண்ட காவலனும் அசோகனை வென்ற நாடே கலிங்கம். கலிங்கம் தந்த தோல்விப் பரிசே அசோகன் வாழ்விலே ஏற்பட்ட அழியாத பெருமாற்றம். கலிங்கம் தந்த அடியே அசோகனை வாளை வீசச் செய்தது; அருள் வடிவினனும் புத்தனின் தாளைப் பிடிக்கச் செய்தது.

இவ்வாறு பெரு வீரனும் அசோகனையும் உளங்குலையச் செய்த அத்தகைய பெரிய நாடாம் கலிங்கமும் ஆயிரமாண்டுகட்குப் பின்னர் மன்னன் ஒருவனுக்கு அடி பணிந்தது! வியப்பாக இருக்கிறது அல்லவா? நமக்கு மட்டுமல்ல; வரலாற்றுப் பேராசிரியர்கட்கே இச்செய்தி ஒரு புதிராகத் தோன்றுகிறது. அவர்கள் மூக்கிலே விரல் வைக்கின்றனர். அந்த அளவுக்குப் பெருமைபெற்ற கலிங்கத்தை வீழ்த்திய மன்னன் யார்? அவன்தான் சோழநாடு பெற்றெடுத்த வேழ வீரன் முதற் குலோத்துங்கன் என்க. ஆம்! அவன்தான் அசோகனை அடிபணிய வைத்த கலிங்கத்தைத் தன்னடிகளில் வீழ்ந்து கிடக்கச் செய்தான். அந்த வீழ்ச்சியிலே அபயனுக்கு வெற்றி கிடைத்தது; அசோகனுக்கும் இல்லாத பெருமையை வரலாற்றிலே அவனுக்குக் கொடுத்துவிட்டது அவ்வெற்றி. அத்தகைய வெற்றியும் வீழ்ச்சியும் சேர்ந்து பெற்றெடுத்த வீரக் காப்பியமே கலிங்கத்துப் பரணி.

காப்பியங்களிலே தொன்மையானது சிலம்பு; நீதி நூல்களில் தொன்மையானது திருக்குறள். இலக்கண நூல்களில் தொன்மையானது தொல்காப்பியம். அவைபோலப் பரணிகளிலே தொன்மையானது கலிங்கத்துப் பரணி. வாக்காலும் போக்காலும் பரணிகளிலே சிறந்து பொலிவது கலிங்கத்துப் பரணியாகும். அதற்குப் பின்னர் அதனை ஒத்ததொரு பரணி தோன்றாததொன்றே அதன் சிறப்பையும் அருமையையும் புலப்படுத்துவதொன்றாகும். அத்தகு பரணியை இயற்றியவர் செயங்கொண்டார் என்னும் ''கவிச் சக்கரவர்த்தி'' யாவார். ''பரணிக்கோர் செயங்கொண்டான்'' என, பிற்காலப் புலவர்

அ. திருமலைமுத்துசுவாமி M.A, B.T., D.L.S.



ஒருவர் பாராட்டியதினின்று அவர் பெருமை இனிது விளங்கும். "தெய்வப் பரணி" என ஒட்டக்கூத்தர் கூறுவதால் பரணியின் சிறப்புப் புலனுகும்.

''கலிங்கத்துப் பரணி ஒரு சிறந்த தமிழிலக்கியம். அது சரித்திரச் சார்புடையது; காதல் வீரஞ் செறியப்பெற்றது; புலவருக்கு இன்பூட்டுவது'' எனக் கூறியிருக்கிருர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

கலிங்கத்துப் பரணி ஒரு கவிதைக் களஞ்சியம். அதிலே கருத்தைக் கவரும் உவமைகள்; கண்ணை ஈர்க்கும் காட்சிகள்; உள்ளத்தை உலுக்கும் கற்பனைகள்; அறிவுக்கு இன்பம் நல்கும் வரலாற்றுக் குறிப்புக்கள், கோழையையும் வீரனுக்கும் வீரச் சுவை முதலிய பல நயங்கள் கலிங்கத்துப் பரணியிலே பொதுளித் தோன்றுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

காவியமும் ஓவியமும்

ஓவியப் புலவன் என்ன செய்கிருன்? கண்ணைக் கவரும் வண்ணங்களைக் குழைக்கிருன்; பின் கைவினை முதிர்ச்சியால் தன் கற்பனைத் திறத்தால் நம் உள்ளத்தைத் தொட்டிடும் ஓவியங்களை வரைகிருன். இதே வேலையையே காவியப் புலவனும் கவிஞனும் செய்கிருன் என்பர் அறிஞர் மெக்காலே. கவிஞன் தான் கண்ணுற்கண்ட காட்சிகளைத் தன் கவிவனை கைவினை முதிர்ச்சியாலும் ஒப்பு நோக்குத் தேர்ச்சியாலும் சொற்செல்வத்தாலும் அழகான சொல்லோவியங்களைத் தீட்டுகிருன்; தீட்டிய ஓவியங்களைத் தன் காவிய மாளிகையில் காட்சிப் பொருளாக வைக்கிருன். அவ்வாறுவைக்கப்பட்ட பலகவிதை ஓவியங்களை நாம் கலிங்கத்துப் பரணியிற் காணலாம்; கண்டு கண்டு விழியால் உண்டு உண்டு மகிழலாம்; உலகை மறக்கலாம்

மயிலோ? மங்கையோ?

காலைநேரம்; கிழக்கே கதிரவன் எழுந்துவிட்டான்; கதிரவன் தன்பொற் கதிர்களை விண்ணிலே விரித்து விட்டான். எங்கும் ஒளி; வெளியெலாம் ஒளிமயம். அக்காலை ஒருவீட்டில் ஒரு காட்சி.

மங்கை; கயல்விழியும் மயல்மொழியும் உடைய ஒருமங்கை; படுக்கையிற் கிடக்கிருள். எப்படி? தன் மெல்லுடை சேர்த்து நல்லுடல் அசைத்து உடல் நோகாமல் மெல்ல மெல்ல எழுகிருள். இதனைக் காண்கிருர் கவிஞர்; தனது கவிதைக் கண்களால் காண்கிருர்; உளம் உருக ஊன் உருகக் காண்கிருர். கண்ட காட்சி அவர் உள்ளத்தில் கற்பனையை எழுப்புகிறது. எழுப்பிய கற்பனையிலே தன்னை மறக்கிருர். கண்ட காட்சி, காட்சி எழுப்பிய கற்பனை, கற்பனையால் விளைந்த மறப்பு ஆகிய மூன்றும் சேர்கின்றன. சேர்ந்த முக்கூட்டுச் சேர்க்கையிலே காலையிலே எழுந்த மங்கை மயிலாகத் தோன்றுகிருள். அந்த மயிலாளின் ஓவியம் வருமாறு :-

"சுரிகுழ லசைவுற
வசைவுறத்

துயிலெழு மயிலென
மயிலெனப்

பரிபுர வொலியெழ
வொலியெழப்

பனிமொழி யவர்கடை
திறமினே"

—கலிங்கத்துப்பரணி-23

ஊடலோ ஊடல்!

அறை! பள்ளியறை! நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை; நறுமணப் பொருள்கள் எழுப்பும் நறும்புகை ஒரு பக்கம்; மல்லிகையும் முல்லையும் எழுப்பும் மணம் மற்ருெரு பக்கம். அவற்றிடையே பருவம் கொழிக்கும் காதலர்கள். காதலியின் மாம்பழக் கன்னங்களும் மதுஒழுகும் விழிகளும் முத்துப் பல்லும் கொவ்வைச் செவ்வாயும் பொன் முகமும் அதில் தோன்றும் புத்தழகும் காதலன் உள்ளத்திலே காதல் வெறியை ஊட்டுகின்றன. காதலன் உள்ளத்திலே காதல் வெள்ளம் கரைபுரண்டு செல்லுகிறது. வெள்ளத்தில் வீழ்ந்த காதலன் நீந்தப் புணை ஒன்று தேடுகிருன். காதலியின் மேலாடை தென்படுகிறது. எனவே காதலன் அதனை மெதுவாக இழுக்கிருன். அவ்வாறு இழுப்பது காதலிக்குக் களிபேருவகை அளிக்கிறது. எனவே காதலன் மேலும் மேலும் தன் மேலாடை பற்றி இழுக்க வேண்டும் என அவள் எண்ணுகிருள். உடனே அவள் என்ன செய்கிருள்? தன் எண்ணத்தை அவ்வாறே உடனே காதலனிடம் கூறிவிடுகிருளா? இல்லை! ஏன்?

காதலி தன் எண்ணத்தைக் கூறிவிட்டால் அவ்வளவுதான் காதலன் ஊடலை நிறுத்திவிட்டுக் கூடலை மேற்கொண்டு விடுவான். எனவே காதலி ஓர் உத்தியைக் (உதி—உத்தி) கையாளுகிருள்; வெற்றியைப் பெற்று விடுகிருள். காதலன் மேலும் மேலும் மென் துகிலைப் பிடித்தீர்க்கிருன். காதலிக்கு இன்பம் பெருக்கெடுக்கிறது. அது என்ன உத்தி? இதோ:

"விடுமின் எங்கள்துகில் !
  விடுமின் !" என்று முனி
வெகுளி மென்குதலை,
  துகிலினைப்
"பிடிமின்" என்ற பொருள்
  விளைய நின்றருள்செய்
பெடைநலீர், கடைகள்
  திறமினோ"

(க. ப. 25)

உவமைகள் :

போர்க்களத்திலே பொய்கை!

போர்க்களம்! அறுந்த தலைகள்! குறைந்த கைகள்! காலற்ற முண்டங்கள்! கரமற்ற முண்டங்கள்! யானைப் பிணங்கள்! குதிரைப் பிணங்கள்! எங்கும் குருதியின் வெள்ளம்! அங்கே ஒரு காட்சி!

ஓரிடத்திலே குருதி பெருகிக் கிடக்கிறது. பெருகிக் கிடக்கும் குருதியிலே வெண்கொற்றக் குடை கிடக்கிறது. தேரின் குடுமிகள் மிதக்கின்றன. இவற்றைக் கண்ட கவிஞருக்கு ஓர் அழகிய உவமை வருகிறது. அஃதாவது:- செங்குருதி வெள்ளம் நீராகவும் அதிலே மிதக்கும் பீலிக்குடைகள் தாமரை இலைகள் போலவும் தேர் மொட்டுகள் தாமரை மொட்டுகள் போலவும் தோன்றுகின்றனவாம் கவிஞருக்கு:—

"மிடையுற்ற தேர்மொட்டு
  மொட்டொக்க
வெஞ்சோரி நீரொக்க
  வீழ்தொங்கல்பா
சடையொக்க அடுசெங்க
  ளம்பங்க
யப்பொய்கை யாமாறு
  காண்மின்களோ"

செந்தரையோ ?

செந்நெருப்போ ?

நிலம் : பாலை நிலம். நேரம் நண்பகல். கதிரவனின் கடுஞ்சினம் நெருப்புக் கோல்களாக வானத்திலிருந்து நிலத்தை நோக்கிப் பாய்ந்துகொண்டிருக்கின்றன. அதனால் பாலை நிலம் தீக்குழம்பாக மாறுகிறது. அதன்மீது காடைப் புறாக்கள் (காடைகள்) அமர்ந்து தோன்றுகின்றன. பாலை நிலம் செந்நெருப்புத் தகடாகவும், புறா நெருப்பிலிந்து எழும் புகையாகவும் தோற்றமளிக்கின்றன.

"செந்நெ ருப்பினைத்
  தகடு செய்துபார்
செய்த தொக்குமச்
  செந்த ரைப்பரப்பு
அந்நெருப்பினிற் புகைதி
  ரண்ட தொப்
பல்ல தொப்புறா
  வதனிடைப் புறா"

கற்பனை :

சங்க இலக்கியத்துக்கும் பிற்காலப் பிரபந்த இலக்கியங்களுக்கும் உள்ள பல வேற்றுமைகளுள் கற்பனை ஒன்றாகும். பிற்கால இலக்கியங்களிலே கற்பனை மண்ணைவிட்டு விண்ணையும் முட்டிவிட்டது என்னலாம். அத்தகைய கற்பனைகளை நாம் கலிங்கத்துப் பரணியிற் காணலாம்.

கதிரவனின் காய்சினத்துக்களாகிய பாலைநில மரங்கள் எல்லாம் கரிந்து போய்விட்டன. அதனால் மூங்கில்கள் வெடித்தன. வெடித்ததினின்று முத்துக்கள் தெறித்தன; தரையிலே சிதறிக் கிடக்கின்றன. அதைக் கண்ட கவிஞருக்கு அழகான கற்பனை ஒன்று தோன்றுகிறது. கற்பனை குழைத்த கவிதை வருமாறு :—

"வெடித்தகழை விசைதெறிப்பத்
  தரைமேல் முத்தம்
வீழ்ந்தனவத் தரைபுழுங்கி
  யழன்றுமேன் மேற்
பொடித்தவியர்ப் புள்ளிகளே
  போலும் போலும்
போலாவேற் கொப்புளங்கள்
  போலும் போலும்"

புலவர்தம் கற்பனையிலே மூங்கிலின் மூத்துக்கள் வெம்மையால் புழுங்கித் தரை சொரிந்த கண்ணீர்த் துளியாக அல்லது தரையின் கொப்புளங்களாகத் தோன்றுகின்றன.

காரிகையின் கற்பு :

காதலனைக் களத்துக்கு அனுப்பிவிட்டாள் ஒரு காரிகை. அனுப்பிவிட்ட பின்னர் அவள் தன் வீட்டிலே அடங்கிக் கிடக்கவில்லை. காதலனைத் தேடிக் களம் சென்றாள். காதலன் மீது ஓர் அம்பு பாய்ந்து உயிரைக் குடித்துவிடுகிறது. எனவே அவன் உடல் கீழே விழுந்துவிடும் நிலையில் இருக்கிறது. உடனே காரிகை ஓடுகிறாள். காதலன் உடலைத் தாங்குகிறாள். தாங்கியதற்கு மறுகணம் அவள் உயிர் காதலன் உயிரைத் தேடிச் செல்லுகிறது. நிற்க காதலி ஏன் ஓடினாள்? காதலன் உடல் விழுவதற்குமுன் ஏன் தாங்கினாள்? உடனே ஏன் உயிர்விட்டாள்? இதற்கு விடையாகக் கவிதை பிறக்கிறது.

"தரைமகள்தன் கொழுநன்தன்
  உடலந் தன்னைத்
தாங்காமல் தன்னுடலால்
  தாங்கி விண்ணாட்டு
அரமகளிர் அவ்வுயிரைப்
  புணரா முன்னம்
ஆவியொக்க விடுவாளைக்
  காண்மின் ! காண்மின் ;

தமிழ் மங்கையின் கற்பே புலவர்க்குக் கற்பனையைத் தூண்டிவிடும் ஆற்றல் வாய்ந்தது என்பதை இக்கவிதை தெற்றெனக் காட்டுகிறதல்லவா?

சுவைகள் :

தொல்காப்பியர் சுவை எட்டென்பர். அவற்றின் வகையையும் விளக்கத்தையும் மெய்ப்பாட்டியலிலே காணலாம். அச்சுவைகள் எட்டினையும் நாம் கலிங்கத்துப் பரணியிற் காணலாம். எனினும் வீரச் சுவையே கலிங்கத்துப் பரணியில் விஞ்சி நிற்கிறது என்னலாம். போர் பாடியது, களம் பாடியது ஆகிய இறுதி இரண்டு பகுதிகளிலும் வீரச் சுவை நன்கு அமைந்துள்ளது.

அவற்றின் ஒவ்வொரு பாடலிலும் வீரச்சுவை ஆறாக ஓடுகிறது. ஒவ்வொரு சொல்லும் வீர ஒளி பொழியும் உடுக்கள் எனச் சுடர் விடுகிறது. அப்பாக்களைப் படிப்பின் கூனன் நிமிர்வான்: கோழை கோளரி ஆவான்; பூனை புலியாகும். ஒரு பக்கம் வேல்களின் மோதல்! மற்றொரு பக்கம் வாளின் சத்தம்! வேறொரு பக்கம் களிறுகளின் இடியொலி! இன்னொரு பக்கம் முரசுகளின் முழக்கம்! மாவீரர்களின் தலைகள் மாங்காய்களாக உருளும் காட்சி! இவ்வாறு உள்ளத்தை உலுக்கும் பல வீரக் காட்சிகளுக்கு குறைவே இல்லை.

எடுமெடு மெடுமென
வெடுத்ததோர்

இகலொலி கடலொலி
யிகக்கவே

விடுவிடு விடுபரி
கரிக்குழாம்

விடும்விடு மெனுமொலி
மிகைக்கவே''

''மருப்பொடு மருப்பெதிர்
பொருப்பிவை எனப்பொரு
மதக்கரி மருப்பி னிடையே

நெருப்பொடு நெருப்பெதிர்
சுடர்ப் பொறி தெறித் தெழ
நிழற் கொடி தழற்கதுவவே''

வீரச் சுவையிடையே அவலச்சுவை ஒழுகும் காட்சிகளும் கலந்து வருதல் கவிஞரின் கவிதைத் தன்மையைக் காட்டுகிறது.

'பொருதடக்கை வாளெங்கே!
மணிமார் பெங்கே!

போர்முகத்தி லெவர்வரினும்
புறங்கொடாத

பருவயிரத் தோளெங்கே
எங்கே யென்று

பயிரவியைக் கேட்பாளைக்
காண்மின்! காண்மின்!!

மேற் காட்டிய பாடல்களை அவற்றுக்குரிய ஒலியோடு படித்தால் போதும். முன்னைய இரண்டும் நம் உள்ளத்திலே வீரத்தை எழுப்பும். எஞ்சிய ஒன்று நம் நெஞ்சை உருக்கி விழிகளைக் கண்ணீர்க் குளமாக்கும். எஞ்சிய ஆறு சுவைகளையும் நூலிடையே காண்க. இன்னும் பல வரலாற்றுக் குறிப்புக்கள் ஆங்காங்கே மின்னுகின்றன.

முடிவுரை!

இவ்வாறு கலிங்கத்துப் பரணி ஒரு சிறந்த இலக்கியம் என நாம் போற்றத்தக்க அளவுக்குப் பலவித அமைப்புக்களையும் நயங்களையும் கொண்டிலங்குகின்றது. வெறும் பேய்களை வைத்தே செயங்கொண்டார் ஓர் அரிய அற்புத திருக் காப்பியத்தைச் செய்துவிட்டார். அக்காப்பியம் செய்து ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகட்கு மேலாகி விட்டன. எனினும் அதுபோன்றதொரு நூல் இன்னும் தமிழில் தோன்றாது இருக்கின்றது. இதனால் அதன் சிறப்புப் புலனாகும். காரணம் பரணிபாடல் அத்துணை அருமைப் பாடுடையது, இதனாலன்றோ இன்னும் ''பரணிக்கோர் செயங்கொண்டான்'' எனப் புலவர் உலகம் பாராட்டி மகிழ்கிறது.

★

விகடராமன் கவிதைகள் :

ஆயிரம் ரூபாய் தந்தால்
அதனைநீ உடனே என்செய்
வாயெனக் கேட்டான் நண்பன்
வாயெலாம் பல்லாய்க் காட்டி
தோய்தரு மகிழ்ச்சி யோடு
சொல்லுவான் ராமன், ''அந்த

ஆயிரம் தன்னை எண்ணிப்
பார்த்திடுவே'' னென்
றேதான்!



புகழ்

முகில்—

கண்ணதாசன்

புகழ் என்பது ஒரு வீசை எடையுள்ளது. அந்த ஒரு வீசையில் மாலை கால் வீசை - புகைப் படம் கால் வீசை - "வாழ்க" முழக்கம் கால் வீசை - ஆட்டோகிராப் கால் வீசை.

இது சராசரிப் புகழ்.

அந்தப் புகழ் ஏற ஏற முற்றிலும் விசித்திர மான மரியாதைகள் நடக்கும்.

அதிகப்படியான புகழ் பெற்றவர்களிடம் மனிதத் தன்மையே மாறிக்கொண்டு வரும்.

புகழ் ஒரு விஞ்ஞானப் பொருள்.

அது உருவத்தையே மாற்றுகிறது.

தமிழே படிக்காதவன் புகழ் பெற்றுவிட்டால் ஆங்கிலமே பேசத் தலைப்படுகிறான்.

மற்றவர்களைப் பார்த்துதன் ஆடை அணிமணிகளை மாற்றிக்கொள்கிறான்.

சாதாரண மனிதன் தெருவில் நின்று எல்லோரையும் பார்க்கிறான்.

புகழ் பெற்ற மனிதனைத் தெருவில் நிற்பவர்கள் எல்லோரும் பார்க்கிறார்கள்.

புகழ் என்பது அமைதியின் பகைவன்.

நிம்மதியின் எதிரி.

குடும்பப் பெண்ணைவிடக் கோரமாக இருந்தாலும் சரி—

சினிமாக்காரிகளை இளைஞர்கள் நாடுவதேன்? புகழ்!

பிறருடைய அறிவைக் கேட்க வேண்டிய நிலையிலுள்ளவன், பிறருக்கு அறிவுரை போதிக்கத் துணிவதேன்?

புகழ்!

பணத்தை நன்கொடை கொடுத்துவிட்டுப் பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்புவதேன்?

புகழ்!

புகழ் பெற்றவன் முட்டாளாக இருந்தால், புத்திசாலிகளும் அவனுக்கு அடுத்தபடிதான்.

இவையெல்லாம் புகழ் வந்தபின்.

புகழ் எப்படி வருகிறது?

சிலர் வாங்குகிறார்கள்.

சிலர் வாங்கப் போய் வழுக்கி விழுகிறார்கள்.

சிலர் தாங்குகிறார்கள்.

சிலர் தாங்கமுடியாமல் தலை கவிழ்கிறார்கள்.

சிலர் தியாகம் செய்து புகழ் பெறுகிருர்கள்.
சிலர் புகழுக்காகத் தியாகம் செய்கிருர்கள்.
சிலர் வள்ளல்களாகிப் புகழ் பெறுகிருர்கள்.
சிலர் புகழுக்காக வள்ளலாகிருர்கள்.
சிலர் தலைவராகிப் புகழ் பெறுகிருர்கள்.
சிலர் புகழுக்காகத் தலைவராகிருர்கள்.

சிலருடைய தகுதி அவர்களுக்குப் புகழ் தேடித் தருகிறது.

சிலருக்குப் புகழே ஒருவகைத் தகுதியாகி விடுகிறது.

புகழெனின் உயிரும் கொடுப்போம், என்று இனத்துக்கே அதை மரபாக்கி விட்டார் ஒரு புலவர்.

புகழ் கிடைக்குமென்ருல் - உயிரை விட்டா கிலும் அதைப் பெறுவாராம்.

உயிரை விட்டுப் புகழ் தேடினுல், அந்தப் புகழை நாம் இருந்தா பார்க்க முடியும்?

அதனுல்—

பணத்தை விட்டுப் புகழ் தேடுவது நவீன வழக்கமாகி வருகிறது.

புகழைப் போதை என்பார்கள் சிலர்.

அது தவறு,

மாலைப் போதை காலையில் தெளியும்.

புகழ்ப் போதை தெளியாது.

அந்தப் போதை, புகழ் இறக்கும்போது இறங்கும் - அல்லது உயிர் போகும்போது போகும்.

புகழ் பெற்ற மனிதர்கள் சொல்லும் பொய் யெல்லாம் பொன்னுகும்.

புகழில்லாத மனிதர்களிடம் உண்மையும் மண்ணுகும்.

“நிலவு என்பது ஒரு மண்டலமல்ல, அது ஒரு வகையான வெள்ளிப் பாளம்” என்று புகழ் பெற்றவன் சொன்னுல்—

“இருந்தாலும் இருக்கும், தெரியாமலா சொல் வார்” என்று ஊரில் பேசிக் கொள்வார்கள்.

இன்னெருவரால், அல்லது பலரால் சூட்டப் பெறுவதுதான் புகழ்.

ஆனுல் தனக்கென்று புகழைத் தானே உற் பத்தி செய்து கொள்ளும் வேடிக்கை மனிதர் களும் இருக்கிருர்கள்.

அவர்கள் புகழை வாங்குவதற்கு கடை கடை யாக ஏறி இறங்குகிருர்கள்.

தன்னுடைய படத்தைத் தன் கையிலே தூக்கிக் கொண்டு அலைகிருர்கள்.

புகழ் வந்தால் எல்லாம் வந்துவிடுகிறது.

கண்களிலே ஒரு தனி ஒளி தோன்றுகிறது.

கைகால் அசைவிலெல்லாம் பொருள் வரு கிறது.

நாடு முழுக்க அறிமுகமாவது புகழா?

இல்லை!

காந்தியையும நாடறியும், கோட்சேயையும் அறியும்,

இருவர் பெற்றதும் புகழ் தானு?

சிலர் அப்படித்தான் நினைக்கிருர்கள்.

அவர்கள் நம் இரக்கத்திற்குரியவர்கள்.

சரியான அடிப்படையின் மீது கட்டப்பட்ட மாளிகைதான் புகழ்.

ஒருவனது புகழை வைத்து அவனது திறமை யையும் அறிவையும் எடை போடும்போது—

அந்தப் புகழை விட திறமையும் அறிவும் அதிகமிருக்க வேண்டும்.

இல்லையென்ருல், அது மடமடவென இறங்கு வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

சந்தர்ப்பங்கள் அவனைக் காட்டிக்கொடுத்து விடும்.

திறமை யுள்ளவன் ஒருவன் வந்துவிட்டால் உலகம் அவனை மறந்துவிடும்.

திறமை யுள்ளவன் பெற்ற புகழை எவ்வளவு பெரிய சக்தியும் அழித்துவிட முடியாது.

திறமையற்றவன் வீழ்ச்சி அடைவதை எந்தச் சக்தியும் தாங்கிப் பிடிக்க முடியாது.

அதனுல், திறமையுள்ள எல்லோருக்கும் புகழ் வருமென்று பொருளா?

இல்லே—

ஜால்ராச் சத்தம் கேட்டாலொழியப் பஜனே நடப்பது ஊருக்குத் தெரியாது.

மேளச் சத்தம் கேட்டாலொழிய திருமணம் நடப்பதை ஊரறியாது.

பத்துப்பேர் சேர்ந்து சத்தம் போட்டாலொழிய திறமையுள்ளவனுக்கே புகழ் கிடைக்காது.

சிலர் அந்தச் சத்தத்தையே தங்கள் தகுதியாகக் கருதிக் கொள்கின்றனர்.

அப்படிக் கருதியவர்களெல்லாம், கவனிப்பாரற்றுப் போகும் நிலே வந்தே தீர்கிறது.

அவர்கள் கல்யாண மாப்பிள்ளேகள் மாதிரி. அவர்களுக்குக் கல்யாணம் நடக்கும்போது எல்லோரும் அவர்களேக் கவனிக்கிருர்கள்.

அடுத்த வீட்டில் கல்யாணம் நடக்கும்போது அவர்கள் பத்தோடு பதினென்று ஆகிவிடுகிருர்கள்.

எதன் மூலம் புகழ் வந்தது என்பதை அடிக்கடி நினேத்துப் பார்க்கிறவன், எப்போதும் அந்தப் புகழுடன் வாழ்ந்துவிட முடியும்.

ஆனுல், அந்தப் புகழ் அவனே அப்படி நினேத்துப் பார்க்க விடுவதில்லே.

நான் சினிமா உலகத்திலும் இருக்கிறேன்.

அது ஒரு வேடிக்கையான உலகம்.

அங்கே புத்தியுள்ளவனெல்லாம் புகழ் பெறுவானென்பது நிச்சயமல்ல.

புகழ் பெற்றவனெல்லாம் புத்தியுள்ளவனென்பது அந்த இடத்து வேதம்.

அடுப்புக்கரி விற்றவன் திடீரென்று அகில இந்திய நட்சத்திரமாகி விடுவாள்.

அத்தனேயும் மாற்றமடையும்.

ஆனுல் பரம்பரைக் குணம் மட்டும் கூடவே வந்து கொண்டிருக்கும்.

புகழ் பெறுபவர்கள் அதைப் பெற்றுக் கொண்டே தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கவேண்டும்.

வழியில் நின்று எவ்வளவு புகழ் வந்திருக்கிறது என்று திருப்பிப் பார்த்தால், திரும்பியே போக வேண்டியதிருக்கும்.

புகழ் - முட்டாள்களின் சமாதி.

அறிவாளிகளின் குழந்தை.

பணக்காரர்களுக்கு வியாபாரப் பொருள்.

அரசியல் வாதிகளுக்கு இரும்புத் திரை.

கவிஞருக்குப் பரிசு.

வீரர்களுக்கு ஞாபகச் சின்னம்.

தியாகத்தின் குடிமகன்.

தெளிவும் புகழும் சேர்ந்து வளர்ந்தால் - மனிதன் செத்தபின்னும் புகழ் வாழும்.

தெளிவில்லாதவன் புகழ் பெற்றுவிட்டால் புகழ் முதலில் சாகும்.

★

சரித்திரம் எவனெவனைச் சுட்டிக் காட்டுகிறதோ, அவனெல்லாம் புகழ் பெற்றவனாக இருந்திருக்கிறான்.

பத்துப் பேரால் மதிக்கப்பட்டவன் பெயர் தான் பரம்பரையாக நிலைத்து நிற்கிறது.

'காத வழி பெயரில்லாதவன் கழுதை' என்பது பழமொழி.

புகழ் என்பது வெளி உலக விளம்பரம் மட்டும் தானா ?

இல்லை !

தன்னடக்கம் ஒருவகைப் புகழ்,

மன நிறைவு ஒருவகைப் புகழ்.

நாணய வாழ்வு ஒருவகைப் புகழ்.

இரக்கம் ஒருவகைப் புகழ்.

அன்பு **ஒருவகைப்** புகழ்.

ஊமைத்**தனம் கூட** ஒருவகைப் புகழ்.

சபலங்களுக்கு ஆட்படும் சராசரி மனிதனை விட்டு, கொஞ்சம் முன்னே பின்னே விலகி இருந்தால் அது புகழாகி விடுகிறது.

அலெக்சாந்தர் உலகத்தை வெல்வதற்குப் புறப்பட்டான். பட்டத்துக்கு வந்த நாளிலே இருந்து அவன் தாய் நாட்டில் தங்கியதே இல்லை. வெற்றி வீரனாகச் சுற்றி வரும்போது பாபிலோனியாவில் மடிந்துவிட்டான். அவன் பிணங் கூடத் தாயகம் திரும்பவில்லை.





எதற்காக அவன், வரண்ட போர் விளையாட்டுக்களிலேயே இளமை முழுவதையும் கழித்தான் ?

எதற்காக அவன் உற்றார் உறவினரை விட்டுப் பிரிந்தே இருந்தான் ?

ஆனந்த வெறியில் ஆடித் திளைப்பதற்கு வாய்ப்பிருந்தும் வசதி இருந்தும், அழகழகான கன்னியர்கள், உலகம் முழுவதும் அவன் ஏவலுக்குக் காத்துக் கிடந்தும், அவன் சிந்தனை மட்டும் போர் வயப்பட்டே இருந்தது.

போரில் சாவு வரும் என்று தெரிந்தும் அவன் போராடினான்.

பிடிக்கின்ற இடங்கள் அனைத்தையும் கட்டிக் காக்க முடியாது என்பது தெரிந்தும், பல இடங்களைப் பிடித்தான்; ஏன்?

இவை எல்லாம் புகழ் ஏணியின் படிக்கட்டுகள் என்ற ஒரே காரணத்திற்காக.

கங்கை கொண்டவனும் கடாரம் கொண்டவனும் அங்கம், வங்கம், கலிங்கம் வென்றவனும், வடவர் தலையில் கல்லேற்றி வந்தவனும், ஈழப் படை கொண்டு காவிரிக்கு அணை கட்டியவனும், நாமெல்லாம் பேசிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதற்காகவே காரியங்களைச் செய்தார்கள்.

ஆனால், சொல்வதைச் சொல்லிவிட்டு வருவதைப் பெற்றுக்கொண்டவர்கள் சிலர் வரலாற்றில் இருக்கிறார்கள்.

புத்தர், ஏசு, முகமதுநபி, இந்த வகை.

இவர்கள் புகழுக்காகச் செயலாற்றியவர்களென்று சொல்ல முடியாது; செயலாற்றிப் புகழ் பெற்றவர்கள்.

மற்றும் சிலர், புகழைப் பணமாக்கத் தெரிந்தவர்கள்.

இந்தப் பண்டமாற்றில் அவர்கள் கடைசியாக பணக்காரர்களாகி விடுகிறார்கள், புகழ் முழுவதையும் விற்று

ஒரு மனிதனின் திறமையைப் பற்றி நாம் அடிக்கடி பேசிக்கொண்டே இருக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். திடீரென்று ஒருநாள் பேசாமல் நிறுத்திவிடுகிறோம்.

அப்படி நிறுத்தியது, அந்தக் குறிப்பிட்ட மனிதனுக்கு, தன் புகழ் குறைவதாகத் தெரிகிறது.

"வந்த மரியாதை சரிதானு" என்று அவன் சிந்திப்பதில்லை.

"அது போகலாமா!" என்றே சிந்திக்கிறுன்.

பணம் குறையும்போது பணக்காரனுக்குக் கவலை வருவதுபோல், புகழ் குறையும்போது 'புகழ்க்காரனுக்கு' கவலை வருகிறது.

கொடுமையான பகைவர்களையே புகழ்தான் தேடித் தருகிறது.

தன் படத்தைப் போட்டு பத்து வரிகள் எவனுவது தன்னைப் பற்றி எழுதிவிட்டால், மனிதன் எத்தனை முறை அதைப் படிக்கிறுன்! அது, மனப்பாடமே ஆகிவிடுகிறது!

தான் எழுதிய கதையைப் பற்றிப் பத்துப்பேர் வந்து புகழும்போது, பழையபடி அதைப் படித்துப் பார்க்க வேண்டும் என்று அதை எழுதியவனுக்கே தோன்று கிறது; பாவம் மனிதன்!

மனிதன் உடம்பு மென்மை யானது!

அதை எந்தப் பக்கம் தட விக் கொடுத்தாலும் சுகமாக இருக்கிறது.

கையைத் தொட்டால் தலை கனக்கிறது.

நிதானமான சிந்தனையே அடிபட்டுப் போகிறது.

நிறையப் புகழ் பெற்றவன் ஓரளவு பைத்தியக் காரனுக்குச் சமமாகி விடுகிறுன்.

தெரியாததைக் கூட தெரிந்த மாதிரிப் பேசுகிறுன்.

பிறருக்குப் புரியுமாறு விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருந்தவன், புரியாத மொழி யில் சொல்ல ஆரம்பிக்கிறுன்.

பிறர் அவனது தவறுகளைச் சுட்டிக் காட்டி ளுல், அதற்கும் விளக்கம் கூறுகிறுன்.

தவறு என்று தனக்கே தோன்றுவதை ஒப்புக் கொள்வது கூட, தன் புகழுக்கு ஏற்றதல்ல என்று கருதுகிறுன்.

அதன் மூலம் தவறுகளுக்கே ஒரு நியா யத்தை, தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள் கிறுன்.

துணிந்து தவறு செய்கிறுன்; தொடர்ந்து தவறு செய்கிறுன்.

அதில், அவன் புகழெல்லாம் அழிந்த பிறகு சராசரி மனிதனுகிறுன்.

புகழ்வது இனிமையா? புகழப்படுவது இனிமையா?

விருந்தாளிக்கு உணவு சமைத்தால் அந்த வீடே மணக்கிறது.

அடுத்தவன் வீட்டுக்குச் சாப்பிடப் போனுல் அந்த வீடுதான் மணக்கிறது.

மலர்களைத் தொடுப்பவன் கை மணக்கிறது.

வாசனைத் திரவியங்களைப் பூசி விட்டவன் கை களிலே, பாதி, தங்கிவிடுகிறது.

இறைக்கிற கேணி சுரக்கிறது.

மற்றவர்களைப் புகழ்ந்து பேசும்போது நமது முகமே மலர்ந்திருக்கிறது.

ஒருவர் மூலம் இன்னொரு வர் புகழ் பெறுவதும் இயற்கை.

மகன் அறிஞுக விளங் கினுல் அவன் தந்தையைப் பற்றிப் பேசுகிருர்கள்.

மனைவி பண்பாட்டோடு விளங்கினுல், கணவனைப் பற் றிப் பேசுகிருர்கள்.

அங்கே இகழும், புகழும் அவர் தர வருகின்றன,

இதில் பரிதாபத்திற்குரிய வர் ஆசிரியர்.

மாணவர் என்னதான் புகழ் பெற்ருலும் ஆசிரியரையாரும் குறிப்பிடுவதில்லை.

ஒருவன் முட்டாளாக இருந்தால் மட்டும், "யாரிடம் படித்தாய்" என்று கேட்கிருர்கள்.

எப்போது மனிதனை எல்லோருமே புகழு கிருர்கள்?

அவன் இறந்து கிடக்கும்போது!

பகைவனும் புகழ்கிறுன்.

இறந்தவனின் தவறுகளை எல்லாம் மறைத்தும் மறந்தும் எல்லோரும் பேசுகிருர்கள்.

வாழும்போது புகழ் பெற முடியாதவர்கள் செத்துக்கிடக்கும் போது, அது கிடைத்து விடுகிறது.

ஆக, மனிதர்கள் பெறும் புகழ் இரண்டு வகைப்படும். ஒன்று பெற்றுச் சாவது; இன் னென்று செத்துப் பெறுவது.

சரித்திரத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் பெற்றுச் செத்தார்கள்; கோடிக் கனக்கான வர்கள் செத்துப் பெற்ருர்கள். ★

கலை விழா

நாரா நாச்சியப்பன்

சோழன் நெறி நின்றான் அவைக்களம் இன்பக்களமாக மாறிக்கொண்டிருந்தது. ஆம். அங்கே அபரஞ்சி ஆடிக்கொண்டிருந்தாள்.

அவையின் மத்தியிலே அமைத்திருந்த விசாலமான மேடையிலே அங்கு மிங்குமாக ஓடி ஆடிக்கொண்டிருந்தாள் அபரஞ்சி. மேடையைச் சுற்றி இசைவல்லார் பலர் அமர்ந்து, தோல், துளை, நரம்பு வெண்கலம் ஆகிய நால்வகைக் கருவிகளால் பண்ணமைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுப்பிய பண்ணும், அபரஞ்சியின் கால்களிலே ஆடும் சலங்கையின் கொஞ்சலும் வேற்றுமை யின்றி ஒலித்தன.

தோகை விரித்த மயில்போல முன்தானையைத் தூக்கியும், புள்ளிமானைப் போல் துள்ளி ஓடியும், அன்னம் போல் மென்னடை நடந்தும், சிட்டுக்குருவி கிளைவிட்டுப் பறப்பது போல் ஆடிப் பறந்தும் கூடியிருந்த அவையினர் கண்ணெலாம் தன்னையே காண, தானே அவையாய், அவையே தானாய் ஆடினாள் அழகி அபரஞ்சி ஆடிக்கொண்டே யிருந்தாள்.

சோழன் நெறி நின்றான் அவைக்களம் அன்று அபரஞ்சியின் நாட்டிய அரங்கேற்றத்துக்காகவே கூட்டப் பெற்றிருந்தது. நாடகக் கணிகையான தனவஞ்சியின் மகள் அபரஞ்சி, பதினாறாட்டைப் பிராயத்தாள், தான் கற்ற நாட்டியக் கலையில் தேர்ந்த நிலையினை அரசர்க்கும், செல்வர்க்கும், அறிவிக்கும் நோக்குடன், அபரஞ்சியின் தாய் தனவஞ்சியின் வேண்டுகோளின்படி நாட்டிய அரங்கேற்றம் நடத்துவதற்காக, அரசன் நெறிநின்றான் அன்று சபை கூட்டினான்.

சபையில் அரசனும் தேவியும், அமைச்சர் குழுவும் படைத் தலைவர்களும், நாட்டின் செல்வர்களும் கூடி யிருந்தார்கள்.

அபரஞ்சியின் அழகு, அவளுடைய ஆட்டத்தின் சிறப்பு, பாடுகின்றபாட்டின் பண்ணுடையாமல் ஆடுகின்ற அவளுடைய திறமை அத்தனையும் அங்குக் கூடியிருந்த அத்தனை பேரையும் அசைவில்லாமற் செய்தன. அரசனும் அவளுடைய ஆட்டத்தின் கலைகண்டு மெய்ம் மறந்தான்.

ஆட்டம் முடிந்தது. அபரஞ்சி தன் மெல்லிய செல்வடிகளைத் தூக்கித் தூக்கிப் பெட்டைப் புறா நடப்பதுபோல் நடந்து அரசன் எதிரிலே வந்து வில்லைப்போல் வளைந்து வணங்கினாள்.

“அபரஞ்சி உன் இளமையை உன் திறமை வென்றது! இதோ இதை ஏற்றுக் கொள்!” என்று கூறிய அரசன் தன் கழுத்திலே கிடந்த முத்துமாலையை எடுத்துத் தன் தேவி கையிலே கொடுக்க, தேவி அதை வாங்கி அபரஞ்சியின் கையிலே கொடுத்தாள். அரசன், தேவி யிருவர்க்கும் மீண்டும் வணக்கம் செலுத்திய பின் அபரஞ்சி அம் முத்து மாலையுடன் மேடைக்குத் திரும்பினாள். அவள் மேடைக்கு வந்ததும், அவள் தாய் தனவஞ்சி அவளருகிலே வந்து நின்று கொண்டுகீழ்க்கண்டவாறு கூறினாள்.

“இறைமுறை தவறாது மறை வழிநின்று குடிமக்களைக் காத்திடும் மன்னர் நெறி நின்றார் வாழ்க! அவையிற் கூடியுள்ள பெருமக்களே, இதோ அரசர் பெருமான் பரிசளித்த இம்முத்து மாலையை இவ் அவையினர் முன்னே ஏலங் கூறுகிறேன். பெரும் பொருள் கொடுத்து முத்துமாலையைக் கைக்கொண்டார்க்கு விருப்பம் உளதேல், நாடகக் கணிகையரின் பரம்பரை வழக்கம்போல் என் மகள் அபரஞ்சியைத் துணையாக ஏற்கும் உரிமையும் உண்டு.”

அவள் கூறி முடித்ததுதான், அக் கணமே ஏலங் கேட்கத் தொடங்கி விட்டனர் அவையினர்.

ஏலத்தின் தொகை ஐயாயிரம் பொன்வரை ஏறிவிட்டது. வணிகர் ஒருவர், நாற்பது வயதிருக்கும், அவர்தான் ஐயாயிரம் பொன்னுக்குக் கேட்டவர், அரசனுடைய முத்துமாலை மட்டுமல்ல அபரஞ்சியும் கிடைக்கப் போகிறாள் என்ற ஆசையிலே அவர் ஐயாயிரம் பொன்னுக்குக் கேட்டார். அதற்கு மேலே சபையில் அமைதிதான் விளங்கியது.

ஐயாயிரம் பொன் ஒருமுறை!
ஐயாயிரம் பொன் இருமுறை!
ஐயாயிரம் பொன் இருமுறை!
ஐயாயிரம்......

என்று கட்டியக்காரன் கூவிக் கொண்டிருக்கும்போதே “பத்தாயிரம் பொன்!” என்று ஒரு குரல் எழுந்தது.

சபை திடுக்கிட்டது.

குரல் வந்த பக்கம் ஒவ்வொருவரும் திரும்பிப் பார்த்தனர்.

சோழ நாட்டுப் பெரு வணிகன் மாநிலத்தான் மகன் முத்துவேலன் தான் “பத்தாயிரம் பொன்!” என்று குரல் கொடுத்

தான் முத்துவேலன் இருபத்தைந்து வயதுக் காளை. இது வரை இருமுறை அயல் நாடு சென்று பெரு நிதி திரட்டியவன். மாநிலத்தானுக்கு ஒரே மகன், அருமைச் செல்வன், திறமை மிக்கான், திருமண மாகாதான்! தன் மகன் பத்தாயிரம் பொன்னை ஒரு பெண்ணுக்குக் கொடுக்கத் துணிந்தானே என்று கிழ வணிகன் மாநிலத்தான் அசந்துபோனன். நாற்பது வயதுடையானுடன் வாழ்க்கை நடத்தவா என்று நடுங்கிக்கொண் டிருந்த அபரஞ்சி, ஆனந்தக் கடலில் தாவி விளையாடுவாள் போல் மகிழ்ச்சி கொண்டாள். ஐயாயிரம் பொன்னிலேயே தன் ஆசை நிறைவெய்தக் கண்ட தனவஞ்சி பத்தாயிரம் பொன் என்ற ஒலிகேட்டுப் பெரிதும் மகிழ்ந்தாள்.

பத்தாயிரம் பொன்னுக்கு மிஞ்சிக் கேட்க அந்தச் சோழ மண்டலத்திலேயே ஆ ளி ல் லை. எ ன வே, முத்துவேலன் தான் கொத்திக்கொண்டு போனன் அந்தப் பச்சைக்கிளியான அபரஞ்சிப் பெண்ணை. ஊரெங்கும் இதே பேச்சு.

முத்துவேலனும் அபரஞ்சியும் ஒத்த வயதும் பருவமும் உடையவர்களாகவே அன்பு வளர்ந்தது. இன்பமாக நடந்தது அவர்கள் இல்லறத் தொடக்கம். பாலை யள்ளித் தெளித்ததுபோல் கோல நிலா வீசும் இரவிலே தேனை தமிழ்ச் சிந்து பாடுவான் அவன்; திருவாக நின்று ஆடுவாள் அவள்! கடற்கரை யோ ர ம் மணல் மேட்டின்மீது அமர்ந்திருப்பான் அவன்; யாழ்மீட்டி இன்பங் கூட்டுவாள் அவள். இவ்வாருகப் பகலும் இரவும் இன்பமே இன்பமாய்ப் பல நாட்கள் ஓடின,

ஒருநாள் இரவிலே, தென்றல் வீசும் சாளரத்தின் அருகிலே, பட்டுமெத்தை விரித்த கட்டிலிலே முத்துவேலன் அமர்ந்திருக்க, கையில் பால் குவளை தூக்கி, கண்களிலே காதல் வெள்ளத்தைத் தேக்கி, அவனை நோக்கி அன்ன நடை நடந்து வந்து அருகிலே அமர்ந்தாள் அபரஞ்சி.

பால் குவளையை அவனிடம் நீட்டிய அபரஞ்சி, ''அத்தான், வஞ்சிமா நகரிலே சேரர் பெருமான் நடத்தும் நாட்டியக் கலைப்போட்டியிலே ஐம்பத்தாறு தேசத்து ஆடல் அழகிகளும் கலந்து கொள்கிருர்களாம். நீலவேணி, திருமாதவி, கோமளவல்லி முதலிய நம் நாட்டுப் பெண்களும் கலந்துகொள்கிருர்களாம். நானும் போகவா?' என்று கொஞ்சும் குரலிலே கேட்டாள்.

ஐம்பத்தாறு தேசத்திலும் ஆடற்கலை வல்லாள் நானெருத்தியே என்பதை நிலைநாட்டி சேரர் பெருமான் தரும் பரிசைத் தனதாக்கி வரவேண்டும் என்ற எண்ணம் அவள் உள்ளத்திலே கிடந்தாலும்,அத்தான் அனுமதி பெறவேண்டிஅவள்கெஞ்சினுள்.

கெஞ்சுகின்ற அந்தக் கோதையின் குரல் முத்துவேலனுக்கு வேதனை யளித்தது. சாளரத்தின் வழியே வீசிய தென்றல் தணல் காற்றைப் போல் சுட்டது. பட்டு மெத்தை கட்டாந் தரைபோல் உறுத்தியது. பாலும் கசந்தது.

ஆயிரம் பேர் மத்தியிலே அவள் ஆடும்பொழுது தான் அ வ ளை த் தேர்ந்தெடுத்தான் முத்துவேலன். எவனெவனே ஆசைப்பட்டுப், பார்த்து அலுப்படைந்தபோதுதான் பத்தாயிரம் பொன்னென்று கூவி அவளைத் தன் மனைவியாக்கினுன். ஆனல், இன்று அவள் அவன் மனைவி. தன் மனைவி ஆயிரக்கணக்கானவர்களின் ஆசைக் கண்களுக்கு மத்தியிலே ஆடும் பதுமையாகக் காட்சியளிப்பதை அவன் விரும்பவில்லை. உறுதியான குரலுடன், ''அபரஞ்சி, நீ போகவேண்டாம்!'' என்று கூறினுன்.

''அத்தான் விளையாடாதீர்கள் அத்தான்! உண்மையாகவா சொல்லுகிறீர்கள் ?!!''

அவன் கருத்தை யறியாத அந்த அபலை மீண்டும் நம்பிக் கையுடன் கேட்டாள்.

''வேண்டாம்,அபரஞ்சி வேண்டாம்!'' என்று வெறுப்புடன் கூறினுன் அவன்.

''அத்தான், அங்கே போய்ப் பரிசுபெற்ருல் எத்தனை பெருமை! ஏனத்தான் வேண்டாமென்கிறீர்கள்!'' மீண்டும் கெஞ்சினுள், ஆயிழை அபரஞ்சி.

''திரும்பத் திரும்பக் கேட்காதே. சொன்னுல் சொன்னது தான். போக வேண்டாம் என்ருல் போக வேண்டாம் தெரிகிறதா ?'' முத்துவேலன் வாயிலிருந்து புயல்போல் கிளம்பி வந்தன இந்தச் சொற்கள்.

ஆசையுடன் வந்த அபரஞ்சி மனமுடைந்து திரும்பினுள். அத்தான் முத்துவேலனின் அந்தரங்கக் கருத்து இன்னதென அறியாத அத்தந்தப் பதுமையாள் தன் தாய்தனவஞ்சியிடம்போய்ச் சொன்னுள். அவள் உடனே முத்துவேலன் போக்குக்குக் காரணம் தெரிந்து கொண்டாள். ஆயினும், தன் மகள் செல்வமும் செல்வாக்கும் பெறுவது தனக்குத்தான் நன்மை எனத் துணிந்த அவள், தன் மகளுக்குத் தைரியமூட்டினுள். ''அவன் எது சொன்னுலும் நான் போயே தீருவேன் என்று கிளம்பி விடு'' என்று சொல்லிக் கொடுத்தாள்.

மற்ற பெண்கள் புறப்பட்டுப் போகும் நாளிலே அபரஞ்சியும் புறப்பட ஆயத்தமானுள். முத்துவேலன் அவள் ஆயத்தம் செய்வதெல்லாம் கவனித்துக் கொண்டு பேசாதிருந்தான்.

கடைசியில் புறப்படும் நேரத்திலே ''அத்தான், போய் வருகிறேன். வெற்றியுடன் திரும்பி வர ஆசீர்வதியுங்கள்'' என்று அவன் திருவடி தொழுது வணங்கினுள். அவளை அழைத்துச் செல்ல வந்திருந்த பெண்களெல்லாம் அருகில் நின்ருர்கள். ''அபரஞ்சி, போகவேண்டாம் என்று நான் சொன்னது உனக்கு நினைவில்லையா, மீண்டும் சொல்கிறேன், போக வேண்டாம்!'' என்று சிறிதும் உறுதி மாருத குரலிலே கூறினுன். ''நான் போய்த்தான் தீருவேன்'' என்று

சிவந்த கனி யிதழ்கள் துடிக்கக் கூறிவிட்டு விடுவிடு என்று கிளம்பினுள் அபரஞ்சி. முத்துவேலன் அவளை ஆசீர்வதிக்கவுமில்லை; தடுத்து நிறுத்தவுமில்லை.

மற்ற மூன்று பெண்களோடும் தன் தாயுடனும் சேர்ந்து வஞ்சிமாநகரம் நோக்கிப் பயணமானுள் அபரஞ்சி. ''பத்தாயிரம் பொன் கொடுத்து வாங்கின மாப்பிள்ளை, அப்படித்தான் சொல்லுவார். ஆனுல், என்னதான் அவர் தன் உடமையாக உன்னைக் கருதினுலும், உன் ஆசையைத் தடுக்க அவருக்கு உரிமையில்லை. கணவன் ஆசீர்வாதம் இல்லையே என்று கலங்கி விடாதே. நாட்டியக் கலையிலே, சோழ நாட்டின் பெருமையை நிலை நிறுத்தத்தான் நாம் சொல்லுகிறேம். நமக்கெல்லாம் கணவனைக் காட்டிலும் கலைதான் பெரிது.'' என்பனபோன்ற பல கருத்துக்களைத் தோழிமார்கள் கூறிவந்ததால், வழிப் பயண நாளிலேயே தன் கணவன் கூறிய கடுமொழிகளை மறந்து விட்டாள் அபரஞ்சி.

வஞ்சி மாநகரம் முழுதும் மக்கட் கூட்டத்தின் ஒலியால் கலகலவென விளங்கியது.பல்வேறு நாட்டார்களும் வஞ்சி மாநகர வீதிகளிலே அங்குமிங்கும் நடமாடிய வண்ணம் இருந்தார்கள். ஐம்பத்தாறு நாட்டு ஆடலழகிகளும் அவர்களுடன் கூடவந்த நட்டுவனுர்களும், இசை முழவர்களும், அவ்வாடல் விழாவைக் காணவந்த பல நாட்டு இளைஞர்களும், செல்வர்களும் எங்கும் நிறைந்து காணப்பட்டனர்.

சோழ நாட்டிலிருந்து வந்த நான்கு பெண்களும், நாட்டிய விழாவிலே தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்வதற்காகக் கலையமைச்சரின் செயலாளரிடம் சென்ருர்கள். அவர் மூன்று பெண்களின் பெயரைப் பதிவு செய்துகொண்டு, அபரஞ்சியின் பெயர் பதிவுசெய்யப்பட மாட்டாது என்று கூறிவிட்டார்.

அபரஞ்சிக்கும் அவள் தாய் தனவஞ்சிக்கும் அழுகையாகவும் ஆத்திரமாகவும் வந்தது. இது அந்த முத்துவேலன்செய்த சூழ்ச்சிதான் என்று எண்ணினுர்கள். கலையமைச்சரின் செயலாளரிடம் காரணம் கேட்டார்கள். அவர் ஒரே வரியில் ''அமைச்சர் உத்தரவு'' என்று பதில் கூறிவிட்டார். பின் கலையமைச்சரிடம் சென்று காரணம் கேட்டார்கள். அவர் ''அரசர் உத்தரவு'' என்று கூறிவிட்டார். சேரர் பெருமானைக் காண முயற்சி செய்தார்கள், முடியவில்லை. அவர் இவர்களைக் காண மறுத்துவிட்டார். நீதிக்காக மனுச்செய்து கொண்டார்கள். கலைவிழா முடியும் வரையிலே அரச சபையிலே எதுவும் விசாரிக்கப்படாதாகையால், உங்கள் மனுவைப் பிறகு கொண்டு வாருங்கள் என்று அதிகாரிகள் கூறி விட்டார்கள்.

அபரஞ்சிக்கும் அவள் தாய் தனவஞ்சிக்கும் ஆத்திரம்எல்லை கடந்தது. தாங்கள் மிக்க அவமானத்திற்குள்ளாகி விட்டதாக எண்ணினுர்கள். எடுத்த முயற்சியெல்லாம் பெருந் தோல்வியாக முடிந்தது. அவர்களுக்கு பெரும் வேதனையாக இருந்தது. வஞ்சி மாநகரமும் அதன் கலைவிழா அலங்காரமும் எரிச்சல் தரலாயின. அங்கே ஒரு கணம்கூட இருக்கப் பிடிக்கவில்லை. எவ்வளவு வேகமாகப் புறப்பட்டு வந்தார்களோ, அவ்வளவு வேகமாகத் திரும்பினுர்கள். தங்களூர் வந்ததும் நேரே சோழன் அரண்மனைக்குச் சென்ருர்கள், முத்துவேலன் செய்த அக்கிரமத்தை முறையிட. சோழனும் அங்கே யில்லை. அவன்தான் கலைவிழாக் காண வஞ்சிமாநகரம் சென்று விட்டானே!

சோழன் வரும்வரை காத்திருப்போம் என்று காத்திருந்தார்கள். அபரஞ்சிக்கு முத்துவேலன் முகத்திலே விழிக்கப் பிடிக்கவில்லை. தாய் வீட்டிலேயே தங்கினுள்.

பத்துநாட்கள் சென்ற பின் சோழன் திரும்பி விட்டான் என்று செய்தி தெரிந்ததும், தாயும் மகளும் அரண்மனைக்குப் பறந்தார்கள். சோழன் நெறிநின்ருன் தேவியோடு அமர்ந்திருந்தான். முத்துவேலன் தன்னிடம் முறையிட்டதையும், அபரஞ்சிக்குக் கலைவிழாவிலே இடமில்லாமற் செய்ததையும் பற்றித் தேவியிடம் சொல்லிக்கொண்டிருந்த சோழன், அவர்களைக் கண்டதும், ''அபரஞ்சி, நீ இல்லாமல் கலைவிழா கசந்து போனதே. நீயும் சென்றிருக்கிருய் என்று தெரிந்த பின்தானே நான் புறப்பட்டேன். அன்று அரங்கேற்றத்திலே பார்த்த ஆடலை மீண்டும் காணவேண்டும் என்ற ஆசையோடு வஞ்சிக்குத் தேடி வந்து கடைசியாக ஏமாந்து போனேன். நீ ஏன் கலந்து கொள்ளவில்லை? திடீரென்று உடம்புக்கு ஏதாவது ஏற்பட்டு விட்டதா?'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, தேவி குறுக்கிட்டு, ''அவள் புரியாத சிறு பிள்ளை. நீங்களும் இப்படிப்பேசுகிறீர்களே. தமிழ்ப் பெண்கள் என்ருவது கணவன் இட்ட கட்டளையை மீறுவதுண்டா? காதல் கொண்டு ஒருத்தி ஒருவனை மணம் புரிந்து வாழ்ந்து வரும்போது அவன் கருத்துக்கு விரோதமாக நடப்பது கற்புநெறிக்குச் சரிதானு? அவள் ஆடிப் பெயர் பெற வேண்டுமென்று சென்றிருப்பாள். அங்கே போனதும், கணவன் விருப்பத்தை மீறக் கூடாதென்று தோன்றி யிருக்கும். தமிழ் மங்கையருக்குக் கணவனுடையவேண்டுதல்தான் பெரிது. ஆயிரம் பேர் கூடிக் கைதட்டினுலும் ஒரு கணவனுடைய அன்புக்கு ஈடாகுமா? இதையெல்லாம் நினைத்துத்தான் அபரஞ்சி திரும்பி வந்திருப்பாள்'' என்று கூறி முடித்தாள்.

இதைக்கேட்ட தாயும் மகளும் அரசனிடம் ஒன்றும் கூருமலே திரும்பிவந்து விட்டார்கள். அபரஞ்சி, முத்துவேலனைத் தேடி ஓடினுள் வீட்டுக்கு.

ஆசிரியர்: கண்ணதாசன் அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு தொலைபேசி எண் 83510.

திருமகள் பிலிம்ஸ்
விரைவில் வருகிறது....!
மகளே உன் சமத்து
D.S.ராஜகோபால்
தயாரிப்பு.
P.A.குமார்.S.V.ராஜகோபாலன்

பிப்ரவரி 3உ முதல் தென்னகமெங்கும்

Wrapper printed at IDEAL PRINTERS, 97, Broadway, Madras-1.